BIBLIOGRAPHICAL DATA

Title	:	**KANYAKUMARI MAVATTA KAIYEDU**
Editor	:	**Principal Commissioner**
Copy right	:	**T.N. State Dept. of Archaeology**
Subject	:	**History**
Language	:	**Tamil**
Edition	:	**First**
Publicaticn No	:	**196**
Year	:	**2008**
Type Point	:	**11 pt**
Paper used	:	**80 GSM Maplitho**
Typesetter	:	**Pavai Printers (P) Ltd.,** #6 (142), Jani Jan Khan Road, Royapettah, Chennai - 600 014. Ph: 28482441, 28482973
Printer	:	**TAMCOS** Royapettah, Chennai - 600 014.
Publisher	:	**State Dept. of Archaeology** Tamil Valarchi Valaagam Halls Road, Egmore, Chennai - 600 008.
Price	:	**Rs. 103/-**

கன்னியாகுமரி மாவட்டத் தொல்லியல் கையேடு

பதிப்பாசிரியர்

முனைவர் சீதாராம் குருமூர்த்தி இ.ஆ.ப
முதன்மை ஆணையர்

ஆசிரியர்

தே. கோபாலன்
தொல்லியல் அலுவலர்
மதுரை

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை
சென்னை - 600 008

2008

பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை மாணவர்கள், ஆய்வாளர்கள் மற்றும் வரலாற்று ஆர்வலர்களுக்குப் பயன்படும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தொல்லியல் கையேடு வெளியிட வேண்டும் எனத் திட்டமிட்டுள்ளது. இந்நோக்கில் கடந்த ஆண்டுகளில் மதுரை, திண்டுக்கல், விருதுநகர், தருமபுரி, திருவாரூர், கோவை ஆகிய மாவட்டங்களின் தொல்லியல் கையேடுகள் துறையால் வெளியிடப்பட்டுள்ளன.

இதே வரிசையில் இக்கன்னியாகுமரி மாவட்டத் தொல்லியல் கையேடும் வெளியிடப்படுகிறது. இந்நூலிற்கான செய்திகளை வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் தொகுத்துச் சிறப்பான முறையில் உருவாக்கிய இத்துறையின் திரு. தே. கோபாலன், தொல்லியல் அலுவலர், மதுரை அவர்கள் பாராட்டுக்குரியவர்.

இந்நூலின் பதிப்புப் பணியினைச் செவ்வனே செய்துள்ள திருமதி அர. வசந்தகல்யாணி, கல்வெட்டாய்வாளர் (சி. நி.), சென்னை அவர்கள் பாராட்டுக் குரியவர். நூலுக்குரிய நிழற்படங்களையும் அட்டைப்படத்தையும் வடிவமைத்துத் தந்த திரு. மு.த. ஸ்ரீதரன் நிழற்படக்காரர் அவர்களுக்கு என் பாராட்டுகள்.

இந்நூல் வெளிவர உரிய நிதி ஒதுக்கீடு வழங்கிய தமிழக அரசிற்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எளிய நடையில் எழுதப்பட்டுள்ள இந்நூல் தொல்லியல் மற்றும் வரலாறு படிக்கும் மாணவர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், வரலாற்று ஆர்வலர்களுக்கும் பயனுள்ள வகையில் அமையும் என நம்புகிறேன்.

- சீதாராம் குருமூர்த்தி
முதன்மை ஆணையர்

சென்னை - 8
18-01-08

முன்னுரை

கன்னியாகுமரி மாவட்டம் இயற்கையின் வனப்பும், வளமும் கொண்டது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் (பாலை தவிர்த்து) என்ற நான்கு நிலப்பரப்பு களையும் உள்ளடக்கியது. தமிழகத்தின் வடவெல்லையாக வேங்கடத்தையும் தென் னெல்லையாகக் குமரியையும் கீழ்க்காணும் பாடல் வரிகள் குறிக்கும்.

''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகு''

குமரியின் பண்டைய நிலப்பரப்பு தெற்கே நீண்டிருந்தது என்றும் அது கடல் கோளுக்கு ஆட்பட்டு இப்பெரும் நிலப்பரப்பு கடலுள் மூழ்கி விட்டது என்றும் பல்வேறு அறிஞர்கள் நம்புகின்றனர். இதையே கீழ்க்காணும் சிலப்பதிகார வரிகள் கூறும்

''பஃறுளியாற்றுப் பன்மலை யடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள''

தொல்பழங்காலத்தைப் பொறுத்தவரை நுண்கற்காலம், புதிய கற்காலம், பெருங்கற்காலம் ஆகிய பண்பாடுகளைச் சார்ந்த கி.மு. 4000 தொடங்கி கி.பி. 3000க்கு இடைப்பட்ட காலங்களிலான கற்கருவிகளும், மட்கலயங்களும் இரும்பு ஆயுதங்களும் கிடைக்கின்றன.

இதே போன்று கி.பி. 8-ம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 19-ம் நூற்றாண்டு வரை தமிழ், வட்டெழுத்து, கிரந்தம், மலையாளம் ஆகிய எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுச் சான்றுகளையும் இங்கு காணலாம். முற்காலப் பாண்டியர், ஆய் அரசர்கள், பிற்காலச் சோழர், சோழ பாண்டியர், பிற்காலப் பாண்டியர், வேணாட்டரசர்கள், திருவிதாங்கூர் மன்னர்களெனப் பல அரச குலத்தவர் கி.பி.8-ம் நூற்றாண்டு முதல் 20-ம் நூற்றாண்டு வரை பல்வேறு காலகட்டங்களில் இங்கு ஆட்சி செய்துள்ளனர். சமணம், சைவம், வைணவம், இசுலாம், கிறித்துவம் எனப் பல்வகைச் சமயங்களின் சான்றுகள் இம்மாவட்டத்தில் கிடைக்கின்றன. குறிப்பாகச் சமணம் கி.பி. 10-ம் நூற்றாண்டில் தமிழகத்தில் வழக்கொழிந்த நிலையில் குமரி மாவட்டத்தில் மட்டும் கி.பி. 16-ம் நூற்றாண்டு வரையில் வழக்கில் இருந்துள்ளதைக் கல்வெட்டுச் சான்றுகள் நமக்கு உணர்த்துகின்றன. இச்சமயங்களைப் பல்வேறு அரச குலத்தவரும் ஆதரித்து வந்துள்ளனர்.

இன்றைய குமரி மாவட்டம் 1956-ம் ஆண்டுக்கு முன்பு கேரள மாநிலத்தோடு இணைந்த பகுதியாக இருந்துள்ளதால் கன்னியாகுமரி மாவட்டத்தின் நீண்ட நெடிய வரலாறு கேரள வரலாற்றுப் பின்புலத்தோடு ஆய்வு செய்யத்தக்க ஒன்றாக உள்ளது.

இத்துணை பழமையும், பெருமையும் கொண்ட இம்மாவட்டத்தின் வரலாற்றினைத் தொல்லியல் மற்றும் கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையில் தொகுத்துத் தொல்லியல் கையேடாக வெளியிடுவது ஒரு வரலாற்றுக் கடமையை நிறைவு செய்வதாக அமைகிறது.

இந்நூலாக்கத்திற்குப் பெரிதும் துணைபுரிந்த இத்துறையின் சிறப்புநிலைக் கல்வெட்டாய்வாளர்கள் முனைவர் வெ. வேதாசலம், அர. வசந்தகல்யாணி, நாகர்கோவில் செம்பவளம் ஆய்வு மையத்தைச் சேர்ந்த திருவாளர்கள் செந்தீ. நடராசன், முனைவர் அ.க. பெருமாள் ஆகியோர் நன்றிக்குரியோர்.

- ஆசிரியர்

உள்ளடக்கம்

பதிப்புரை iii

முன்னுரை v

1. நிலவியல் 1
2. வரலாற்றில் குமரி மாவட்டம் 4
3. பண்டைய நாட்டுப் பிரிவுகள் 34
4. வரலாறு கூறும் ஊர்கள் 37
5. நாணயங்கள் 88
6. கோயில்கள் 95
7. ஓவியங்கள் 99
8. கோட்டைகள் 101
9. சமயங்கள் 117
10. சாலையோர மடங்கள், சுமைதாங்கிகள் 120
11. புலவர்கள் பெரியோர்கள் 125
12. சிறப்புச் செய்திகள் 129

பின்னிணைப்பு 144

1. நிலவியல்

கன்னியாகுமரி மாவட்டம் சங்க இலக்கியம் குறிக்கும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் (பாலை தவிர) ஆகிய நான்கு நிலப் பரப்புகளையும் உள்ளடக்கி உள்ளது. இதன் வடக்கு மற்றும் மேற்கு எல்லை மலைப்பாங்கான (Hilly Tracts) அடர்ந்த காடுகளைக் கொண்டு காணப்படுகிறது. இதன் தென்மேற்கு மற்றும் மத்திய பகுதி விளைநில பூமியாக காணப்படுகிறது. இது நாஞ்சில் நாடு என்று அழைக்கப்படுகிறது. தென் எல்லை நீண்ட கடற்கரையாகச் செல்கிறது. இம்மாவட்டத்தின் மிக உயர்ந்த இடம் மகேந்திரகிரி ஆகும்; உயரம் 1654மீ. இம்மாவட்டம் முழுமையும் ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் பாறைக்குன்றுகளும் அதனிடையே பள்ளத்தாக்குகளும், புல்வெளி களும் நிறைந்து காணப்படுகிறது. தென் எல்லைக்கோடு கடற்கரை மணலாலும் ஆங்காங்கே தனிப்பாறையுடன் காணப்படுகின்றன.

நிலவியல் தொன்மை

பொதுவாக தென்இந்திய தீபகற்பம் உயர்ந்து, பரந்து காணப்படும் நிலப்பரப்பை கொண்டது. கீழைக் கடற்கரையின் நிலவியல் படிவங்கள் தொல் பேரூழிக் காலத்திலிருந்து (Primary) இருந்து வருகிறது. இதற்குப் பிறகு கடல் உள் வாங்குதல் மற்றும் நிலப்பகுதி யில் கரை ஏறுதல் காரணங்களினால் படிவப் பாறைகள் (Sedimentary formations) மேற்கு கடற்கரையோரங்களில் உருவாகிக் காணப்படுகின்றன. பிற்காலத்தில் நில மேலெழுச்சிப் (Uplift of the land mass) போக்கினால் கடல் உள்வாங்கிச் சென்றுள்ளது. ஆழமான நீரோடைகள், அருவிகள், நெடிதுயர்ந்த தொங்கு பள்ளத்தாக்குகள், மிக உயர்ந்த இடத்தில் ஆங்காங்கே தென்படும் கடற்பாறைப் படிவங்கள் மற்றும் குளச்சல், சுசீந்திரம் ஆகிய இடங்களில் காணப்படும் கடற்குன்றுகள் கடல் கோளின் அடை யாளங்களாகக் காணப்படுகின்றன.

நிலம் மேலெழுச்சிக்கான ஆதாரங்களாகக் கன்னியாகுமரி மாவட்டத்தில் பல இடங்களில் காணப்படும் சங்குப் படிவத்துடன் உள்ள சுண்ணாம்பு கற்கள் (Shell lime stones) அடையாளமாக அமைகின்றன. இது பற்றி ராபர்ட் புரூஸ்புட் தனது ஆய்வுக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். பல கால கட்டங்களில் நிகழ்ந்திருப்பதாகக் கருதப்படும் 'இந்நில மேலெழுச்சி' என்றும் வற்றாத நீரோடைகள் தோன்றுவதற்கு காரணமாகின்றன. கடைப் பேரூழி (Tertiary) காலத்திலேயே பறளியாறு கோதையாறாக மாறியுள்ள தாகத் தோன்றுகிறது.

தொல்பேரூழிக் காலத்திலேயே கன்னியாகுமரி மாவட்டத்தில் இரண்டு படிவப் பாறைத் தொடர்கள் ஏற்பட்டுள்ளன. கார்மெட்டிசியஸ் சிலிமைனைட் கிராபைட் நைஸ் தொடர்களைக் கொண்ட (Garmetigeious sillimanite graphite gneisses) கோண்ட லைட்ஸ் (Khondalites) என்பது ஒரு படிவப் பாறைத் தொடராகும். மற்றொன்று

கார்னெட் பையோடைட் நைஸ் பாறை (Garnetbiotite gneisses)யாகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் ராதாபுரம், ஆரல்வாய்மொழி, குலசேகரம், தக்கலை மற்றும் ராஜாக்க மங்கலம் ஆகிய ஊர்களுக்கு இடைப்பட்ட பகுதியில் கோண்டலைட்ஸ் நைஸ் பாறை களுக்கு இடையிடையே சார்னகைட் (Charnokite) என்ற வகைப் பாறை ஆங்காங்கே காணப்படுகிறது. கோண்டலைட்ஸ் நைஸ் பாறைகளுக்கு இடையிடையே ஆங்காங்கே படிகக்கல் படிவம் (Pigmatite bodies and quartz vein) ஊடுருவிச் செல்கிறது.

குழித்துறைக்குத் தென்மேற்கே கடற்கரையை ஒட்டி கடைப் பேரூழிக் (Tertiary) காலத்தைச் சேர்ந்த 'வற்கலைப் படுகைகள்' காணப்படுகின்றன. கன்னியாகுமரிக் கடற்கரையை ஒட்டி (Coastal belt) கோவளம், லீபுரம், வட்டக்கோட்டை ஆகிய இடங்களில் இடைப்பட்ட காலத்தில் (Sub Recent Age) அமையப்பெற்ற மணற்கற்கள் (Sand stones), சங்கு (Shell) மற்றும் சுண்ணாம்புக் கற்களாலான (Kankary lime stone) பட்டை (Coastal belt) காணப்படுகிறது

வள்ளியாறு தொடங்குமிடத்திலிருந்து குளச்சல் வரை 6 கி.மீ. தொலை விலும் அதற்கு சற்று அப்பாலும், மணவாளக்குறிச்சியிலும் கடற்கரை மணலுடன் இல்மனைட் (ilmenite) ரூடைல் (rutile), ஜிர்கான் (zircon), கார்னட் (garnet), மோனைசட் சில்லிமனைட் (monazite sillimanite) குறைந்த சதவீத அளவுள்ள லீகோஸீன் (leucoxene) உள்ள மேக்னடைட் (magnatite) ஆகிய உலோகத் தாதுக்கள் காணப் படுகின்றன. கடற்கரைப் பகுதியில் வீசும் காற்றுப் போக்கினால் இவ்வுலோகத் தாதுக்கள் படிகின்றன.

அகத்தீஸ்வரம் வட்டத்தில் கோவைக்குளத்திற்குக் கிழக்கே கனகபுரம் வரையுள்ள கடற்கரைப் பகுதியில் சராசரியாக 0.35 மீ முதல் 2.5 மீ வரையிலான உயரத்தில் சங்கு மற்றும் சுண்ணாம்புக் கற்களைக் கொண்ட படிவங்கள் காணப்படுகின்றன. இது போன்ற படிவங்கள் கன்னியாகுமரி, லீபுரம், கல்விளை குடியிருப்பு, கிருஷ்ணன் புதூர், வட்டக்கோட்டை, கோவைக்குளம் மற்றும் கனகபுரம் ஆகிய இடங்களில் ஆங்காங்கே திட்டுகளாகக் காணப்படுகின்றன.

தோவாளை வட்டத்தில் தடிக்காரன்கோணம், செங்கம்மாள் எஸ்டேட் மற்றும் மகேந்திரகிரி ஆகிய இடங்களில் கிரிஸ்சோ பெரைல் (chrysoberyl) மற்றும் ஆக்வாமரைன் (Aquamarine) ஆகிய வண்ண மணிக்கற்கள் அரிதாக காணக் கிடைக்கின்றன. விளவங்கோடு வட்டத்தில் பளுகல், மிடாலம் ஆகிய இடங்களில் கடற்கரையை ஒட்டிக் கூழாங்கற் படுகைகள் உள்ளன.

பொதுவான செய்திகள்

1684 ச.கி.மீ. பரப்பளவை உள்ளடக்கிய கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தின் தென்கோடி முனையில் அமைந்துள்ளது. இது பூமத்திய ரேகைக்கு 77^0 05' மற்றும் 77^0 36' கிழக்கிலும், 8^0 03' மற்றும் 8^0 35' கடகரேகைக்கு வடக்கிலும் அமைந்துள்ளது. அம் மாவட்டத்தின் வடக்கு மற்றும் கீழ் எல்கையாக திருநெல்வேலி மாவட்டம் அமைந்துள்ளது.

தென்கிழக்கே மன்னார் வளைகுடாவும், தெற்கே இந்து மாக்கடலும் தென்மேற்கே அரபிக் கடலும், மேற்கு மற்றும் வடமேற்கே கேரளமும் இம்மாவட்டத்தை சூழ்ந்துள்ளது.

தற்போதுள்ள கன்னியாகுமரி மாவட்டம் திருவிதாங்கூர் மாகாணத்தின் ஒரு பகுதியாக இருந்துள்ளது. மார்த்தாண்டவர்மா (கி.பி.1729–1758) ஆட்சியின்போது திருவிதாங்கூர் மாகாணம் வடக்கே முகம், படிஞாயிறு, தெற்கே முகம் என மூன்று பிரிவுகளாக (Revenue Divisions) பிரிக்கப்பட்டிருந்தது. தற்போதைய குமரி மாவட்டம் தெற்கே முகத்தின் ஒரு பகுதியாகும். கி.பி.1835–ல் இம்மாகாணம் வடக்கு மற்றும் தெற்காக பிரிக்கப்பட்டபோது குமரி மாவட்டம் தெற்குப்பிரிவில் கோட்டயம் திவான் பேஷ்காரர் ஆளுகையின்கீழ் வந்தது. அதனைத் தொடர்ந்து திருவனந்தபுரத்தை மையமாக வைத்து ஒரு பிரிவாக பிரிக்கப்பட்ட போது இம்மாவட்டம் அதனுள் அடங்கியது. 1949, சூலை மாதம் திருவிதாங்கூர்–கொச்சி சமஸ்தானம் நிறுவியபோது தற்போதைய குமரி மாவட்டம் கேரள மாநிலத்தில் திருவனந்தபுரம் மாவட்டத்தின் ஒரு பகுதியாகவே இருந்து வந்தது.

திருவனந்தபுரத்தில் தென் மாவட்டத்திலிருந்த அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம், மற்றும் விளவங்கோடு வட்டங்களைச் சேர்ந்த மக்கள் பெருவாரியாகத் தமிழ் பேசுபவர்களாகவே இருந்தனர். எனவே, தமிழர்கள் தாங்கள் வாழும் பகுதியை சென்னை மாகாணத்துடன் இணைக்கக் கிளர்ச்சி செய்தனர். இதனைத் தொடர்ந்து 1956–ல் மகாணங்களின் மறுசீரமைப்புச் சட்டம் இயற்றப்பட்டது. அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு வட்டங்களை உள்ளடக்கிய கன்னியாகுமரி மாவட்டம் 1.11.1956 அன்று தமிழகத்துடன் இணைந்தது.

கன்னியாகுமரி மாவட்டம் இரு வருவாய் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. அகஸ்தீஸ்வரம், தோவாளை வட்டங்களை உள்ளடக்கிய பகுதி நாகர்கோவில் வருவாய்க் கோட்டமாகவும், கல்குளம், விளவங்கோடு வட்டங்களை உள்ளடக்கிய பகுதி பத்மனாபபுரம் வருவாய்க் கோட்டமாகவும் பிரிக்கப்பட்டது.

2. வரலாற்றில் குமரி மாவட்டம்

கன்னியாகுமரி மாவட்டத்தின் தொல்பழங்காலம் தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் இடைக் கற்காலத்திலிருந்து (நுண் கற்காலம்) தொடங்குகிறது. கி.மு. 4000 காலத்தினைச் சேர்ந்த இக்கற்கருவிகள் முட்டம், சுக்குப்பாறை தேரிவிளை, மருந்து வாழ்மலை ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. இவை செர்ட் மற்றும் குவார்ட்ஸ் ஆகிய மூலக்கற்களினால் ஆனவையாகும். பிளேடு, சுரண்டி, ஊசி முனை (points) ஆகிய கருவி வகைகளே பெருவாரியாக காணப்படுகின்றன.

நுண்கற்காலத்தினைத் தொடர்ந்து கி.மு. 2000ச் சேர்ந்த புதிய கற்காலச் சான்றுகள் அகஸ்தீஸ்வரம் வட்டம் மயிலாடி, விளவங்கோடு வட்டம் தூத்தூர் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. மயிலாடி தூத்தூர் ஆகிய இடங்களில் இக்காலத்தினைச் சார்ந்த செல்ட் எனப்படும் புதிய கற்காலக் கல்லாயுதங்கள் கிடைத்துள்ளன.

புதிய கற்காலத்தினைத் தொடர்ந்து கி.மு. 1000 – கி.பி. 300–க்கும் இடைப்பட்ட பெருங்கற்காலத்தினைச் சார்ந்த கருப்பு – சிவப்பு மட்கலயங்கள், இரும்பு ஆயுதங்கள், தாழிகள் ஆகியன வெள்ளிமலை, நேசர்புரம், கோணம், சின்னவிளை, போறங்கோடு மற்றும் கருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. முதுமக்கள் தாழிகள் 'கூனிப்பானை' என்ற பெயரில் இம்மாவட்டத்தில் மக்கள் வழக்கில் அழைக்கப்படு கிறது. சிறிய கிண்ணங்கள், மட்கலயங்கள், ஜாடி, தாழியை மூடப்பயன்படுத்திய மூடிகள் ஆகியன பெருங்கற்கால மக்கள் வாழ்ந்த இடங்களில் இம்மாவட்டத்தில் கிடைத் துள்ளன. இவை தவிர தானியங்கள் சேமித்து வைக்கும் குறுகிய வாய் கொண்ட குலுக்கைகளும் கிடைத்துள்ளன. வெள்ளிமலையில் கிடைத்த ஒரு கருப்பு–சிவப்பு வண்ண ஜாடி நல்ல பளபளப்புடன் காணப்படுகிறது.

பெருங்கற்காலத்தினைத் தொடர்ந்து சங்ககாலத்தில் ரோமானியர்கள் இப்பகுதி யில் தொடர்பு கொண்டிருந்ததற்கான கி.பி. 100–300–க்கு இடைப்பட்ட ரோமானியர் களின் 'ரௌலெட்டட்' அலங்கார வேலைப்பாடு பொறிக்கப்பட்ட தானியங்கள் சேமித்து வைக்கும் குலுக்கை ஒன்று அதங்கோடு என்ற இடத்தில் கிடைத்துள்ளது. சங்க காலப் புலவரும் தொல்காப்பியரின் சமகாலத்தவருமான அதங்கோட்டு ஆசான் வாழ்ந்த ஊராக இவ்வூர் கருதப்படுகிறது. மற்றுமொரு சங்கப் புலவன் எழினியாதன் வாட்டாற்றின் (திருவட்டாறு) வளமையினைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த "பெரிப்புளூஸ் எரித்திரியின் கடல்" என்ற நூல் கன்னியாகுமரியை 'கொமரியா' எனக் குறிக்கின்றது. கி.பி. 140 –இல் தாலமி தன் பயண நூலில் கன்னியாகுமரியை 'கொமரி' எனக் குறித்துள்ளார்.

பொனீசியர்கள் கி.மு. 1000–ல் மேலைக் கடற்கரைப் பகுதியில் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். கி.மு. 3–ஆம் நூற்றாண்டில் பொனீசியர்கள் கன்னியாகுமரியில் வாணிபத் தொடர்பு கொண்டிருந்ததனை கி.மு. 276 –ஆம் ஆண்டைச் சேர்ந்த எரட்டோடஸ் தனீஸ் என்பாரின் பயணக்குறிப்புகள் தெரிவிக்கின்றன.

சங்க காலம்

சங்ககாலத்தில் தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர்களும், பல சிற்றரசர்களும் ஆட்சி செய்தனர். இக்கால கட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டப் பகுதிகளை ஆய் மரபில் வந்த குறுநில மன்னர்கள் ஆட்சி செய்தனர். ஆய் அரசிற்கு வடக்கே கோலோச்சிய சேர அரசர்களும் அப்போதைக்கப்போது மேற்கு கடற்கரை வழி தமது ஆட்சியை இப்பகுதிக்கு நீட்டித்திருக்கும் வாய்ப்பும் மறுப்பதற்கில்லை. தென் பகுதியைப் பாண்டியர்கள் ஆண்டனர். இது குறித்த சான்றுகள் அரிதாகவே கிடைக்கின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தை ஆண்ட சங்ககால ஆய் மன்னர்கள் பரம்பரை குறித்துப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. மௌரியப் பேரரசர் அசோகரின் கல்வெட்டு ஆய் அரசரை "ஹித ராஜா" எனக் குறிக்கிறது என்பது ஒரு கருத்து. இதற்கு இடையர் அரசர், ஆயர் அரசர் என்று பொருள் கொள்ளப்படுகிறது.

பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் ஆய் மன்னன் பரம்பரையினரும், வேளிரும் ஒருவரே எனக் கருதுகிறார். இவர்கள் வட நாட்டிலுள்ள யது குல சத்திரியர்கள் என்றும், யாதவ சமூகத்தினர் எனவும் கூறுகிறார். பேராசிரியர் ஸ்ரீதரமேனன் ஆய் மன்னர்கள் வட நாட்டிலிருந்து வந்தவர்கள் என்பது கற்பிக்கப்பட்ட கதை என்கிறார். சேர, சோழ, பாண்டியரைப் போலவே இவர்கள் திராவிட மரபினர் என்கிறார்.

கிரேக்கப் பயணி தாலமி, ஆய் அரசர்களின் நாடு கன்னியாகுமரியிலிருந்து பெட்டிகோ மலை வரை பரவிக் கிடந்தது எனக் குறிக்கிறார். இப்பெட்டிகோ மலை பொதிய மலையாக இனம் காணப்படுகிறது. இதனால் கி.பி.2–ம் நூற்றாண்டில் ஆய்நாடு பாண்டிய நாட்டுக்கும், சேர நாட்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் இருந்திருக்கலாம்.

ஆய் மன்னர்களின் தலைநகரம் ஆய்க்குடி என்பது பொதுவான கருத்து. தற்போது நாகர்கோவிலின் ஒரு பகுதியாக இருக்கும் இடராய்க்குடி (இடலாக்குடி) இவர்களின் தலைநகரமாக இருந்திருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது. விழிஞம் ஆய் மன்னர் தலைநகராக இருந்தது என்பர். தாலமி மற்றும் பிளினி தங்களின் பயண நூல்களில் கொட்டியாரா என்னுமிடம் ஆய்நாட்டில் இருந்ததாக குறிக்கின்றனர். இவ்விடத்தைத் தற்போதைய கோட்டாறாக இலங்கைத் தமிழறிஞர் திரு கனகசபை இனம் காண்கிறார்.

குமரி மாவட்டத்தை ஆண்ட சங்ககால ஆய் மன்னர்களாக நால்வரின் பெயர் நமக்கு கிடைக்கிறது.

ஆய் அண்டிரன்

இவன் ஆய் மன்னர் பரம்பரையில் முதலாமவன் ஆவான். தற்போதைய குமரி மாவட்டமும், தாமிரபரணி ஆறு வரையுள்ள தென் பாண்டிப் பகுதிகளும் இவனது ஆளுகையின் கீழிருந்தன. இவன் வேள், ஆய்மாவேள் என்றும் அழைக்கப்படுகிறான். சங்ககாலப் புலவர்களான ஏணிச்சேரி முடமோசியார், குட்டுவன் கீரனார், துறையூர் ஓடைக்கிழார் ஆகிய புலவர்களுக்கு ஆதரவு அளித்திருக்கிறான். முடமோசியார் இவனை

வடதிசை அதுவே வான்தோய் இமயம்
தென்திசை ஆய்குடி இன்றாயின்
பிழைவது மன்னோ இம்மலர்தலை உலகம்

எனப் புகழ்ந்து பாடுகின்றார். இம்மன்னன் இறந்த போது முடமோசியார் இவன் வலிமை யான தேரை இரவலர்க்கு ஈந்தவன், இவன் இறந்ததும் இவனது உரிமை மகளிரும் அவனுடன் ஈமத்தீயில் பாய்ந்து உயிர்விட்டனர் என்கிறார்.

முதலாம் திதியன்

ஆய் அண்டிரனுக்கு அடுத்து நமக்குத் தெரியவரும் ஆய் மன்னன் முதலாம் திதியன் ஆவான். புறநானூறு இவனைப் பொதியில் செல்வன் எனக் குறிக்கிறது. அகநானூறு இவனை,

"செல்சமம் கடந்த வில்கெழு தடக்கை
பொதியில் செல்வன் பொலந்தேர்த் திதிய"

என்று புகழ்கிறது. சங்கப்புலவர் கபிலர் அகநானூற்றில் இவனைக் குறிக்கும் போது

"ஒளிறுவேல் தானைக் கருந்தேர்த் திதியன்"

என்றும்

"முயலுநர் முற்றா ஒற்று அருநெடுஞ்
சிமைப் புகலரும் பொதியில்"

என்றும் இவனது ஆட்சிக்குட்பட்ட பகுதியை வருணிக்கிறார்.

சங்ககாலப் பாண்டிய மன்னன் பூதப்பாண்டியன் இவனது சமகாலத்தவன். இவன் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் எனக் குறிக்கப்பெறுகிறான். இம்மன்னனின் மேற்கெல்கையாகப் பூதப்பாண்டி இருந்தது என்றும் கே.கே.பிள்ளை குறிக்கிறார்.

அதியன்

இவனைத் திதியனின் மகன் என்பர். இவனது நாட்டில் எப்போதும் மழை பொழிந்து கொண்டிருக்கும் எனப் பரணர் அகநானூற்றில் (அகம் 162) குறிப்பிடுகிறார். இவன் இரவலர்களுக்கு இல்லையென்னாது வழங்கும் புரவலன் எனப் புகழப்படுகிறான்.

தோவாளை வட்டத்திலுள்ள அழகியபாண்டிபுரம் (கி.பி. 12–ம் நூ.ஆ.) ஊர்க் கல்வெட்டு அவ்வூரை அதியனூரான அழகியபாண்டிபுரம் எனக் குறிக்கிறது. இவ்வூர் பொதிய மலையைத் தொட்டு இருப்பதாலும் இவன் பெயராலேயே இவ்வூர் பிற்காலத்தில் அழைக்கப்பட்டிருக்கலாம் என கே.என். சிவராஜ்பிள்ளை கருதுகிறார்.

இரண்டாம் திதியன்

இவன் தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழிய னுடன் மாறுபாடு கொண்டவனாகக் காணப்படுகிறான். இவனது காலத்துக்குப் பின்பு ஆய்நாடு குறுகிய நிலப்பரப்பைக் கொண்டதாக இருந்திருக்க வேண்டும்.

நாஞ்சில் பொருநன்

மேற்சொன்ன நான்கு ஆய் மன்னர்கள் தவிர நாஞ்சில் பொருநன் என்ற குறுநில மன்னனும் சங்க இலக்கியத்தில் குறிக்கப்படுகிறான். இவன் நாஞ்சில் வள்ளுவன் என்றும் அழைக்கப்படுகிறான். இம்மன்னனை ஒருசிறைப் பெரியனார் (புறம் 137) மருதன் இளநாகனார் (புறம் 138, 139) ஔவையார் (புறம் 140) கருவூர் கதப்பபிள்ளை (புறம் 380) ஆகிய சங்கப் புலவர்கள் பாடுகின்றனர்.

ஒரு சிறைப் பெரியனார் நாஞ்சில் பொருநனைச் "செவ்வரைப் படைப்பை நாஞ்சில் பொருந" (புறம் 137) என்றும் மருதன் இளநாகனார் 'உயர் சிமைய உழாஅ நாஞ்சில் பொருந' (புறம் 138,139) என்றும், ஔவையார் 'நடுநிலைப் பலவின் நாஞ்சில் பொருநன் மடவன்' என்றும் (புறம் 148) கருவூர் கதப்பபிள்ளை 'தீஞ்சுனைப் பலாவின் நாஞ்சில் பொருநன்' என்றும் (புறம் 380) அடைமொழி கொடுத்துப் பாராட்டுகின்றனர். கருவூர் கதப்பபிள்ளை நாஞ்சில் பொருநனை இவ்வாறு குறிக்கிறார்.

தென் பவ்வத்து முத்துப்பூண்டு
வட குன்றந்துச் சாந்தம் உரீஇ
.....ங்கடல்தானை
இன்னிசைய விறல் வெற்றித்
தென்னன் வய மறவன்

இதனால் நாஞ்சில் பொருநன் ஆய்மன்னனுக்குகீழ் குறுநில மன்னனாக இருந்திருக்க வேண்டும். பொருநன் என்பது நாஞ்சில் நாட்டு வேளிரின் குலப்பெயர் என்று புறநானூற் றின் பழைய உரையாசிரியர் கூறுவதைக் கனகசபைப்பிள்ளை எடுத்துக் காட்டுகிறார். எனவே, நாஞ்சில் பொருநனும் ஆய் மரபினனே என்பது இவரது கருத்து.

மேற்சொன்ன சங்ககால மன்னர்கள் அனைவரும் கி.பி. முதல் நூற்றாண்டி லிருந்து மூன்றாம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் ஆட்சி புரிந்தோராகக் கருதலாம்.

பிற்கால ஆய் மன்னர்கள்

சங்க காலத்திற்குப் பிறகு கி.பி. 7–ம் நூற்றாண்டு வரை ஆய் மன்னர்கள் பற்றிய செய்திகள் ஏதும் கிடைக்கப்பெறவில்லை. சடையன் அவன் மகன் கருநந்தன் ஆகிய இரு ஆய் மன்னர்களைக் கழுகுமலைக் கல்வெட்டு குறிக்கிறது. இவர்கள் இருவரும் கி.பி.8–ம் நூற்றாண்டின் இறுதியில் விழிஞத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவர்கள். ஜடில பராந்தகன் (கி.பி. 765–805) என்ற பாண்டிய மன்னன் இவர் களுடன் போரிட்டிருக்கிறான். சென்னை அருங்காட்சியகச் செப்பேடு இப்போரைக் குறிக்கிறது. ஆய் மன்னனை வேள், ஆய் என்றே குறிக்கிறது. இச்செப்பேடு பாண்டியன் ஆய் மன்னர்களின் செல்வங்களையும், குதிரை, யானை போன்றவற்றையும் கொள்ளை யடித்ததாகவும் குறிக்கும். இப்போரில் சடையன் இறந்ததாகவும், அவனது மகன் கருநந்தடக்கன் பாண்டியனுடன் போரிட்ட தாகவும் இச்செப்பேடு தெரிவிக்கிறது. இப்போர் அருவியூரில் (இன்றைய அருவிக்கரை) நடந்தது. இவ்வூரும் இப்போரில் எரிக்கப்பட்டது.

கி.பி. 8, 9, 10 ஆம் நூற்றாண்டுகளில் குமரி மாவட்டம் முற்காலப் பாண்டியரின் ஆளுகைக்குட்பட்டுப் பாண்டி மண்டலமாக மாறிய கால கட்டத்தில் இரு ஆய் மன்னர்கள் சில பகுதிகளை ஆண்டு வந்ததைக் கல்வெட்டுகள் மற்றும் செப்பேடுகள் உணர்த்து கின்றன.

கோக்கருநந்தடக்கன் (கி.பி.857–885)

இம்மன்னன் விளவங்கோடு வட்டத்தில் முஞ்சிறைக்கு அருகே பார்த்திவசேகர புரம் என்ற ஊரை ஏற்படுத்தி விஷ்ணு கோவில் ஒன்றை எடுப்பித்து அங்கு காந்தளூர்ச் சாலையைப் போன்ற ஒரு சாலையை நிறுவினான். அதில் 95 சட்டர்கள் இருந்தனர் என இம்மன்னனின் செப்பேடு (கி.பி.864–65) தெரிவிக்கிறது. இம்மன்னனின் 22–ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி.879) திருவிடைக்கோடு மகாதேவர் கோவில் வெளிச் சுற்றிலுள்ள பாறையின் மீது வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. திருவிடைக்கோடு மகாதேவர்க்கு திருநந்தா விளக்கு ஒன்று அமைத்து நாள்தோறும் உழக்கு நெய் அளக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்ததைக் குறிக்கிறது.

இதே மன்னனின் மற்றுமொரு 14–ம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட வட்டெழுத்துக் கல்வெட்டு திருவிடைக்கோட்டு மாதேவர்க்கு முதுகுளத்து வாணியன் புல்ல முருகன் என்பான் ஒரு நந்தா விளக்கு அமைத்து, எரிப்பதற்கு நெய் அளிப்பதற்காக இருபத்தைந்து பசுக்கள் அளித்ததைக் குறிக்கிறது.

இதே கோவிலில் உள்ள ஆய் மன்னர் காலத்திய கி.பி. 9–10–ம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டு ஓமாய நாட்டு அரையனின் நினைவாக அந்நாட்டின் கிழவன் ஊர்வேளான் என்பான் திருவிடைக்கோடு மாதேவற்கு திருநந்தா விளக்கொன்று எரிப்பதற்கும், திருவமிர்துக்குமாக நிலமளித்ததைக் குறிக்கிறது.

கோக்கருநந்தடக்கனின் ஆட்சிப்பரப்பு திருப்பாப்பூரிலிருந்து (திருவனந்தபுரத் தி லிருந்து 6 கி.மீ. தொலைவிலுள்ள ஊர்) திருவிடைக்கோடு வரை (குளச்சல், முஞ்சிறை, திருவட்டாறு உட்பட) உள்ள பகுதிகள் ஆகும்.

விக்கிரமாதித்ய வரகுணன் (கி.பி.885–925)

இவன் கோக்கருநந்தடக்கனுக்கு அடுத்து வந்த ஆய் மன்னனாவான். தெங்க நாட்டுக் கிழவன் மகள் ஆய்குல மாதேவியான முருகன்சேந்தி (திருவடிசார்த்த) நிலம் பல குடியாக அட்டிக் கொடுத்ததை இவனது பாளையம் செப்பேடு குறிக்கிறது. இதே மன்னனின் சிதரால் கல்வெட்டு பேரயக்குடி அரட்டநேமி படாரர் மாணாக்கியர் குணந் தாங்கிக் குரத்திகள் பொன்னும், பொற்பூவும் இங்குள்ள கோயிலுக்குத் தானமாக வழங்கியதைத் தெரிவிக்கிறது. கி.பி.10–ம் நூற்றாண்டுக்குப் பின்னர் ஆய் மன்னர்கள் திருப்பாப்பூரில் இருந்து கொண்டு திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவிலின் நிர்வாகிகளாக மட்டும் இருந்தனர். பின்பு வேணாட்டு அரசு வம்சத்துடன் இவர்கள் கலந்து விட்டனர்.

முற்காலப் பாண்டியர்

சங்ககாலப் பாண்டியர்க்கும், குமரி மாவட்டத்திற்கும் தொடர்பு இருந்ததை சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன. பெரும்பாலான காலங்களில் கன்னியாகுமரி ஊர் பாண்டியர்க்கே உரிமையுடையதாய் இருந்தது. மதுரைக்காஞ்சி கன்னியாகுமரியை பாண்டியரின் ஆளுகைக்குட்பட்ட பகுதியாகக் குறிக்கிறது. திவாகர நிகண்டு "குமரி சேர்ப்பன்" எனப் பாண்டியனைக் குறிக்கிறது.

"பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள"

என்ற சிலப்பதிகார வரிகள் கடல்கோளுக்குக் கன்னியாகுமரி ஆட்பட்டதைக் குறிக்கிறது. இதில் பஃறுளி ஆறு என்பது பறளியாறு ஆகும் என்பது குமரி மாவட்ட வட்டார வரலாற்றாய்வாளர்களின் கருத்து.

கி.பி. 7–ம் நூற்றாண்டுக்கும் 10 நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் நாஞ்சில் நாட்டின் மீது படையெடுத்த 7 பாண்டிய மன்னர்களை நீலகண்ட சாஸ்திரியார் இனம் காட்டியுள்ளார். நாஞ்சில் நாட்டின் மீது படையெடுத்த சில பாண்டிய மன்னர்களின் பெயர்களை வேள்விக்குடி செப்பேடு, சின்னமனூர்ச் செப்பேடு, அருங்காட்சியாகச் செப்பேடு ஆகியவற்றின் மூலம் அறியலாம்.

செழியன் சேந்தன் (கி.பி. 625 – 650)

இவன் நாஞ்சில் நாட்டின் மீது படையெடுத்த முதல் பாண்டிய மன்னன் ஆவான். இம்மன்னனை ஜயந்தவர்மன், சேந்தன் என வேள்விக்குடிச் செப்பேடு கூறுகிறது. மேலும், இவன் சேரர்களை வெற்றி கொண்டு 'வானவன்' எனப் பெயர் பெற்றான். இவனது படையெடுப்பால் நாஞ்சில் நாடு சீர்குலைந்தது என வேள்விக்குடிச் செப்பேடு பதிவு செய்கிறது. தோவாளை அழகிய பாண்டிபுரம் ஜயந்தனார் கோயிலும் இம்மன்னனின் பெயரால் வழங்கப்பட்டவை ஆகும்.

அரிகேசரி மாறவர்மன் (கி.பி. 650– 700)

இம்மன்னன் செழியன் சேந்தனை அடுத்து வந்தவன். வேள்விக்குடி மற்றும் சின்னமனூர்ச் செப்பேடுகள் இவனைக் குறிக்கின்றன. இவன் பாண்டிக்கோவையின் பாட்டுடைத் தலைவன். பாண்டிக்கோவை இவனை நின்றசீர் நெடுமாறன், சுந்தர பாண்டியன் எனக் குறிக்கின்றன. கூன் பாண்டியன் என்பவனும் இவனே. தீவிர சமணனாக இருந்து ஞானசம்பந்தரால் சைவத்துக்கு மாற்றப்பட்டவன்.

இவன் ஆய் மன்னனுடன் பாழி, நெல்வேலி, செந்நிலம், புவியூர் ஆகிய இடங்களில் போர் செய்தவன் என வேள்விக்குடிச் செப்பேடு குறிக்கிறது. இதனை

"சூழியானைச் செலவுந்திப் பாழிவாய் அமர் கடந்தும் வில்வேலி
கடற்றானையை நெல்வேலிச் செருவென்றும்"

என செப்பேடு குறிக்கிறது. இதில் வரும் நெல்வேலி விளவங்கோடு வட்டத்தில் மார்த்தாண்டத்திலிருந்து தென்மேற்கே 4.கி.மீ. தொலைவில் உள்ளது. இதே பாண்டிய மன்னன் ஆய் மன்னனை வென்று குறுநாட்டைக் கைப்பற்றினான் எனவும் குறிக்கிறது. இக்குறுநாடு என்பது கடியப்பட்டினம் உள்ளிட்ட பகுதிகளாகும். அரிகேசரி மாறவர்மன் கோட்டாற்றில் போர் புரிந்ததாக இறையனார் அகப்பொருள் உரை குறிக்கிறது. இம்மன்னன் கன்னியாகுமரிக் கடற்கரைப் பகுதியில் பரதவர்களின் கலகத்தை அடக்கினான் என வேள்விக்குடிச் செப்பேடு குறிக்கிறது.

கோச்சடையன் ரணதீரன் (700–730)

இவன் கூன் பாண்டியனான அரிகேசரிமாறவர்மனை அடுத்து பட்டத்திற்கு வந்தவன். தென்னவன், வானவன் என்றெல்லாம் அழைக்கப்பட்டவன். இவன் மருதூர், செங்கோடு, புதான்கோடு ஆகிய இடங்களில் போர் புரிந்ததை வேள்விக்குடிச் செப்பேடு கூறுகிறது.

பொருது ஊரும் கடல் தானைய
மருதூரில் மாண்பு அழித்து

என்றும்

ஆய்வேளை அகப்படவே
என்னாமை அறிந்து அழித்து

என்றும்

செங்கொடியும் புதான்கோட்டும்
செருவென்று அவன் சினம் தவிர்த்து

என்றும் குறிப்பிடுகிறது. இதில் குறிப்பிடப்படும் மருதூர் அம்பாசமுத்திரத்தை அடுத்த ஊர் என கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி இனம் காண்கிறார். இவ்வூர் குறுநாட்டுப் (கல்குளம் வட்டம்) பகுதியிலிருப்பதாக கே.கே.பிள்ளை இனம் காண்கிறார். தற்போது இவ்வூர்

மேல்புறம் பஞ்சாயத்து பேரூராட்சியின் கிழ் உள்ளது. இரண்டாவதாகக் குறிப்பிடப்படும் செங்கோடு இன்றைய திருவட்டாறு பேரூராட்சியில் உள்ளது. புதான்கோடு இப்போதைய திருவிதாங்கோடு ஆகும். மேலும், கோச்சடையனின் கல்வெட்டு கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் உள்ளது.

இராஜசிம்மன் (730–765)

இம்மன்னன் கோச்சடையனின் மகனாகக் கருதப்படுபவன். அரிகேசரி பராங்குசன் மற்றும் மாறவர்மன் இராஜசிம்மன் என்ற பெயர்களும் இவனுக்குண்டு. வேள்விக்குடிச் செப்பேடு இவன் திருவஞ்சிக்களத்தில் போர் செய்ததைக் குறிக்கிறது. இவ்வூர் இன்றைய கல்குளம் வட்டத்தில் உள்ளது. நாஞ்சில்நாடு இவன் ஆளுகைக்கு உட்பட் டிருந்ததைச் சின்னமனூர்ச் செப்பேடு குறிப்பிடுகிறது.

மாறஞ்சடையன் (765–815)

இவன் இராஜசிம்மனின் மகன். இவனுக்கு ஜடில பராந்தகன் என்ற பெயரும் உண்டு. இவனது 27–வது ஆட்சியாண்டில் இவனது படைத்தளபதி இரணகீர்த்தி சேரர் படையுடன் போரிட்டு வீரமரணமடைந்தான். இதற்காக இவனுக்கு நடுகல் எடுக்கப்பட்டு இதன் ஒருபுறம் ஈட்டியுடன் இவனின் உருவமும் மறுபுறம் வட்டெழுத்தில் கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளது. பாண்டி நாட்டுக்கும், சேர நாட்டுக்கும் எல்கையாக அமைந்துள்ள கரைக் கோட்டைக்கருகே இப்போர் நடைபெற்றது. தற்போதைய ஆரல்வாய் மொழியை ஒட்டிய பகுதியைக் கரைக்கோட்டை எனக் கல்வெட்டு குறிக்கிறது. இக் கல்வெட்டு இரணகீர்த்தியை "உள்வீட்டின் ஒற்றைச் சேவகன்" எனக் குறிக்கிறது. தற்போது இந்நடுகல் பத்மனாபபுரம் அரண்மனை காட்சிக்கூடத்தில் உள்ளது.

ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் (கி.பி.815–862)

இவன் மாறஞ்சடையனின் மகனாவான். இவன் சேரநாட்டின் மீது படையெடுத்துச் சென்று வெற்றி கொண்டதைச் சின்னமனூர்ச் செப்பேடு குறிக்கிறது.

"..... விழிஞத்து
வாடாத வாகை சூடிக்
கோடாத செங்கோல் நடக்க"

என்று குறிக்கிறது.

இரண்டாம் வரகுணன் (கி.பி.862–880)

இம்மன்னனுக்கு வீரநாராயணன் என்ற பெயரும் உண்டு. இவன் சேரநாட்டு இளவரசி வானவன் மாதேவியை மணம் முடித்தவன். இவன் குமரி மாவட்டத்தில் பல ஊர்களை தானமாக பிரம்மதேயங்களாக வழங்கினான். இதில் சுசீந்திரமும் ஒன்று.

வீரநாராயணன் சேரி, வீரநாராயண மங்கலம் ஆகிய ஊர்கள் இவன் பெயரால் வழங்கப் பட்டவையாகும். வீரநாராயணன் மங்கலம் தோவாளை பேரூராட்சியிலும், வீரநாராயணன் சேரி தக்கலை பேரூராட்சியிலும் உள்ளன.

வீரபாண்டியன் (கி.பி. 946–966)

இவன் இராஜசிம்மனின் மகனாவான். இவனுக்கும் மாறஞ்சடையன் என்ற பெயருண்டு. பராந்தக சோழனின் மகனான உத்தமசீலியை இவன் கொன்றதால் அது முதல் 'சோழன் தலைகொண்ட வீரபாண்டியன்' என்றும் 'சோழாந்தகன்' என்றும் அழைக்கப்பட்டான். கேரளாவின் தென்பகுதி, திருநெல்வேலி, மதுரை வரை இவன் ஆட்சிப்பரப்பு விரிந்திருந்தது.. மதுரைக்கு மேற்கே 'சோழாந்தகச் சதுர்வேதி மங்கலம்' என்ற இடத்தில் 'வீரகேரள விண்ணகரம்' என்ற விஷ்ணு கோவிலை எடுப்பித்தான். இம்மன்னனின் கல்வெட்டு சுசீந்திரம் கோவிலில் காணப்படுகிறது.

பிற்காலச் சோழர்கள்

கி.பி.10–ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து கி.பி.13–ம் நூற்றாண்டு வரை பிற்காலச் சோழர்களின் ஆளுகைக்கு உட்பட்டு இப்பகுதி இருந்தது. விஜயாலய சோழனிலிருந்து மூன்றாம் இராசேந்திரன் வரையிலான சோழ அரசர்கள் சோழநாட்டை ஆண்டனர். குமரி மாவட்ட வரலாற்றுடன் தொடர்புடைய முதல் சோழ மன்னன் முதலாம் பராந்தகன் ஆவான்.

முதலாம் பராந்தகன் (கி.பி.907–953)

இவன் ஆதித்த சோழனின் புதல்வன். கி.பி.907–ல் ஆதித்தசோழன் இறந்த வுடன் முதலாம் பராந்தக சோழன் சோழநாட்டு சக்கரவர்த்தியாக முடிசூடிக் கொண்டான். சோழ மன்னர்கள் மாறி மாறி சூடிக் கொண்ட இரு பட்டங்களில் பரகேசரி பட்டம் பூண்டவன். குமரி மாவட்டத்தில் இம்மன்னனின் கல்வெட்டுகள் குறத்தியறை, சுசீந்திரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் கிடைக்கின்றன. குறத்தியறை பாறைக் கல்வெட்டு குன்றப் பள்ளியைச் சேர்ந்த இப்பிக் கவிசியன் சாத்தன் சிராவணன் என்பவன் அமர்ந்த கோலப் பெருமாளுக்குப் பொன் கொடையாக வழங்கியதையும், 7 பொன் வரி செலுத்தியதையும் பதிவு செய்கிறது. சுசீந்திரம் கல்வெட்டு தென்னாட்டு தலக்குளத்து கரவந்தபுரம் என்னும் ஊரிலிருந்த வியாபாரி ஒருவன் நிபந்தம் அளித் ததைக் குறிக்கிறது. கன்னியாகுமரியிலுள்ள குகனாதீசுவரர் கோயிலை முதலில் கட்டியவன் இம்மன்னனே. குமரி மாவட்டத்தின் மீது படையெடுத்த முதல் சோழனும் இவனே.

முதலாம் இராஜராஜன் (கி.பி.985–1014)

இவன் சுந்தர சோழனின் மகன். உத்தம சோழனுக்குப் பின் அரியணை ஏறினான். இம்மன்னனின் மெய்க்கீர்த்திகள் அனைத்தும் 'காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி' என்ற

சொற்றொடரைக் குறிக்கும். காந்தளூர்ச்சாலை கேரளாவில் திருவனந்தபுரத்தை அடுத்து இருக்கும் ஊர். இராஜராஜசோழன் உலா (வரி 40–42) "உதகையைத் தீயுய்த்த உரவோன்" எனவும், கலிங்கத்துப்பரணி (பாடல் 201) "உதகை வென்ற கோன்" எனவும், திருக் கோவிலூர்க் கல்வெட்டு "உதகை முன்னொள்ளெரி கொளுவி உதைகை வேந்தைக் கடல்புக வெகுண்டு' எனக் குறிக்கும். உதகையானது வடக்கன் மலபாரிலுள்ள மகோதயபுரமாகும். இவனது கல்வெட்டுக்கள் பெரியகுளக்கரை, திருநந்திக்கரை, சுசீந்திரம், வடசேரி, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. பெரிய குளக்கரைக் கல்வெட்டு அக்குளக்கரையைச் சீரமைத்துத் தொடர்ந்து பராமரிக்க நிலக்கொடை வழங்கியதைக் குறிக்கிறது. இவன் பிறந்த நாளான சதைய நாளில் விழாவெடுத்ததை இம்மன்னனின் திருநந்திக்கரை கல்வெட்டு குறிக்கும். சுசீந்திரம் கல்வெட்டு அக்கோயில் நிர்வாகச் சிக்கலை தீர்த்ததைக் குறிக்கும். இவனது ஆட்சிப் பரப்பு புறத்தாய நாடு, குறுநாடு, வள்ளுவநாடு, நாஞ்சில் நாடு உள்ளிட்ட பகுதிகளில் பரந்து விரிந்திருந்தது. கன்னியாகுமரியை இவனது கல்வெட்டு குறிக்கும்பொழுது "இராஜராஜ வளநாட்டுப் புறத்தாய நாட்டுக் குமரி மங்கலம்" எனக் குறிக்கிறது.

முதலாம் இராஜேந்திரன் (கி.பி. 1012–1044)

இவன் முதலாம் இராஜராஜனின் மகனாவான். பரகேசரி பட்டம் பூண்டவன். இவனது கல்வெட்டுகள் சுசீந்திரம், தேரூர், கன்னியாகுமரி, ஆகிய இடங்களில் காணப் படுகின்றன. இவன் கோட்டாற்றில் சோழர்களின் நிலைப்படை ஒன்றை நிறுவினான். இவன் தந்தையைப் போலவே இவனும் விழிச்ஞும் வரை படையெடுத்து சென்று வெற்றி கொண்டான். அதனால் விழிஞ்ஞும், விழிஞுமான இராஜேந்திர சோழப் பட்டினம் என்று குறிக்கப்படுகிறது. வடசேரியில் சோழ ராஜா கோயில் உள்ள பகுதி இவன் பெயரால் "இராஜேந்திர சோழபுரம்' என அழைக்கப்படுகிறது. இவன் பாண்டி நாட்டின் தென்பகுதியில் தன் புதல்வர்களை ஆளச் செய்ததால் அது முதல் அவர்கள் சோழ பாண்டியர் எனக் கல்வெட்டில் குறிக்கப்படுகின்றனர். கன்னியாகுமரி பகவதி அம்மன் கோயில் கல்வெட்டு ஒன்று இராஜேந்திரனின் மூன்று புதல்வர்களை முத்தீயைப் போன்ற மூன்று புதல்வர்கள் எனக் குறிக்கிறது. இராஜேந்திர சோழனின் அதிகாரிகளில் ஒருவனான இராஜேந்திர சோழ தமிழப் பல்லவரையன் என்பவன் தேரூர் இளையநயினார் கோயிலுக்குக் கொடை வழங்கியுள்ளான்.

முதலாம் இராஜாதிராஜன் (கி.பி.1018–1054)

இவன் முதலாம் இராஜேந்திர சோழனின் மகனாவான். இராஜகேசரி பட்டம் பூண்டவன். இவனது கல்வெட்டு கன்னியாகுமரி குகனாதீசுவரர் கோவிலில் பொறிக்கப் பட்டுள்ளது. இவனது மெய்க்கீர்த்தியில் 'கூபகத்தரசை சேவகம் தொலைத்து' என்ற குறிப்பு வருகிறது. கூபக மன்னன் வேணாடு மரபில் வந்த மன்னனாகும். இவன் வேதியச் சாத்தன் கோவிலின் தென்பக்கமுள்ள ராஜராஜப் பெருஞ்சாலைக்கு சாலா போகமாக நிபந்தம் கொடுத்துள்ளான். இராஜராஜப் பாண்டிநாட்டு உத்தம சோழ வளநாட்டு புறத்தாய நாட்டுக் கழிக்குடியைச் சேர்ந்த ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையான ராஜராஜப்

பெருஞ்சாலைக்கு மஹிபால குலகாலப் பேரளத்திலிருந்து அனுப்பப்பட்ட உப்பு தடைபட மீண்டும் அதனை அனுப்ப உப்பள அதிகாரிகளுக்கு ஆணையிட்டுள்ளான்.

இரண்டாம் இராஜேந்திரன் (கி.பி.1051–1063)

இவன் முதலாம் இராசேந்திரசோழனின் இரண்டாம் புதல்வனாவான். பரகேசரி பட்டம் பூண்டவன். கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் இவனது கல்வெட் டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவன் தேவதானக் கிராமங்களிலிருந்து வசூலிக்கப் பட்ட பல வரிகளை தனது நான்காம் ஆட்சியாண்டிலிருந்து தனது அரசியார் கிழானடி பிறந்த நாளான அத்தத்தில் விழா எடுப்பதற்கும், ராஜராஜ ஈச்வரமுடையார் கோயில் செலவுகளுக்கும், இராஜராஜப் பெருஞ்சாலை செலவுகளுக்கும் உபயோகிக்க வேண்டும் என ஆணையிட்டுள்ளதை ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது.

வீரராஜேந்திரன் (கி.பி. 1063–1070)

இவனும் முதலாம் இராஜேந்திரசோழன் புதல்வர்களுள் ஒருவன். இராஜகேசரி பட்டம் பூண்டவன். இவனது கல்வெட்டு கன்னியாகுமரி பகவதி அம்மன்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளது. இவனது மெய்க்கீர்த்தி கேரள அரசனை வென்றதைக் குறிக்கிறது. இவன் தில்லை நடராஜருக்கு அணிவிப்பதற்கு 'திரைலோக்கியசாரம்' என்ற அழகான மணிமுடி அளித்ததைக் கன்னியாகுமரிக் கல்வெட்டு குறிக்கிறது. கன்னியாகுமரி பிடாரியார்க்கு நற்றிராக்குடி, பெருங்குடிக் கீழ்கொம்பு ஆகிய ஊர்களிலிலிருந்து நிலக்கொடை வழங்கியுள்ளான். மேலும், இவனது கன்னியாகுமரி பகவதியம்மன் கோயில் கிரந்தக் கல்வெட்டு இவனது முன்னோர்களைப் பற்றி விரிவாகச் சொல்வதால் சோழர் வரலாறு எழுத முக்கிய ஆவணமாக விளங்குகிறது.

முதலாம் குலோத்துங்க சோழன் (கி.பி.1070–1120)

இவன் கீழைச் சாளுக்கிய மன்னன் இராஜராஜ நரேந்திரனுக்கும் முதலாம் இராஜேந்திர சோழனின் புதல்வியாகிய அம்மங்கை தேவியாருக்கும் மகனாகப் பிறந்தவன். இவன் சேரநாட்டின் மீது படையெடுத்துச் சென்று காந்தளூர்ச் சாலை, விழிஞம், கோட்டாறு ஆகிய இடங்களைக் கைப்பற்றினான். கோட்டாற்றை எரித்துத் தீக்கிரை யாக்கினான். இதனைக் கலிங்கத்துப்பரணி 'வெள்ளாறுங் கோட்டாறும் புகையான் மூட' (க.பரணி.3–தா.21) எனப் பதிவு செய்கிறது. மீண்டும் இங்கே கலகம் ஏதும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகக் 'கோட்டாற்று நிலைப்படை' ஒன்றை நிறுவினான். சேர மன்னனும் கப்பம் செலுத்த ஒப்புக் கொண்டான். இம்மன்னனின் கல்வெட்டுகள் சோழபுரம், அகஸ்தீஸ்வரம், சாமித்தோப்பு, சுசீந்திரம், வாரியூர், கோட்டாறு, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. இம்மன்னனின் வாரியூர்க் கல்வெட்டு இவனது 41–வது ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டது. இக்கல்வெட்டு அமரவதிமங்கலத்தைச் சேர்ந்த குருகுலராயன் என்பவன் சுசீந்திரம் மகாதேவர் கோயிலில் குலோத்துங்கச் சோழன் பெயரால் திருநந்தா விளக்கொன்று வைத்ததை தெரிவிக்கிறது. மேலும், புறத்தாய நாட்டு வாரியூரான பராக்கிராம சோழ பேரளத்துக் குடும்பன் வில்லியம்பலவன்

அணி, கேரளச் சித்திரவல்லி அணி ஆகிய இரண்டு அணியினரும் மேற்படி விளக்கு எரிக்க உப்பளத்தில் இரண்டு பாத்திகளைக் கொடையாக வழங்கியதைத் தெரிவிக்கிறது.

இம்மன்னனின் 14–வது ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட கன்னியாகுமரி பகவதி அம்மன் கோயிற் கல்வெட்டு பிராமணர் அமுதூட்டுக்காகக் கொடை வழங்கியதைக் குறிக்கிறது. இதே மன்னனின் சாமித்தோப்புக் கல்வெட்டு மஹிபால குலகாலப் பேரளத்துக்குடியினரான, அழகிய சோழ சித்திரவில்லி, உய்யக் கொண்ட சோழ சித்திரவில்லி, கண்டராதித்த சித்திரவில்லி ஆகியோர் இரண்டு நந்தா விளக்கு வைத்ததையும் குறிக்கிறது.

விக்கிரம சோழன் (கி.பி.1118–1136)

இவன் முதலாம் குலோத்துங்க சோழனின் மகன் ஆவான். பரகேசரி பட்டம் பூண்டவன். இவனது கல்வெட்டுகள் சுசீந்திரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. கன்னியாகுமரி பகவதி அம்மன் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள இவனது கல்வெட்டு ராஜராஜப் பாண்டிநாட்டு உத்தம சோழ வளநாட்டுப் புறத்தாய நாட்டு குமரி கன்னியாபிடாரியார்க்கு திருவிளக்கு ஒன்று வைத்து சாவா மூவாப் பேராடுகள் கொடையாக வழங்கியதைக் குறிக்கிறது. இவன் காலத்திலும் வேணாட்டரசர் திரை செலுத்தும் நிலையிலேயே இருந்துள்ளனர். ஒட்டக் கூத்தரின் விக்கிரம சோழன் உலாவில் 'வேணாடர் வேந்து' என்று ஒருவர் குறிக்கப்படுகிறான். இவன் திருவலஞ்சுழி சிவாலயத்திற்கு நிவந்தம் அளித்துள்ள சேரமான் இராமவர்மனாக இருக்கலாம் எனப் பண்டாரத்தார் குறிப்பிடுகிறார்.

மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி.1178–1216)

இவன் இரண்டாம் இராஜாதிராஜனின் விருப்பப்படி அரியணை ஏறியவன். இக்காலத்தில் பாண்டி நாட்டுக் கிளர்ச்சியை அடக்கச் சோழர்படை மதுரைக்கு வந்தது. பாண்டியருக்குத் துணையாக வேணாட்டரசன் உதவினான். இப்போரில் பாண்டியன் தோற்று மாண்டான். வேணாட்டரசனைக் குலோத்துங்கன் எச்சரித்து அனுப்பினான். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை பிற்காலச் சோழர் வரலாறு தொடர்பாக நமக்கு கிடைக்கும் கடைசித் தகவல் இதுவே. குலோத்துங்கனுக்குப் பிறகு வேணாட் டரசர் கை ஓங்குகிறது.

நாஞ்சில் நாடு

கி.பி. 12–ம் நூற்றாண்டில் வேணாட்டரசு உருவாக்கத்திற்கு முன்பாக நாஞ்சில் நாட்டின் வரலாற்றைச் சுருக்கமாக தெரிந்து கொள்வது அவசியமானதாகும். நாஞ்சில் நாடு என்பது தற்போதைய அகத்தீஸ்வரம், தோவாளை வட்டங்களை உள்ளடக்கிய தாகும். நாஞ்சில் என்பதற்கு கோட்டை மற்றும் கலப்பை எனும் பொருள்கள் உள்ளன. இப்பகுதி வயல்கள் மிகுந்து வளமையுடன் காணப்படுவதாலும், விவசாயத்திற்குக் கலப்பை முக்கிய உழவுக் கருவியாக இருப்பதாலும் 'நாஞ்சில் நாடு' என்ற பெயர் வந்திருக்கலாம்.

நாஞ்சில்நாடு வடமீதி, தென்மீதி என்ற இரு பிரிவுகளைக் கொண்டது. பழையாறு பாயும் பகுதியும், பழையாற்றுப் படுகையும் வடமீதி ஆகும். தென்மீதி நீர்வளம் குறைந்து பனை மரங்கள் மிகுந்து காணப்படும் பகுதியாகும். நாஞ்சில் நாடு கி.பி.13–ம் நூற்றாண்டிற்கு முன்பே 12 பிடாகைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவையாவன: 1) மேல் பிடாகை 2) நடுவு பிடாகை 3) கீழ்பிடாகை 4) அழகிய பாண்டிபுரம் பிடாகை 5) தாழக்குடி பிடாகை 6) தோவாளை பிடாகை 7) படப்பற்று பிடாகை 8) கோட்டாற்றுப் பிடாகை 9) பறக்கை பிடாகை 10) தேரூர் பிடாகை 11) சுசீந்திரம் பிடாகை 12) அகஸ்தீஸ்வரம் பிடாகை. ஒவ்வொரு பிடாகையும் ஒரு நாட்டுக் கூட்டத்தலைமையின் கீழ் இருந்துள்ளது.

கி.பி.13–ம் நூற்றாண்டிற்குப் பின் இதன் வட, தென் எல்லையாகப் பெரிய வீட்டு முதலியார் ஓலை ஆவணங்கள் 'மங்கலம் முதல் மணக்குடி' வரை எனக் குறிக் கின்றன. கி.பி.18–ம் நூற்றாண்டில் இதன் எல்லைகளை வடக்கே கடுக்கரை மலை, தெற்கே மணக்குடி காயல், கிழக்கே ஆரல்வாய்மொழி மலைவெளி, மேற்கே பன்றி வாய்க்கால் எனவும் குறிக்கின்றன.

கி.பி.12–ம் நூற்றாண்டிலிருந்து 18–ம் நூற்றாண்டு வரை வேணாட்டரசர்களுக் கும் நாஞ்சில் நாட்டிற்கும் தொடர்பு இருந்து வந்துள்ளது. வேணாட்டசர்களின் வரி வசூலிக்கும் முகவர்களாகப் பெரிய வீட்டு முதலியார்கள் விளங்கினர். இவர்கள் அழகியபாண்டிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டிருந்தனர். இதிலிருந்து பிரிந்த மற்றொரு கிளையினர் ஆளூரைத் தலைமையிடமாகக் கொண்டிருந்தனர்.

வேணாட்டரசர்கள்

வேணாடு என்பது கொல்லத்தை தலைநகராகக் கொண்டு சேர அரசின் தென்பகுதியாக அமைந்த சிறு நாட்டுப் பிரிவாகும். இவ்வேணாட்டு அரசர்கள் பாஸ்கர ரவிவர்மா காலம் வரை சேரர்களின் ஆட்சிக்கு அடங்கிய சிற்றரசர்களாகவே இருந்து வந்துள்ளனர். முதலாம் குலோத்துங்க சோழன் ஆட்சியில் (கி.பி.1070–1120) சேரர்களின் ஆட்சி முற்றாக அழிய, தன்னாட்சி அரசாக உருவானது. இவ்வரசை கூபக அரசு என்றும், அரசர்களைக் கூபக மன்னர்களெனவும் கி.பி.11–12–ம் நூற்றாண்டு கல்வெட்டுகள் குறிக்கின்றன. ராமவர்ம குலசேகரன் என்ற மன்னனே தனி வேணாட்டரசை முதலில் கி.பி. 12–ஆம் நூற்றாண்டில் நிறுவிய மன்னனாவான். கி.பி.14–ம் நூற்றாண்டில் வேணாட்டின் மற்றொரு பிரிவாக திருவனந்தபுரத்தின் வடக்கே உள்ள பகுதிகளை உள்ளடக்கிய கடற்கரைப் பிரதேசங்கள் தவிர்த்து இளைய இடத்து ஸ்வரூபம் உருவாகிறது. கொல்லத்தைத் தலைநகராகக் கொண்டது தேசிங்கநாடு ஸ்வரூபம். திருவிதாங்கோட்டை தலைநகராகக் கொண்டு ஆண்ட திருப்பாப்பூர் வழி வந்த மன்னர்களே கி.பி. 16–ம் நூற்றாண்டிலிருந்து கல்குளத்தைத் (பத்மனாபபுரம்) தலைநக ராகக் கொண்டு ஆட்சி புரியத் தொடங்கினர்.

குமரி மாவட்டத்தில் வேணாட்டரசனைப் பற்றிக் குறிக்கும் முதல் கல்வெட்டாக தற்போதைய பெருஞ்சாணி அணையின் அருகில் ஓடும் பறளியாற்று பாண்டியன்

அணையின் பாடல் கல்வெட்டே கருதப்படுகிறது. கி.பி.1116–ல் பொறிக்கப்பட்ட இப்பாடல் கல்வெட்டு

எத்திசையும் புகழ்படைத்த கொல்லம் தோன்றி
இருநூற்றித் தொண்ணூற்றி இரண்டாமாண்டு
வெற்றி செய்யும் கும்பத்தில் வியாழநின்ற
விளங்கு திங்களாவணி பதினொன்றாம் தேதி
தத்தி விழும் பறளியாற் றனையும் தள்ளித்
தமிழ்பாண்டி ராஜசிங்கம் தனையும் வென்று
கொத்தவரும் பூஞ்சோலை நாஞ்சில்நாடும்
கோட்டாறும் கூபர்கோன் கொண்டநாளே.

பிற்காலச் சோழர் கல்வெட்டுகள் வேணாட்டரசனை 'கூபகர்கோன்' என்றும் வேணாட்டரசை 'கூபகத்தரசு' எனவும் குறிக்கின்றன. எனவே, இக்கல்வெட்டு குறிக்கும் 'கூபர்கோன்' வேணாட்டரசனே. இவன் கி.பி.1102–1125 க்கிடையில் ஆண்ட கோதைவர்மா ஆவான். கி.பி. 1126–ல் பொறிக்கப்பட்ட இவனது கல்வெட்டு சோழபுரம் சோழீஸ்வரர் கோயிலில் காணப்படுகிறது. இக்கோயிலுக்குத் திருவமுதுக்கும், நந்தா விளக்கெரிக்க வும் கொடை வழங்கியதைக் குறிக்கிறது. இவனது சமகாலப் பாண்டிய மன்னன் சுந்தர பாண்டியனான மானாபரணன் (கி.பி.1104–1131) ஆவான். கோதைவர்மா வென்ற பாண்டிய மன்னன் சடையவர்மனான சீவல்லபன் (கி.பி.1101–1124) ஆவான். சீவல்லபனின் மெய்க்கீர்த்தி திருமடந்தையும், ஜெயமடந்தையும் எனத் தொடங்கும். இவன் அகஸ்தீஸ் வரம் கோயிலை எடுப்பித்தவன்.

கோதை கேரளவர்மா (கி.பி. 1145–1150)

இவன் கோதைவர்மாவுக்கு அடுத்து ஆட்சிக்கு வந்தவன். இம்மன்னனின் கல்வெட்டு சுசீந்திரம் கோயிலில் கி.பி. 1144–ல் பொறிக்கப்பட்டுள்ளது. சுசீந்திரம் கோயில் மகாதேவர்க்கும், திருவேங்கடநிலையாழ்வார்க்கும் திருவமுதுக்காகத் தென்வள நல்லூர் தேவதான நிலங்களிலிருந்து முறையே பன்னிரு நாழி, நானாழி அரிசி கொடையாக வழங்கியதைக் குறிக்கிறது. சோழபுரம் சோழீஸ்வரர் கோயிலுக்கும் திருவமுதுக்காகவும், நந்தா விளக்கெரிக்கவும் கி.பி.1126–ல் கொடை வழங்கியுள்ளார். குமரி மாவட்டத்தின் தென்பகுதி முழுமையும், இவனது ஆளுகையின் கீழிருந்தது.

வீரரவிவர்மா (கி.பி.1150–1161)

கோதை கேரளவர்மாவுக்கு அடுத்து ஆட்சிக்கு வந்தவன். இம்மன்னனின் கி.பி. 1161–ம் ஆண்டுக் கல்வெட்டு புரவச்சேரிப் பெருமாள் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கோயில் விண்ணகர் ஆழ்வார்க்கு நித்திய பூசைக்கும் நந்தா விளக்கெரிக்கவும் பத்து மா முந்திரிகை நிலம் அளித்ததைக் குறிக்கிறது.

இரண்டாம் வீரகேரளவர்மா (கி.பி. 1160–1170)

வீர ரவிவர்மாவினைத் தொடர்ந்து ஆட்சிக்கு வரும் வேணாட்டரசர் ஆவார். இம்மன்னனின் அமைச்சரான பசுங்குளத்தைச் சேர்ந்த சிங்கன் அரங்கன் என்பவன் கி.பி.1160–ல் புரவச்சேரிக் கோயிலுக்குக் கொடை வழங்கியுள்ளான். நாஞ்சில் நாட்டின் உள்ளாட்சி நிருவாக அமைப்பை இம்மன்னனின் அதிகாரிகளான கலிகுன்றப்போளன் மற்றும் நயினான் குன்றப்போளன் ஆகியோர் கவனித்து வந்தனர்.

ஸ்ரீ வீர உதைய மார்த்தாண்டவர்மா (கி.பி.1171–1191)

இவன் இரண்டாம் வீரகேரளவர்மரின் சகோதரன் ஆவான். இம்மன்னனின் இரு கல்வெட்டுகள் திருவட்டாறு கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளன. ஒன்று முற்றுப்பெறாத கல்வெட்டு ஆகும். கி.பி.1172–ல் பொறிக்கப்பட்ட மற்றொரு கல்வெட்டு திருவாட்டாறு பள்ளி கொண்டருளுகின்ற பெருமாளுக்கு நித்யபூஜைக்கு ஆதிச்சன் உதையனும் தம்பிமாரும் நிலக்கொடை வழங்கியதைக் குறிக்கிறது. இதே மன்னனின் கல்வெட்டு ஒன்று கிள்ளியூர் பிராட்டீஸ்வரர் கோயிலில் கி.பி.1178–ல் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலுக்கு செம்முதை மற்றும் மாம்பள்ளம் ஆகிய நிலங்களைக் கொடையாக வழங்கியதைக் குறிக்கிறது. இந்நிலங்களைப் பயிரிடும் வயக்கலூர் சேகரன் குமரன் என்பவன் கோவிலுக்குத் தேவையான நெல் அளந்து கொடுக்க வேண்டுமெனக் குறிக்கிறது.

மூன்றாம் வீரகேரளவர்மா (கி.பி.1192–1195)

வீர உதைய மார்த்தாண்டவர்மாவிற்குப் பிறகு ஆட்சிபுரிந்த வேணாட்டரசப் ஆவான். ஜடாவர்மன் குலசேகர பாண்டியன் சம காலத்தவன். தற்போது தக்கலைக்கு அருகேயுள்ள வீரகேரளபுரம் என்ற ஊரும் வீரகேரளச்சுரம் என்ற கோயிலும் இம்மன்னன் பெயரால் இவன் காலத்திலேயே தோற்றுவிக்கப்பட்டது. இக்கல்வெட்டு இவ்வூரின் பெயரை செங்கழுநீர் வளநாட்டு பாலக்கோட்டு தேசத்து முத்தலைக்குறிச்சி எனக் குறிக்கிறது.

ஸ்ரீவீரராமவர்மர் (கி.பி.1195–1205)

இம்மன்னனின் கி..பி.1196–ம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு புரவச்சேரிப் பெருமாள் கோயிலில் காணப்படுகிறது. இக்கோயிலில் ரிக் வேதமும், யஜுர் வேதமும் ஓதுகின்ற இரண்டு உபாத்யாயர்களுக்குக் கிடைவிருத்தியாக மூன்று மா நிலம் விட்டுக் கொடுத்ததைக் கல்வெட்டு குறிக்கிறது. இவனது காலத்தில் வேணாடு 18 பிரிவு களாகப் பிரிக்கப்பட்டு இருந்ததையும், அதிலிருந்த வளஞ்சியர்களைப் பற்றியும் ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது. மேலும், இவன் காலத்தில் கோயில்களின் நிருவாகம் 'வேணாட்டறு நூற்றுவர்' என்ற அமைப்பின் கீழ் இருந்துள்ளது.

வீரரவி கேரளவர்மா (கி.பி.1215–1240)

இவனது கல்வெட்டு மணலிக்கரையில் கிடைக்கிறது. இங்குள்ள ஆழ்வார் கோயிலில் தூண் ஒன்றில் இம்மன்னனின் கி.பி.1236–ம் ஆண்டு கல்வெட்டு பொறிக்கப் பட்டுள்ளது. கோதை நல்லூர் ஊரைச் சேர்ந்த ஊராரும், சபையாரும் தங்கள் நிலங் களிலிருந்து வரும் வருவாயிலிருந்து எவ்வளவு வரியாகச் செலுத்த வேண்டும் என்ற விபரத்தைக் குறிக்கிறது. இம்மன்னனின் காலத்தில் தான் நம்பூதிரி பிராமணர்கள் நாஞ்சில் நாட்டுக் கோயில்களின் கருவறை பூசைப் பொறுப்பை முழுமையாக ஏற்றுக் கொண்டனர்.

பத்மனாப மார்த்தாண்டன் (கி.பி.1240–1253)

இவன் வீரரவிகேரளவர்மருக்கு அடுத்து வந்த மன்னனாவான். ஆவனி வேந்த ராமன், கோதண்டராமன் என்ற விருது பெயர்களுக்குரிய பிற்காலப் பாண்டிய மன்னன். ஜடாவர்மன் சுந்தரபாண்டியனின் சமகாலத்தவன். ஆனால், குமரி மாவட்டத்தில் இவனது கல்வெட்டு ஏதும் கண்டறியப்படவில்லை.

வீரகேரளவர்மத் திருவடி (கி.பி.1254–1256)

இவன் பத்மனாப மாாத்தாண்டனுக்குப் பிறகு பதவிக்கு வந்தவனாதல் வேண்டும். இம்மன்னன் திருவனந்தபுரத்தில் எழுந்தருளியிருந்தபோது இரணியலிலுள்ள இரண சிங்கேச்சுரம் கோயிலுக்கு கி.பி.1256–ல் ஆணை ஒன்று வழங்கியதைக் கல்வெட்டு குறிக்கிறது. மேலும், இக்கல்வெட்டு திருக்காட்டப்பன், கணபதி ஆகிய தெய்வங்களைக் குறிக்கிறது.

கி.பி.13–ம் நூற்றாண்டின் மத்தியப் பகுதியிலிருந்து வேணாட்டரசர் கல்வெட்டு கள் குமரி மாவட்டத்தில் அதிகம் காணப்படவில்லை.

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1216–1244)

இக்காலத்தில் மதுரையில் மீண்டும் எழுச்சி பெற்ற பாண்டியர்கள் பிற்காலப் பாண்டியர் ஆட்சியை நிறுவினர். முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டு சுசீந்திரம் கோயிலில் காணப்படுகிறது. சுசீந்திரம் சுந்தரபாண்டியச் சதுர்வேதிமங்கலம் என இவனது பெயரால் வழங்கப்பட்டதைக் குறிக்கிறது.

ஸ்ரீ வீர உதைய மார்த்தாண்டவர்மா (கி.பி.1314–1344)

கி.பி.14–ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குமரி மாவட்டத்தில் நமக்குக் கிடைக்கும் கல்வெட்டு ஸ்ரீவீர உதைய மார்த்தாண்டவர்மனின் கல்வெட்டாகும். இக்கல்வெட்டு கேரளபுரம் மகாதேவர் கோயிலில் காணப்பெறுகிறது. பாலக்கோட்டு முத்தலைக் குறிச்சி ஸ்ரீ வீர கேரளேஸ்வரத்து மகாதேவர்க்கு செலவினுக்கும் நந்தா விளக்கினுமாக வரிகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது. கல்வெட்டின் காலம் கி.பி.1315. இம்மன்னனின் கல்வெட்டு குரண்டியில் காணப்பெறும். இக்கல்வெட்டு சூரியபட்டன் என்பவன் இவ்வூரில் பிள்ளையாருக்குக் கோயில் எடுப்பித்துக் கிணறும் வெட்டுவித்ததைக் குறிக்கிறது.

ஸ்ரீ வீரகேரளவர்மர் திருவடி (கி.பி.1344–1361)

திருவனந்தபுரத்திலுள்ள ஸ்ரீபத்மனாபசுவாமி கோயில் ஆவணங்கள் இம் மன்னனைப் பற்றிக் குறிக்கின்றன.

பராக்கிரம பாண்டியன் (கி.பி.1357–1363)

கோட்டாற்றிலுள்ள இராஜேந்திர சோழீஸ்வரமுடையார் கோயில் கல்வெட்டு இம்மன்னன் இக்கோயிலைப் புதுக்கிக் கட்டியதைத் தெரிவிக்கிறது. மேலும், இம் மன்னனின் 28–வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று சுசீந்திரம் கோயிலில் காணப் படுகிறது. இக்கல்வெட்டு இம்மன்னனின் பெயரால் சுசீந்திரம் கோயிலில் 'பராக்கிரம பாண்டிய சந்தி பூஜை' ஏற்படுத்தியதைக் குறிக்கிறது. எனவே நாஞ்சில் நாடு உள்ளிட்ட தென் திருவிதாங்கூர் பகுதி கி.பி.13–14ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் பாண்டியர் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது தெரிய வருகிறது.

மூன்றாம் ஸ்ரீ வீரமார்த்தாண்டவர்மா (கி.பி.1364–1372)

இம்மன்னனின் கல்வெட்டு புதுக்கிராமம் என்ற இராஜ நாராயண சதுர்வேதி மங்கலம் என்ற ஊரிலுள்ள 'உதைய மார்த்தாண்ட விண்ணவரெம்பெருமான்' எனும் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளது. இம்மன்னன் காலத்தில் நாஞ்சில் நாடு அன்னியப் படையெடுப்புகளுக்கு ஆட்பட்டிருந்தது.

சர்வாங்கநாத இரண்டாம் ஆதித்தவர்மன் (கி.பி.1373–1382)

இவன் திருவனந்தபுரம் பத்மனாபசுவாமி பற்றியும் திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாளைப் பற்றியும் பாடிய பாசுரங்களை மலையாள வைணவர்கள் பெரிதாகக் கொண்டாடுகின்றனர்.

சேர உதைய மார்த்தாண்டவர்மா (கி.பி.1383–1444)

இவன் சுசீந்திரம் கோவில் சபா மண்டபத்தைக் கட்டினான். சுசீந்திரம் கோயிற் கல்வெட்டு இவனைக் கேரளச் சக்கரவர்த்தி எனக் குறிக்கும். 'களக்காட்டு ராஜா' என்று அழைக்கப்பட்டவர்களுள் ஒருவன். அகஸ்தீஸ்வரம் ஊர் வயலில் கிடைத்த தூண் கல்வெட்டு இவன் ஆட்சிப் பரப்பு சேரன்மாதேவி வரை நீண்டிருந்ததைக் குறிக்கிறது. வேணாட்டரசர்களுள் நீண்ட காலம் ஆட்சி புரிந்தவன் இவனே.

ஆதித்தவர்மா (கி.பி.1444–1448)

இவன் சேர உதைய மார்த்தாண்டவர்மாவிற்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவன். நான்கு ஆண்டுகளே ஆட்சி புரிந்தவன். இவனுக்கு அடுத்து ஆட்சிபுரிந்த மன்னனைப் பற்றிய குறிப்புகள் ஏதும் சுமார் 10 ஆண்டுகள் இடைவெளியில் கிடைக்கப் பெறவில்லை.

செண்பக ஆதித்தவர்மரான சிறவாய் மூத்தவர் (கி.பி1460–1469)

ஆதித்த வர்மாவுக்கு பின் நமக்கு கிடைக்கும் மன்னனின் கல்வெட்டு செண்பக ஆதித்தவர்மரின் கல்வெட்டு ஆகும். இம்மன்னனின் கல்வெட்டு கிருஷ்ணன் கோயிலில் காணப்படுகிறது. கொல்லம் 636 (கி.பி.1460)ல் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டு இம்மன்னன் கிருஷ்ணன் கோயிலில் எழுந்தருளியிருந்தபோது அக்கோயில் கிணற்றைத் திருப்பணி செய்வித்ததைக் குறிக்கிறது. இம்மன்னன் திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாளின் மீது பாசுரங்கள் பாடியவன். "செறு கொண்ட வயற் சாளைக்கிராமங் கண்டான் றென் கொடுமூர் வேணாடச் செல்வன்றானே" எனக் குறிக்கப்படுகிறான். திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் கோயிலின் சிற்பம் சாளக்கிராமம் கற்களைக் கொண்டு அமைத்ததால் 'சாளைக்கிராமங் கண்டான்' என மேற்படி பாடல் வரி குறிக்கிறது.

ஸ்ரீ வீர ராமவர்மரான திருப்பாப்பூர் மூத்த திருவடி (கி.பி.1470–1478)

இவரது கி.பி.1470–ம் ஆண்டு கல்வெட்டு சுசீந்திரம் கோயிலில் காணப் பெறுகிறது. இம்மன்னன் தாணுமாலயப் பெருமாள் கோயிலில் எழுந்தருளியிருந்தபோது அக்கோயிலுக்கு இரண்டு நந்தா விளக்கும், சுசீந்திரமுடைய நாயனார், உமையம்மை நாச்சியார், தென்திருவேங்கடமுடைய நாயனார் ஆகிய கோயில் திருவிழாக்களுக்கும், இரண்டு பிராமணர் ஊட்டுக்கும் கொடை வழங்கியதைக் குறிக்கிறது. கி.பி.1478–ல் பொறிக்கப்பட்ட இதே கோயில் கல்வெட்டு இவர் செண்பகராமன் மண்டபம் அமைத் ததைக் குறிக்கிறது.

இம்மன்னனின் சம காலத்தவனான மற்றொரு வேணாட்டரசன் வீரமார்த் தாண்ட குலசேகரப் பெருமாள் என்பவன். கி.பி.1471–ல் சுசீந்திரம் கோயிலுக்கு வடக்கில் குளமும், கிணறும், குளப்புரையும் ஏற்படுத்தியதைக் குறிக்கிறது. எனவே, இவன் வேணாட்டின் மற்றொரு பகுதியை ஆண்டிருக்கக்கூடும்.

கோதை ஆதித்தவர்மா (கி.பி.1479–1483)

சுசீந்திரம் கோயிலில் இம்மன்னனின் கல்வெட்டைக் காணலாம். இம்மன்னன் திருக்குறுங்குடியைச் சேர்ந்த செண்பகராமச் சதுர்வேதி மங்கலத்து அய்யன்குட்டி வீட்டில் இருந்தபோது 18 நாட்டிலும் உள்ள நிலங்களின் மீது விதிக்கப்பட்டிருந்த நாட்டு வாடகை, திருப்பாப்பூர் மூப்பு, இளமுறை இராபோகம் போன்ற வரிகளை நீக்கியதைக் குறிக்கிறது.

பூதல வீர ஸ்ரீரவிவர்மா (கி.பி.1484–1512)

பூதல வீர ஸ்ரீரவிவர்மா காலத்தில் கி.பி.1494–ல் சின்னமுட்டத்தில் உள்ள இசுலாமியப் பள்ளிக்கு விளக்கெரிக்க வெளிச்செண்ணைக்கு கொடை வழங்கியதை ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது. இக்கல்வெட்டு மீனவர்களிடம் வசூலிக்கப்பட்ட பல்வேறு வரிகளைப் பற்றிக் குறிக்கிறது. இம்மன்னன் காலத்தில் கி.பி. 1498–ல்

போர்த்துக்கீசிய மாலுமி வாஸ்கோடகாமா இப்பகுதிக்கு முதலாவதாக வருகை புரிந்தார். போர்த்துக்கீசியர்களின் வணிகத்திற்கு அடித்தளமிடப்பட்டது. சுசீந்திரம் கோயிலில் இவன் பெயரால் "உதைய மார்த்தண்டன் சந்தி" என்ற பூசையை ஏற்படுத்தினான்.

பூதல வீர ஸ்ரீ உதைய மார்த்தாண்ட வர்மா (கி.பி.1516–1535)

இம்மன்னனின் கல்வெட்டுகள் சுசீந்திரம், கோட்டாறு, கிருஷ்ணன்கோயில், தாழக்குடி, சின்னமுட்டம் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. வென்று மண் கொண்ட என்ற பட்டப் பெயரை உடையவன். இம்மன்னன் சோழகுலவல்லி எனற சோழ இளவரசியை மணம் முடித்துக் கொண்டான். அங்கு புதிய அரண்மனையொன்றையும் அமைத்துக் கொண்டான். சோழரின் இலச்சினையான புலியைப் பயன்படுத்திக் கொண்டதால் புலி மார்த்தாண்டன் என்றும் அழைக்கப்பட்டான். வீரப்புலி அணை இவன் காலத்தில் கட்டப்பட்டது. தாழைக்குடி ஜெயந்தீசுவரர் கோயில், வடசேரி தளியல் மகாதேவர் கோயில், சுசீந்திரம் கோயிலுக்கும், தோவாளையிலுள்ள கிருஷ்ணசாமி கோயிலுக்கும் 'சீபண்டாரக் கணக்கு' நியமனம் செய்ததை இம்மன்னனின் இரண்டு கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. சுசீந்திரம் கோயிலில் உதைய மார்த்தாண்ட விநாயகரை நிறுவியவனும் இவனே. சுசீந்திரம் கோயிலில் தன் பெயரால் உதைய மார்த்தாண்டன் சந்தி என்ற பூசையை ஏற்படுத்தினான்.

இரவிவர்மா (கி.பி.1536–1539)

இம்மன்னின் கல்வெட்டு வடிவீசுவரம் அழகம்மன் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளது. செய்துங்கநாட்டு சங்கரநாராயண வென்று மண்கொண்ட பூதல வீர ஸ்ரீ இரவிவர்மா என கல்வெட்டு இவனைக் குறிக்கிறது. வடிவீச்சுரமுடைய நாயனார்க்கு நிலம் வழங்கியதைக் குறிக்கிறது.

சகலகலை மார்த்தாண்டவர்மா (கி.பி.1540–1544)

சகலகலை மார்த்தாண்டவர்மனின் கல்வெட்டு சுசீந்திரம் கோயிலில் காணப் பெறுகிறது. இக்கோயிலில் சீபண்டாரக் காரியம் செய்வார்கள் முறையிட்டதன் பேரில் தேவதான நிலங்களுக்குத் தண்ணீர் பாய மன்னன் வெளியிட்ட ஆணையை அக் கல்வெட்டு குறிக்கிறது.

பூதல வீர ஸ்ரீ வீரகேரளவர்மா (கி.பி.1544–1545)

இம்மன்னனின் கல்வெட்டொன்று சுசீந்திரம் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளது. சுசீந்திரம் கோயிலில் பணிபுரிந்த பழைய கணக்கரை நீக்கிவிட்டுப் புதிய கணக்கரை நியமனம் செய்ததைக் குறிக்கிறது. இம்மன்னனின் காலத்தில்தான் விஜய நகரப் பேரரசைச் சேர்ந்த விட்டலதேவ மகாராயரும் அவரது தம்பியும் சுசீந்திரம் கோயில் கோபுரத்தைக் கட்டினர். இக்கோபுரப் பணி மூலம்திருநாள் மகாராஜா காலத்தில் முடிக்கப்பட்டது. இம்மன்னனின் காலத்தில்தான் புனித சவேரியார் கோட்டாற்றுக்கு வருகை புரிந்துள்ளார்.

பூதல வீர ராமவர்மா (கி.பி.1546–1558)

வீர கேரளவர்மருக்கு அடுத்து பட்டத்திற்கு வந்த வேணாட்டரசன். இம்மன்னன் கி.பி.1546–இல் சுசீந்திரம் கோயில் திருவேங்கடவிண்ணவரெம்பெருமானுக்கு திருவமுதுக் கும், ஆராதனைக்கும் கொடை வழங்கியதை அக்கோயிற் கல்வெட்டு பதிவு செய்கிறது. இவன் விஜயநகர வேந்தன் விட்டலதேவ மகாராயருடன் சமாதான உடன்படிக்கை செய்திருந்த காரணத்தால் வேணாடு விஜயநகர வேந்தரின் ஆளுகைக்கு உட்படவில்லை.

ஸ்ரீ வீர ஆதித்யவர்மா (கி.பி.1559–1564)

இம்மன்னனின் கல்வெட்டு தெரிசனங்கோப்பு இராகவேஸ்வரசுவாமி கோயிலில் உள்ளது. கி.பி.1559–ல் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டு சீராகவீச்சுரமுடைய நயினாருக்கு உச்சி சந்தியும், சீபலிப் பூசையும் நடக்க நிலக்கொடை வழங்கியதைக் குறிக்கிறது. இதே மன்னனின் இதே ஆண்டில் பொறிக்கப்பட்ட கரிய மாணிக்கபுரம் கல்வெட்டு இம்மன்னன் வீரகேரளபுரத்தில் எழுந்தருளி இருந்தபோது கரிய மாணிக்க விண்ணகராழ் வாருக்குக் கொடை கொடுத்ததைக் குறிக்கிறது.

ஸ்ரீ வீர உதைய மார்த்தாண்டவர்மா (கி.பி.1564–1587)

இம்மன்னனின் ஆட்சிக் காலத்தில் கூபகத்தரசியால் கரியமாணிக்கபுரத்திலுள்ள கரிய மாணிக்கத்தாழ்வார் கோயில் புனரமைத்து மீண்டும் கட்டப்பட்டது. மேலும், இவனது பிரதிநிதியாக இருந்த பூதல வீர இராமவர்மர் சிறவாய் மூத்த திருவடி கி.பி. 1586–ல் பறக்கை மதுசூதனப் பெருமாள் கோயிலில் செண்பகராமன் நித்திய பூசைக்கு நிலக்கொடை வழங்கியதைக் குறிக்கிறது. கி.பி.1588–1594 வரை வேணாட்டின் ஆட்சிப் பரப்பிலிருந்த குமரி மாவட்டப் பகுதி வேணாட்டார் மரபில் வந்த சிற்றரசர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருக்கலாம்.

ஸ்ரீ வீர ரவி ரவிவர்மா (கி.பி.1595–1607)

இம்மன்னனின் கல்வெட்டுகள் திருவட்டாறு, கேரளபுரம் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. பெரிய வீட்டு முதலியார் ஓலை ஆவணமொன்றும் இவனைக் குறிக்கும். திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் கோயிலில் கி.பி.1604–ல் பொறிக்கப் பட்ட இம்மன்னனின் கல்வெட்டு அக்கோயிலில் இவன் திருச்சுற்று மாளிகை, மடப்பள்ளி மற்றும் ஒற்றைக்கல் மண்டபம் ஆகியவற்றைத் திருப்பணி செய்ததைக் குறிக்கிறது. இம்மன்னனின் கி.பி.1607–ல் பொறிக்கப்பட்ட கேரளபுரம் மகாதேவர் கோயிற் கல்வெட்டு இவன் அக்கோயிலின் நாளம்பலம், திருமடைப்பள்ளி, ரிஷப மண்டபம் ஆகியவற்றை கட்டுவித்து கோபுர நிர்மாண வேலையும் மேற்கொண்டு நீர்த்தெளி செய்து திருப் பணிகள் மேற்கொண்டதைக் குறிக்கிறது.

இம்மன்னனின் நீட்டு ஒன்று பத்மனாபபுரம் மற்றும் உதயகிரிக் கோட்டையில் மண்கோட்டைச் சுவர் கட்ட கி.பி.1600–ல் நாஞ்சில் நாட்டார் கொடை கொடுத்ததைத் தெரிவிக்கிறது.

ராமவர்மா குலசேகரப்பெருமாள் (கி.பி.1607–1609)

சுசீந்திரம் கோயிற் கல்வெட்டு ஒன்றில் இம்மன்னனின் பெயர் காணப்படு கிறது. இராமவர்ம குலசேகரப் பெருமாள் என்ற மன்னன் இறந்த நாளை நினைவுபடுத்தத் திருமேனி நம்பி என்பவன் சுசீந்திரம் கோயிலில் குலசேகர விநாயகர் கோயிலை, 17, கற்கடகம், கொல்லமாண்டு 784 (கி.பி.1609) அன்று கட்டியதைக் குறிக்கிறது. எனவே, இம்மன்னன் ஸ்ரீ வீரரவி ரவிவர்மாவின் சம காலத்தில் வேணாட்டின் ஒரு சிறு பகுதியை ஆண்டிருக்கலாம்.

முதலாம் ரவிவர்மா (கி.பி.1610–1619)

இவன் ராமவர்மா குலசேகரப் பெருமாளுக்கு அடுத்துப் பட்டத்துக்கு வந்தவ னாகலாம். ஆனால், இவனின் கல்வெட்டேதும் குமரி மாவட்டத்தில் கண்டறியப்பட வில்லை.

இரண்டாம் ஸ்ரீ வீர ரவிவர்மா (கி.பி.1620–1659)

இம்மன்னனின் கல்வெட்டு வாள்வைச்ச கோட்டத்தில் காணப்பெறும். கி.பி. 1622–ல் இவனது ஆட்சிக் காலத்தில் கல்குளம் தெற்குத் தெருவில் கன்னி மூலையில் குலசேகரப் பெருமாள் பிள்ளையாரை பிரதிட்டை செய்ததை முற்றுப்பெறாத பத்மனாபபுரம் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது. இவனது காலத்தில் கி.பி.1634–ல் நாஞ்சில் நாட்டின் மீது திருமலை நாயக்கரின் (கி.பி.1623–1659) படையெடுப்பு நிகழ்ந்தது. அது தொடங்கி வேணாட்டரசர்கள் நாயக்க மன்னர்களுக்குக் கப்பம் செலுத்துமளவு வலிமை குன்றிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இம்மன்னனின் மற்றொரு கல்வெட்டு பூதப்பாண்டியிலுள்ள பூதலிங்கசாமி கோயிலில் கி.பி.1559–ல் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு கோயில் நிலங்களைப் பயிரிடுவோரிடமிருந்து மேல்வாரம் வராமலிருப்பது குறித்து சீபண்டாரக் காரியஞ் செய்வார்கள் மன்னனிடம் முறையிட அதைச் சரி செய்ததைத் தெரிவிக்கிறது.

ஆதித்தவர்மா (கி.பி.1660–1678)

இரண்டாம் வீர இரவிவர்மனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவன். இவரது ஆட்சிக் காலத்தில்தான் திருவனந்தபுரம் பத்மனாபசுவாமி கோயிலில் 'எட்டரை யோகம்' என்ற கோவில் நிர்வாகக்குழு அமைக்கப்பட்டது. எட்டுவீட்டுப் பிள்ளைமாரும், யோகக்காரர் களும் நிர்வாகத்தில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். எட்டுவீட்டுப் பிள்ளைமார் கோவில் நிலங்களின் வருவாயை வசூலிக்கும் உரிமை பெற்றிருந்தனர். யோகக்காரர் களும் அவர்களுடன் இணைந்து கொண்டனர். மன்னரின் அதிகாரம் கேள்விக்குறியான காலகட்டமாகுமிது. கி.பி.1678–ல் ஆதித்தவர்மா சித்திரவதைக்கு உள்ளாகிக் கொல்லப் படுகிறான். இவனது கல்வெட்டுகளேதும் குமரி மாவட்டத்தில் காணப்படவில்லை.

இராணி உமையம்மா (கி.பி.1679–1684)

ஆதித்தவர்மாவுக்குப் பிறகு ஆற்றிங்கல் இராணி உமையம்மாவே ஆட்சிக் கட்டிலேறும் உரிமை கோருபவராயிருந்தார். இவரது ஏழு குழந்தைகளும் மைனர்களா

யிருந்தனர். இச்சூழலில் முகிலன் படையெடுப்பு வந்தது. இதனை ஒடுக்குவதற்காகக் கோட்டயம் இளவரசன் கேரளவர்மன் வரவழைக்கப்பட்டான். இராணி நெடுமங்காட்டில் தஞ்சம் புகுந்தார். கேரளவர்மா முகிலன் படையெடுப்பை ஒடுக்கினான். இராணி திருவனந்தபுரத்தில் அரண்மனை கட்டிக் குடிபுகுந்தார். கேரளவர்மன் அரசு வாரிசுக் குரிய முறையில் கௌரவிக்கப்பட்டான். இவன் 1697–க்குப் பிறகு கொல்லப்பட்டான்.

இரவி வர்மா (கி.பி.1684–1718)

இராணி உமையம்மாவின் மகன் இரவிவர்மா கி.பி.1684–ல் ஆட்சிக்கு வந்தார். கி.பி. 1634–1694–க்கு இடைப்பட்ட காலத்தில் குமரி மாவட்டம் நாஞ்சில் நாடு நாயக்க மன்னர்களின் பிரதிநிதிகளின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்து வந்தது. கி.பி.1694–ல் மீண்டும் நாயக்கர் படையெடுப்பு நிகழ்ந்தது. ராணி உமையம்மை குளத்து நாட்டு இளவரசர் களான உண்ணி கேரளவர்மன், ராமவர்மா ஆகிய இருவரை இக்கால கட்டத்தில் தத்தெடுத்துக் கொண்டார்.

வீரகேரளன் (கி.பி.1689–1697)

இவன் இராமவர்மாவின் சமகாலத்தவன். இம்மன்னனின் கல்வெட்டு திருவிதாங் கோடு, சரலூர் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. இவனது திருவிதாங்கோடு கல்வெட்டு புலப்பேடி–மண்ணாப்பேடி என்ற சமூக வழக்கத்தினை நீக்கி ஆணை யிட்டதைக் குறிக்கும். இம்மன்னனின் சரலூர்க் கல்வெட்டு எம்பெரும் பெரியான் என்பவனுக்கு 'குலசேகர நாடான்' என்ற பட்டமளித்துக் கரைப்பணமும் வழங்கியதைக் குறிக்கிறது. இராணி மங்கம்மாள் காலத்தில் மற்றுமொரு நாயக்கர் படையெடுப்பு இவன் காலத்தில் நிகழ்ந்தது. ராணி உமையம்மாவால் இரணியலில் இளவரசனாக முடிசூட்டப்பட்டவன். சுசீந்திரம் கோயிலில் கி.பி.1689–ல் பொறிக்கப்பட்ட இம்மன்னனின் கல்வெட்டு இவ்வூர் இவன் பெயரால் வீரகேரளச் சதுர்வேதிமங்கலம் என வழங்கப் பட்டதைக் குறிக்கிறது.

இராமவர்மா (கி.பி.1696–1697)

இம்மன்னனின் கல்வெட்டு ஆரல்வாய்மொழி அகலிகை ஊற்றில் காணப்பெறும். கி.பி.1696–ல் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டு ஞானியார் மடத்துக்கு நிலக்கொடை வழங்கியதைப் பதிவு செய்கிறது.

உண்ணி கேரளவர்மா (கி.பி.1718–1724)

இவ்வரசனின் காலத்தில் வேணாடு அரசு வலுவிழந்து பல சிற்றரசுகளாக மாறின. அரசனின் ஆட்சி அதிகாரம் கைமீறிப்போனது. எட்டுவீட்டுப் பிள்ளைமார் மீண்டும் எழுச்சி பெற்றனர்.

இராமவர்மா (கி.பி.1724–1728)

இவன் உண்ணிகேரளவர்மனின் சகோதரன் ஆவான். இவனது மருமகன் 20 வயதே ஆன மார்த்தாண்டவர்மாவுடன் கலந்தாலோசனை செய்து எட்டுவீட்டுப் பிள்ளைமார் மற்றும் யோகக்காரர்களின் கலகத்தை அடக்க நாயக்க மன்னர்களின் உதவியை நாடினான். உண்ணி கேரளவர்மாவின் மறைவுக்குப் பிறகு நாஞ்சில் நாடு பூதப்பாண்டி, சோழபுரம் மற்றும் சேரமங்கலம் என்ற மூன்று பகுப்புகளைக் கொண்டிருந்தது. இப்பகுதிகளில் வரி வசூலிக்கத் திருநெல்வேலியைச் சேர்ந்த குண்டபிள்ளை என்பவர் நியமனம் செய்யப்பட்டார். ஆனால், கலகக்காரர்கள் தாங்களாகவே வரி வசூல் செய்து கொண்டு அரசுக்குச் செலுத்தாமல் இருந்து வந்தனர்.

இராணி உமையம்மா, ஆதித்தவர்மா ஆகியோர் எட்டுவீட்டுப் பிள்ளைமாரால் கொலை செய்யப்பட்டனர். முற்றிலும் வலுகுன்றிய நிலையில் ராமவர்மா கி.பி.1728–ல் காலமானார். இத்துடன் வேணாட்டரசின் ஆட்சி வீழ்ந்தது.

இரண்டாம் சேரர் வம்சாவழி

கி.பி. 800 –820	குலசேகர ஆழ்வார்
கி.பி. 844 –885	ஸ்தாணு ரவிவர்மா
கி.பி. 885 –917	ராமவர்மர் குலசேரன்
கி.பி. 917 –944	கோதை இரவிவர்மன்
கி.பி. 944 –962	இந்து கோதைவர்மன்
கி.பி. 962 – 1019	முதலாம் பாஸ்கர ரவிவர்மன்
கி.பி. 979–1021	இரண்டாம் பாஸ்கர ரவிவர்மன்
கி.பி. 1021–1028	வீர கேரளன்
கி.பி. 1028–1043	இராஜ சிம்மன்
கி.பி. 1043–1082	மூன்றாம் பாஸ்கர ரவிவர்மன்
கி.பி. 1082–1090	இரவி ராம வர்மன்
கி.பி. 1090–1102	இராம வர்ம குலசேகரன்

தன்னாட்சி வேணாட்டரசர்கள்

கி.பி. 1090–1102	இராம வர்ம குலசேகரன்
கி.பி. 1102–1125	கோதைவர்மா
கி.பி. 1125–1155	கோதை கேரளவர்மா
கி.பி. 1155–1165	வீரரவிவர்மா
கி.பி. 1165–1175	ஆதித்தவர்மா
கி.பி. 1175–1195	உதையமார்த்தாண்ட வர்மா

கி.பி. 1195–1205	வீரராமவர்மா
கி.பி. 1205–1215	வீரராமகேரளவர்மா
கி.பி. 1215–1240	இரவிகேரளவர்மா
கி.பி. 1240–1253	பத்மனாப மார்த்தாண்டவர்மா
கி.பி. 1268–1310	ஜடாவர்மர்சுந்தரபாண்டியன் மாறவர்மன் குலசேகரன்
கி.பி. 1299–1314	இரவிவர்மன்குலசேகரன்
கி.பி. 1314–1344	வீரஉதையமார்த்தாண்டவர்மா
கி.பி. 1344–1350	குன்னுமேல் வீரகேரளவர்மத்திருவடி
கி.பி. 1350–1376	இரவிரவிவர்மா
கி.பி. 1376–1383	ஆதித்தவர்ம சர்வாங்கநாதன்
கி.பி. 1383–1444	சேரஉதையமார்த்தாண்டவர்மா
கி.பி. 1444–1458	இரவிவர்மா
கி.பி. 1459–1469	ஸ்ரீவீரராமமார்த்தாண்டவர்ம குலசேகரன்
கி.பி. 1469–1484	கோதை ஆதித்யவர்மா
கி.பி. 1484–1512	இரவிரவிவர்மா
கி.பி. 1512–1514	இரவிகேரளவர்மா
கி.பி. 1514–1516	ஜெயசிம்ஹகேரளவர்மா
கி.பி. 1516–1535	பூதலவீரஸ்ரீவீரஉதையமார்த்தாண்டவர்மா
கி.பி. 1535–1544	இராமகேரளவர்மா மற்றும் ஆதித்தவர்மா
கி.பி. 1544–1545	ஸ்ரீவீரகேரளவர்மா
கி.பி. 1545–1556	இராமவர்மா மற்றும் உண்ணிகேரளவர்மா
கி.பி. 1556–1595	ஸ்ரீவீரஉதையமார்த்தாண்டவர்மா
கி.பி. 1595–1609	ஸ்ரீவீரரவிவர்மா
கி.பி. 1609–1610	ஆதித்தவர்மா
கி.பி. 1610–1611	இராமவர்மா
கி.பி. 1611–1663	இரவிவர்மா
கி.பி. 1663–1672	இரவிவர்மா
கி.பி. 1672–1677	ஆதித்தவர்மா
கி.பி. 1677–1684	உமையம்மாராணி
கி.பி. 1684–1718	இரவிவர்மா
கி.பி. 1718–1721	ஆதித்யவர்மா
கி.பி. 1721–1729	இராமவர்மா

கி.பி. 1729–1758	மார்த்தாண்டவர்மா
கி.பி. 1758–1798	கார்த்திகைத் திருநாள் இராமவர்மா
கி.பி. 1798–1810	பாலராமவர்மா
கி.பி. 1810–1815	ராணி கௌரிலட்சுமிபாய்
கி.பி. 1815–1829	கௌரிபார்வதிபாய்
கி.பி. 1829–1847	சுவாதித் திருநாள் இராமவர்மா
கி.பி. 1847–1860	உத்திரம் திருநாள் மார்த்தாண்டவர்மா
கி.பி. 1860–1880	ஆயில்யம் திருநாள் இராமவர்மா
கி.பி. 1880–1885	விசாகம் திருநாள் இராமவர்மா
கி.பி. 1885–1924	ஸ்ரீ மூலம் திருநாள் இராமவர்மா
கி.பி. 1924–1931	ராணி சேதுலட்சுமிபாய்
கி.பி. 1931–1949	ஸ்ரீ சித்திரைத் திருநாள் பாலராமவர்மா

திருவிதாங்கூர் அரசு

திருவிதாங்கூர் அரச பாரம்பரியம் மருமக்கள் தாயமாக எப்போதிருந்து செயல்படத் தொடங்கியது என்பதற்குச் சரியான வரலாற்றுச் சான்றுகள் இல்லை. ஆனால் மார்த்தாண்ட வர்மாவிற்கு பிறகு இம்முறை இருந்ததாக உறுதியாக தெரிகிறது. திருவிதாங்கூர் வரலாற்றை எழுதுவதற்குக் குமரி மாவட்டத்தில் கல்வெட்டாதாரங்கள் குறைவாகவே கிடைக்கின்றன. மாறாக ஓலை ஆவணங்கள் மற்றும் செப்புப்பட்டயங்கள், தாள் சுவடிகள் மற்றும் நாணயங்கள் ஆகியன கி.பி.18–ம் நூற்றாண்டு முதல் 20–ம் நூற்றாண்டு வரையிலான திருவிதாங்கூர் வரலாற்றை எழுதுவதற்கு நமக்கு ஓரளவு துணை நிற்கின்றன.

ஓலை ஆவணங்கள் பத்மனாபபுரம் அரண்மனை, பூதப்பாண்டி பூதலிங்கசாமி கோயில், சுசீந்திரம், திருவட்டாறு ஆதிகேசவப்பெருமாள் கோயில், பெரிய வீட்டு முதலியார் ஓலை ஆவணங்கள் ஆகியன உதவி புரிகின்றன.

அனுஷம் திருநாள் மார்த்தாண்டவர்மா (கி.பி.1729–1758)

திருவிதாங்கூர் பேரரசை நிறுவிய அரசன். இம்மன்னன் எட்டுவீட்டுப் பிள்ளைமார் கலகத்தை அடக்கிய பின்பு கொல்லம், கொட்டாரக்கரை, நெடுமங்காடு, காயங்குளம் ஆகியவிடங்களையும் பிடித்து தனது ஆட்சிப்பரப்பை விரிவு படுத்தினான். இவன் காலத்தில் நடைபெற்ற போர்களில் குளச்சல் போரே மிக முக்கியமானதாகும். கி.பி.1741–ல் டச்சுக்கு எதிராக நடைபெற்ற இப்போரில் டச்சு வீரன் டிலெனாயை பிணைக்கைதியாக பிடித்து வந்து அவனையே திருவிதாங்கூர்ப் படைத் தலைவனாக்கினார். டிலெனாயின் மேற்பார்வையில் திருவிதாங்கூர் வீரர்களுக்கு ஐரோப்பிய முறையிலான போர்ப் பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கப்பட்டன. உதயகிரிக்கோட்டையும், பத்மனாபபுரம்

கோட்டையும், கருங்கல் கோட்டைகளாக மாற்றிக் கட்டப்பட்டன. உதயகிரிக்கோட்டை ஆயுதங்கள் தயாரித்து சேமித்து வைக்கும் இடமாகவும் மாறியது. திருவிதாங்கூர் அரசரின் தலைமையிடமாக பத்மனாபபுரம் அரண்மனை இம்மன்னன் காலத்திலிருந்து செயல்படத் தொடங்கியது. மன்னர் மார்த்தாண்டவர்மா கி.பி.1750–ல் நாட்டை திருவனந்த புரத்திலுள்ள பத்மநாபசாமிக்கு அர்ப்பணித்து திருப்படித்தானம் செய்தார்.

கார்த்திகைத் திருநாள் இராமவர்மா (கி.பி.1758–1798)

இவர் மார்த்தாண்டவர்மாவிற்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவர். சுமார் நாற்பது ஆண்டுகள் திருவிதாங்கூர் அரசை ஆட்சி புரிந்ததால் 'கிழவன்ராஜா' என்று பெயர் பெற்றார். இவரது ஆட்சியில் நாட்டில் அமைதி நிலவியது. இவரது காலத்தில் கி.பி. 1790–லிருந்து திருவனந்தபுரம் திருவிதாங்கூர் அரசர்களின் தலைநகரமானது. இவரது காலத்தில் திவானாக கேசவதாஸ் என்பவர் பணி புரிந்தார். இவர் ராஜா கேசவதாஸ் என அழைக்கப்பட்டார். இவர் கோட்டாற்றைப் பெருவணிக நகரமாக மாற்ற முயற்சி மேற் கொண்டார். மேலும், திப்புவின் படையெடுப்பை எதிர்கொண்டு திருப்பியனுப்பினார். இராமேஸ்வரத்திற்குத் தீர்த்தயாத்திரை சென்று வந்தார். கிழவன் ராஜா பயணிகள் இளைப்பாற சாலையோர மடங்களை நிறுவினார். இம்மன்னரின் காலத்தில் கி.பி. 1777–ல் டிலெனாய் 36 ஆண்டுகள் திருவிதாங்கூர்ப் படையில் பணிபுரிந்து விட்டு மரணமானான். இம்மன்னனின் காலத்தில் அனந்தராமன் பணம், அனந்தவராகன் பணம் வெளியிடப்பட்டன.

பாலராமவர்மா (கி.பி. 1798–1810)

இவர் தர்மராஜாவின் மருமகனும் வாரிசுமாவார். திருவிதாங்கூர் அரசர்களில் இவர் பலவீனமான அரசராவார். இவரின் காலத்தில் மக்கள் பெரும் வரிச்சுமைக்கு ஆளாயினர். இம்மன்னன் காலத்தில் வேலுத்தம்பி தளவாய் ஆங்கிலேயருடன் போரிட்டு மாண்டான். பாலராமவர்மாவின் காலத்தில் ஆங்கிலேயருக்கும் திருவிதாங்கூர் அரசுக்குமிடையே கி.பி.1805–ல் இணக்கமான உடன்படிக்கை ஏற்பட்டது. கி.பி.1809–ல் கர்னல் லீகர் தலைமையிலான ஆங்கிலேயர் படை ஆரல்வாய்மொழி கணவாய் வழியாக வந்து உதயகிரிக் கோட்டையைக் கைப்பற்றியது.

கௌரி லட்சுமிபாய் (கி.பி1811–1815)

இவர் பாலராமவர்மாவிற்குப் பின் பதலி அரசியாக ஆட்சிக்கு வந்தவராவார். இவரது காலத்தில் கர்னல் மன்றோ ஆங்கிலேயரின் ரெசிடன்ட் ஆக இருந்தவர் கி.பி. 1811ல் திவானாக நியமனம் செய்யப்பட்டார். இவர் ஆங்கிலேய அரசின் மாதிரி நிர்வாகத்தை குமரி மாவட்டத்தில் புகுத்தினார். காரியக்காரர் என்ற பதவி தாசில்தாராக மாற்றப்பட்டது. ஆரல்வாய்மொழியில் சுங்கச்சாவடி ஒன்று நிறுவப்பட்டது. பத்மனாபபுரத்தில் அதிகாரப் பூர்வமான நீதிமன்றம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. திருவிதாங்கூர் மாகாணத்தின் நிர்வாகத்தை வலிய சர்வாதிக் காரியக்காரர், சர்வாதிக் காரியகாரர், புரவர்த்திக்காரர் கள் போன்ற அதிகாரிகள் பார்த்துக் கொண்டனர். இவர்களுள் காரியக்காரர்களே

மக்களுடன் நேரடித் தொடர்பு கொள்பவர்கள். கர்னல் மன்றோ நிர்வாகத்தை சீர்படுத் தினார்.

கி.பி.1812–ல் திருவிதாங்கூர் மாகாணத்தில் நிலவி வந்த அடிமை முறையை அரசியார் தடை செய்து ஆணை வெளியிட்டார்.

பார்வதி பாய் (கி.பி. 1815–1829)

கௌரி லட்சுமிபாயி 1815ல் இறந்துவிடவே அவரது மூத்த சகோதரியான பார்வதி பாய் பதலி அரசியாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். திவான் பதவியைத் துறந்தாலும் கர்னல் மன்றோ ராணிக்கு முக்கிய ஆலோசகராகத் திகழ்ந்தார். கி.பி. 1817–ல் ரெட்டிராவ் என்பவர் திவானாக நியமனம் செய்யப்பட்டார். இவர் பல சீர்திருத்தப் பணிகளை மேற்கொண்டார். திருவிதாங்கூர் அரசில் முத்திரையிடப்பட்ட ஓலை ஆவணங் கள் அறிமுகப்படுத்தப்பட்டன. சூத்திரர்கள் மற்றும் பிற ஒடுக்கப்பட்ட சமூகங்கள் மீது தங்க, வெள்ளி நகைகள் அணிந்து கொள்ள விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது. தலைவரியும் நீக்கப்பட்டது. கி.பி.1819–ல் கர்னல் மன்றோ தனது பதவியை ராஜினாமா செய்தார். இவருக்கு அடுத்து வந்த திவான் வேங்கடராவ் கி.பி.1816–ல் மீண்டும் நாகர்கோவிலில் நிலையான லண்டன் மிசினரியை நிறுவினார்.

கி.பி.1809–ல் திருவிதாங்கூர் அரசின் நாயர்பட்டாளம் முற்றிலுமாக அழிக்கப் பட்டது. மகாராணி ஆங்கிலேயரிடம் முறையிட்டுக் கொண்டதன் பேரில் மீண்டும் 1830–ல் மலையாம் இரண்டாம் பட்டாளம் கேப்டன் மெக்லியோடு என்பவன் தலைமையில் நிறுவப்பட்டது. கி.பி.1818ம் ஆண்டு வெளியிட்ட நீட்டு இதற்கு முன்மொழிவாக அமைந் தது. இம்மலையாள இரண்டாம் பட்டாளத்தில் பணிபுரிந்த இரணியலைச் சேர்ந்த இராமன்பிள்ளை என்பவன் நினைவாக மயிலாடிக்கு அருகேயுள்ள புன்னார்குளம் என்ற விடத்தில் சுமைதாங்கிக் கல்லொன்று நிறுவப்பட்டுள்ளது.

இராமவர்மா ஸ்வாதித் திருநாள் (கி.பி. 1829–1847)

திருவிதாங்கூர் மன்னர்களுள் இவர் இசையில் மிகுந்த ஈடுபாடு கொண்ட மன்னனாவார். இவரது காலத்தில் கி.பி.1830–ல் ஆரல்வாய்மொழி, பூதப்பாண்டி ஆகிய இடங்களில் நிறுவியிருந்த ஆங்கிலேயரின் படைகள் திருப்பி அனுப்பப்பட்டன. திருவிதாங்கூர்ப் படையினருக்கு நாயர்பட்டாளம் வழங்கப்பட்டது. கி.பி.1831–ல் சிறிய வழக்குகளை விசாரிக்க முன்சீப் நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. கி.பி.1836–ல் மக்கள் கணக்கெடுப்பு எடுக்க ஆணை வழங்கப்பட்டது. ஐரோப்பிய பொறியியல் நுட்பத்தை அறிமுகப்படுத்த லெப். ஹார்ஸ்லீ என்ற பொறியாளர் நியமனம் செய்யப்பட்டார். கைமுக்கு தண்டனை நீக்கப்பட்டது. இவரது ஆட்சி காலத்தில் கி.பி. 1846–ல் நாஞ்சில் நாட்டில் புயல் வீசிப் பெருமழை பெய்தது. வெள்ளப் பெருக்கெடுத்துக் குளங்கள் உடைந்தன. இதன் காரணமாகவே இவர் மனம் நொந்து உயிர் நீத்தார் எனக் கூறுவர். இவர் கி.பி.1828–ல் துலா புருஷதானமும் கி.பி.1833–ல் ஹிரண்ய கர்ப்பதானமும் செய்தார்.

உத்திரம் திருநாள் மார்த்தாண்டவர்மா (கி.பி.1847–1860)

இவர் சுவாதித் திருநாளின் தம்பி ஆவார். இவரது காலத்தில் செங்கோட்டைப் பகுதியிலுள்ள திருவிதாங்கூர் – திருநெல்வேலி எல்கை வரையறுக்கப்பட்டு வெள்ளை அறிக்கையும் வெளியிடப்பட்டது. இச்சட்டம் கி.பி.1843–ல் இயற்றப்பட்டு கி.பி.1845–ல் அமுலுக்கு வந்தது. திருவிதாங்கூரில் ஒடுக்கப்பட்ட சமூகத்துப் பெண்கள் மேலாடை அணிய தடை இருந்தது. கி.பி.1822–ல் குமரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்டோர் போராட்டம் நடத்தினர். முதலில் கிறித்துவ பெண்களுக்கு மட்டும் குப்பாயம் என்ற மேலாடை அணிய கி.பி.1828–ல் ஆணை வழங்கப்பட்டது. போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. இதனை 'தோள் சீலைக் கலகம்' என்பர். கி.பி.1855–ல் இப்போராட்டம் தீவிரமானது. இறுதியில் கி.பி.1859–ல் பிற ஒடுக்கப்பட்ட சமூகப் பெண்களும் தோள்சீலை அணிய அனுமதி வழங்கப்பட்டது. உத்திரம் திருநாள் மார்த்தாண்ட வர்மா காலத்தில் அனந்தன் விக்டோரியா கெனால் (AVM Canal) வெட்டப்பட்டது. இன்றும் அதே பெயரில் வழங்கப் பட்டு வருகிறது.

ஆயில்யம் திருநாள் இராமவர்மா (கி.பி.1860–1880)

இவர் சுவாதித் திருநாளின் தங்கை ருக்மிணியின் மகன். இவர் காலத்து திவான் மாதவராயர். இம்மன்னரின் காலத்தில் கி.பி.1861–ல் குமரி மாவட்டத்தில் தபால்துறை முதன்முதலாக செயல்பட ஆரம்பித்தது. கி.பி.1865–ல் நாஞ்சில் நாட்டில் நிலவரி குறைக் கப்பட்டது. இது பண்டாரப் பாட்ட அறிக்கை என்ற பெயரில் குறிக்கப்பட்டது. கி.பி. 1867–இல் இதிலுள்ள குறைகள் களையப்பட்டது. மே, 1875–ல் முதல்முறையாக மக்கள் கணக்கெடுப்பு நடைபெற்றது. கி.பி. 1872–ல் சேஷய்யா சாஸ்திரி என்பவர் அரசு அலுவல கங்களில் காகிதத்தில் எழுதும் வழக்கத்தை அறிமுகம் செய்தார். இருப்பினும் ஓலையில் எழுதும் வழக்கம் கி.பி.1887 வரை நீடித்தது. கி.பி.1920–லிருந்து முற்றிலுமாக காகிதத் தில் எழுதும் வழக்கம் வந்தது. இவரது ஆட்சி காலத்தில் குமரி மாவட்டத்தில் கடும் வறட்சி ஏற்பட்டது. இது இவர் ஆட்சிப் பொறப்பேற்ற ஆண்டிலேயே நிகழ்ந்தது. மன்னர் ஆங்காங்கே கஞ்சித் தொட்டிகள் திறக்க ஏற்பாடு செய்தார்.

ஸ்ரீ விசாகம் திருநாள் ராமவர்மா (கி.பி.1880–1885)

இவர் ஆயில்யம் திருநாள் ராமவர்மாவின் சகோதரர் ஆவார். சிறு வயது முதலே உடல்நலம் குன்றியவராக காணப்பட்டார். இவரது ஆட்சிக் காலத்தில் நானுபிள்ளை திவானாக அறிமுகம் செய்யப்பட்டார். தமிழ் பயிற்றுமுறைப் பள்ளிகளுக்கு மானியம் வழங்கினார். கி.பி.1883–ல் குமரி மாவட்டத்தில் மரச்சீனிக்கிழங்கைப் பயிரிட அனுமதி வழங்கினார். இம்மன்னர் கோதையாறு திட்ட ஆயத்தப் பணிகள் மேற்கொள்ள ஏற்பாடு செய்தார். கி.பி.1882–இல் உப்புத் துறையைச் சீரமைத்து இதைத் தனியாக கவனிக்க துணை பேஷ்கார் ஒருவர் நியமிக்கப்பட்டார். நிலங்களை முறையாக அளந்து அதில் ஏற்படும் சர்ச்சைகளை தீர்ப்பதற்காக கி.பி.1883–ல் தனிச் சட்டம் கொண்டு வரப் பட்டது. திருவிதாங்கூர் – கொச்சி எல்லைப் பிரச்சனைகள் தொடக்க காலத்திலேயே சரிசெய்யப்பட்டன.

ஸ்ரீ மூலம் திருநாள் இராமவர்மா (கி.பி.1885–1924)

திருவிதாங்கூர் மன்னர்களில் கார்த்திகைத் திருநாள் ராமவர்மாவிற்கு அடுத்து அதிக ஆண்டுகள் ஆட்சி புரிந்தவர் இவரே. இவரது ஆட்சி காலத்தில் இரண்டு முக்கிய ஆணைகளை கி.பி.1885,1886 ஆகிய ஆண்டுகளில் வெளியிட்டார். ஒன்று நில அளவை தொடர்பானது; மற்றொன்று விருத்தி அல்லது ஊழியக் குத்தகை தொடர்பானது. கி.பி. 1895–ல் கோதையாற்றின் குறுக்கே பேச்சிப்பாறை அணை இவரது காலத்தில் கட்டப் பட்டது. கி.பி.1900–இல் திருவட்டாறு பாலம் பரளியாற்றின் குறுக்கே இவரது காலத்தில் கட்டப்பட்டது. இதில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு இந்தப் பாலமானது மேன்மை தங்கிய திரு.ராமவர்மாவின் ஆட்சிக் காலத்தில் திவான் பகதூர் திரு. கிருஷ்ணசாமி ராவ் அவர்கள் நிர்வாகத்தை நடத்தியபோது கட்டப்பட்டது என்றும் டபுள்யு. ஜோப் அவர்கள் தலைமைப் பொறியாளராகவும், பி.சுப்பிரமணிய அய்யர் அவர்கள் துணைப் பொறியாளராகவும் இருந்து அப்பணியை முடித்திருக்கின்றனர் என்றும் குறிக்கிறது. மூலம் திருநாள் மகாராஜா சிதராலில் உள்ள மலைக்கோயில் பகவதி அம்மனை பிரதிட்டை செய்து குடமுழுக்கு செய்ததை அங்குள்ள மலையாளக் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது. கி.பி.1900–ல் இவர் உதயகிரிக்கோட்டையின் கிறித்துவ தேவாலயத் தின் கல்லறைகள் மீது கான்கிரீட் கூடங்கள் அமைத்தார். விஜயநகர படைத்தளபதி விட்டல தேவமகாராயரால் கி.பி.1544–ல் தொடங்கப்பட்ட சுசீந்திரம் கோயில் கோபுரப் பணியை கி.பி.1888–ல் மூலம் திருநாள் மகாராஜா முடித்து வைத்தார். வடசேரியில் கனகமூலம் சந்தை நிறுவியவரும் இவரே.

இம்மன்னர் காலத்தில் விருத்தி, ஊழியம் என்பவை வழக்கில் இருந்தன. நாஞ்சில்நாட்டுக் கோயில்களுக்கும், திருவனந்தபுரம் அரண்மனைக்கும் காய்கறிகள், பால், தயிர் போன்றவற்றைக் கோயில் குத்தகைதாரர்கள் சுமந்து கொண்டும், வண்டி களிலும் கொண்டு செல்ல வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது. இது கிரிதாரைச் சுமடு, பூசைத்தட்டு, பிறந்தான் சுமடு, ஓணக்கட்டு என்ற பெயர்களில் குறிக்கப்பட்டன. இந்த வழக்கம் இம்மன்னன் காலத்தில் கி.பி.1909–ல் நிறுத்தப்பட்டது. கி.பி.1888–ல் ஜனநாயக முறையிலான 'ஸ்ரீ மூலம் அசெம்பிளி' இவர் காலத்தில் தோன்றியது.

சேதுலட்சுமி பாய் (கி.பி.1925–1931)

ஸ்ரீ மூலம் திருநாள் மகாராஜாவால் மாவேலிக்கரையிலிருந்து தத்தெடுக்கப் பட்ட சகோதரியும் அவரது வாரிசுமாவார். இவரது காலத்தில் கி.பி.1925–ல் கிராம பஞ்சாயத்து முறை அறிமுகப்படுத்தப்பட்டது. கி.பி.1926–ல் நாஞ்சில் நாட்டில் மருமக்கள் தாய வழிமுறை நிறுத்தப்பட்டது. கி.பி.1930–ல் குமரி மாவட்டத்தில் தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது. தேவசம் கோயில்களில் உயிர்பலி கொடுப்பது தடைசெய்யப்பட்டது.

சித்திரைத் திருநாள் பாலராமவர்மா (கி.பி.1931–1949)

சேதுலட்சுமிபாயின் சகோதரி பார்வதிபாயின் மகனான இவர் திருவிதாங்கூர் மரபில் வந்த கடைசி அரசனாவார். இவரது ஆட்சிக் காலத்தில் கி.பி.1936–ல் எல்லா சமூகத்தவரும் இந்து ஆலயங்களுக்குள் செல்லலாம் என்ற அறிக்கையை திவான் C.P. இராமசாமி அய்யர் வெளியிட்டார். குடிதண்ணீருக்காக முக்கடலில் அணை கட்டப் பட்டது. இவர் காலத்தில்தான். கி.பி.1945–ல் குளச்சல் போர் நினைவுத்தூண் எழுப்பப் பட்டது.



H. H. RAMA VARMA, Swati Tirunal,
1829-1847 A.D.



H. H. MARTANDA VARMA, Uttaram
Tirunal, 1847-1860 A.D.



H. H. RAMA VARMA,
Mulam Tirunal, ascended the
Musnud 19th August, 1885 A.D.



H. H. RAMA VARMA, Avittom Tirunal,
1860-1880 A.D.



H. H. RAMA VARMA, Visakham
Tirunal, 1880-1885 A.D.

3. பண்டைய நாட்டுப் பிரிவுகள்

பாண்டியநாடு பல்வேறு சிறு உட்பிரிவுகளைக் கொண்டிருந்தது.. இவை ஏதேனும் ஓர் ஊரை மையமாக வைத்து அதனைச் சுற்றியுள்ள பகுதியைக் குறிக்க வழங்கப்பட்டன. இந்நாட்டுப் பிரிவுகளைத் தொடக்கத்தில் அரசால் உருவாக்கப்பட்ட நிர்வாகப்பிரிவு என்று கருதி வந்தனர். இவை கூற்றம், முட்டம், குளக்கீழ், நாடு என்ற பின்னொட்களைப் பெற்று விளங்கின. கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்த உள்நாட்டுப்பிரிவுகளும் 'நாடு' என்ற பின்னொட்டைப் பெற்றே விளங்குகின்றன. இம்மாவட்டத்தில் கீழ்க்காணும் நாட்டுப்பிரிவுகள் இருந்தமையைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. கி.பி.18–ம் நூற் றாண்டு வரை பல்வேறு நாட்டுப்பிரிவுகள் வழக்கில் இருந்துள்ளன.

நாடுகளின் பெயர்	தற்போதைய நி லப்பகுதி
1. புறத்தாய நாடு	அகத்தீஸ்வரம்
2. நாஞ்சில் நாடு	தோவாளை, அகஸ்தீஸ்வரம் வட்டங்கள்
3. வள்ளுவ நாடு	கல்குளம் வட்டம்
4. குறுநாடு	கல்குளம் வட்டம்
5. தெங்கநாடு	விளவங்கோடு வட்டம்
6. செங்கழுநீர் வளநாடு	தக்கலைப் பகுதி

மேற்கண்ட நாடுகளை உள்ளடக்கிய பகுதி பாண்டிய நாடு, பாண்டிமண்டலம் என்று அழைக்கப்பட்டது. கி.பி.11ம் நூற்றாண்டில் சோழர்களால் இராஜராஜப் பாண்டிநாடு நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவற்றின் கீழே பாண்டி நாட்டிலுள்ள அனைத்து சிறு நாட்டுப்பிரிவுகளும் கொண்டு வரப்பட்டன. அவை

1. இராஜேந்திர சோழ வளநாடு
2. மதுராந்தக வளநாடு
3. முடிகொண்ட சோழ வளநாடு
4. உத்தமசோழ வளநாடு

என்று அழைக்கப்பட்டன. இவற்றில் வெள்ளாற்றுக்கும், வைகை ஆற்றுக்கும், இடைப் பட்ட பகுதி இராஜேந்திரசோழ வளநாடு என்றும், வைகை ஆற்றுக்கும் வைப்பாற் றுக்கும் இடைப்பட்ட பகுதி மதுராந்தக வளநாடு என்றும், வைப்பாற்றுக்கும் தாமிர பரணிக்கும் இடைப்பட்ட பகுதி முடிகொண்டசோழ வளநாடு என்றும் அழைக்கப் பட்டன. தாமிரபரணிக்கும் கன்னியாகுமரிக்கும் இடைப்பட்ட பகுதி உத்தமசோழ வளநாடு என்று அழைக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தின் கீழ்ப்பகுதியில் இருந்த நாடுகள் அனைத்தும் உத்தமசோழ வளநாட்டில் இருந்ததாகச் சோழர் கல்வெட்டு கள் தெரிவிக்கின்றன.

நாகர்கோயிலுக்கு மேற்கே தென் கேரளத்தை உள்ளடக்கிய அரபிக்கடல் வரை இருந்த நிலப்பகுதி சோழர் காலத்தில் தென்னாடு என்று அழைக்கப்பட்டது. இப்பகுதி யில் இருந்த நாடுகள் அனைத்தும் தென்னாடு என்ற பெரும் பிரிவில் அடங்கி இருந்ததாகக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

தேசங்கள்

கி.பி. 18-ம் நூற்றாண்டில் திருவிதாங்கூர் அரசர்கள் காலத்தில் நிர்வாகத்திற்கு வசதியாக பல்வேறு தேசங்களாகப் பிரிக்கப்பட்டிருந்ததையும் ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

1. வன்னியூர் தேசம்
2. பரக்கோட்டு தேசம்
3. விலவூர் தேசம்
4. நட்டாலம் தேசம்
5. குழித்துறை தேசம்
6. பாலக்கோட்டுத் தேசம்

மொழிவழி மாநிலம் – தாய்த் தமிழகத்துடன் இணைப்பு

ஆகஸ்டு 15–ம் தேதி 1947–ம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்றது. 1949–ம் ஆண்டுதான் திருவிதாங்கூர் அரசுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. 1–11–1956–ல் கேரளத்துடன் இருந்த குமரி மாவட்டம் தனியாகப் பிரிந்து தாய்த் தமிழகத்துடன் தன்னை இணைத்துக் கொண்டது.

கி.பி.18–ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட திருவிதாங்கூர் சமஸ்தான ஆட்சியில் மன்னருக்கு உதவியாக நிருவாகப் பொறுப்புகளை திவான் (வலிய சர்வாதிக் காரியக்காரர்) கவனித்துக் கொண்டார். திவானுக்கு உதவியாக பேஷ்கார் நியமனம் செய்யப்பட்டார். ஒவ்வொரு திருவிதாங்கூர் அரசரின் கீழும் பணிபுரிந்த திவான்களின் பெயர்ப்பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

மன்னன்	தளவாய் / திவான்
1.. அனுஷம் திருநாள் மார்த்தாண்ட வர்மா – (கி.பி. 1729–1758)	இராமையன் தளவாய்
2. கார்த்திகைத் திருநாள் இராமவர்மா (கி.பி. 1758–1798)	– 1. சுப்பையன் தளவாய் 2. கோபாலய்யன் தளவாய் 3. தம்பி செண்பகராமன் பிள்ளை தளவாய் 4. கேசவதாஸ்
3. பாலராமவர்மா (கி.பி.1798–1810)	– 1. ஜெயந்தன் சங்கரன் நம்பூதிரி 2. வேலுத்தம்பி தளவாய் 3. திவான் உம்மினித்தம்பி
4. கௌரி லட்சுமிபாயி (கி.பி.1811–1815)	– 1. திவான் பத்மனாபன்

மன்னன்		தளவாய் / திவான்
5. கௌரி பார்வதிபாயி கி.பி.1815–1829	–	1. திவான் சுப்பையன் சங்கர நாராயண அய்யன் என்ற சங்கு அண்ணாவி 2. திவான் ராமன் மேனன் 3. திவான் ரெட்டிராவ் 4. திவான் வேங்கட ராவ்
6. சுவாதித் திருநாள் இராமவர்மா (கி.பி.1829–1847)	–	1. திவான் சுப்பாராவ் 2. திவான் வேங்கடராவ் 3. திவான் ரெட்டிராவ்
7. உத்திரம் திருநாள் மார்த்தண்ட வர்மா (கி.பி.1847–1860)	–	1. திவான் சீனிவாசராவ் 2. திவான் கிருஷ்ணராவ் 3. திவான் மாதவராவ்
8. ஆயில்யம் திருநாள் ராமவர்மா (கி.பி.1860–1880)	–	1. திவான் மாதவராவ் 2. திவான் சேஷையாசாஸ்திரி 3. திவான் நானுப்பிள்ளை
9. விசாகம் திருநாள் ராமவர்மா	–	திவான் வி. இராமஜயங்கார் (கி.பி.1880–1885)
10 ஸ்ரீ மூலம் திருநாள் ராமவர்மா (கி.பி.1885–1924)	–	1. திவான் வி. இராமஜயங்கார் 2. திவான் டி. இராமாராவ் 3. திவான் எஸ். சங்கர சுப்பையா 4. திவான் கே. கிருஷ்ணசாமி ராவ் 5. திவான் வி.பி. ராமராவ்
11 சேதுலட்சுமி பாய் (கி.பி.1924–1931)	–	1. எம்.இ. வாட்ஸ்
12 சித்திரைத் திருநாள் பாலராமவர்மா (கி.பி.1931–1949)	–	சி.பி. இராமசாமி ஐயர்

4. வரலாறு கூறும் ஊர்கள்

அகத்தீஸ்வரம்

இவ்வூர் ஊர் நாகர்கோவிலுக்கு தெற்கே 18 கி.மீ தொலைவிலும் கன்னியாகுமரி யிலிருந்து 3 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது. அகஸ்திய முனிவர் இவ்வூரில் வில்வ மரத்தடியொன்றில் வசித்ததாக நம்பப்படுவதாலும் அவரால் பூசை செய்விக்கப்பட்டதாகக் கூறப்படும் சிவலிங்கம் (அகஸ்தியலிங்கம்) இங்கிருப்பதாலும் அப்பெயர் வழங்கப்பட்டு வருகிறது என்பர்.

இவ்வூரிலுள்ள விவேகானந்தர் கல்லூரிக்கு அருகே சுக்குப்பாறை தேரிவிளை என்ற இடத்தில் கி.மு. 10,000 – 4000 –க்கு இடைப்பட்ட காலத்தினைச் சேர்ந்த நுண் கற்காலக் கருவிகள் கிடைத்துள்ளன. இவை செர்ட் மற்றும் குவார்ட்ஸ் ஆகிய மூலக் கற்களினால் ஆனவையாகும். தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள சாயர்புரம் தேரிப் பகுதி யிலுள்ளதைப் போன்றே இங்கு சுமார் 3 அடி உயரத்தில் செந்தேரிப் படிவங்கள் (Red Sand Dune Deposits) காணப்படுகின்றன.

இவ்வூரிலிருந்து கொட்டாரம் செல்லும் பாதையில் கி.பி. 12 –ஆம் நூற்றாண்டில் எடுப்பிக்கப்பட்ட சிவன் கோயிலும், அதனருகே பெருமாள் கோயிலும் உள்ளன. இக்கோயில் திருமடந்தையும், ஜயமடந்தையும் என்ற மெய்க்கீர்த்திக்குரிய சடைய வர்மன் சீவல்லப பாண்டியனால் எடுப்பிக்கப்பட்டது. இங்குள்ள திருப்பூவனத்தில் இம்மன்னனின் அரண்மனையொன்று இருந்துள்ளது. அதிலுள்ள அழகியபாண்டியன் கூடத்துப் பள்ளிக் கட்டிலிலிருந்து அம்மன்னன் பிறப்பித்த ஆணைகளை இவனது சல்வெட்டுகள் குறிக் கின்றன. கி.பி. 12 –ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் இவ்வூரின் பெயரைப் **புறத்தாய நாட்டுக் குமரி திருவகத்தீசுரம்** எனவும் இறைவன் திருவகத்தீசு வரமுடைய மகாதேவர் என்றும் குறிக்கப்படுகிறார். கி.பி. 15 –ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் பெருமாள் நயினார் அழகிய மணவாளப் பெருமாள் என்றும் பொலிந்து நின்ற பிரான் என்றும் குறிக்கப்படுகிறார்.

கி.பி. 15 –ஆம் நூற்றாண்டில் வேணாட்டரசன் சேரன் உதைய மார்த்தாண்ட வர்மன் (கி.பி. 1383 – 1444) காலத்தில் இவ்வூரில் அகரம் உருவாக்கப்பட்டு அதில் தமிழ் பிராமணர்கள் குடியமர்த்தப்பட்டனர். அகத்தீசுவரர் கோயிலுக்கு அருகிலுள்ள பாறையில் பொறிக்கப்பட்டுள்ள கொல்லம் 614 (கி.பி. 1438)–ம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டில் அகரமான பிறகு இவ்வூரின் பெயர் புறத்தாயநாட்டுத் தென் வாரணவாசி நன்னாட்டு அகத்தீஸ்வரமான உதைய மார்த்தாண்டச் சதுர்வேதிமங்கலம் என வழங்கப்பட்டுள்ளது. மேலும் இக்கல்வெட்டில் மருத்துவர்களுக்கு வழங்கப்பட்ட நிலம் **சல்லிய விருத்தி** என்றும் பானை வனையும் வேளார்களுக்கு வழங்கப்பட்ட நிலம் **குலால விருத்தி** எனவும் கல்வெட்டு குறிக்கிறது .

நாட்டார் வழக்காற்றில் வழங்கப்படும் தோட்டுக் காரியம்மனின் கல் மாறி மண் மாறி பெய்த இடமாக அகஸ்தீஸ்வரத்திலுள்ள சுக்குப் பாறை தேரிவிளை எனுமிடம் மக்கள் வழக்கில் பேசப் படுகிறது . இங்கு தோட்டுக் காரியம்மனுக்குக் கோயிலொன்றும் உள்ளது.

அதங்கோடு

இவ்வூர் விளவங்கோடு வட்டத்தில் குழித்துறை ஆற்றின் தென்கரையில் உள்ளது.

சங்ககாலப் புலவன் அதங்கோட்டு ஆசான் பிறந்த ஊராகும். இப்புலவன் சங்க காலப் பாண்டிய மன்னன் நிலந்தரு திருவிற் பாண்டியன் அவைக்களத்தில் இருந்ததைத் தொல்காப்பியம் குறிக்கிறது.

இவ்வூரிலுள்ள சூரியமேடு என்ற இடத்தில் கிடைத்த குலுக்கையொன்றில் ரோமானியரின் ரௌலட்டட் அலங்கார வேலைப்பாடுகள் காணப்படுகிறது. சங்க காலத்தில் ரோமானியர்கள் அதங்கோட்டுடன் தொடர்பு கொண்டுள்ளனர். இதனோடு கூம்பு வடிவிலான அடிப்பகுதியைக் கொண்ட சிவப்பு வண்ண மட்கலயமொன்றும் கிடைத் துள்ளது. இக்குலுக்கை தானியம் சேமித்து வைக்கப் பயன்பட்டிருக்கலாம். இக்குலுக்கை யும், மட்கலயமும் கி.பி.100–300க்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்ததாகும்.

அதங்கோடு கிராமத்திற்கு தென்கிழக்கே சுமார் 1கி.மீ. தொலைவில் குழித்துறை ஆற்றில், பின்னப்பட்ட பழைய பெருமாளின் கற்சிற்பமொன்று கிடைத்துள்ளது. இச்சிற்பம் கி.பி. 12–13–ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகலாம்.

அதங்கோட்டு ஆசான் நினைவாகத் தமிழக அரசு இங்கு அவருக்கு ஒரு மணிமண்டபம் எழுப்பியுள்ளது.

அருவிக்கரை

இவ்வூர் கல்குளம் வட்டத்தில் பரளியாற்றின் கரையில் திருவட்டாற்றிலிருந்து 1 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இங்குள்ள கிருஷ்ணன்கோயில் கி.பி. 13–ம் நூற்றாண்டில் எடுப்பிக்கப்பட்டதாகும். இக்கோயில் கல்வெட்டுகள் இவ்வூரின் பெயரை அருவிக்கரை என்றே குறிக்கின்றன. சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பு வழங்கப்பட்ட அதே பெயரே இன்றளவும் மாற்ற மில்லா திருப்பது தனிச்சிறப்பாகும். இக்கோயில் இறைவன் கல்வெட்டில் புருசோத்தமன் என அழைக்கப்படுகிறார். இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கி.பி. 13–ம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் கற்பகமங்கலத்தைச் சேர்ந்த துப்பநாராயணன், திப்பஞ்சேந்தன், கண்டன்துப்பன் மற்றும் அவன் தம்பியும், அரையன்சேரியைச் சேர்ந்த கண்டன் சாதவேத பட்டரும், திருவிதான்கோட்டுப் பாலகோட்டு நாராயணன் குமாரத்துவாமிராமனும் இக்கோயில் இறைவனுக்கு நிலக்கொடை வழங்கியதை பதிவு செய்கின்றன.

இதே கோயிலின் மடப்பள்ளியில் கி.பி. 1654–ல் பொறிக்கப்பட்ட கல்வெட்டு சாதவேதன் சாஸ்திரி பாலகோட்டு அம்மை மடப்பள்ளியின் ஒரு பத்தியை செய்தளித் ததைத் தெரிவிக்கிறது.

அருவிக்கரையில் திருவிதாங்கூர் அரசின் சங்கு முத்திரை பொறிக்கப்பட்ட ஓலை ஆவணங்கள் கிடைத்துள்ளன. கி.பி. 18–ம் நூற்றாண்டில் இங்கு ஒரு மாடன்கோவில் இருந்து மறைந்துள்ளது. இது பற்றிய குறிப்பு ஓர் ஓலை ஆவணத்தில் வருகிறது.

அழகியபாண்டிபுரம்

இவ்வூர் தோவாளை வட்டத்தில் நாகர்கோவிலிலிருந்து 16 கி.மீ. தொலைவில் நாகர்கோவிலிலிருந்து மகேந்திரகிரி மலையிலுள்ள முக்கிய எஸ்டேட்டுகளுக்கு செல்லும் வழித்தடத்தில் அமையப் பெற்றுள்ளது. கி.பி. 10–11ஆம் நூற்றாண்டுகளுக் கிடையில் இப்பகுதி சோழரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது.

கி.பி. 12–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாஞ்சில் நாட்டுப் பகுதியை நாஞ்சில் குறவர் ஆண்டதாகவும் கி.பி. 1117–ல் திருவிதாங்கூர் மன்னரால் அவர்கள் விரட்டப்பட்டதாகவும் நாகமையாவின் திருவாங்கூர் ஸ்டேட் மானுவல் தெரிவிக்கிறது. மெக்கன்சியின் தாள்சுவடியொன்று நாஞ்சில் குறவர்கள் அழகிய பாண்டிபுரத்திற்கு அருகிலுள்ள குறத்தியறையைத் தலைமை இடமாகக் கொண்டு நாஞ்சில் நாட்டை ஆண்டனர் எனக் குறிக்கிறது. இவ்வூர் வெங்கடாசலபதி கோயிலில் பொறிக்கப்பட் டுள்ள கி.பி. 1123–ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டின் மூலம் கோதை கேரளவர்மன் என்ற வேணாட்டரசன் ஆளுகைக்குட்பட்ட பகுதியாக இருந்துள்ளது தெரிய வருகிறது.

கி.பி. 15–19 ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் வேணாட்டரசர்களிடமிருந்து வரி வசூலிக்கும் உரிமை பெற்றிருந்த பெரிய வீட்டு முதலியார்கள் அரசின் முகவர்களாக இருந்துள்ளனர் என்பது இங்கு கிடைத்த முதலியார் ஓலை ஆவணங்களிலிருந்து தெரிய வருகிறது. அழகியபாண்டிபுரம் நாஞ்சில் நாட்டில் கி.பி. 13–ஆம் நூற்றாண்டிற்கு முன்பே 12 பிடாகைகளில் ஒன்றாக இருந்துள்ளது.

இவ்வூரில் இருக்கும் கோயில்களில் பழமையானது வெங்கடாஜலபதி கோயி லாகும். இங்குள்ள 11–12 –ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் இவ்வூரின் பெயர் "நாஞ்சி நாட்டதியனூரான அழகியபாண்டியபுரம்" என்றும், இறைவன் 'எம்பெருமான்' எனவும் 'பவித்திரமாணிக்க விண்ணகரெம்பெருமான்' என்றும் குறிக்கப் படுகிறார். திதியன் மகன் அதியன் என்ற ஆய் மன்னனின் ஆட்சிக்குட்பட்டிருந்தபோது இவ்வூர் அவன் பெயரைப் பெற்றிருக்கலாம். நகரத்தார் இக்கோயிலுக்கு கொடை வழங்கியதினை கல்வெட்டுக்கள் பதிவு செய்கின்றன.

அழகியபாண்டிபுரம் அகரத்தில் சாஸ்திரி ஒருவரிடம் சாமவேத ஏடுகள் இருந்தது கண்டறியப்பட்டுள்ளது. கொல்லம் 983 இல் (கி.பி. 1807) தளவாய் வேலுத்தம்பி "அழகிய பாண்டியபுரத்து முதலியாருக்கும், அம்பலக்காரருக்கும் இடையிலிருந்த பிரச்சனை யொன்றைத் தீர்த்து வைத்ததாக முதலியார் ஓலை ஆவணம் ஒன்று தெரிவிக்கிறது.

ஆளூர்

இவ்வூர் கல்குளம் வட்டத்தில் நாகர்கோவிலிலிருந்து 16 கி.மீ. தொலைவில் இரணியலுக்கு அருகே அமையப்பெற்றுள்ளது.

இவ்வூரிலுள்ள பழமையான சிவன்கோயில் கல்வெட்டுகள், அழகிய பாண்டிபுரம் முதலியார் வீட்டு ஓலை ஆவணங்கள் ஆளூர் வரலாறு அறிதற்குச் சான்றாவணங்களாக விளங்குகின்றன.

ஆளூர் சிவன்கோயில் கி.பி. 13–ம் நூற்றாண்டில் எடுப்பிக்கப்பட்டதாகலாம். கி.பி. 1259–ம் ஆண்டைச் சேர்ந்த இக்கோயில் கல்வெட்டு இவ்வூரின் பெயரை 'ஸ்ரீ நகரம் ஆளுரான விக்கிரமசோழபாண்டியபுரம்' என்றும் இறைவனை நாயனார் சோழபாண்டீஸ்வரமுடையார் எனவும் குறிக்கிறது. ஆளூர் நகரம் சோழபாண்டியர் காலத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம்.

கி.பி. 16–ம் நூற்றாண்டிற்குப் பின்பு ஆளுரை தலைமையிடமாகக் கொண்டு நிலைபேறு பெறுகின்றனர். பெரிய வீட்டு முதலியார் ஓலை ஆவணங்களில் சில ஆளூர் தொடர்பானவையாகும்.

கி.பி. 1483–ம் ஆண்டைச் சேர்ந்த ஓலை ஆவணமொன்று ஆளுரைச் சேர்ந்த சேனாதிபதி கண்டன் கூத்தன் என்பவன் நயினார் சோழபாண்டீஸ்வரமுடையார்க்கு திருவட்டமிக்கு நெய்யாகும்படி 25 **நென்மேனி கலியுகராமன் பணத்தை** தேவர் அடியார் நாச்சிமகள் உடைய நாச்சியார் வசம் கொடுத்ததைப் பதிவு செய்கிறது. கண்டன் கூத்தன் என்பவன் கி.பி. 15–ம் நூற்றாண்டில் ஆளூர் நகரின் சேனாதிபதியாக இருந்தது இதன் மூலம் தெரிய வருகிறது.

ஆளூரிலுள்ள சமாதியின் முன்பாக உள்ள தூண் கல்வெட்டொன்று கி.பி. 1667–ல் ஆளுநரான விக்கிரம சோழபாண்டியபுரத்து செண்பகராமன் மடத்தில் உள்ள தேவரில் சோதியான நச்சத்திர அய்யர் கட்டுவித்த குருவாலையகத்துக்குச் சீடர்கள் பலர் நிலம் வாங்கியளித்ததைக் குறிக்கிறது.

கி.பி. 1886–ல் சிவன் கோயிலின் இறைவன் பெயர் 'ஆளூர் நயினார் சேர சோழ பாண்டிய மகாதேவர் சுவாமி' எனப் பெயர் மாற்றமடைகிறது. இதே ஆண்டில் மகாதேவர்க்கு அஷ்டபந்தனம் செய்ததையும், சபாபதி, சிவகாமி அம்மை, காரைக்கால் அம்மையார் ஆகியோரின் திருவுருவங்களை பிரதிட்டை செய்ததை மகாதேவர் கோயில் நடராஜர் சன்னதியின் முன்னுள்ள தரையில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு தெரிவிக்கிறது.

ஆரல்வாய்மொழி

இவ்வூர் தோவாளை வட்டத்தில் நாகர்கோவில் – திருநெல்வேலி சாலையில் மேற்குமலைத் தொடர்ச்சியின் அடிவாரத்தில் திருநெல்வேலியிலிருந்து நாகர்கோவிலுக்கு நுழையும் இடத்தில் அமையப் பெற்றுள்ளது. மக்கள் வழக்கில் 'ஆராம்பொழி' என அழைக்கப்படுகிறது. மலையாளத்தில் 'அருவா மொழி' எனவும் அழைக்கப்படுகிறது.

நாஞ்சி நாட்டுக்கும் பாண்டி நாட்டுக்கும் இடையிலான எல்லையாக இவ்வூர் இருந் துள்ளது. குமரி மாவட்டப் பகுதியின் மீது பாண்டியர், சோழர், விசயநகரர் மற்றும் நாயக்கர் படையெடுப்புகள் ஆரல்வாய்மொழிக் கணவாய் வழியாக வந்தே நடைபெற் றுள்ளது.

கி.பி. 8–ஆம் நூற்றாண்டில் பாண்டிய மன்னன் மாறஞ்சடையனின் படைத் தளபதி இரணகீர்த்தி என்பான் சேரர்களுக்கு எதிரான போரில் வீரமரணமடைந்த செய்தியில் அவனுக்காக இங்கு நிறுவப்பட்ட நடு கல் நாஞ்சில் நாட்டார் நாயக்கர்களுக்குக் கப்பம் செலுத்தி வந்த நேரத்தில் கி.பி. 1660 –இல் நாஞ்சி நாட்டைச் சேர்ந்த ஆசாரி, செட்டி, சாலியர், கைக் கோளர், ஈழவர், சாணார், வாணியர், சவளக்காரர், கோலியர் ஆகிய சமூகத்தவர்கள், பல்வேறு ஊழியங்களைச் செய்வதற்காக ஆரல்வாய்மொழியின் கிழக்குப் பகுதியில் குடியேற நாயக்க மன்னன் பிறப்பித்த ஆணையினை அங்கு கிடைத்த தனிக்கல் கல்வெட்டொன்று பதிவு செய்துள்ளது. இவ்வாறு குடியேறுவோர் வரி செலுத்தி வரவேண்டுமென்பதையும் அக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

வேணாட்டரசர் மார்த்தாண்டவர்மா காலத்தில் கன்னியாகுமரியிலிருந்து ஆரல்வாய்மொழி வரை நாஞ்சி நாட்டுக்கும் பாண்டியநாட்டுக்கும் இடையில் தடுப்பு அரணாக கற்கோட்டைச் சுவர் எழுப்பியுள்ளார். இச்சுவரின் எச்சங்களைத் தற்போது ஆரல்வாய்மொழி அண்ணா கல்லூரி அருகேயும், முருகன் குன்றம், இராமனாதிச்சன் புதூர் ஆகியவிடங்களிலும் காணலாம். கி.பி. 1755 –ல் ஆங்கிலேயப் படைத்தளபதி ஹெரான் தலைமையிலான படை இக்கோட்டையைத் தாக்கியது. இதே போல் கி.பி. 1809–ல் தளவாய் வேலுத்தம்பியின் படையினரை எதிர்த்து ஆங்கிலேய கர்னல் லீகர் தலைமையிலான படையினர் இக்கோட்டையைத் தாக்கி அழித்தனர். கி.பி. 18–ஆம் நூற்றாண்டின் வாழ்விடங்கள் இருந்ததற்கான எச்சங்கள் சுமார் 3 அடி ஆழத்தில் பொய்கைக் காடு என்ற இடத்தில் கிடைத்துள்ளன.

கி.பி. 17 –ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு இவ்வூரை ஆரல்வாய்மொழி என்றும் கி.பி 19 –ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் இவ்வூரை ஆரை என்றும் குறிக்கின்றன.

இங்குள்ள ஆலம்பாட்டு முத்தாலம்மன் கோயிலில் கி.பி. 1821 –ஆம் ஆண்டுக் கல்வெட்டு வண்ணான் நல்லமிடன் ஒளி முத்து என்பான் அக்கோயில் தெற்கு பக்கச் சுவரில் 71 வரிசையும், மணி மண்டபத்தின் தளவரிசையும் பீடக் கல்லும் அமைத்ததைக் குறிக்கிறது.

இரணியல்

இரணியல் ஊர் கல்குளம் வட்டத்தில் நாகர்கோவிலிலிருந்து 15 கி.மீ தொலை விலும், தக்கலைக்குத் தெற்கேயும், நாகர்கோவில் – திங்கள்சந்தை சாலையில் அமைந்துள்ளது.

கி.பி. 13–17 –ம் நூற்றாண்டுகளுக்கிடையில் இவ்வூர் இரணசிங்நேச்சுரம், படைப்பா நாட்டு இரணசிங்க பாடி, இரணியசிங்க நல்லூர் ஆகிய பெயர்களில் மாறி

மாறி வழங்கப்பட்டு வந்துள்ளதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. தற்போதைய பெயரான இரணியலை முதன் முதலாக கி.பி. 1815–ம் ஆண்டில் பொறிக்கப்பட்டுள்ள புன்னார்குளம் கல்வெட்டே குறிக்கிறது.

இவ்வூரின் பழமைக்குச் சான்றாக இங்குள்ள கி.பி. 15 –ம் நூற்றாண்டைச் சார்ந்த வேணாட்டரசர்களால் பயன்படுத்தப்பட்ட கொட்டாரம் (அரண்மனை) சிவன் கோயில் மற்றும் கி.பி. 17–18 –ம் நூற்றாண்டைச் சேர்ந்த இரு தூண் கல்வெட்டுகள் ஆகியன விளங்குகின்றன.

கி.பி. 1484 –ம் ஆண்டைச் சேர்ந்த தலக்குளம் கல்வெட்டே முதன் முதலாக இரணியல் அரண்மனையை 'இரணசிங்கபாடி வீடு' எனக் குறிக்கிறது. இவ்வரண்மனை யில் மன்னர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட கற்கட்டிலொன்றும், அதன் மீது அமைக்கப் பட்டுள்ள மரக் கூடத்தின் உட்புறத்தில் வரிசையாகக் கேரளக் கலைப்பாணியில் செதுக்கப் பட்டுள்ள கி.பி. 16 –ம் நூற்றாண்டின் மரச் சிற்பங்களுமே (Panels of Wooden Carvings) முக்கியத்துவம் வாய்ந்தவையாகும் . இவ்விரண்டும் வசந்த மண்டப வளாகத் தில் உள்ளன. மரச் சிற்பங்கள் மன்னரின் அன்றாட செயற்பாடுகளைச் சித்திரிப்பதாக உள்ளன. மன்னன் யானையின் மீது நகர்வலம் வருதல், அமைச்சருக்கு ஆணை பிறப் பித்தல், இசை மற்றும் நாட்டிய நிகழ்ச்சிகளைக் கண்டு ரசித்தல், வாள்போர் மற்றும் மல்யுத்தம் செய்தல் ஆகியவற்றை கண்டுகளிப்பதும் கலைநயத்துடன் கேரளக் கலைப் பாணியில் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன.

இவ்வூரில் அமைந்துள்ள சிவன் கோயில் கி.பி. 13–ம் நூற்றாண்டில் எழுப்பப்பட்ட தாகலாம். இக்கோயிலுக்கு வேணாட்டரசர் கீழப் பேரூர் ஸ்ரீவீர ரவி கேரள வர்மர் திருவடி கி.பி. 1266–ல் கொடை வழங்கியதைத் திருவனந்தபுரம் கல்வெட்டொன்று தெரிவிக் கிறது. இக்கல்வெட்டு சிவன் கோயில் மூலவரை 'இரணசிங்நேச்சுரத்து மாதேவர்' எனக் குறிக்கிறது.

இரணியலில் இரண்டு தூண் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. வேணாட்டு அரசியார் இராணி உமையம்மை காலத்தில் கொல்லம் 857 (கி.பி. 1682)ல் **திங்கள்சந்தை** ஒன்று நிறுவப்பட்டது. இரணியல் ஊர்க்கல்வெட்டு இது விபரத்தை முழுமையாகத் தெரிவிக் கிறது. இராணி உமையம்மையார் ஊராருக்கும் ஊர்மக்களுக்கும் வெளியிட்ட நீட்டு (அரசாணை) இக்கல்வெட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சந்தைக்கு 'செண்பகராமன் புதுக்கடை' எனப் பெயரிட்டுக் கடைகள் வரிசையாகக் கட்டப்பட்டதையும், கூலக்கடை அமைத்ததையும் வணிகம் செய்வோர் செலுத்த வேண்டிய வரிகள் குறித்தும் விரிவாக இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. செண்பகராமன் புதுக்கடையில் வணிகம் செய்வோரிட மிருந்து ஒவ்வொரு பொதிக்கும் ஒரு கூட்டு நெல்லும், ஒரு சுமடுக்கு ஒரு பிடி நெல்லும் சேகரிக்க வேண்டும் எனவும், இதிலிருந்து வரும் வருவாயைக் கொண்டு இரணியலின் மேலத் தெரு மற்றும் கீழத் தெருவிலுள்ள இரண்டு மடங்களைப் பராமரிக்க வேண்டும் என்றும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. இதில் ஒரு மடத்தின் பெயரை 'உமையொரு பாகன் மடம்' எனக் கல்வெட்டு குறிக்கிறது. இவற்றை வசூல் செய்வதை கண்காணிக்கும் அதிகாரியை 'ஆனவாள்' எனக் கல்வெட்டு குறிக்கிறது.

பத்மனாபபுரம் அரண்மனையில் வைக்கப்பட்டுள்ள மற்றொரு இரணியல் கல்வெட்டு கொல்லமாண்டு 905 (கி.பி. 1730) ஸ்ரீ வீரராமவர்மா சிறவாய் மூத்ததம்பிரான் காலத்தியதாகும். இக்கல்வெட்டு வெள்ளிச்சந்தையை 'நாலாலுமூட்டு சந்தை' எனக் குறிக்கிறது. இக்கல்வெட்டு இரணியசிங்கநல்லூர் தேசத்துப் பேரூர்ப் பெருமான் என்பவன் நாலாலுமூட்டு சந்தையில் அம்பலம் கட்டிக் கிணறும் வெட்டிவிச்சுத் தோட்டமும் உண்டாக்கிக் கொடுத்ததையும் இவ்வம்பலத்திற்கு நெய்யூர் தேசத்திலுள்ள மனவிளை கோறாங்குளத்தால் நீருண்டு நெல் விளையும் பூமியை தானப் பிரமாணமாக விட்டுக் கொடுத்ததையும் தெரிவிக்கிறது.

இறச்சகுளம்

தோவாளை வட்டத்தில் நாகர்கோயிலிலிருந்து பாலமோர் செல்லும் சாலையில் புத்தேரி ஊரையடுத்து இறச்சகுளம் ஊர் அமைந்துள்ளது. புத்தேரி–இறச்சகுளம் ஊர்களுக்கு இடையே சாலையோரமாக உள்ள கல்மடத்திற்கு எதிரே வலப்புறமாக சுமைதாங்கிக் கல் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. கொல்லம் 918–ல் (கி.பி. 1743) இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. புத்தேரி ஊரைச் சேர்ந்த சங்குப்பிள்ளை–ராமலட்சுமி ஆகியோரின் நினைவாக இச்சுமைதாங்கிக்கல் நிறுவியது இக்கல்வெட்டின் மூலம் தெரியவருகிறது.

இறச்சகுளத்தில் உள்ள சிவன்கோயில் மணிமண்டபத்தின் வெளிப்பக்கக் கிழக்குச் சுவரில் கி.பி. 17–ம் நூற்றாண்டுக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. கொல்லமாண்டு 805 (கி.பி. 1629) ஐச் சேர்ந்த இக்கல்வெட்டு நாஞ்சி நாட்டு தேரான அழகிய சோழநல்லூர் ஊரைச் சேர்ந்த கேரளன் எடுத்தபாதமுடையான் எறிச்சிகுளம் நயினார் உதைய மாத்தாண்டீசுரமுடைய நயினாருக்கு திருமாலைப்பிறமாக நிலம் தானப் பிறமாணமாக விட்டுக் கொடுத்ததை தெரிவிக்கிறது. இக்கொடை வழங்குவதற்கு முன்பாக கேரளன் எடுத்தபாதமுடையான் வேணாட்டரசர் சேதுங்கநாட்டு மூத்த தம்பிரானை சேவித்த பிறகு இக்கொடையினை வழங்கியதாகக் கல்வெட்டு குறிக்கிறது. இக்கல்வெட்டு குறிக்கும் தேரான அழகியசோழநல்லூர் தற்போதைய சுசீந்திரத்திற்கு அருகே உள்ள தேரூர் ஆகும். இவ்வூரின் பெயரான இறச்சகுளம் கல்வெட்டில் 'எறிச்சிகுளம்' எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. கோயில் இறைவன் வேணாட்டரசன் உதைய மாத்தாண்டன் பெயராலேயே 'உதையமாத்தாண்டீச்சுரர்' எனக் குறிக்கப்பட்டுள்ளார்.

கருப்புக்கோட்டை

அகத்தீஸ்வரம் வட்டத்தில் நாகர்கோயிலுக்குத் தென்கிழக்கே 5 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது.

1938–ஆம் ஆண்டில் அப்போதைய திருவிதாங்கூர் அரசினால் இங்கு மேற் கொள்ளப்பட்ட அகழாய்வில் பெருங்கற்காலப் பண்பாட்டின் எச்சங்கள் கிடைத்துள்ளன. முதுமக்கள் தாழி, கருப்பு–சிவப்பு மட்கலயங்கள் கிடைத்துள்ளன. தாழியும் பல வடிவங் களினாலான மட்கலயங்களும் நிலத்தில் பதிக்கும் வண்ணம் அவற்றின் அடிப்பகுதி

கூர்முனை கொண்ட கூம்பு வடிவத்தில் காணப்பட்டன. ஒரு தாழியினுள் மட்கலய மொன்றும், இரும்பினாலான ஈட்டி முனையும், மூன்று எலும்புத் துண்டுகளும் சங்கும் இருந்தன. இத்தாழி மூடியுடன் காணப்பட்டது. ஈட்டியின் முனை 3½" x 1½" x ¼" என்ற அளவில் காணப்பட்டது.

அகழாய்வில் கிடைத்த மற்ற இரு முக்கியமான சான்றுகள் நடுகல் ஒன்றும், கல்வெட்டு பொறிக்கப்பட்ட தூண் கல்வெட்டு ஒன்றுமாகும். இவற்றோடு இயக்கி மற்றும் நாகரின் கற்சிற்பங்களும் கிடைத்துள்ளன. நடுகல்லில் வீரனொருவன் வில் அம்புடன் புடைப்பாகச் செதுக்கப்பட்டுள்ளான். கல்வெட்டுத் தூண் 3' x 1¾' x ¾" என்ற அளவில் உள்ளது. இக்கல்தூணின் ஒருபுறம் நீளக்கோலும், நாகமுக மோதிரமும் புடைப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன. தூணின் மறுபுறத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு அகஸ்தீஸ்வரம் பிராமணர்களுக்காக வழங்கப்பட்ட நிலத்தின் எல்கைகளைக் குறிக்கிறது.

கருப்புக்கோட்டையில் கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் எழுப்பப்பட்ட பழமையான சிவன்கோயில் ஒன்றுள்ளது. இக்கோயிலில் கி.பி. 12, 15, 16 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. கி.பி. 12–ஆம் நூற்றாண்டில் 'கரும்பழவில்' என வழங்கப்பட்ட இவ்வூரின் பெயர் கி.பி. 15–ஆம் நூற்றாண்டிலிருந்து நாஞ்சி நாட்டு கருப்புக்கோட்டை என வழங்கப்பட்டதை இக்கோயில் கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.

கி.பி. 1163–ல் காரித்துறை என்ற ஊரைச் சேர்ந்த பிரான் சேகரனான கங்கை கொண்ட சோழ வள்ளுவ நாடாழ்வான் இக்கோயிலுக்கு நிலக்கொடை வழங்கியதை ஒரு கல்வெட்டு பதிவு செய்கிறது. நாஞ்சிநாட்டுக் கருப்புக்கோட்டை அகரத்தைச் சேர்ந்த உதையமூர்த்தி வெங்கிடைசுரன் அண்ணாவியிடம் இதே ஊரைச் சேர்ந்த கலியுகத்து மெய்யன் சிவதாணுவன் கி.பி. 1461–ல் பிராமணர்களுக்கு உணவு அளிப்பதற்காக நிலக்கொடை வழங்கியதை மற்றொரு கல்வெட்டு பதிவு செய்கிறது.

கன்னியாகுமரி

இவ்வூர் நாகர்கோயிலுக்குத் தென்கிழக்கே 18கி.மீ. தொலைவில் இந்தியாவின் தென்கோடி முனையில் அமைந்துள்ளது. முக்கடலும் சங்கமிக்கும் இடமாயிருப்பதால் இந்திய மக்களனைவருக்கும் புனித யாத்திரைத் தலமாக விளங்குகிறது.

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம்"

என தொல்காப்பியம் இந்தியாவின் தென் எல்லையாக கன்னியாகுமரியை குறிக்கிறது. கன்னியாகுமரியில் ஒரு துறைமுகம் இருந்ததாக பெரிப்ளஸ் மற்றும் தாலமியின் குறிப்புகளிலிருந்து தெரியவருகிறது. சிலப்பதிகாரம் 'குமரியம் பெருந்துறை' எனக் குறிக்கிறது. இங்குள்ள பகவதி அம்மன் கோயில், குகனாதீசுவரர் கோயில் மற்றும் காசி விஸ்வநாதர் கோயிற் கல்வெட்டுகள் இவ்வூரின் பழமைக்குச் சான்றாவணங்களாக விளங்குகின்றன. முதலாம் இராஜராஜன் காலத்தில் இவ்வூர் பிரம்மதேயமாக இருந்துள்ளது.

இம்மன்னனின் 15ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு இவ்வூரை இராஜராஜ வளநாட்டுப் புறத்தாயநாட்டுக் குமரிமங்கலம் எனக் குறிக்கிறது. முதலாம் இராஜேந்திர சோழன் காலத்திலிருந்து இராஜராஜ மண்டலத்துப் புறத்தாயநாட்டுக் குமரி என்றும், இராஜ ராஜப்பாண்டி நாட்டு உத்தமசோழ வளநாட்டுப் புறத்தாயநாட்டுக் குமரி என்றும் குமரியான கங்கை கொண்ட சோழபுரம் என்றும் கழிக்குடி எனவும் குறிக்கின்றன. இறைவியை 'கன்னியாபடாரியார்' என்றும் 'கன்னியாபகவதி' என்றும் கல்வெட்டுகள் குறிக்கின்றன. இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள வீர இராஜேந்திரனின் கல்வெட்டு சோழரின் குடிவழியை குறிக்கிறது.

இவ்வூரில் உள்ள குகனாதீசுவரர் கோயில் முதலாம் பராந்தகச் சோழனால் எழுப்பப்பட்டு அவனுக்குப் பின் வந்த சோழ மன்னர்களால் திருத்திக் கட்டப்பட்டுள்ள தினை கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள முதலாம் இராஜாதிராஜனின் கல்வெட்டொன்று ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையான ராஜராஜப் பெருஞ்சாலைக்கு உப்பு நிவந்தமாக வழங்கிய செய்தியைத் தெரிவிக்கின்றது. இச்சாலை கல்வி போதிக்கும் சாலையாக இருந்துள்ளது. பாண்டிய மன்னன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் (கி.பி. 811–860) காலத்தில் இச்சாலை நிறுவப்பட்டிருக்க வேண்டும். இவனே சேரனையும் சிங்களரையும் வென்றவனாவான். ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையே முதலாம் இராஜராஜ சோழனின் படையெடுப்புக்குப் பின்னால் 'ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையான ராஜராஜப் பெருஞ்சாலை' எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது. சோழபாண்டியர் ஆட்சியில் இராஜராஜப் பெருஞ்சாலை என்ற பெயரில் வழங்கப்பட்டுள்ளது. குகனாதீசுவரர் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள முதலாம் இராஜாதிராஜனின் உப்பளக் கல்வெட்டில் அதில் பணி புரிந்த அதிகாரிகளைக் 'கூறு செய்வார்' என்றும் 'கண்காணி செய்வார்' என்றும் குறிக்கிறது. உப்பங்கழிகள் மிகுந்திருந்த காரணத்தினால் 'கழிக்குடி' எனப் பெயர் வழங்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரிக்குத் தெற்கே நிலப்பரப்பு நீண்டிருந்ததாகவும் கடல்கோளினால் மூழ்கடிக்கப்பட்டதாகவும் ஆய்வாளர்கள் சிலர் கருதுகின்றனர். இதுவே 'லெமூரியாக் கண்டம்', 'நாவலன் தீவு' ஆகிய பெயர்களில் வழங்கப்படுகிறது. சிலப்பதிகாரமும் இக்கடல்கோள் பற்றிக் குறிக்கிறது.

"பஃருளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள"

தற்போது சுசீந்திரம் அருகே ஓடிக் கடலில் கலக்கும் பழையாறே பஃருளியாறாக இனம் காணப்படுகிறது.

கன்னியாகுமரிக்கு அருகே கடலில் உள்ள ஸ்ரீபாத பாறையில் கி.பி. 1892 இல் டிசம்பர் திங்கள் 24–26 தேதிகளில் சுவாமி விவேகானந்தர் தியானத்திலிருந்து ஞானம் பெற்ற காரணத்தினால் இப்பாறையின் மீது அவருக்கு ஒரு நினைவு மண்டபம் எழுப்பப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி குகனாதீசுவரர் கோயிலுக்கு வடக்கே கி.பி. 17–18-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட காசிவிசுவநாதர் என்ற சிவன் கோயிலொன்று உள்ளது. இக்கோயில் கல்வெட்டில் மூலவர் "பூலாந்துறைச் சிவன்" எனக் குறிக்கப்படுகிறார். சமண பார்க்கரன் என்பான் இக்கோயிலுக்குக் கொடை வழங்கியுள்ளான். இக்கோயில் தூண் ஒன்றில் ஒரு கணக்குப் புதிரைக் குறிப்பதாக வரிக்கு மூன்று தமிழ் எண்களாக மூன்று வரிகளில் எண்கள் பொறிக்கப்பட்டுள்ளன. எப்பக்கம் கூட்டினாலும் கூட்டுத் தொகை பதினைந்து வரும்.

இக்கோயிலுக்கருகே கி.பி. 17 – 18 –ம் நூற்றாண்டுகளுக்கிடையில் கட்டப்பட்ட திருஞானசம்பந்தர் குருமடம் ஒன்றும் உள்ளது. இம்மண்டபத்தின் நுழைவாயிலின் நிலைக் கல்லை பட்டமுடைய பிள்ளை மற்றும் கள்ளபிரான் பிள்ளை பொய் சொல்லாத மெய்ய பிள்ளை செய்தளித்ததை அதில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு தெரிவிக்கிறது.

குமாரகோவில்

இவ்வூர் கல்குளம் வட்டத்தில் நாகர்கோயிலுக்கு வடமேற்கே 15 கி.மீ. தொலை விலும், தக்கலைக்கு கிழக்கே 3 கி.மீ. தொலைவிலும் வேளிமலையடிவாரத்தில் அமையப் பெற்றுள்ளது.

இங்குள்ள முருகன்கோயில் பழம் பெருமைவாய்ந்ததாகும். வயோதிக உருவம் பூண்டு வள்ளியை முருகன் இங்கு மணம் முடித்ததாக மக்கள் வழக்கில் பேசப்படு கிறது. இங்குள்ள 'கிழவன் சோலை' மற்றும் 'வள்ளி சோலை' ஆகிய இடங்கள் இதற்குச் சான்றாகக் கூறப்படுகிறது. குமாரகோவிலுக்கு அருகே 'தினைவிளை' என்ற சிற்றூரும் உள்ளது. குறவர் இனத் தலைவனான நம்பிராஜன் வள்ளியை குழந்தைப் பிராயத்தில் கொடிகளுக்கு இடையே இங்கு கண்டெடுத்ததாகவும் நம்பப்படுகிறது.

முருகன்கோயில் சுமார் 200 அடி உயரத்திலுள்ள சிறிய குன்றின் மீது கட்டப் பட்டுள்ளது. கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. மூலவர் 8'8" அடி உயரத்தில் பிரமாண்டமாகக் காட்சியளிக்கிறார்.

இக்கோயிலில் கி.பி. 17–ம் நூற்றாண்டைச் சேர்ந்த இரு கல்வெட்டுகள் பொறிக்கப் பட்டுள்ளன. ஒரு கல்வெட்டு முழுமையாக இல்லை. கொல்லம் 909 (கி.பி. 1733)ம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று இக்கோயிலின் முதல் திருச்சுற்றின் மேற்குப் பக்க மண்டபத்தினுள் தனிக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு இவ்விடத்தை 'வேள்விமலை' என்றும் இறைவனை வேலாயுதப் பெருமாள் எனவும் குறிக்கிறது. ராசராச தென் நாட்டு கடியபட்டினத்து மண்ணைக் குறிச்சியைச் சேர்ந்த செண்பக ராமன் என்பவன் பிரம்மபுரத்து நயினார் வேள்விமலை வேலாயுதப் பெருமாளுக்குப் பூசைகளுக்கும், அமுது படிக்காகவும் நிலக்கொடை வழங்கியதை இக்கல்வெட்டு பதிவு செய்கிறது. மற்றொரு கல்வெட்டு குமாரகோவில் பகுதியைக் கல்குளம் தேசம் எனக் குறிக்கிறது.

ஒவ்வோராண்டும் வைகாசி மாதம் திருக்கல்யாண விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அச்சமயம் இக்கோயிலில் நடத்தப்படும் 'வேலன் வெறியாட்டு' என்ற நாட்டார் வழிபாடும் மிகச் சிறப்பானதொன்றாகும்.

குமாரகோவில் முன் மண்டபத் தூண் ஒன்றில் துப்பாக்கி ஏந்திய வெள்ளைக் காரன் ஒருவனின் முழு உருவப் புடைச் சிற்பம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது.

குரண்டி

அகத்தீஸ்வரம் வட்டத்தில் தேரூர்க்கு அருகே 1கி.மீ. தொலைவில் குரண்டி எனும் சிற்றூர் அமைந்துள்ளது. இங்கு சிவன் மற்றும் பிள்ளையார் ஆகியோருக்கு இரண்டு கோயில்கள் உள்ளன. பிள்ளையார் கோயிலுக்கருகேயுள்ள தனிக்கல் கல்வெட்டு இவ்வூர் வரலாற்றை அறிதற்குப் பெரிதும் துணைபுரிகிறது.

கொல்லம் 538–ல் (கி.பி. 1363) பொறிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டு இவ்வூரின் பெயரை 'நாஞ்சிநாட்டுத் தேரான அழகியசோழநல்லூர் குளத்தகம்பு குரண்டி' எனக் குறிக்கிறது.

பாண்டிநாட்டுக் கீள்களக்கூற்றம் சாவலவன்மங்கலத்தைச் சேர்ந்த ஒன்னார் திருவுடையாம்பிரன் என்பவன், மன்னர் நெல்வேலி கொதுகுல சபையாரில் திரு வெள்ளறையில் எழுந்தருளி இருந்த போது குரண்டியில் செய்வித்த தன்மத்தை இக்கல்வெட்டு பதிவு செய்கிறது. குரண்டியில் கிணறு வெட்டிப் பிள்ளையாரை எழுந் தருளுவித்து இவ்வூருக்கு உதையமார்த்தாண்டம் எனப் பெயரிட்டுப் பிள்ளையாருக்கு உதைய மார்த்தாண்ட விநாயகப் பிள்ளையார் எனப் பேருமிட்டதைத் தெரிவிக்கிறது. மேலும், இப்பிள்ளையாரை பூசிக்க முள்ளிநாட்டு பிரம்மதேயம் இராஜராஜ சதுர்வேதிமங்கலம் (அம்பாசமுத்திரம்) சனக்கலமுடைய நாயினார் கோயில் தானத்தாரில் ஆரையைச் சேர்ந்த உய்யவந்தான் என்பவனை நியமித்து அவனுக்கு சூரியபட்டன் என்ற பட்டம் வழங்கியதையும் கீழ்ப்பகுதியில் உள்ள தெருவுக்கு 'மாத்தாண்டன் பெருந்தெரு' எனப் பெயர் வழங்கியதையும் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

இங்குள்ள மற்றொரு கோயிலான சிவன் கோயில் கி.பி. 14–ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகலாம். கல்வெட்டு ஏதுமில்லை. இக்கோயில் வளாகத்தில், கால பைரவருக்குத் தனி சன்னதி உள்ளது. இச்சிற்பம் நின்ற கோலத்தில் வலக்கை சூலம் ஏந்தியும் இடக்கை கபாலம் ஏந்தி கழுத்தில் முண்டமாலையுடனும் காணப்படுகிறது. இக்கோயில் கி.பி.14–ம் நூற்றாண்டில் எழுப்பப்பட்டதாகலாம்.

குழித்துறை

இவ்வூர் விளவங்கோடு வட்டத்தின் தலைமையிடமாகும். நாகர்கோயில்–திருவனந்தபுரம் நெடுஞ்சாலையின் மத்தியில் தாமிரபரணியாற்றின் கரையில் இவ்வூர் அமைந்துள்ளது. தாமிரபரணியாறு இங்கு குழித்துறை ஆறு என்ற பெயரில் அழைக்கப் பட்டு வருகிறது. இவ்வாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம் குமரி மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள பாலங்களிலேயே மிக நீளமானதாகும். இது பழமையான நகரமாகும்.

குழித்துறை அஞ்சல் நிலையத்திற்கு அருகே பழைய வேணாட்டரசர் அரண்மனை ஒன்றும், சத்திரமொன்றும் உள்ளது. இதனருகே ஒரே வளாகத்தில் பழமையான கி.பி. 15–ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட சிவன்கோவில் ஒன்றும், பெருமாள்கோவிலொன்றும் உள்ளது. இக்கோயில் வளாகத்திலுள்ள பாறையின் மீது பொறிக்கப்பட்டுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டு 12 பிராமணர்களின் ஊட்டுக்காக அயிரமன்றத்து அக்கிரமன் தேவன் என்பான் நாகமங்கலத்து தேவன் என்பானிடமிருந்து பளையரிக்கண்டம் மற்றும் ஊமன்துடவல் ஆகிய இரு நிலங்களை ஒற்றிக்குப் பெற்றுக் கொண்டதைத் தெரிவிக்கிறது.

இங்கு கிடைத்த தூண் கல்வெட்டு ஒன்று தற்போது பத்மனாபபுரம் காட்சிக் கூடத்திலுள்ளது. கொல்லமாண்டு 974 (கி.பி. 1798)–ல் வெட்டப்பட்ட இக்கல்வெட்டு மிடாலம் ஊர் பஞ்சாயத்தார் முன்னிலையில் வெட்டுவெண்ணியிலுள்ள தன் தந்தை முத்துவின் ஊட்டுக்காகவும் பரதேசிகளுக்கு அன்னதானம் செய்யவும் முத்துக்குமாரன் என்பவன் நிலமும் பணமும் கொடுத்ததை இக்கல்வெட்டு பதிவு செய்கிறது.

பத்மனாபபுரம் காட்சிக்கூடத்திலுள்ள மற்றுமொரு குழித்துறை தூண் கல்வெட்டு கொல்லமாண்டு 957 (கி.பி. 1782)–ல் வெட்டப்பட்டது. குழித்துறை தேசத்து மஞ்சு விளாகத்து வீட்டின் கன்னம்பிள்ளை என்பவர் குழித்துறை தேசத்து பழைய சந்தைக்கு கிழக்கே அம்பலம் கட்டி, கிணறு வெட்டி, கல்தொட்டி அடித்துக் கொடுத்ததையும் இக்கல்வெட்டு பதிவு செய்கிறது. மேலும், இவ்வம்பலத்தில் வருவோருக்கு சாவியின் வெள்ளம் (கஞ்சி), ஊறுகாய் மற்றும் வெற்றிலை பாக்கு தர்மமாக வழங்கவும் இக் கன்னம்பிள்ளை அந்துகோடு தேசத்து ஆழிவெண்கோட்டு கோணத்தில் நிலம் தானமாக வழங்கியதையும் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

குளச்சல்

இக்கடற்கரை நகரம் கல்குளம் வட்டத்தில் நாகர்கோயிலுக்கு மேற்கே 22 கி.மீ தொலைவிலும் இரணியலுக்கு தென்மேற்கே 7 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது.

கி.பி. 16–18–ம் நூற்றாண்டுகளுக்கிடையில் ஐரோப்பிய வணிகர்களின் துறைமுகப் பட்டினமாகத் திகழ்ந்தது. அக்காலத்தில் டச்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் இங்கு தனிக்கோட்டைகள் இருந்துள்ளன.

கி.பி. 1741 –ல் டச்சுப்படைக்கும், திருவிதாங்கூர் படையினருக்குமிடையே இங்கு நடைபெற்ற 'குளச்சல் போர்' திருவிதாங்கூர் வரலாற்றில் முக்கிய திருப்புமுனையாக அமைந்தது. இப்போரில் தோல்வியைத் தழுவிய டச்சுப் படையினரில் 24 வீரர்கள் மன்னர் மார்த்தாண்டவர்மாவினால் பிணைக்கைதியாகப் பிடித்து வரப்பட்ட டிலெனாயி என்பவர் திருவிதாங்கூர் படையிலேயே சேர்ந்தார். டிலெனாயின் மேற்பார்வையில் திருவிதாங்கூர் படையினருக்கு ஐரோப்பிய முறையிலான போர்ப் பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கப்பட்டன. மண் கோட்டையாக இருந்த பத்மனாபபுரம், உதயகிரிக் கோட்டைகள் டிலெனாயின் மேற்பார்வையில் கற்கோட்டைகளாக மாற்றிக் கட்டப்பட்டன. கி.பி.

1744–க்குப் பிறகு மன்னர் மார்த்தாண்டவர்மா மேற்கொண்ட படையெடுப்புகளில் டிலெனாயும் துணையாகச் சென்றார். இதன் பிறகு திருவிதாங்கூர் அரசு பல வெற்றி களைப் பெற்று விரிவடைந்து நிலைபேறு கொண்டது.

குளச்சல் போரில் திருவிதாங்கூர் படையினர் பெற்ற வெற்றியின் நினைவாகக் குளச்சலில் கடற்கரையினையொட்டி ஒரு நினைவு ஸ்தூபி எழுப்பி ஆங்கிலத்தில் கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டு வரிகள்

THIS PILLAR
COMMEMORATES
THE VICTORY OF
THE TRAVANCORE
ARMY
OVER THE DUTCH
AT COLACHAL ON
THE
31ST JULY 1741 A.D
(15TH KARKADACAM 916)

இந்நினைவுத் தூண் கி.பி. 1941–ல் சித்திரைத் திருநாள் மகாராஜா காலத்தில் எழுப்பப்பட்டது.

குறத்தியறை

குறத்தியறை கிராமம் தோவாளை வட்டத்தில் நாகர்கோயிலுக்கு வடக்கே 19 கி.மீ. தொலைவில் அழகியபாண்டிபுரத்திற்கு அருகே கடுக்கரைக்குச் செல்லும் வழித்தடத்தில் அமைந்துள்ளது.

இவ்வூரில் குறவன்தட்டுப்பாறை என்றவிடத்தில் உள்ள பாறையின் மீது பொறிக்கப்பட்ட கி.பி.10–ம் நூற்றாண்டு பிற்காலச் சோழர்காலக் கல்வெட்டு இவ்வூரின் பெயரை 'முன்னூரிரவி நியமம்' எனக் குறிக்கிறது. கி.பி. 18–ம் நூற்றாண்டு முதலியார் ஓலை ஆவணம் இவ்வூரைக் 'குசத்தியறை' எனக் குறிக்கிறது. கி.பி. 18–ம் நூற்றாண் டுக்கு பின்பே குறத்தியறை என்ற தற்போதைய பெயர் வழக்கில் வந்துள்ளது.

இவ்வூரின் பழமைக்குச் சான்றாக இங்குள்ள குறவன்தட்டுப் பாறையில் காணப்படும் குடைவரைக் கோயில், பாறைக் கல்வெட்டு மற்றும் பெருமாளின் நின்ற, அமர்ந்த கோலச் சிற்பங்கள் விளங்குகின்றன.

கி.பி. 8–ம் நூற்றாண்டுக்கு முன்பாக இது ஒரு சமணக் கோயிலாக இருந்துள் ளது. கி.பி. 8–ம் நூற்றாண்டில் முற்காலப் பாண்டியர் காலத்தில் இக்குடைவரைக் கோயில் வைணவக்கோயிலாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதிலுள்ள விஷ்ணுவின்

புடைச் சிற்பம் முற்றுப் பெறாத நிலையிலுள்ளது. இக்குடைவரையின் வெளிச்சுவரின் இருபுறங்களில் வலப்புறம் பிள்ளையாரும், இடப்புறமுள்ள சிற்பமும் சிதிலமடைந்துமுள்ளன.

இக்குடைவரைக் கோயிலுக்கு முன்பாக சுமார் 600 அடி தூரத்தில் உள்ள ஒரு பாறையின் மீது 13 வரிகளில் வட்டெழுத்தில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. நாஞ்சி நாட்டு முன்னூரி ரவி நியமத்தின் அமர்ந்தகோலப்பெருமாளுக்கு இவ்வூர் **குன்றப்பள்ளி** யைச் சேர்ந்த இப்பி கவிசியன் சாத்தன் சிராவணன் என்பான் பொன் கொடையாக வழங்கியதையும், தான் செலுத்த வேண்டிய ஏற்றின இறை (கூடுதலாக செலுத்த வேண்டிய வரி) ஏழு பொன்னையும் இவ்வூர் ஸ்ரீவைஸ்ரவணன் என்பானிடம் செலுத்தி யதையும் இக்கல்வெட்டு குறிக்கிறது. இக்கல்வெட்டு குறிக்கும் அமர்ந்தகோலப் பெருமாள் சிற்பம் அருகிலேயே சிதைந்த நிலையில் காணப்படுகிறது. கல்வெட்டு குறிக்கும் குன்றப்பள்ளி ஒரு சமணப் பள்ளியாகும்.

இப்பாறைக் கல்வெட்டின் இடப்புறமாகப் பாறையின் மீது சுமார் 6 அடி உயரத்தில் நின்றகோலப் பெருமாளின் பிரமாண்டமான சிற்பம் காணப்படுகிறது. குடைவரைக் கோயிலில் காணப்படும் நின்றகோலப் பெருமாளின் சிற்பம் முற்றுப்பெறாத நிலையில் இது வடிக்கப்பட்டிருக்கலாம். இதுவும் கி.பி. 8–ம் நூற்றாண்டு முற்காலப் பாண்டியர் காலத்தைச் சேர்ந்ததாகும். இப்பெருமாள் அபங்க நிலையில் காணப்படுகிறார்.

கேரளபுரம்

இவ்வூர் கல்குளம் வட்டத்தில் பத்மனாபபுரத்திற்கு மேற்கே சுமார் 2கி.மீ தொலை வில் அமையப் பெற்றுள்ளது.

கி.பி. 1192ல் ஆட்சி புரிந்த மூன்றாம் வீரகேரளவர்மன் என்ற வேணாட்டரசன் பெயரால் இவ்வூர் நிறுவப்பட்டு சிவன் கோயிலும் எடுப்பிக்கப்பட்டுள்ளது. கி.பி. 1315ஆம் ஆண்டைச் சேர்ந்த ஸ்ரீவீர உதையமார்த்தாண்டன் என்ற வேணாட்டரசர் கல்வெட்டில் இவ்வூர் "பாலக்கோட்டு தேசம் முத்தலைக்குறிச்சி ஸ்ரீவீர கேரளேச்சுரம்" எனக் குறிக்கப்படுகிறது. கி.பி. 1607–ஆம் ஆண்டைச் சேர்ந்த ஸ்ரீகுலசேகரப் பெருமாள் என்ற வேணாட்டரசரின் கல்வெட்டில் இவ்வூர் "செங்கழுநீர் வளநாட்டு முத்தளக்குறிச்சி ஸ்ரீ வீரகேரளேஸ்வரம்" எனக் குறிக்கிறது. தற்போதைய பெயரான 'கேரளபுரம்' கி.பி. 1607க்குப் பின்பு 17–ஆம் நூற்றாண்டிலிருந்தே வழங்கப்பட்டு வருகிறது.

இங்குள்ள சிவன்கோயில் பழமையானது. இக்கோயில் மூலவரைக் கல்வெட்டு கள் "ஸ்ரீவீரகேரளேச்சுரத்து மாதேவர்" எனக் குறிக்கின்றன. கி.பி. 12–13–ஆம் நூற்றாண்டுக்கு இடையில் எழுப்பப்பட்ட இக்கோயிலை கி.பி. 1607–இல் வேணாட்டரசன் திருப்பாப்பூர் ஸ்வரூபம் கீழப் பேரூரைச் சேர்ந்த ஸ்ரீவீரரவிரவிவர்மரான குலசேகரப் பெருமாள் என்பவன் புனருத்தானம் செய்து இக்கோயிலின் நாளம்பலம், மடப்பள்ளி, இட மண்டபம் ஆகியனவற்றைக் கட்டியதுடன், கோயிலின் விமானத்தையும் செங்கல்லினால் அமைத் தான் என இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள இவனது கல்வெட்டொன்று தெரி விக்கிறது. இம்மன்னனின் முழு உருவப் புடைச் சிற்பம் இக்கோயில் இட மண்டபத்தின்

தென்மேற்கு மூலையில் (கன்னி மூலை) வடிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தினை மாதம்மை மகள் நீலம்மைக்குட்டி என்பவரும், ஈச்சம்மைகுட்டி மகள் மாதம்மையும் செய்தளித் ததனை இம்மண்டபத்தில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டொன்று தெரிவிக்கிறது. இதே மண்டபத்தின் வடமேல் மூலையில் உள்ள தூணில் வேணாட்டு மன்னன் மூன்றாம் வீர கேரளவர்மனின் புடைச் சிற்பம் காணப்படுகிறது. இதனை இக்கோயில் கணக்கர் பரக்கோட்டு தேசத்தை சேர்ந்த அய்யன் என்பவர் செய்தளித்ததனை இக்கோயிலின் மற்றுமொரு கல்வெட்டு தெரிவிக்கின்றது. இடப மண்டபத்திலுள்ள மற்ற இரு தூண் களில் இராமன், இலக்குவனின் புடைச் சிற்பங்கள் காணப்படுகின்றன. இச்சிற்பங்கள் அனைத்தும் கி.பி. 1607–ஆம் ஆண்டைச் சேர்ந்ததாகும்.

இக்கோயில் வளாகத்திலேயே 'வெள்ளை விநாயகர்' என்ற அதிசய விநாயகருக் குத் தனிக் கோயில் எழுப்பப்பட்டுள்ளது. மூலவர் சந்திரகாந்தக் கல் என்ற அபூர்வ வகைக் கல்லினால் வடிக்கப்பட்டுள்ளார். இம் மூலவர் ஆவணி மாதத்திலிருந்து ஆறு மாத காலத்திற்கு மெள்ள மெள்ள வெள்ளை நிறமாகவும், மாசி மாதத்திலிருந்து ஆறு மாத காலத்திற்கு மெள்ள மெள்ள கறுப்பு நிறமாகவும் மாற்றம் அடைந்து காட்சியளிக் கின்றார்.

இம்மன்னன் பெயராலேயே இவ்வூரின் பெயர் வீரகேரளபுரம் எனக் கல்வெட்டு குறிக்கிறது.

இவ்வூர் வேணாட்டுப் படைத்தளபதி இரவிக்குட்டிப் பிள்ளை பிறந்த ஊராகும். இவர் மன்னர் திருமலைநாயக்கருடன் கணியாகுளம் என்ற இடத்தில் போரிட்டு வீரமரணம் அடைந்தவராவார். இவர் பெயரால் "இரவிக்குட்டிப் பிள்ளைப் போர்" என்ற கதைப் பாடல் உள்ளது.

கோட்டவிளை

இவ்வூர் கல்குளம் வட்டத்தில் திருநயினார்குறிச்சிக்கு வடக்கே சுமார் 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்கு வள்ளியாற்றின் கரையில் உள்ள பாறையின் மீது பொறிக்கப்பட்டுள்ள கி.பி. 1581–ம் ஆண்டைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டு இவ்வூரின் வரலாற்றை அறிதற்கு முக்கிய ஆதாரமாக விளங்குகிறது. இங்கு ஒரு சமணப் பள்ளி கி.பி. 16–ம் நூற்றாண்டில் நடைபெற்று வந்துள்ளது. இவ்வூரின் பெயரே 'பள்ளிக்கல்' எனக் கல்வெட்டு குறிக்கிறது. இப்பாறைக் கல்வெட்டின் அருகே கி.பி. 16–ம் நூற் றாண்டு அய்யனார் சிற்பம் உள்ளது. இவ்வய்யனார் 'பூ கை சாத்தன்' எனக் கல்வெட்டில் குறிக்கப்படுகிறார். பாறைக் கல்வெட்டின் அருகிலேயே கல்வெட்டு குறிக்கும் அய்யன் குளமும் உள்ளது.

முதலில் 'பள்ளிக்கல்' என்ற இவ்வூரின் பெயர் பின்பு 'பள்ளிக்கரை' என்றாகி அதன் பிறகே தற்போதைய பெயரான 'கோட்டவிளை' என்ற பெயரில் வழங்கப்பட்டு வருகிறது.

பள்ளிக்கல்லில் உள்ள நாக்கா மடத்திற்கு நாரயணன் கண்ணான திரைலோக்கிய விழுப்பாதரையன் என்பவனும், கல்லான் நாகன் என்பவனும் நிலமும், குளமும் கொடை யாக வழங்கிய செய்தியை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

கோட்டாறு

இவ்வூர் நாகர்கோயில் நகரத்தின் ஒரு பகுதியாக அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் நாஞ்சில் நாட்டின் நடுவே அமைந்துள்ளது. 450 ஆண்டுகளுக்கு முன் நாகர்கோயில் கோட்டாற்றின் ஒரு பகுதியாக இருந்துள்ளது. தற்போது வடிவீஸ்வரம், வடசேரி, சோழபுரம், நாகர்கோவில் என வெவ்வேறு ஊர்களாக இருப்பது அக்காலத்தில் கி.பி. 10–11 ஆம் நூற்றாண்டில் திருக்கோட்டாறான மும்முடிச் சோழநல்லூர் என்றும், கோட்டாறான மும்முடிச் சோழபுரம் எனவும் ஒரே ஊராக இருந்துள்ளது. தெற்கு நோக்கிச் செல்லும் ஆறு இங்கு தென்கிழக்குத் திசைநோக்கிச் சற்று வளை (கோட்டம்)கிறது. எனவே, கோட்டாறு எனக் கூறுவர்.

2000 ஆண்டுகளுக்கு முன்பு இங்கு வந்த 'எரித்திரியன் கடல்' நூலாசிரியரான பெரிப்புளூஸ் "கொட்டியாரா" என்ற தலம் 'பரளியா' வில் இருப்பதாக குறிக்கிறார். கோட்டாற்றை 'கொட்டியாரா' எனவும் பரளியாற்றை (பழையாறு) யொட்டிய பகுதி யாக இருப்பதால் 'பரளியா' என்றும் குறிக்கிறார். கி.பி. 150 –இல் தாலமி இவ்வூர் ஆய் நாட்டில் இருப்பதாகவும் 'கொட்டியாரா' எனவும் குறிக்கின்றார். பிளைனி 'கொட்டாரா' எனக் குறிக்கின்றார்.

கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் சம்பந்தரின் சமகாலப் பாண்டிய மன்னன் 'கூன் பாண்டியன்' என்றழைக்கப்பட்ட நின்றசீர் நெடுமாறன் "குறுமா நெடுமதிற் கோட்டாற்றரண் கொண்ட தென்னன் கன்னிப் பெருமான்" எனப் பாண்டிக் கோவையில் சிறப்பித்துக் கூறப்படுவதிலிருந்து கோட்டாற்றின் சிறப்பினை அறியலாம்.

பண்டைக் காலத்தில் கோட்டாறு ஒரு வணிகப் பெருநகரமாக இருந்துள்ளது. குமரி மாவட்டத்தில் சிதரால், நாகர்கோயில், கோட்டவிளை, குறத்தியறை, ஆகியன சமணத் தலங்களாக இருந்துள்ளன. இது வணிக வளர்ச்சிக்கு ஒரு வலுவான சூழலாக அமையப் பெற்றிருந்தது.

கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் சோழர்களாட்சியின் கீழ் நாஞ்சில் நாடு வந்த பிறகு இவ்வூர் முதலாம் இராஜராஜனின் பட்டப்பெயரால் 'மும்முடிச் சோழநல்லூர்' என வழங்கப்பட்டது. முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் கோட்டாற்றில் சோழர்களின் நிலைப்படையொன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. சோழநாட்டுக் காவிரிப்பூம்பட்டினத் திலிருந்து செட்டியார் மற்றும் முதலியார் சமூகங்கள் இங்கு வந்து குடியேறினர்.

வணிக வளர்ச்சிக்குத் தோதான 'பெருவழிகள்' குமரி மாவட்டத்தில் இருந்த தனைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. கி.பி. 12 ஆம் நூற்றாண்டு தளபதி சமுத்திரம் கோயில் கல்வெட்டு **'கோட்டாற்றுப் பெருவழி'** எனச் சிறப்பித்துக் கூறுகிறது. வணிகத் துக்கான 'ஆயப்பணம்' சாலைகளில் வசூலிக்கப்பட்டுள்ளது. கோட்டாற்றுக்குத் தெற்கே

5 கி.மீ. தொலைவில் உள்ள மணக்குடியில் "கீழ் மேல் தென் வடல் வழி ஆயப்பணம்" விதிக்கப்பட்டதாகக் கல்வெட்டு குறிக்கிறது.

கி.பி. 1544 இல் புனித சவேரியார் இங்கு ஒரு கத்தோலிக்க கிறித்துவ ஆல யத்தைச் செட்டியார் கொடுத்த நிலத்தில் நிறுவினார். இப்புதிய சமயத்தை குறிப்பாக பரதவர்கள் தழுவிய காரணத்தினால் இவர்களின் குடியிருப்புகள் இவ்வாலயத்தைச் சுற்றி ஏற்பட்டு அதுவே பின்பு கி.பி 16 ஆம் நூற்றாண்டில் மீன் அங்காடியாக வளர்ந்து விடுகிறது.

திருவிதாங்கூர் மன்னர் இராமவர்மா காலத்தில் திவான் கேசவப்பிள்ளை கோட்டாற்றில் ஒரு பெரிய புகையிலைப் பண்டகசாலை கிடங்கை கட்டினார். இங்கிருந்து பாலராமபுரம் மற்றும் கொல்லத்திற்கு அரசு புகையிலை வினியோகம் செய்தது.

கி.பி. 1680 இல் ஒரு சைவமடம் கோட்டாறு வலம்புரி விநாயகர் கோயிலருகே கட்டப்பட்டு தர்ம காரியங்கள் செய்யப்பட்டு வந்துள்ளது. இது குருமடம் என அழைக்கப் படுகிறது.

இங்குள்ள இசுலாமியப் பள்ளியொன்றில் கி.பி. 1767 இல் பொறிக்கப்பட்ட இரண்டு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவ்விரண்டு கல்வெட்டுகளும் சேகுநூர் முதலியார் என்பவர் இப்பள்ளிக்குத் தூண்கள் கொடையாகச் செய்தளித்ததனைக் குறிக்கின்றன. இசுலாமியருக்கு முதலியார் என்ற பட்டப் பெயர் இருந்துள்ளது. இக் கல்வெட்டுகள் மூலம் தெரிய வருகிறது. முதலியார் என்றால் 'முதன்மையானவர்' என்ற பொருளில் இப்பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

கோட்டாறு சவேரியார் கோயிலருகே ஏகாலியர் ஊர்வகை மடவளாகத்தில் கொல்லம் 990–இல் (கி.பி. 1815) கடைசர்குல பூமி பட்டங்கெட்டியார் மகன் பெருமாள் பட்டங்கெட்டியின் அகால மரணத்தின் நினைவாக ஒரு சுமைதாங்கிக்கல் நிறுவப்பட்டு அதில் கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளது. பட்டங்கெட்டியார் என்று அழைக்கப்படும் இச்சமூகத்தவர் பனை ஓலையினால் கூடை முடையும் தொழில் செய்பவர்கள். சுண்ணாம்பு நீத்தும் தொழில் செய்வதால் நீத்தரசர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். அரசர் இவர் களுக்கு தனியாக பட்டம் வழங்கியுள்ளதால் 'பட்டங் கெட்டியார்' சமூகமென்றே அழைக்கப்படுகின்றனர்.

சாரோடு

இவ்வூர் கல்குளம் வட்டத்தில் பத்மனாபபுரத்திற்கு அருகே அமையப் பெற்றுள் ளது. இங்கு வேணாட்டரசரின் அரண்மனை (சாரோடு கொட்டாரம்) ஒன்று இருந்த தாகக் கூறப்படுகிறது. பத்மனாபபுரம் அரண்மனையிலிருந்து செல்லும் சுரங்கப்பாதை சாரோடு கொட்டாரத்திற்குச் செல்வதாகத் தெரிவிக்கின்றனர். இவ்வூரில் கி.பி. 16–17–ம் நூற் றாண்டைச் சேர்ந்த இரு தூண் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இவையிரண்டும் தற்போது பத்மனாபபுரம் அரண்மனைக் காட்சிக் கூடத்தில் வைக்கப்பட்டுள்ளன.

கொல்லம் 748 (கி.பி. 1573)–ம் ஆண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டு வேணாட்டு அரசர் நயினார் ரவிவன்மரான சிறவாய் மூத்த மகிபர் தென்கரை நாட்டு பொன்னாயிக் குடியைச் சேர்ந்த தம்பி இரவிவர்மர்க்குத் திருமுகங் கொடுத்து முக்கலம்பாடு உள்ளிட்ட புரையிடங்களை வழங்கியதைத் தெரிவிக்கிறது.

கொல்லமாண்டு 798 (கி.பி. 1623)ஐச் சேர்ந்த மற்றுமொரு சாரோடு கல்வெட்டு வேணாட்டரசர் ரவிவர்மர் சிறவாய் மூத்தவர் தென்கரைநாட்டிலுள்ள பொன்னாயிக் குடியைச் சேர்ந்த சீ பத்மனாபனுக்கு முக்கலம்பாடு உள்ளிட்ட புரையிடங்கள் வழங்கி யதை குறிக்கிறது. மேலும், இக்கல்வெட்டு 'வண்ணார் விருத்தி' (வண்ணார்களுக்கு வழங்கப் பட்ட நிலக் கொடை) மற்றும் அந்நிலத்திற்கருகே செல்லும் 'பெருவழி' ஒன்றினைப் பற்றியும் குறிக்கிறது.

சாஸ்தான் கோவில்விளை

அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் தெங்கம்புதூர் என்ற ஊருக்கு அருகே கோவில்விளை என்ற சிற்றூர் அமையப் பெற்றுள்ளது. இவ்வூரில் வாதிரியார் சமூகத்தைச் சேர்ந்தோர் வசித்து வருகின்றனர். இவர்களது குலத்தொழில் நெசவு ஆகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் இவ்வூரில் மட்டுமே இச்சமூகத்தவர் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் ஆதிதிராவிடர் சமூகத்தின் ஒரு உட்பிரிவைச் சேர்ந்தோர் ஆவர்.

இவ்வூரின் வாதிரியார் தெருவின் நுழையுமிடத்தில் கி.பி. 1824–ல் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று கல்தொட்டியின் மீது காணப்படுகிறது. அதனருகே கிணறு ஒன்று உள்ளது. இக்கல்வெட்டு இவ்வூரின் பெயரை தென்கொம்பு கோவில்விளை எனக் குறிக்கிறது. தெங்கம்புதூரையே 'தென்கொம்பு' என இக்கல்வெட்டு குறிக்கிறது. கோவில்விளை ஊரின் கீழத் தெருவிலிருக்கும் ஆதிச்ச வாதிரியான் வம்சத்தில் வந்த பெருமாள் கெங்கை காத்தபெருமாள் என்பவன் கோவில்விளையில் கிணறு வெட்டி, பாவுநூல் நனைப்பதற்காக இரண்டே முக்காலே அரைக்கால் நீளத்தில் கல்தொட்டி செய்தளித்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

பாவு நூல் நனைத்துக் காயப் போடுவதற்கு வசதியாக இன்றும் ஊர் தெருக்கள் அகலமாக காணப்படுகின்றன. சில வீடுகளில் நெசவுத் தறி பொருத்தப்பட்ட நிலையில் இன்றும் காணப்படுகிறது.

சிதரால்

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், குழித்துறைக்கு வடகிழக்கே சுமார் 6.5 கி.மீ. தொலைவில் அருமனை என்ற ஊருக்கு அருகே சிதரால் என்ற கிராமம் அமைந்துள்ளது.

சிதரால் ஊரை ஒட்டியுள்ள மலைக்குன்றில் பகவதி கோயில் அமையப் பெற்றுள் ளது. மேற்கு நோக்கி அமைந்துள்ள இக்கோயில் வரிசையாக மூன்று கருவறைகள், 16 கால் மண்டபம், முகப்பு மண்டபம் ஆகிய அமைப்புகளைக் கொண்டுள்ளது. இக்

கோயிலையொட்டி வடபுறத்தில் மடப்பள்ளி அமைந்துள்ளது. நடுவிலுள்ள கருவறையின் மீது செங்கல் மற்றும் சுதை கொண்டு விமானம் எழுப்பப்பட்டுள்ளது.

மூன்று கருவறைகள் பத்மாவதி, மகாவீரர் மற்றும் பார்சுவநாதர் ஆகிய சமணக் கடவுளர்களுக்காகக் கட்டப்பட்டன. பத்மாவதிக்கான கருவறையில் தற்போது பாவை விளக்கும், பலிக்கல் ஒன்று மட்டுமே காணப்படுகிறது. நடுவில் உள்ள கருவறையில் மகாவீரர் முக்குடையின்கீழ் சிம்ம பீடத்தின் மீது பத்மாசனத்தில் அமர்ந்த நிலையில் தியான முத்திரையுடன் காணப்படுகிறார். மகாவீரரின் இருபுறமும் சாமரம் வீசும் அடியவர் கள் காட்டப்பட்டுள்ளனர். மூன்றாவது கருவறையில் பார்சுவநாதர் நாகக்குடையின்கீழ் காயோத்சர்கத்தில் திகம்பரராக நின்ற நிலையில் காணப்படுகிறார்.

இக்கருவறைகளுக்கு முன் பதினாறு கால் மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இம்மண்டபத்தின் தூண்களில் ஏராளமான புடைச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. ஆரணங்கு, கைகளை உயர்த்தி வணங்கும் முனிவர், கூப்பிய கரங்களுடன் அடியவர், முனிவர் கூப்பிய கரங்களுடன், சிங்கம், மீன், கும்பபஞ்சரம், யானை, களவியல் சிற்பம், ஆமை, ஒற்றைக் காலில் தவம் செய்யும் முனிவர், லிங்கம், முயல், குரங்கு, காலிங்க நர்த்தனர் அடியவர், சங்கு பூதம், அன்னம், தீர்த்தங்கரர், இரட்டை நாகத் தலை, அன்னம், கயோத்சர்க்கத்தில் திகம்பரராகத் தீர்த்தங்கரர், பார்சுவநாதர், யானை மத்தளம் கொட்டு பவர், ஓலைக்குடை மற்றும் ஊன்றுகோலுடன் வயோதிகர் என இவை தவிர மலர்ப் பதக்கங்களும், பூ அலங்கார வேலைப்பாடுகளும் தூண்களில் ஆங்காங்கே பொறிக்கப் பட்டுள்ளன. மண்டப விதானத்தின் நடுவில் கஜலட்சுமி புடைப்பாகச் செதுக்கப்பட் டுள்ளது.

முகப்பு மண்டபத்தை ஆறு தூண்கள் தாங்கியுள்ளன. இம்மண்டபத்தின் இரு தூண்களில் கூப்பிய கரங்களுடன் அடியவர் இருவர் செதுக்கப்பட்டுள்ளனர். இது தவிர சிம்மம், லிங்கம், தவம் செய்யும் முனிவர் ஆகிய புடைச் சிற்பங்களும் இம்மண்டபத் தூண்களில் செதுக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தில் பதினாறுகால் மண்டபத்தில் நுழையும் வாயிலின் இருபுறமும் துவாரபாலகர்களும் அதனைச் செய்தளித்தோரின் பெயர்களும் அதன் பீடங்களில் வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன.

பகவதிகோயிலுக்குத் தென்புறத்தில் உள்ள பாறையின் மீது ஆய் மன்னன் விக்கிரமாதித்திய வரகுணனின் (கி.பி. 885–925) 28–ம் ஆட்சியாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. பேரயக்குடி அரட்டநேமி படார மாணாக்கியர் குணந்தாங்கிக் குரத்திகள் திருச்சாரணத்து படாரியார்க்குப் பொன்னும், பொற்பூவும் தானமாக வழங்கியதே இக்கல்வெட்டு நமக்குத் தரும் செய்தியாகும். இக்கல்வெட்டின் மூலம் கி.பி. 10–ம் நூற்றாண்டிற்கு முன்பே இக்கோயில் இருந்துள்ளது தெரிய வருகிறது. இக்கோயில் அமைந்துள்ள மலையைத் 'திருச்சாரணம்' எனக் குறிக்கிறது. சாரணர் வசித்த இடமாதலால் சாரணம் என்று 'திரு' அடைமொழியுடன் சேர்த்து திருச்சாரணம் எனக் கல்வெட்டு குறிக்கிறது.

கி.பி. 10--ம் நூற்றாண்டிற்கு முன்பிருந்த இச்சமணக்கோயிலின் மீதே தற்போ துள்ள கோயில் எழுப்பப்பட்டுள்ளது. பழைய கோயிலின் கட்டுமானத்தை நாம் இப்போதும் பதினாறுகால் மண்டபத்தின் வடகிழக்குச் சுவரையொட்டிக் காணலாம்.

பகவதி கோயிலின் தென்புறமுள்ள மற்றொரு பாறையின் மீது கொல்லம் 420 (கி.பி. 1245)–ம் ஆண்டைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. கீழ்வேம்பு நாட்டு இராஜவல்லபுரத்தைச் சேர்ந்த நாராயணன் தமிழப் பல்லவரையன் என்பவன் திருச்சாரணத்து பகவதிக்கு பணம் தானமாக வழங்கியதே இக்கல்வெட்டு தரும் செய்தியாகும்.

தற்போதைய பகவதி கோயிலின் பதினாறுகால் மண்டபமும், மடப்பள்ளியும் கொல்லம் 548–ல் (கி.பி. 1373) கட்டப்பட்டதாகும். பதினாறுகால் மண்டபத் தூண் ஒன்றில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு இதனைத் தெரிவிக்கிறது. திருக்கூடல் நகரைச் சேர்ந்த கரத்தன்மச் செட்டி நாயினார் என்ற நாராயணன் காளிதன் என்பவன் மண்டபமும், மடப்பள்ளியும் கட்டுவித்து பகவதி கோயிலுக்கு ஊட்டுக்காகக் கொடை வழங்கியதைத் தெரிவிக்கிறது.

பதினாறுகால் மண்டப வளாகத்தில் காணப்படும் தனித் துண்டுக் கல்வெட்டு திருவிதாங்கூர் மன்னர் மூலம் திருநாள் மகாராஜா (கி.பி. 1885–1905) காலத்தைச் சேர்ந்ததாகும். மலையாளத்தில் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டு பகவதி அம்மனை பிரதிட்டை செய்து குடமுழுக்கு நடத்தியதைத் தெரிவிக்கிறது. தற்போது இங்கு பகவதி அம்மன் சிலை இல்லை.

பகவதி கோயிலுக்கு வடக்கே அருகிலேயே தொங்கு பாறையில் சமணப் புடைச் சிற்பங்களும் அவற்றைச் செய்தளித்தோரின் பெயர்கள் வட்டெழுத்துக் கல்வெட்டு களிலும் பொறிக்கப்பட்டுள்ளன.

தொங்கு பாறையின் மேற்பகுதியில் தீர்த்தங்கரர்களின் உருவங்கள் வரிசை யாகவும் கீழ்ப்பகுதியில் மகாவீரர், பார்சுவநாதர், பத்மாவதி, நேமிநாதர் மற்றும் இயக்கி அம்பிகா ஆகியோரின் முழு உருவ புடைச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றுக்குக் கீழே அச்சிற்பங்களைச் செய்தளித்தோரின் பெயர்கள் வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன.

சிதரால் பகவதி கோயில் தற்போது நடுவண் அரசின் தொல்லியல் துறையின்கீழ் பாதுகாக்கப்பட்ட சின்னமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

சின்னமுட்டம்

இவ்வூர் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் கன்னியாகுமரிக்கு வடகிழக்கே சுமார் 2 கி.மீ. தொலைவில் அமையப் பெற்றுள்ளது. கி.பி. 15–ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் இவ்வூரின் பெயர் 'குமரி முட்டம்' எனக் குறிக்கப்பட்டுள்ளது. இங்கு இசுலாமியப் பள்ளி யொன்று கி.பி. 15–ம் நூற்றாண்டில் இருந்துள்ளதை இக்கல்வெட்டின் மூலம் அறியலாம்.

போர்த்துக்கீசிய மாலுமி வாஸ்கோடகாமா கள்ளிக்கோட்டை கி.பி. 1498 ஆம் ஆண்டு வருவதற்கு முன்பே இப்பள்ளி இருந்துள்ளது. எனவே, இது ஒரு இசுலாமியப் பள்ளி என்பது உறுதியாகிறது. "பள்ளிக்கு மோதினுக்கு" எனக் கல்வெட்டில் வருகிறது. இசுலாமியப் பள்ளிகளில் பாங்கா ஒதுபவர் "மோதீன்" என அழைக்கப்படுகிறார். கடல் வாணிபம் செய்த அரேபியர்களுக்காக இப்பள்ளி எழுப்பப்பட்டிருக்கலாம். இங்கு கிடைத்துள்ள இரு கல்வெட்டுகளுள் ஒன்று கொல்லம் 669 (கி.பி. 1494)–ல் பொறிக்கப் பட்டதாகும். குமரி முட்டத்திலுள்ள பள்ளியில் (இசுலாமியப் பள்ளி) விளக்கெரிக்க வெளிச்செண்ணை (தேங்காய் எண்ணெய்) வழங்குவதற்காகவும், மோதீனுக்கும் இவ்வூர் எல்கைக்குள் வசிப்போரிடம் வரியாகவும், குமரி முட்டம் மற்றும் கோவைக் குளம் (கோவளம்) துறைகளில் பண்டங்கள் ஏற்றி இறக்கிச் செல்ல வரும் படகு ஒன்றுக்கு ஒரு பணம் வீதம் வசூலித்த தொகையையும் மற்றும் இடங்கை, வலங்கை சாமூத்தாரிடம் வசூலித்த படைப் பணத்தையும், பிரிசண்டகாணிக்கையையும் இப் பள்ளிக்கு வழங்கியதை இக்கல்வெட்டு பதிவு செய்கிறது. இங்கிருந்த மீன் பிடிக்கும் மக்களிடமிருந்து மடிவலை, வாளை வலை, சாலை வலை மற்றும் சண வலை ஆகிய வரிகள் வசூல் செய்யப்பட்டுள்ளன. பண்டங்கள் ஏற்றி இறக்கிச் செல்ல வரும் படகு களை உரு, மற்றும் சம்பான் ஆகிய பெயர்களில் கல்வெட்டு குறிக்கிறது. கன்னியா குமரியில் இன்றும் சின்னப்படகை 'உரு' என்ற சொல்லால் அழைக்கும் வழக்கம் உள்ளது. காற்றால் ஓடும் பாய் மரக் கப்பலில் இருந்து வசூலிக்கப்படும் தொகை பிரிசண்ட காணிக்கை எனப்படும். இவற்றோடு நெல் (நெல் எடுப்பு) மீன் போன்ற பண்டங்களில் ஒரு சிறு பகுதியும் சேகரித்து இவையனைத்தையும் இப்பள்ளிக்கு விளக்கெரிக்க வழங்கியதை இக்கல்வெட்டு பதிவு செய்துள்ளது. இது வேணாட்டரசர் பூதலவீரஸ்ரீ உதையமார்த்தாண்டவர்மா காலத்தைச் சார்ந்த தாகும்.

மற்றொரு தனிக்கல் கல்வெட்டு கொல்லம் 701–ல் (கி.பி. 1525) பொறிக்கப் பட்டுள்ளது. குமரி முட்டத்து மக்களிடம் அச்சத்தை உண்டு பண்ணும் விதமாக அடாவடித் தனம், அநியாயங்கள் செய்தும் பிடித்த மீனை வழிப்பறி செய்தும் கொண்டிருந்தவர் களான மூத்தகங்கன், இளையகங்கன் ஆகியோரிடமிருந்து மற்ற பரதவர்களைக் காப்பாற்றுவதற்காக வேணாட்டரசர் சிறவாய் மூத்த தம்பிரானார் இப்பள்ளியில் அவர்களுக்குப் புகலிடம் வழங்கியதை இக்கல்வெட்டு பதிவு செய்துள்ளது. இதனை 'அஞ்சினான் புகலிடம்' எனக் கல்வெட்டு குறிக்கிறது. இக்கல்வெட்டு பூதல வீரஸ்ரீ உதைய மார்த்தாண்டவர்மா (கி.பி. 1504–1528) காலத்தில் வெட்டப்பட்டதாகும்.

இங்கு தற்போதுள்ள ரோமன் கத்தோலிக்க கிறித்துவ ஆலயத்தில் கி.பி. 1763 –ஆம் ஆண்டைச் சேர்ந்தக் கல்லறைக் கல்வெட்டின் கற்பலகை உள்ளது. இது ஹேம்பர்க்கைச் சார்ந்த திரு. காஸ்பர் கான்ராட் சுமித் என்பாரி‹ (First resident incharge of Company's trade) கல்லறைக் கல்வெட்டாகும்.

சுசீந்திரம்

அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் கன்னியாகுமரிக்கு வடக்கே 12 கி.மீ. தொலைவிலும் நாகர்கோயிலிலிருந்து 4 கி.மீ. தொலைவிலும் பழையாற்றின் கரையில் இவ்வூர்

அமைந்துள்ளது. இக்கோயிலின் கொன்றை மரம் சுமார் 2000 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்ததாக அறிவியல் சோதனை மூலம் நிரூபணமாகியுள்ளதாக டி.ஏ. கோபி நாதராவ் அவர்கள் குறிப்பிடுகிறார். சுசீந்திரம் கோயிலிலுள்ள சிவன்கோயில் (மகாதேவர் ஆலயம்) பழமையானதாகும். கி.பி. 8–ஆம் நூற்றாண்டில் முற்காலப் பாண்டிய மன்னன் மாறஞ்சடையனால் கட்டப்பட்டதாகும். இவனது கல்வெட்டு இவ்வூரை 'திருச்சிவீந்திரம்' என்றும் இறைவனை 'மகாதேவர்' எனவும் குறிக்கிறது.

இந்திரன் சாபவிமோசனம் பெற்று சுகப்பட்டதால் சுசி + இந்திரம் என்பது சுசீந்திரம் ஆனது எனத் தலபுராணம் கூறுகிறது.

கி.பி. 10–ஆம் நூற்றாண்டில் இங்குள்ள திருவேங்கடவிண்ணவரெம்பெருமான் சன்னதி கட்டப்பட்டுள்ளது. கல்வெட்டு இறைவனை இதே பெயரிலேயே குறிப்பிடுகிறது.

இங்குள்ள சுப்பிரமணியசாமி கோயில் கி.பி. 1238–இல் கட்டப்பட்டது. வள்ளி – தெய்வானை சமேதராய் இறைவன் காட்சியளிக்கிறார். செண்பகராமன் மண்டபம் பறக்கையைச் சேர்ந்த மாதுக்குட்டி மாலையம்மா என்பவரால் கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும். இது ஓர் அரிய சிற்பக்கூடமாகக் காட்சியளிக்கிறது. இம்மண்டபத்தின் இசைத்தூண்கள் ஏழு சுவரங்களையும் வெளிப்படுத்துவதாக அமைக்கப்பெற்றுள்ளது. இம்மண்டபத்திலேயே விக்னேஸ்வரிக்கென்று தனிச் சன்னதி உள்ளது.

மூலவராகத் தாணு மாலயன் (தாணு + மால் + அயன்) என மும்மூர்த்திகளுக்கும் ஒரே உருவமும், சன்னதியும் உள்ளன. வேறெங்குமில்லாத தனிச் சிறப்பாகும். கி.பி. 12–ஆம் நூற்றாண்டிற்குப் பின்பே தாணு மாலயன் வழிபாடு தோன்றியுள்ளது.

சுசீந்திரம் கோயில் நுழைவாயிற் கோபுரத்தின் அடித்தளம் கி.பி. 1545 இல் விஜய நகரப் படைத் தளபதி விட்டலதேவர் மற்றும் அவரது சகோதரரால் கட்டப்பட்டது. மூலம் திருநாள் காலத்தில் இக்கோபுரப் பணி முற்றுபெற்றது. இக்கோபுரத்தின் உட்பகுதியில் இராமாயணம் மற்றும் தலபுராணத்தை விளக்கும் காட்சிகள் ஓவியங்களாக தீட்டப்பட்டுள்ளன. இவை கி.பி. 19ம் நூற்றாண்டில் தீட்டபட்டவையாகும்.

கொன்றையடிக்கு அருகேயுள்ள மாக்காளை நாயக்கர் காலத்தைச் சார்ந்ததாகும். கடல் சங்கைப் பொடி செய்து அதன் தூளை மேற்பூச்சாகப் பூசியுள்ளனர். கொன்றை யடிக்கு அருகேயுள்ள மண்டபம் நாயக்க மன்னர் திருமலைநாயக்கரால் கட்டப்பட்டது. அவரது முழு உருவப் புடைச் சிற்பம் அம்மண்டபத் தூண் ஒன்றில் காணப்படுகிறது.

சுசீந்திரம் கோயிலிலுள்ள ஆஞ்சநேயர் சிலை ஆசியாவிலேயே இரண்டாவது உயரமான சிலையாகும். இதன் உயரம் 16 அடி. பூமியினுள் புதைந்திருந்த இச்சிற்பம் கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டுள்ளது. எனவே இதன் காலம் இதற்கு முந்தியதாகும்.

இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் முற்காலப் பாண்டியர், பிற்காலப் பாண்டியர், பிற்காலச் சோழர், சோழ பாண்டியர், வேணாட்டரசர்கள், நாயக்கர், விசயநகரர் ஆகியோரின் காலத்தவை. கி.பி.8–ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி.

19–ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்திற்குட்பட்ட கல்வெட்டுகள் இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளன.

இக்கோயிற் கல்வெட்டுகள் இவ்வூரைத் திருச்சிவீந்திரம் என்றும் சிவீந்திரம் எனவும் குறிக்கின்றன. இறைவனை மாதேவர், மகாதேவர், சிவீந்திரமுடையார், தாணுமாலயன் எனக் குறிக்கின்றன.

இக்கோயிலில் காணப்படும் சிற்பங்களில் செண்பகராமன் மண்டபத்திலுள்ள சிவனடியார் நால்வரின் சிற்பம், இராமன் மறைந்திருந்து வாலியின் மீது அம்பெய்வது, மற்றும் விக்னேஸ்வரி சிற்பங்கள் குறிப்பிடத்தக்கன.

வசந்த மண்டபத்திற்கு மேற்கே உள்ள நீலகண்ட விநாயகர் சன்னதி சுசீந்திரம் கோயிலின் 9 யோககாரர்களில் ஒருவரான புருஷோத்தமர் நீலகண்டர் என்பவரால் கி.பி. 1587–இல் கட்டப்பட்டது. 'மகா கணபதி' என்றும் முக்குறுணிப் பிள்ளையார் என்றும் அழைக்கப்படுகிறது.

ஒவ்வோர் ஆண்டும் இக்கோயிலில் மார்கழித் தேர்த் திருவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

தக்கலை

கல்குளம் வட்டத்தில் நாகர்கோவிலிலிருந்து 16கி.மீ. தொலைவில் நாகர் கோவில்–திருவனந்தபுரம் நெடுஞ்சாலையில் தக்கலை ஊர் அமைந்துள்ளது.

இங்குள்ள 'பீர்முகம்மது ஒளியுல்லா தர்ஹா' வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பீர் முகம்மது என்ற பீரப்பா நெல்லை மாவட்டத்திலுள்ள தென்காசியில் பிறந்தவர். கி.பி. 16ம் நூற்றாண்டில் இவர் ஒரு இசுலாமியத் தத்துவமேதை (sufi saint) யாகவும், தமிழ்ப் புலவருமாயிருந்தார். கேரள மாநிலத்திலுள்ள பீர்மேடு என்னுமிடத்தில் சில காலம் ஞானம் பெறுவதற்காக தங்கியிருந்தார். வேணாட்டு அரசர்களோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். இவர் ஞானப்புகழ்ச்சி என்ற நூலைத் தமிழில் படைத்துள்ளார். இத்திரு ஏடு ஒவ்வோர் ஆண்டும் இவரது நினைவு நாளில் வாசிக்கப் படுகிறது. தமிழக அரசு ஆண்டுதோறும் இவரது நினைவு நாளை உள்ளூர் விடுமுறையாக அறிவித்துள்ளது. பவுர்ணமி தினமான அந்நாளில் சாதிமத பேதமில்லாமல் கேரளா மற்றும் தமிழகத்திலுள்ள அனைத்து மக்களும் விழாவில் கலந்து கொள்வது தனிச்சிறப்பு. இவரது பெயரால் 'ஞானியார் வீதி' என்று ஒரு வீதியே தக்கலையில் உள்ளது.

தக்கலையிலுள்ள தனியாருக்குச் சொந்தமான ஆறுமுகவிநாயகர் கோயிலில் கொல்லம் 1074 (கி.பி. 1898)–ல் பொறிக்கப்பட்ட தூண் கல்வெட்டு ஒன்று உள்ளது. தக்கலையில் பண்ணையாராக இருந்த ஆறுமுகம்பிள்ளை என்பாரின் மனைவி ஆறுமுகத்தம்மாள் என்பவர் பெரியநாயகத்தம்மாள் என்பவரின் பேரால் இக்கோயிலை நிறுவியதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

தக்கலையிலிருந்து பத்மனாபபுரம் செல்லும் வழியில் 'கொல்லக்குடி முக்கு' என்ற இடத்தில் உள்ள மாடன் தம்புரான் கோயில் வளாகத்தில் கொல்லம் 1053 (கி.பி. 1877) –ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்லறைக் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. வன்னியப் பெருமாள் ஆசாரியின் பேரனும், சடக்குட்டி ஆசாரியின் மகனுமான மாணிக்கவாசக ஆசார்யர் என்பவர் கொல்லமாண்டு 993 (கி.பி. 1817)–ல் கொல்லத்தில் பிறந்து கொல்லமாண்டு 1053 (கி.பி. 1877)–ல் தக்கலையில் இறந்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. இவ்விடம் 'கொல்லக்குடி முக்கு' என அழைக்கப்படுவதால் இங்கு கொல்லர்கள் (Blacksmith) அதிகம் வசித்து வந்துள்ளனர் எனத் தெரிய வருகிறது. தக்கலையிலுள்ள தேவசகாயம் பிள்ளை தேவாலய வளாகத்தில் கி.பி. 1897மாண்டுக் கல்லறைக் கல்வெட்டு காண்டிராக் டராக இருந்த ராமவடிவுண்ணி வைத்தியநாதனின் வாழ்வு விவரங்களைக் குறிக்கிறது

தலக்குளம்

இவ்வூர் கன்னியாகுமாரி மாவட்டம், கல்குளம் வட்டம் மணவாளக்குறிச்சிக்கு நேர் வடக்கே 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. பழைய இரணியல் வட்டத்தின் ஒரு பகுதியாக தலக்குளம் இருந்துள்ளது.

இவ்வூரிலுள்ள பெருமாள் கோயில், பாழடைந்த சிவன் கோயில் மற்றும் தளவாய் வேலுத்தம்பி கொட்டாரம் ஆகியன இவ்வூரின் வரலாற்றிற்கு ஆதாரங்களாக நிற்கின்றன. இங்குள்ள பெருமாள் கோயிலின் அதிட்டானத்தில் கொல்லம் 660 (கி.பி. 1484)ல் பொறிக்கப்பட்ட கல்வெட்டு உள்ளது. படைப்பா நாட்டில்லத்து இரணசிங்க பாடி வீட்டில் கண்டன் பெருமாள் வீரகேரளப் பல்லவதரையன் ஆணையின்படி அக்கோயில் மூலவரான அழகம் பெருமாள் இடம் பெயர்த்து, கோயிலை முற்றிலுமாக சிதைத்து, மீண்டும் கட்டிப் பெருமாளை மீண்டும் பிரதிட்டை செய்து கலசமுமாடியதைக் கல்வெட்டு தெரிவிக்கிறது.

இவ்வூருக்குப் புறத்தே பாழடைந்த சிவன் கோயில் ஒன்றுள்ளது. கி.பி. 16–ம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகத் தோன்றும் இக்கோயில் திராவிட விமானத்துடன் கருவறை, அர்த்தமண்டபம், முன்மண்டபம் ஆகிய அமைப்புகளைக் கொண்டுள்ளது. இக்கோயிலின் வெளிப் பிரகாரச் சுவரில் இராமாயணக் காட்சிகளை விளக்கும் கற்சிற்ப வரிசைகள் (Sculptural panels) அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன.

திருவிதாங்கூர் அரசில் திவானாகப் பணிபுரிந்த தளவாய் வேலுத்தம்பியின் கொட்டாரம் இங்குள்ளது. இக்கொட்டாரத்தின் அடித்தளத்திற்கு மேலுள்ள சுவர்ப் பகுதி முதலியன முற்றிலும் மரத்தாலானது. வேலுத்தம்பி படுத்துறங்கிய கற்கட்டிலில் அவரின் சிற்பம் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது. இவர் கி.பி 1809ல் கும்பினியாரை எதிர்த்துப் போரிட்டு தோற்று, அவர்கள் கையில் அகப்படாமல் தன்னுயிரைத் தானே மாய்த்துக் கொண்ட வீரனாவார். தனது குண்டறை விளம்பரத்தின் மூலமாக மக்களை ஆட்சி யாளர் களுக்கு எதிராக ஒன்று திரட்டி வரி கொடா இயக்கமும் நடத்தியவர்.

திக்கணங்கோடு

கல்குளம் வட்டத்தில் இரணியலுக்கு வடமேற்கே சுமார் 4கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது.

இவ்வூரில் கி.பி. 10–ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பெருமாள் கோயில் இவ்வூரின் பழமைக்குச் சான்றாக விளங்குகிறது. இக்கோயிலில் இதே நூற்றாண்டைச் சேர்ந்த மூன்று வட்டெழுத்துக் கல்வெட்டுகளும், கொல்லம் 1063–ல் பொறிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டு ஒன்றும் காணப்படுகின்றன. கல்வெட்டுக்கள் இவ்வூரின் பெயரை 'திருக் கண்ணங்கோடு' எனவும் இறைவனை 'திருக்கண்ணதேவர்' என்றும் குறிக்கின்றன.

திருமுதான்கோட்டு கவிசியன் கண்டனாதாங்கி என்பவன் நிவேதனத்துக்காக நிலக்கொடை வழங்கியதை ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது. கீழ்மருதூர் மேலகத்து சோமன் நாராயணன் என்பவன் இக்கோயில் நிவேதனத்துக்காக நிலம் அட்டிக் கொடுத்தை மற்றொரு கல்வெட்டு தெரிவிக்கிறது. இக்கோயிலில் மேற்பார்வையாளனாக இருந்த சோமன் நாராயணன் என்பவன் இக்கோயிலுக்கு விளக்கொன்று வைத்து ஐந்து எருமைகளைத் தானமாக வழங்கியதை மற்றுமொரு கல்வெட்டு தெரிவிக்கிறது. ஸ்ரீகலாசெய பட்டிணத்தைச் சேர்ந்த குமரநாரணன் என்பவன் இக்கோயிலின் ஸ்ரீபலிக் கல்லைச் செய்தளித்துள்ளான்.

மேக்கூர் சீ காரியம் நாராயணன் போற்றி என்பவர் இக்கோயிலில் மடப்பள்ளி கட்டியதை கொல்லம் 1063 (கி.பி. 1887)ல் பொறிக்கப்பட்ட மடப்பள்ளி தூண் கல்வெட்டு தெரிவிக்கிறது.

திருநந்திக்கரை

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், குழித்துறையிலிருந்து 11 கி.மீ. தொலைவில் திருநந்திக்கரை ஊர் அமைந்துள்ளது.

இவ்வூருக்கு வடக்கே உள்ள குன்றின் மீது தென்புறத்தில் ஒரு குடைவரைக் கோயில் நந்தியாற்றின் கரையில் அமைந்துள்ளது. கி.பி. 8–ம் நூற்றாண்டில் எடுக்கப்பட்ட குடைவரைக் கோயிலாகும். இதே நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட இக்கோயில் கல்வெட்டு இவ்வூருக்கு 'ஸ்ரீநந்தி மங்கலம்' என்ற பெயரிட்டதையும் கோயில் நிர்வாகி நம்பி கணபதி யிடம் நிலக்கொடை வழங்கியதையும் குறிக்கிறது.

கி.பி. 8–9–ம் நூற்றாண்டைச் சேர்ந்த இக்கோயிற் கல்வெட்டொன்று மங்கலச் சேரியைச் சேர்ந்த நாராயணன் திவாகரன் என்பவன் திருநந்திக்கரை திருவல்லவாழ் பட்டாரகர்க்கு நிலக்கொடை வழங்கியதைத் தெரிவிக்கிறது.

கி.பி. 1003–ல் முதலாம் இராஜராஜ சோழன் காலத்தில் இக்கோயில் இறைவனுக்கு இராஜர்ராஜத் தென்னாட்டு வள்ளுவ நாட்டு முட்டம் என்ற ஊரை 'மும்முடிச்சோழ நல்லூர்' எனப் பெயர் மாற்றம் செய்து கொடையாக வழங்கியதை இக்கோயில் மேற்புற வாயிலருகே உள்ள தூண் கல்வெட்டு தெரிவிக்கிறது. கருவறைக்கு முன் உள்ள

மண்டபச் சுவர்களில் சோழர் காலத்தில் தீட்டப்பட்ட கணபதி, வீணாதர தட்சிணாமூர்த்தி, காளி மற்றும் நடராஜர் ஓவியங்கள் இருந்தன. தற்போது இவை சிதிலமடைந்து மறைந் துள்ளன.

குடைவரைக் கோயிலுக்கு அருகிலேயே சேர மன்னன் விஜயராக தேவர் காலத்தில் சிவனுக்காக எடுப்பிக்கப்பட்ட கி.பி. 10–ம் நூற்றாண்டுக் கட்டடக் கோயிலொன்றுள்ளது. கல்வெட்டு இதை **மாடக்கோயிக்கல்** எனக் குறிக்கிறது. தற்போது இங்கு வட்ட வடிவ உட்பிரகாரத்தில் செவ்வக வடிவில் கருவறையும், கூம்பு வடிவ விமானமும் கேரள கலைப் பாணியில் கட்டப்பட்டிருக்கும் கோயிலாக உள்ளது.

திருநயினார் குறிச்சி

கல்குளம் வட்டத்தில் இவ்வூர் அமைந்துள்ளது. இங்குள்ள சிவன்கோயில் பழமையானது. கி.பி. 12–ஆம் நூற்றாண்டில் எழுப்பப்பட்டதாகலாம். கல்வெட்டுகள் இவ்வூரை இராஜராஜத் தென்னாட்டுக் குறுநாட்டுக் கடிகைப்பட்டினம் எனக் குறிக் கிறது. இறைவனைக் கரைகண்டேஸ்வரமுடைய மகாதேவர் எனக் குறிக்கின்றன. ஆதிச்சன் கோதை என்பவன் இக்கோயிலில் நந்தவனம் அமைக்கவும், திருநந்தா விளக்கெரிக்கவும் ஸ்ரீபலிச்செலவிற்காகவும் கொடை வழங்கியதை கி.பி. 12–13–ம் நூற்றாண்டு கல்வெட்டுகள் மூலம் அறியலாம். பெரும்பற்றப்புலியூரைச் சேர்ந்த சிவனுக் கினியான் என்பவன் சித்திரைத் திருநாளில் நீராடுவதற்கும், திருஉலா எழுந்தருளவும், திருநாடகம் நடத்துவதற்கும் நெல் கொடையாக அளித்ததை கி.பி. 1163–ம் ஆண்டைச் சேர்ந்த கோயில் கல்வெட்டொன்றின் மூலம் அறியலாம். பெரும்பற்றப்புலியூர் தற்போதைய சிதம்பரம் ஆகும்.

கி.பி. 15–ஆம் நூற்றாண்டில் கோளன்குன்றன் என்பவன் இக்கோயிலில் பலி பீடம் அமைத்து அங்கு கூத்தாடுந் தேவருக்கு இருநாழி அரிசி கொடை வழங்கியதை மற்றொரு கல்வெட்டின் மூலம் அறியலாம். கி.பி. 1432–ம் ஆண்டில் வேதை அறை சடையான் திவாகரனான சோழ கேரளப் பல்லவரையன் என்பவன் இக்கோயிலைப் புதுக்கிக் கட்டிக் குடமுழுக்கு செய்ததைக் கல்வெட்டு குறிக்கிறது. கி.பி. 1706–ல் பெரும்பற்றப் புலியூரைச் சேர்ந்த சிவனுக்கினியார் என்பார் இக்கோயிலில் சோபன மண்டபம் கட்டுவித்து, கலசத்துக்கு நீர் ஆட்டுவித்து வழிபாட்டுக்காக சாத்துவிளை மற்றும் மலையாம்விளை ஆகிய நிலங்களைக் கொடையாக வழங்கியுள்ளார்.

பத்மனாபபுரம் அரண்மனையிலுள்ள கொல்லம் 986 (கி.பி. 1811)–ம் ஆண்டைச் சேர்ந்த இவ்வூர்க் கல்வெட்டு ஒன்று கடியப்பட்டினம் திருநயினார்குறிச்சி ஈசுவரர் கோயில் பிறத்து வீட்டிலிருக்கும் அனைஞ்சபெருமாள் நீலமப்பிள்ளை மகையார் இவ் வீட்டின் கிழக்கிலுள்ள புரையிடத்தில் அம்பலம் கட்டி தண்ணீர்ச்சால் வைத்து, அம்பலத்தில் தீயும் சுண்ணாம்பும் வெந்நீரும் தர்மமாகக் கொடுத்து வரவும் இத்தர்மத்தை நடத்த பிராட்டி முத்துகருப்பனுக்கு நிலம் தானமாக விட்டுக் கொடுத்ததையும் தெரிவிக் கிறது. பத்மனாப புரம் அரண்மனையிலுள்ள இதே ஊரைச் சேர்ந்த கொல்லம் 931 (கி.பி. 1755)–ம் ஆண்டைச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டு திருநயினார்குறிச்சி அரசடி

பிள்ளையாருக்குப் பள்ளிச்சல் ஊரைச் சேர்ந்த பெருமாள் என்பவன் நிலைக்கொடை வழங்கியதைத் தெரிவிக் கிறது.

திருப்பதிசாரம்

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டத்தில் ஆரல்வாய்மொழிக்குச் செல்லும் பிரதான சாலையில் நாகர்கோவிலிலிருந்து 5 கி.மீ. தொலைவில் திருப்பதி சாரம் அமையப் பெற்றுள்ளது.

இந்தியாவில் ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப்பட்ட 108 திவ்ய தேசங் களில் ஒன்றாகவும், மலை நாட்டிலுள்ள 13 திவ்ய தேசங்களில் ஒன்றாகவும் இவ்வூர் கருதப்படுகிறது. கி.பி. 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நம்மாழ்வாரால் பாடல் பெற்ற தலமுமாகும். திருப்பதிசாரத்தைக் கீழ்க்காணும் வரிகளில் நம்மாழ்வார் குறித்துப் பாடுகிறார்.

"வருவார் செல்வார் வண்பரிசாரத்து இருந்த என்
திருவாழ் மார்பற்கு என்திறம் சொல்லார் செய்வதென்"

தேவியைத் தன் இதயத்தில் வைத்திருப்பதால் "திருவாழ் மார்பன்" எனக் குறிக்கப் படுகிறார். இக்கோயிலில் இவருக்கு தனியாக சன்னதி உள்ளது.

கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் இக் கோயில் இறைவனைப் பாடும்போது "வண்பரிசாரங் கிடந்த மாற்கு" எனக் குறிக் கின்றார். இக்கோயில் இறைவன் தற்போது வீற்றிருக்கும் பெருமாளாக காணப் படுகிறார்.

இக்கோயில் இறைவன் நம்மாழ்வாரால் பாடப் பெற்றுள்ளதால் கி.பி. 9–ஆம் நூற்றாண்டிலிருந்தே இக்கோயில் இருந்துள்ளது தெரிய வருகிறது. இக்கோயிலில் கி.பி. 1614 மற்றும் கி.பி. 1786 ஆகிய ஆண்டுகளில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக் களும் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுக்கள் இறைவனை "நயினார் திருவாழு மார்ப நயினார்" என்றும் "திருவாழி மார்பன்" என்றும் குறிக்கப்படுகின்றார். கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் இவ்வூரின் பெயர் 'திருப்பதிசாரம்' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கரதேசி சம்பு நாராயணன் என்பவன் இக்கோயிலுக்கு பூசைக்காக வழங்கிய கொடையினையும், மற்றொரு கல்வெட்டு பிள்ளையார் கோயில் ஊரைச் சேர்ந்த குப்பான் சிட்டி என்பவன் ஒற்றைக்கல் மண்டபம் முன்பாகத் தளம் பாவுவதற்கும் கொடை கொடுத்ததைப் பதிவு செய்கின்றன.

இங்குள்ள சடாயுபுர சிவன்கோயில் கி.பி. 12–ம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக லாம். இக்கோயில் கல்வெட்டு விழிஞமான இராஜேந்திரசோழ பட்டினத்து வியாபாரி நாதின் செட்டி என்பவன் திருநந்தா விளக்கெரிக்க 50 ஆடுகள் கொடை வழங்கிய செய்தியைத் தெரிவிக்கிறது. திருப்பதிசாரத்தில் வேணாட்டரசர் தங்கியிருந்த அரச கொட்டாரம் ஒன்றுள்ளது. இது முழுக்க மரத்தினால் கட்டப்பட்டதாகும்.

திப்பிரமலை

இவ்வூர் விளவங்கோடு வட்டத்தில் கருங்கல்லுக்கு அருகே 2கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கல்வெட்டு இவ்வூரைத் 'திருப்பிறைமலை' எனக் குறிக்கிறது.

இங்குள்ள சிவன்கோயிலும், கிருஷ்ணன்கோயிலும் இவ்வூரின் பழமையினை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றன. கிருஷ்ணன்கோயில் மூலவர் நின்ற கோலத்தில் பேருருவத் திருமாலாகக் காட்சியளிக்கின்றார். அவருக்கருகே குத்திட்டு அமர்ந்த நிலையில் தாயார் தேவகி காணப்படுகிறார். தேவகி தன் வயிற்றுக் குழந்தையாக இருந்த கிருஷ்ணனுக்கு கம்சனால் தீங்கு வருமோ என்று அஞ்சிக் கவலையுற்றிருந்தபோது, தான் யாரெனக் காட்டுவதற்காகத் தாயாருக்கு 'விஸ்பரூபதரிசனம்' கொண்ட திருவுருவக் கோலமே இங்கு மூலவராக சுமார் 13 அடி உயரத்தில் காணப்படுகிறார். இம்மூலவர் கல்வெட்டில் "கருமாணிக்கத்தாழ்வார்" எனக் குறிக்கப்படுகிறார்.

இக்கோயில் கேரளக் கலைப்பாணியில் வட்டவடிவ பிரகாரத்தினுள் செவ்வக வடிவ கருவறையும் கூம்பு வடிவ விமானத்தில் கூரை ஓடுகள் பரவப்பட்டும் காட்சியளிக்கின்றது. இக்கோயில் முன்பாக உள்ள பலிபீடத்தில் கி.பி. 12–13–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு விக்கிரமனனுக் கனும் தம்பிமாரும் இக்கோயிலில் இரண்டு நந்தாவிளக்கு நிறுவியதையும், அவை எரிக்க நிலமும், எருமையும் கொடையாக வழங்கிய செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனருகிலேயே பழமையான சிவன்கோயில் ஒன்று காணப்படுகிறது. இக்கோயிலிலுள்ள சாஸ்தாவின் சிற்பம் அரிதானதொன்றாகும். மேலிரு கரங்கள் மழு மற்றும் அக்கமாலை தாங்கியும், கீழ் வலக்கரம் பூஸ்பரிச முத்திரையாகவும், இடக்கரம் நாகத்தைப் பிடித்த நிலையிலும் அர்த்தபரியங்காசனத்தில் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறார். தட்சிணாமூர்த்தி மற்றும் விஷபாகரணர் அம்சங்கள் கலந்த சாஸ்தாவாக காணப்படுகிறார். இச்சிவன் கோயில் கி.பி.10--ம் நூற்றாண்டில் எழுப்பப்பட்டதாகலாம்.

கிருஷ்ணன்கோயிலைப் போலவே இச்சிவன் கோயில் கல்வெட்டொன்றும் விக்கிரமனனுக்கனு தம்பிமாரையும் குறிக்கிறது.

திருவட்டாறு

கல்குளம் வட்டத்தில் தக்கலைக்கு வடக்கே 11 கி.மீ. தொலைவில் நாகர்கோயில் குலசேகரம் சாலையில் பறளியாற்றின் (தாமிரவருணி) கரையில் இவ்வூர் அமைந்துள்ளது.

இவ்வூரைச் சுற்றிப் பறளியாறு வட்டமாக ஓடுவதால் 'வாட்டாறு' எனப் பெயர் பெற்று இதுவே கி.பி.11–ஆம் நூற்றாண்டில் பிற்காலச் சோழர் காலத்திலிருந்து 'திரு' எனும் அடைமொழி சேர்த்து 'திருவாட்டாறு' என வழங்கப்பட்டு வருதலானது. இங்குள்ள ஆதிகேசவப் பெருமாள் கோயில் தலபுராணத்தில் இவ்வூர் 'ஆதி அனந்தபுரம்' எனக் குறிக்கப் பெறுகிறது. சங்க காலத்தில் குறுநில மன்னனாக இருந்த எழினி ஆதன் என்பவனின் ஆளுகைக்குட்பட்ட தலைமையிடமாக திருவாட்டாறு இருந்ததாகப்

புறநானூற்றுப் பாடல் ஒன்று தெரிவிக்கிறது. (பாடல் 386) 'வளநீர் வாட்டாறு' என இவ்வூரைக் குறிக்கிறது. வாட்டாற்று எழினி ஆதன் எனச் சங்ககாலச் சேர மன்னனைக் குறிக்கிறது.

இந்தியாவிலுள்ள 108 திவ்ய தேசங்களில் ஒன்றாகவும், மலை நாட்டிலுள்ள 13 திவ்ய தேசங்களில் ஒன்றாகவும் திருவட்டாறு விளங்குகிறது. கி.பி. 9–ஆம் நூற்றாண்டில் நம்மாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட தலமாகும். இவ்வூரையும், இறைவனையும் "மணிமாட வாட்டாற்றான்" எனத் தம் பாடலில் குறிக்கிறார். கி.பி. 12–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் தானியற்றிய 'விபாவனலங்காரம்' என்ற நூலில் "கேசவனே பாம்பணை மேல் வாட்டாற்றுக் கண்டுயில் கொள்வாய்" எனப் பாடுகிறார். கி.பி. 16–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருக்குறுக்கைப்பிரான் தான் இயற்றிய 'மாறன் அலங்காரம்' என்ற நூலில் இவ்வூர்ப் பெருமாளை "மணி மலர்க்கை பற்றிய வாட்டாற்றான்" எனப் பாடுகின்றான். கி.பி.13–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருவிதாங்கூர் மன்னன் சர்வாங்கநாத ஆதித்தவர்மன் என்பவர் திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாளைப் பற்றியும், திருவனந்தபுரம் பத்மனாபசாமியைப் பற்றியும் பத்துப் பாடல்கள் பாடியுள்ளதனைத் திருவனந்தபுரம் அரண்மனை நூலக ஏடு ஒன்று தெரிவிக்கின்றது.

இக்கோயில் உயர்ந்ததோர் அரங்கத்தின் மீது (பூவரங்கம்) 3.21 ஏக்கர் நிலப் பரப்பில் கட்டப்பட்டுள்ளது. இதனால் மாடக்கோயில் என்று அழைக்கப்படுகிறது. இக்கோயிலைச் சுற்றி நான்கு புறமும் கோதையாறு மற்றும் பறளியாறு ஓடுகின்றன. திருச்சியில் உள்ள திருவரங்கம் மற்றும் மைசூரில் உள்ள ஸ்ரீரங்கப்பட்டினம் ஆகிய தலங்களுக்கு அடுத்தபடியாகத் திருவட்டாற்றிலேயே அனந்தசயனப் பெருமாளாக மூலவர் காட்சியளிக்கிறார். இக்கோயிலின் கட்டடக்கலைப் பாணி தமிழக மற்றும் கேரளக் கலைப் பாணியினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. துவிதள அற்புத விமானம் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கோயில் மூலவர் 16008 சாளக்கிராமம் உள்ளடங்கிய 22 அடி நீள கடு சர்க்கரையால் ஆன திருப்படிமம் ஆகும். அனந்தசயனப் பெருமாளாக ஸ்ரீதேவி பூதேவி யுடன் காணப்படுகிறார். கேசன் என்ற அரக்கனின் கொடுமைகளை அழித்ததனால் 'கேசவப் பெருமாள்' என்றும் 'ஆதிகேசவப் பெருமாள்' என்றும் அழைக்கப்படுகிறார். பெருமாளின் முழு வடிவைக் காண்பதற்கு மூன்று வாயில்கள் தனித்தனியே அமைக்கப் பட்டுள்ளன. முடியை ஒரு வாயிலிலும், அடியை மற்றொரு வாயிலிலும், இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட வாயிலில் உடலையும் காணலாம்.

இக்கோயிலில் 11–ஆம் நூற்றாண்டு முதல் 18–ஆம் நூற்றாண்டு வரையிலான கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கோயில் முன் மண்டபத்தில் முதலாம் குலோத்துங்க சோழனின் கி.பி. 11–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த துண்டுக் கல்வெட் டொன்று பொறிக்கப்பட்டுள்ளது. இதுவே இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு களில் பழமையானதாகும். கல்வெட்டுகள் இவ்வூரையும் இறைவனையும் திருவாட் டாற்றுப் பள்ளி கொண்டருளிய பெருமாய எனக் குறிக்கிறது. பத்மனாபபுரம் அரண்மனை

யிலுள்ள கொல்லமாண்டு 856 (கி.பி. 1680) ஐச் சேர்ந்த தூண் கல்வெட்டு திருவட்டாறு தேசத்தைச் சேர்ந்த இரவிக்குட்டியும், பத்மனாபக்குட்டியும் பத்மனாபபுரத்தில் மடம் கட்டி தானப்பிரமாணமாக நாஞ்சி நாட்டு விளாகப் பற்றில் நிலம் விட்டுக் கொடுத்ததை தெரிவிக்கிறது.

இக்கோயில் நம்மாழ்வாரால் கி.பி. 9–ஆம் நூற்றாண்டில் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளதால் கி.பி. 9–ஆம் நூற்றாண்டிற்கு முன்பே இக்கோயில் இருந்துள்ளது தெரிய வருகிறது. வேணாட்டு மன்னன் வீரகோதைவர்மன் திருவடி காலத்தில் திருப்பணி செய்ததனை இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள இவரது காலத்து கல்வெட்டொன்று தெரிவிக்கிறது. கி.பி. 1604–இல் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்று வேணாட்டரசன் ஸ்ரீவீரரவி ரவிவர்மன் என்பவர் கோயிலைச் சீரமைத்து ஒற்றைக்கல் மண்டபம் கட்டியதைக் குறிக்கிறது. இம்மண்டபம் 18 X 18 X 3 அடி என்ற அளவில் வியத்தகு கட்டட கலை நுட்பத்துடன் எழுப்பப்பட்டுள்ளது. இம்மண்டபத்தின் உட்கூரைப் பகுதியிலுள்ள போர்க் காட்சிகளைக் காட்டும் சிற்பங்களின் வரிசை (Miniature scultural panels) சிறந்த கலைநுட்பத்தை வெளிப்படுத்துவதாக விளங்குகிறது. மன்னனின் சகோதரனான ஆதித்தவர்மன் என்பவன் நான்கு பிரகாரங்களிலும் கற்களைப் பரப்பினார் என்றும், அவரது இளைய சகோதரன் ராமவர்மா என்பவர் இரண்டு துவாரபாலகர் களை பிரதிட்டை செய்தார் என்ற செய்தியும் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

இக்கோயிலின் வெளிப்பிரகாரத்தைச் சுற்றிலும் 222 பாவை விளக்குகள் வெவ்வேறு தலையலங்காரத்துடனும், ஆடை அணிகலன்களுடன் காணப்படுவது திருவிதாங்கூர் கலைப்பாணிக்குச் சிறந்த சான்றாதாரங்களாக அமைகின்றன. இதே வெளிச்சுற்று மண்டபத்தில் கும்பகர்ணன் வதை சிற்பம், இரணியன் வதை சிற்பம், கொக்கலி ஆட்டம் என்ற நாட்டார் கலையைப் படம்பிடித்துக் காட்டும் சிற்பம் ஆகியன குறிப்பிடத்தக்கவையாகும். பலிக்கல் மண்டபத்தில் காணப்படும் வேணுகோபாலர், அர்ஜுனன், கர்ணன் மற்றும் பறை கொட்டுபவர் ஆகிய சிற்பங்கள் காண்போரை ஈர்க்கும் வண்ணம் செதுக்கப்பட்டுள்ளன. உண்ணாழி வெளிச்சுவர்களில் பச்சிலை ஓவியங்கள் சமய மற்றும் சமூகக் காட்சிகளாகத் தீட்டப்பட்டுள்ளன.

இக்கோயிலின் திருச்சுற்றில் தனியே திருவம்பாடி கிருஷ்ணனுக்கும் சாஸ்தா விற்கும், திருநடைகள் உள்ளன. திருவம்பாடி கிருஷ்ணன் கோயில் கி.பி. 12–ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

ஆற்காட்டு நவாப்பு இக்கோயிலுக்கு ஒரு தங்கத்தட்டையும், கிரீடத்தையும் காணிக்கையாக வழங்கியுள்ளதுடன், ஆண்டுதோறும் பூஜை நடத்தவும் ஏற்பாடு செய் துள்ளார். திருவிழாக் காலங்களில் உற்சவரைக் கருவறைக்குக் கொண்டு செல்லும் முன் மண்டபத்தில் வைத்து பூசை செய்வர். இது 'திரு அல்லா பூசை' என்றழைக்கப் படுகிறது.

வங்காள வைணவத்தின் பக்தி மறுமலர்ச்சிக்குக் காரணமான சைதன்ய மகாபிரபு கி.பி.1510–ல் இத்திருத்தலத்திற்கு வருகை தந்துள்ளார். அவருக்கு பிரம்ம

ஸம்ஹிதையின் மூல ஏட்டுப் பிரதி இங்கு கிடைக்கப் பெற்றது. அதன் ஐந்தாம் அத்தியாயத்திற்கு இங்கிருந்து உரை எழுதிய பெருமை இத்தலத்திற்கு உண்டு.

புரட்டாசி, பங்குனி மாதங்களில் 3 முதல் 9 வரையுள்ள நாள்களில் அஸ்தமன சமயத்தில் சூரியனின் கதிர்கள் கர்ப்பகிரகத்தினுள் பரவி வணங்குவது போல இக் கோயில் அமைக்கப்பட்டுள்ளது தனிச்சிறப்பு.

திருவிதாங்கோடு

இவ்வூர் கல்குளம் வட்டத்தில் பத்மனாபபுரத்திற்குத் தென்மேற்கே அமைந்துள்ளது.

திருவாழும் கோடு என்ற சொல்லிலிருந்தே திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் பெயர் தோன்றியுள்ளது. இவ்வூர்க் கல்வெட்டுக்களில் ஊரின் பெயர் 'திருமுதான் கோடு' எனக் குறிக்கப்பட்டுள்ளது. வேணாட்டு அரசர்களின் தலைநகரமாக பத்மனாபபுரம் வருவதற்கு முன்பாக திருவிதாங்கோடே தலைநகராக இருந்தது.

இவ்வூரின் வரலாற்றினை அறிவதற்கு இங்குள்ள சிவன்கோயில், மற்றும் மூன்று தூண் கல்வெட்டுகள் சான்றாதாரங்களாக அமைகின்றன.

இங்குள்ள நீலகண்டசாமி சிவன்கோயில் கி.பி. 869 – 70 –ல் ஆய் மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்டு, பின்பு கி.பி. 1639–ம் ஆண்டில் வேணாட்டரசர் வீரரவிவர்மாவினால் புதுக்கிக் கட்டப்பட்டது. இக்கோயிற் கல்வெட்டில் இறைவன் ஈசான மகாதேவர் எனக் குறிக்கப்படுகிறார். வீரரவிவர்மாவின் அமைச்சரான வாசுதேவன் என்ற போற்றி மூலவரை இளங்கோயிலில் நிறுவித் திருப்பணி செய்ததை இக்கோயில் முன்பாக உள்ள மண்டபத்தில் பொறிக்கப்பட்ட சமஸ்கிருத மொழியில் மலையாள வரி வடிவிலான பாடல் கல்வெட்டு தெரிவிக்கிறது. மூலவரை இளங்கோயிலில் எழுந்தருளிவித்ததை 'சங்கோச்சா' என்ற சொல்லால் கல்வெட்டு குறிக்கிறது. ஓமாய நாட்டுத் தலைவன் சிங்கக் குன்றப்போளன், திக்கணங்கோட்டு வெள்ளாளன் சருட்டநவி, வேம்பனூரைச் சேர்ந்த அரங்கன் ஆகியோர் இக்கோயிலுக்குக் கொடை வழங்கியதை கி.பி. 9–12–ம் நூற்றாண்டு களுக்கிடையில் பொறிக்கப்பட்ட இக்கோயில் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. 'சிவாலய ஓட்டம்' நடைபெறும் குமரி மாவட்டத்திலுள்ள 12 சிவாலயங்களில் இது 10–வது ஆலயமாகக் கருதப்படுகிறது.

சிவன்கோயிலுக்கு அருகிலேயே கி.பி. 17–ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பெருமாள் கோயில் ஒன்றும் உள்ளது. மூலவர் சங்கு, சக்கரமேந்தி நின்றகோலப் பெருமாளாகக் காட்சியளிக்கிறார். இக்கோயில் ஸ்ரீவலிப் பிரகாரத்தில் வரிசையாகக் காணப்படும் பாவை விளக்குகளின் சிற்பங்கள் தமிழகத்தில் வேறெங்கும் காணப்படாதவையாகும். விளக்கேந்தும் பாவையொன்றை இரு முனிவர்கள் களவியல் நோக்கில் அணுகுவது, கர்ப்பிணிப் பெண்ணாக ஒரு பாவை விளக்கு, கைக் குழந்தையுடன் மற்றொரு பாவை விளக்கு ஆகிய இத்தீபலட்சுமிகளின் சிற்பங்கள் அரிதானவையாகும். இவை வளமைச் சடங்கினை உணர்த்துவதாக அமைகின்றன.

இங்குள்ள சிரியன் கிறித்துவ தேவாலயமே கன்னியாகுமரி மாவட்டத்தில் பழமையான கிறித்துவ தேவாலயமாக கருதப்படுகிறது. கி.பி. 52 –ல் புனித தோமையாரால் நிறுவப்பட்டதாக நம்பப்படுகிறது. கேரள மரபுப்படி புனித தோமையார் 7½ கிறித்துவப் பள்ளிகளை நிறுவியதாகவும் அவற்றுள் 7 கேரளாவிலும், ½ ப் பள்ளி (சிறிய பள்ளி) திருவிதாங்கோட்டில் நிறுவப்பட்டுள்ள இச்சிரியன் கிறித்துவப் பள்ளியாகவும் நம்பப்படு கிறது. இவ்வாலயத்திற்கு போர்த்துகீசியரால் கொடையாக வழங்கப்பட்ட சிறிய அலமாரி யின் கதவுகளில் புனிதர் பெத்ரு, புனிதர் பவுல் ஆகியோரின் உருவங்கள் கி.பி. 16–ம் நூற்றாண்டில் வண்ண ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.

திருவிதாங்கோட்டிலுள்ள பெரியநாயகி மாதா கோயிலில் கி.பி. 1860–ம் ஆண்டைச் சார்ந்த கல்லறைக் கல்வெட்டு காணப்படுகிறது. ஸ்பெயின் நாட்டுத் தலைநக ரான மாட்ரிட் பட்டினத்தைச் சேர்ந்த கத்தோலிக்க பாதிரியார் பி. அதெரியானிஸ் என்பவர் கொல்லம் மிஸினரியில் பணிபுரிந்துவிட்டு திக்கணங்கோட்டில் மரணமாகி திருவிதாங் கோட்டு பள்ளியில் அடக்கம் செய்யப்பட்டார் என இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

திருவிதாங்கோடு தூண் கல்வெட்டு ஒன்று அக்காலத்தில் வழக்கிலிருந்த புலப்பேடி – மண்ணாப்பேடி என்ற சமூக வழக்கத்தினை ஒழித்து கி.பி. 1696ல் கோட்டயம் கேரளவர்மன் வெளியிட்ட அரசாணையை பதிவு செய்துள்ளது. புலப்பேடி உள்ள காலத்தில் உயர்சாதிப் பெண்ணொருத்தி இருட்டிய பிறகு தனியே வெளியே வரும்போது ஒடுக்கப் பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவன் 'கண்டு விட்டேன்' என்று கூவினாலோ அல்லது அப்பெண்ணைத் தொட்டுவிட்டாலோ அல்லது அவள் மீது சிறிய குச்சியை எடுத்து எறிந்தாலோ அப்பெண் அவனுடன் சென்று வாழ்க்கை நடத்த வேண்டும். அத்தருணத் திலிருந்து அப்பெண் தீட்டுப்பட்டவளாகிறாள். அவளுடைய வீட்டில் மீண்டும் அவளை சேர்த்துக் கொள்வதில்லை. (பேடி என்ற மலையாள சொல்லிற்கு பயம் எனப் பொருள்)

திருவிடைக்கோடு

திருவிடைக்கோடு கல்குளம் வட்டத்தில் நாகர்கோயில்–திருவனந்தபுரம் சாலை யின் வலப்புறமாக அமைந்துள்ளது.

இவ்வூரிலுள்ள சடையப்ப மகாதேவர் கோயில் ஆய் மன்னன் கோக்கருநந்தடக்கன் காலத்திலிருந்தே (கி.பி. 855–877) இருந்து வந்துள்ள பழமையான கோயிலாகும். குமரி மாவட்டத்திலுள்ள பன்னிரு சிவாலய ஓட்டக் கோயில்களில் இதுவும் ஒன்றாகும்.

திருவிடைக்கோடு மகாதேவர் ஆலயத்தின் வெளிப்பிரகாரத்திலுள்ள ஒரு பாறையின் மீது கருநந்தடக்கனின் 22–ம் ஆட்சியாண்டுக் (கி.பி. 877) கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு இறைவனைத் திருவிடைக்கோட்டு மகாதேவர் எனக் குறிக்கிறது. இவனது மற்றொரு பாறைக்கல்வெட்டு இம்மன்னனின் 14–ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு முதுகுளத்து வாணியன் புல்லமுருகன் என்பான் திருவிடைக்கோட்டு மகாதேவர்க்கு ஒரு நந்தா விளக்கமைத்து எரிப்பதற்காக இருபத்தைந்து பசுக்கள் தானமாக அளித்ததைத் தெரிவிக்கிறது.

இதே கோயிலின் இரண்டாம் பிரகாரத்திலுள்ள ஒரு பாறையின் மீது பொறிக்கப் பட்ட வட்டெழுத்துக் கல்வெட்டு ஓமாய நாட்டு அதிகாரியின் நினைவாக அந்நாட்டின் தலைவன் ஊர் வேளான் என்பான் இக்கோயிலுக்கு நிலக்கொடை வழங்கியது பதிவு செய்யப்பட்டுள்ளது.

சடையப்பர் கோயிலின் இரண்டாம் பிரகாரத்தில் உள்ள பாறையின் மீது கி.பி. 12–13ம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ்க் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு குறுநாட்டு மருதத்தூரைச் சேர்ந்த உதையன் பொன்னாண்டியும், உதையன் மங்கல நங்கையும் இக்கோயில் இறைவனுக்குத் திருவமுது படைக்கவும் துவாதேசி நாளில் ஏழு பிராமணர்களுக்கு உணவளிக்கவும் நிலக்கொடை வழங்கியதைத் தெரிவிக்கிறது.

கி.பி. 16–17ஆம் நூற்றாண்டில் இக்கோயில் உண்ணாழியின் சுவரிலுள்ள தூண்கள் நிறுவப்பட்டு அதை நிறுவியவர்களின் பெயர்களும் அத்தூண்களில் பொறிக்கப் பட்டுள்ளன.

பத்மனாபபுரத்திலுள்ள நீலகண்டசாமி கோயிலில் கணக்கராகப் பணிபுரிந்த பெருமாள் தாணுவன் என்பார் இவ்வூர் நாச்சியார்குளத்தின் கரையிலுள்ள அம்பலத்தை யும், நீர்வாவியையும் பேணுவதற்காகவும், நந்தவனம் அமைக்கவும் நிலக்கொடை வழங்கியதை இக்கோயில் திருச்சுற்றுச்சுவரில் உள்ள தூண் ஒன்றில் பொறிக்கப்பட்ட கி.பி. 1659–ம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு தெரிவிக்கிறது. கி.பி. 9–ம் நூற்றாண்டில் ஆய் மன்னர் கோக்கருநந்தடக்கன் காலத்தில் எடுப்பிக்கப்பட்ட இக்கோயில் கி.பி. 11–12–ம் நூற்றாண்டில் சோழபாண்டியர் ஆட்சியின் போதும் அதற்குப் பின்பும் கி.பி.18–ம் நூற்றாண்டு வரை விரிவாக்கம் பெற்று மாற்றமும் அடைந்துள்ளதைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

தென்பாறைக் குன்றம்

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டத்தில் தெரிசனங்கோப்பிலிருந்து சுமார் 1 கி.மீ தொலைவில் மண்ணடி ஊர் அருகே இக்குன்று அமைந்துள்ளது.

கி.பி. 13 –ம் நூற்றாண்டைச் சார்ந்த இவ்வூர்க் கல்வெட்டு 'வடபாறைக் குன்றம்' என இதனைக் குறிக்கிறது. தற்போதைய பெயர் இதற்கு நேர்மாறாகத் 'தென்பாறைக் குன்றம்' என அழைக்கப்பட்டு வருகிறது .

இவ்வூரிலுள்ள குன்றின் மீது கி.பி. 13 –ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட சிவன் கோயில் ஒன்றுள்ளது. இக் கோயிலின் முன்பாக உள்ள பலி பீடத்தில் கி.பி. 13 –ம் நூற்றாண்டு எழுத்தமைதியில் இரு வரிகளில் பொறிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டு காணப்படுகிறது .

" ஸ்வஸ்தி ஸ்ரீ வட பாறை குன்றம் வெடங்கன்ை
வயக்கனாயர் சமைச்ச பலிக்கல்.

இக்கல்வெட்டு இக்கோயில் பலிக்கல்லை வையக்கனாயர் செய்தளித்ததை குறிக்கிறது.

இக்கோயிலில் கி.பி. 13–ம் நூற்றாண்டைச் சேர்ந்த தட்சிணாமூர்த்தி, யோக நரசிம்மர் ஆகியோரின் சிலைகள் சிதிலமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

தேங்காப்பட்டணம்

இவ்வூர் விளவங்கோடு வட்டத்தில் நாகர்கோயிலிலிருந்து 35கி.மீ. தொலை விலும், குழித்துறையிலிருந்து 12 கி.மீ. தொலைவிலும் பைங்குளம் கிராமத்திற்கு அருகே மேற்கு கடற்கரையை ஒட்டி அமைந்துள்ளது.

ஆய் மன்னர்கள் ஆண்ட தெங்கநாடு என்ற நாட்டுப் பிரிவில் இவ்வூர் இருந் துள்ளது. தெங்கநாடு என்ற சொல்லிலிருந்தே தற்போதைய பெயரான தேங்காப்பட்டினம் தோன்றியிருக்கலாம். பண்டைக் காலத்தில் வணிகத் தொடர்புள்ள கடற்கரைப்பட்டினமாக இவ்வூர் இருந்துள்ளது. குறிப்பாக கி.பி. 15–16–ம் நூற்றாண்டில் தேங்காப் பட்டினத்துடன் அரேபியர்கள் வணிகத்தொடர்பு கொண்டிருந்தனர். இங்கிருந்து பாம்புத்தோல், கருவாடு, சணல், சுறாமீனின் இறகு ஆகியன மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

இவ்வூரில் கடற்கரையை ஒட்டிப் பாறையின் மீது பழைய பள்ளிவாசல் ஒன்றுள் ளது. இது 'பாறைப் பள்ளிவாசல்' என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. பழைய கல் அம்பலத் தோற்றத்தினை ஒத்துள்ளது. அரேபியக் கடல்வழிப்பயணிகள் வழிபாடு செய்து செல்வதற்காகக் கட்டப்பட்டிருக்கலாம்.

விக்டோரியா மகாராணி முடி சூட்டியதன் நினைவாக இவ்வூரில் கால்வாய் ஒன்று அனந்தமார்த்தாண்டவர்மா காலத்தில் ஏ.வி.எம் கனால் (AVM Canal) எனப் பெயரிடப் பட்டது.

தேரூர்

அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் சுசீந்திரத்திற்கு மேற்கே சுமார் 3 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இந்திரன் ஞானாரண்யம் வந்தபோது இங்கு தேரை நிறுத்தி விட்டுச் சென்றதால் தேரூர் எனப் பெயர் பெற்றதாகக் கூறுவர்.

இங்குள்ள இளையநயினார் கோயில் பழமையான கோயிலாகும். இங்கு மூலவராக முருகனும் அவருக்கு இடப்புறமாகக் குத்திட்டு அமர்ந்த நிலையில் வள்ளியும் காணப் படுகின்றனர். முருகனுக்கு இளையநயினார் என்ற மற்றொரு பெயருமுண்டு. இவ்விரு கடவுளர் சிற்பங்களும் கி.பி. 11–ஆம் நூற்றாண்டை சார்ந்தவையாகலாம். முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் இதன் அருகே சிவனுக்காகத் தனிச் சன்னதி ஒன்றும் கட்டப்பட்டுள்ளது.

முதலாம் இராஜேந்திர சோழனின் (கி.பி. 1012–1044) 3–வது ஆட்சியாண்டில் இம்மன்னனின் சோழ அதிகாரியான இராஜேந்திர சோழ தமிழப் பல்லவரையன் என்பவன்

இக்கோயிலுக்கு சில நிலங்களை விலைக்கு வாங்கி அதிலிருந்து வரும் விளைச்சலில் நெல் கொடையாக வழங்கியதை இக்கோயிலின் தென் சுவரின் அதிட்டானப் பகுதியில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு தெரிவிக்கிறது. இந்நிலத்தை அப்பிவேளான் என்பவன் காராண்மைக் காணியாக எடுத்துக் கொண்டு இக்கோயிலுக்கு **ஆடவல்லான் எண்ணாழிக்காலால் 60** கலம் நெல் அளந்து கொடுக்க சம்மதம் தெரிவித்ததையும் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. நெல் அளக்கும் மரக்காலுக்கு 'ஆடவல்லான்' எனப் பெயர் வழங்குவது சோழர் மரபாகும். சோழர்கள் சைவர்களாக இருந்ததால் ஆடவல்லான் என்ற நடராஜரின் பெயரை மரக்காலுக்கு சூட்டியுள்ளனர். இக்கல்வெட்டில் தேர் கரும்பழுவில் என்று தேரூர் குறிக்கப்பட்டுள்ளது. கரும்பழுவில் என்பது தற்போதைய கருப்புக்கோட்டையைக் குறிக்கிறது. தேரூரிலுள்ள பாணான்திட்டை என்ற இடத்தில் குளக்கரையில் அமைந்துள்ள எடுத்தாயிதமுடைய நயினார் சிவன் கோயில் தூண் ஒன்றில் சிபிச்சக்கரவர்த்தி தன் மகனைத் தேர்க்காலில் கொல்லும் சிற்பம் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது. கி.பி. 12–ம் நூற்றாண்டில் தேரூர் பன்னிரண்டு பிடாகைகளில் ஒரு பிடாகையாக இருந்துள்ளது. தேரூர்க் குளக்கரையில் பழைய சைவமடம் ஒன்றும் காணப்படுகிறது.

இவ்வூர்க் கல்வெட்டு அறிஞரும் மிகச்சிறந்த கவிஞருமான கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பிறந்த ஊராகும்.

நாகர்கோவில்

இவ்வூர் கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைமையிடமாக உள்ளது. அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் ஆரல்வாய்மொழி கணவாயிலிருந்து 12 கி.மீ. தொலைவில் திருவனந்தபுரம் – திருநெல்வேலி நெடுஞ்சாலையில் நாகர்கோவில் அமைந்துள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவே பெரிய நகரமாக உள்ளது.

இங்குள்ள நாகராஜா கோயிலை வைத்தே இவ்வூருக்கு நாகர்கோவில் என்ற பெயர் வழங்கப்பட்டு வருகிறது. இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கி.பி. 16–ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் இவ்வூரை "கோட்டாறான மும்முடி சோழபுரத்து நாகர் கோயில்" எனக் குறிக்கின்றன. கி.பி. 17–ஆம் நூற்றாண்டிலிருந்தே நாகர்கோவில் என்ற பெயர் தனித்து வழங்கப்பட்டு வருகிறது. சரலூர் மாடன்கோவிலுக்கு அருகிலுள்ள தனிக்கல் கல்வெட்டு வேணாட்டரசர் வீரகேரளவர்மர் காலத்தில் கி.பி. 1697–ல் பொறிக்கப்பட்டதே இதுகாறும் கிடைத்துள்ள கல்வெட்டுகளில் நாகர்கோவில் பெயரை தனித்துக் குறிப்பிடும் பழமையான கல்வெட்டாகும்.

இங்குள்ள நாகராஜா கோயில் கி.பி. 8–ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 16–ஆம் நூற்றாண்டின் இறுதி வரை (கி.பி. 1587 வரை) ஒரு சமணக் கோயிலாகவே இருந்துள்ளது. மூலவராகப் பார்சுவநாதரின் அடியவரான நாகராஜர் உள்ளார். இவருக்கு அபிசேகம் கிடையாது. அலங்காரப் பிரியராகவே உள்ளார். இக்கோயில் அர்த்தமண்டபத்தின் தூண்களில் மகாவீரர், பார்சுவநாதர், பத்மாவதி ஆகியோரின் முழு உருவ புடைச்

சிற்பங்களை இன்றும் காணலாம். இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கி.பி. 16–ஆம் நூற்றாண்டுத் தூண் கல்வெட்டுகள் கமலவாகன பண்டிதன் என்பவனும் நாராயணன் நயினான் குணவீர பண்டிதனும் நாகர்க்கும், நாகராசாவுக்கும் பள்ளிச்சந்தமாக நிலக் கொடை வழங்கியதைக் குறிக்கின்றன. இவ்விருவரும் நாகர்கோவிலிலேயே தங்கி யிருந்துள்ளனர் என்பதை கல்வெட்டு **நாகர்கோவிலில் பள்ளியுடைய** எனக் குறிக்கிறது. கி.பி. 1588இல் இக்கோயில் வைணவக் கோயிலாக மாற்றம் பெற்றுள்ளது. இவ் வாண்டைச் சேர்ந்த இக்கோயில் கல்வெட்டே முதலில் "நாகர் திருவனந்தாழ்வார்" எனக் குறிக்கிறது.

கி.பி. 1520–இல் வேணாட்டரசர் ஒவென்று மண்கொண்ட பூதலவீர ஸ்ரீவீர உதைய மார்த்தாண்ட வன்மர் சிறவாய் மூத்தவர் தன் பேரால் இக்கோயிலில் "வீரமாத்தாண்டன் சந்தி" என்ற பெயரில் உச்சிகாலப் பூசை நடத்துவதற்கு பள்ளிச் சந்தமாக நாஞ்சிநாட்டுக் கோட்டாரான மும்முடிச் சோழபுரத்தில் நிலம் விட்டுக் கொடுத்ததை இக்கோயில் கல்தூண் ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு குறிக்கிறது. கி.பி. 16–ஆம் நூற்றாண் டில் சமகாலச் சமண சமயத்தை வேணாட்டரசர் ஆதரித்ததற்கான சான்றாவணமாக இக்கல்வெட்டு விளங்குகிறது.

இக்கோயிலின் வெளிச் சுற்றிலுள்ள நாகரின் பேருருவக் கற்சிலைகள் கி.பி. 8–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். இதிலொன்றில் பார்சுவநாதர் தவம், மழை பொழிவது, தர்ணேந்திரன் நாகக் குடை பிடிப்பது, பத்மாவதி பாதத்தில் நாகர் தவம், தாமரை வைப்பது காட்டப்பட்டுள்ளன.

நாகர்கோவிலிலுள்ள வேணாட்டரசர்களின் இரண்டு அரண்மனைகளில் ஒன்று ராமவர்மா கார்த்திகைத் திருநாள் (கி.பி. 1758–1798) அரண்மனை தற்போதைய கோட்டாட்சியர் அலுவலகமாக உள்ளது. மற்றொன்று தற்போது மாவட்டக் கண்காணிப் பாளர் அலுவலகமாக இயங்கி வருகிறது. கேரளக் கலைப்பாணியில் இவ்வரண்மனை கள் கூம்பு வடிவ முகப்பும் கூரை ஓடுகளாலான கூரையுடன் அமைக்கப்பட்டுள்ளன. இவர் காலத்தில் கி.பி. 1784 இல் மாவட்டாட்சியர் அலுவலகத்திற்கு முன்பாக அஞ்சல் பெட்டியொன்று கட்டப்பட்டது.

நாகர்கோவிலிலுள்ள சீர்திருத்த கிறித்துவ தேவாலயம் தென்னிந்தியாவிலுள்ள சீர்திருத்த தேவாலயங்களில் பழமையானதும், பெரியதுமாகும். முழுக்க கிரேக்கக் கலைப் பாணியில் இவ்வாலயம் கட்டப்பட்டுள்ளது. திருவிதாங்கூர் மகாராணி பார்வதி பாயி காலத்தில் அவரது அனுமதியோடு இவ்வாலயம் கட்ட ரெவ. சார்லஸ் மீட் அவர்கள் நாகராஜாகோயில் யானைகளையும், சிறைக் கைதிகளையும் பயன்படுத்தினார். பெரிய கற்களைக் கொண்டு இக்கோயில் கட்டப்பட்டதால் மக்கள் வழக்கில் "கல்லுக் கோயில்" என்று வழங்கப்படுகிறது. இக்கிறித்துவ ஆலயம் கி.பி. 1819–ல் தொடங்கி கி.பி. 1848–இல் கட்டி முடிக்கப்பட்டது.

நட்டாலம்

விளவங்கோடு வட்டத்தில் நாகர்கோவிலிலிருந்து 34கி.மீ. தொலைவிலும் மார்த்தாண்டத்திலிருந்து சுமார் 4கி.மீ. தொலைவிலும் நட்டாலம் ஊர் அமையப் பெற்றுள்ளது.

குமரி மாவட்ட சிவாலய ஓட்டத்தில் காணும் பன்னிரு சிவாலயங்களில் இது பன்னிரண்டாவது சிவாலயமாகும். இங்கு சிவன்கோயில், சங்கர நாராயணர் கோயில், குச்சரி பகவதிஅம்மன் கோயில் மற்றும் இவ்வூர் மருதகுளத்தின் எதிரேயுள்ள வழி அம்பலம் ஆகியன நட்டாலம் கிராம வரலாற்றுக்கு வளம் சேர்ப்பவையாகக் காணப் படுகின்றன.

சங்கரநாராயணர் கோயில்: கி.பி. 16–ம் நூற்றாண்டில் எழுப்பப்பட்டதாகலாம். இக்கோயிலின் முன்பாக உள்ள பாறையின் மீது இதே நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட வட்டெழுத்துக் கல்வெட்டு கண்ணன் என்பவன் இக்கோயிலில் ஸ்ரீ நட்டாலம் ஆழ்வாரின் பலி பூசைக்கும், மகாபாரதம் வாசிப்பதற்கும் கோதைநல்லூரிலுள்ள சில நிலங்களைக் கொடையாக வழங்கியதைத் தெரிவிக்கிறது. கோயில் தூண்களில் வரிசையாகப் பாவை விளக்குகளும், அடியவர்களின் சிற்பங்களும் முழு உருவப் புடைச்சிற்பங்களாக வடிக்கப் பட்டுள்ளன. சங்கரநாராயணர் கோயிலுக்குப் பின்புறமாக உள்ள தெப்பக்குளத்தின் மறுகரையில் சிவன்கோயிலுள்ளது. இக்கோயிலின் தற்போதைய கட்டட அமைப்பு கேரளக் கலைப்பாணியில் செப்புத் தகட்டால் வேயப்பட்ட கூம்பு வடிவ விமானமும், செவ்வக கருவறையும், வட்ட வடிவ அதிட்டானமும் கொண்ட கோயிலாகக் காணப் படுகிறது. மூலவர் சுயம்புலிங்கமாக காணப்படுகிறார்.

சிவன்கோயிலுக்கு அருகே குச்சரி பகவதி அம்மன் கோயிலுள்ளது. இக் கோயிலின் கருவறையில் பட்டுப்போன நிலையில் குச்சரிசி மரம் தற்போது காணப்படு கிறது. கருவறையில் காணப்படும் ஏழு கன்னிமார், சாஸ்தா, விஷ்ணு ஆகிய கற்சிற்பங் கள் சுமார் 400 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான சிற்பங்களாகலாம்.

நட்டாலம் சிவன்கோயில் பேருந்து நிறுத்தத்திற்கு எதிரே உள்ள ரப்பர் தோட்டத் தில் பாழடைந்த நிலையில் உள்ள மடத்தைக் காணலாம். இம்மடத்தின் நுழைவாயில் தூண் ஒன்றில் இம்மடத்தைக் கட்டிய திருவிக்கிரமன்ரவி என்பவனின் முழு உருவப் புடைச் சிற்பமும் அவனது தலைக்கு மேலே 19 வரிகளில் வட்டெழுத்தில் கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு கொல்லம் 840 (கி.பி. 1665)–ல் திருவிக்கிரமன் ரவி என்பவன் இம்மடத்தைக் கட்டி அதில் தர்மகாரியங்கள் செய்வதற்குத் தானவிலைப் பிரமாணமாக நிலக்கொடை வழங்கியதைக் குறிக்கிறது. இம்மடத்திற்கு எதிரேயுள்ள மருத குளத்தை சுதகுளம் என இக்கல்வெட்டு குறிக்கிறது.

நெல்வேலி

இவ்வூர் விளவங்கோடு வட்டத்தில் மார்த்தாண்டத்திற்கு தென்மேற்கே 4 கி.மீ தொலைவில் குழித்துறைக்கு அருகே அமையப் பெற்றுள்ளது. இங்கு கி.பி.10–ம் நூ.ஆ.

சேர்ந்த பெருமாள் கோயிலொன்றும், வேணாட்டரசரால் பின்பு கட்டப்பட்ட கி.பி.12. நூ.ஆ சிவன் கோயிலொன்றும் அருகருகே ஒரே வளாகத்தில் காணப்படுகிறது.

பெருமாள் கோயில் கருவறை, அர்த்த மண்டபம் என்ற எளிய பழைய அமைப்பில் கற்றளியாகக் கட்டப்பட்டுள்ளது. பெருமாள் நின்ற கோலத்தில் வரதராஜப் பெருமாளாக மேலிருகரங்களில் ஏவுகின்ற சக்கரம் மற்றும் சங்கு ஏந்தி சுமார் 6 அடி உயரத்தில் பிரம்மாண்டமான தோற்றத்தில் காட்சியளிக்கிறார். இக்கோயிலின் அதிட்டானத்தில் மேற்புறப் பட்டியில் கி.பி 10–11 ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட தமிழ் கல்வெட்டு இக்கோயில் 'பெருமக்களிருபத்தொருவர்' கொண்ட சபை நிர்வாகத்தின்கீழ் இருந்துள் ளதையும் அவர்களின் பெயர்களையும் பட்டியலிடுகிறது. இப்பட்டியலில் சோமாசி, சேந்தன், முருகன் போன்ற பழம் பெயர்கள் காணப்படுகின்றன.

பெருமாள் கோயிலுக்கு அருகேயுள்ள சிவன்கோயில் வட்ட வடிவப் பிரகாரத்தினுள் செவ்வக வடிவக் கருவறை கொண்டு கேரளக் கலைப்பாணியில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் விமானம் மூன்றுதள வேசரவிமானமாகக் கட்டப்பட்டுள்ளது. நந்தி மண்டபத்தில் பாவை விளக்குகள் வரிசையாக அணி வகுக்கின்றன. இக்கோயிலைச் சுற்றி ஆங்காங்கே காணப்படும் கூரை ஓடுகள் இக்கோயிலின் விமானம் முன்பு கூரை ஓடுகள் மற்றும் தடிகளைக் கொண்டு அமைத்திருக்கலாம் என்று ஊகிக்க இடமளிக் கிறது.

இவ்விரு கோயில்களின் வளாகத்தில் தென்மேற்கு மூலையில் சாஸ்தாவுக் கென்று தனிச் சன்னதி உள்ளது. சாஸ்தா சுமார் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகலாம். அருகில் பாலகிருஷ்ணனுக்கும் தனி சன்னதி உள்ளது.

பஞ்சவன்காடு

இவ்வூர் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் நாகர்கோவிலில் பார்வதிபுரம் அருகே உள்ளது. இவ்வூரில் கிடைத்த தூண் கல்வெட்டு ஒன்று தற்போது பத்மனாபபுரம் அரண்மனைக் காட்சிக்கூடத்தில் உள்ளது. இக்கல்வெட்டு 'அஞ்சினான் புகலிடம்' பற்றிக் குறிக்கிறது. பழங்காலத்தில் ஆபத்துக் காலங்களில் ஆதரவற்றோர்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் இடங்களாக கோயில்கள், மசூதிகள், பண்டக சாலைகள் விளங்கின. இவை அஞ்சினான் புகலிடம் என அழைக்கப்பட்டன. இவற்றுக்கு தானம் அளித்த செய்தியையும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இங்கு கிடைத்த கி.பி. 11–12–ம் நூற்றாண்டை சேர்ந்த சோழர்காலக் கல்வெட்டு சேனனான சோழதேவர் வீரகேரள நல்லூர்க் குடிகளுக்கு அபயமளித்த அஞ்சினான் புகலிடத்திற்கு நிலம் தானமாக வழங்கிய செய்தியைத் தெரிவிக்கிறது.

கொல்லமாண்டு 863 (கி.பி. 1619) ஆம் ஆண்டைச் சேர்ந்த இவ்வூர்க் கல்வெட் டொன்று தற்போது பத்மனாபபுரம் அரண்மனைக் காட்சிக்கூடத்தில் வைக்கப்பட் டுள்ளது. நாஞ்சிநாட்டுக் கோட்டாறான மும்முடி சோழபுரத்து நாகர்கோவில் சங்குளங்கரை யிலிருக்கும் ஆதிமாமுனிவரின் ஊரும், ஊரவரும் பஞ்சவன்காட்டிலுள்ள சாலை

மடத்துக்கு தானப்பிறமாணமாக நிலமும், அணையும் விட்டுக் கொடுத்ததை இக் கல்வெட்டு பதிவு செய்கிறது. இம்மடத்தில் நாள்தோறும் தண்ணீரும், தீபமும் முடங் காமல் வழங்கி நடத்தி வர வேண்டுமெனவும் கல்வெட்டு குறிக்கிறது.

பறக்கை

இவ்வூர் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் நாகர்கோவிலுக்கு தென்மேற்கே 8 கி.மீ தொலைவில் அமையப் பெற்றுள்ளது. கல்வெட்டுகள் இவ்வூரை நாஞ்சி நாட்டு பிரம்ம தேயம் 'கிழால்மங்கலம்' என்றும் கிழார்மங்கலமான அபிமானமேரு சதுர்வேதி மங்கல' மென்றும், 'கிழார் மங்கல' மென்றும் குறிக்கின்றன. கி.பி. 1558 ஆம் ஆண்டு கல்வெட்டே முதன் முதலாக இவ்வூரைப் 'பறக்கை' எனக் குறிக்கிறது.

இவ்வூரின் பழமை காட்டும் சின்னங்களாக இங்குள்ள மதுசூதனப் பெருமாள் கோயில், வலிகொல்லி அம்மன் கோயில் மற்றும் அக்கரை மகாதேவர் கோயில் ஆகியன விளங்குகின்றன. மதுசூதனப் பெருமாள் கோயில் கி.பி. 10–ஆம் நூற்றாண்டில் முற்காலப் பாண்டிய மன்னன் சடையமாறன் காலத்தில் எடுப்பிக்கப்பட்டதாகும். இக்கோயில் வளாகத்திலுள்ள சப்தமாதர் கல்லில் இவனது கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. பாண்டியரின் இலச்சினையான இரு கயல்களுக்கு நடுவில் செண்டு வரைகோட்டுருவ மாக இக்கோயில் மேற்கு பிராகாரத் தரையில் காணப்படும் பலகைக் கல் ஒன்றில் மாடம் என்ற எழுத்துகளுடன் பொறிக்கப்பட்டுள்ளது. கி.பி. 12ஆம் நூற்றாண்டில் பாண்டிய மன்னன் ஸ்ரீவல்லபனால் இக்கோயில் திருத்திக் கட்டப்பட்டுள்ளது. இக் கோயிலின் உண்ணாழியின் வடக்குப்பக்க வாயிலின் தரையில் இவனது மெய்க் கீர்த்தி மட்டும் பொறிக்கப்பட்ட கல்வெட்டு காணப்படுகிறது. கி.பி. 15–ஆம் நூற்றாண்டில் வேணாட்டரசர்கள் காலத்தில் பழைய கோயில் முற்றிலுமாக மாற்றிக் கட்டப்பட் டுள்ளது. மூலவர் சுமார் 4½ அடி உயரத்தில் நின்ற கோலப் பெருமாளாகக் காட்சி யளிக்கின்றார். மூலவரைக் கல்வெட்டுகள் "மதுசூதன விண்ணவரெம்பெருமான்" எனக் குறிக்கின்றன.

இவ்வூரைச் சுற்றிலும் பிராமணர் குடியிருப்புகள் இருந்த பகுதியினை 'அகம்' என்றும் 'மங்கலச்சேரி' எனவும் கல்வெட்டுகள் குறிக்கின்றன. 'சங்கத்தழகர்' என்ற கோயில் சபையின் நிர்வாகத்தின்கீழ் இக்கோயில் இருந்துள்ளது என்பதை கி.பி. 15–ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது.

கோட்டாற்று சிற்பிகளில் முதன்மையாக விளங்கிய கொம்மண்டை நயினான் முதலியான சிற்பப்புறந்தரனுக்குக் கோயில் சபையார் நிலவிலைப் பிரமாணம் செய்தளித் ததை கி.பி. 1545ல் இக்கோயிலில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது. இவர் சிற்பத் தொழிலில் நிபுணராக இருந்திருக்க வேண்டும். இக்கோயிலின் முன் மண்டபத்தினை பூதல வீரராமவர்மன் கி.பி. 1587ல் எழுப்பி அவனது பட்டப்பெயரான செண்பகராமன் என்ற பெயரையே அம்மண்டபத்திற்குச் சூட்டி அவன் பெயராலேயே செண்பகராமன்சந்தி என்ற பூசையும் நடத்த ஏற்பாடு செய்தான்.

இக்கோயில் கல்வெட்டுகள் கொடையாக வழங்கப்பட்ட பணம் "நென்மேனி கலியுகராமன் பணம்" எனக் குறிக்கின்றன. கி.பி. 16–17–ஆம் நூற்றாண்டில் வேணாட் டரசர்கள் காலத்தில் புழக்கத்திலிருந்த பணமாகும். கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்ட இக்கோயிற்தேர் சிற்பக்கலைக்கூடமாக காட்சியளிக்கிறது. பறக்கை மதுசூதனப்பெருமாள் கோயிலிலிருந்து சுமார் 1½ கி.மீ. தொலைவில் 'வலிகொல்லி அம்மன்' கோயில் உள்ளது. இது கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் துர்க்கைக்காக எடுக்கப் பட்ட கோயிலாகும். இக்கோயில் அமைந்துள்ள இடத்தை பறக்கை கோயில் கல்வெட்டு "வலிகொல்லிக் கிழார் மங்கலம்" எனக் குறிக்கிறது. இங்குள்ள வயலினை 'வலி கொல்லிப் பற்றில்' எனக் கல்வெட்டு குறிக்கிறது. இறைவியின் பெயரே ஊருக்கும், வயலுக்கும் வைத்துள்ளதை இக்கல்வெட்டு மூலம் அறியலாம். இக்கோயிலின் முன் பிரகாரத்தில் பைரவர், காளி, மற்றும் துர்க்கை ஆகிய கி.பி. 16–ஆம் நூற்றாண்டு சிற்பங்கள் காணப்படுகின்றன.

பறக்கை கோயில் அமைந்துள்ள ஆற்றின் மறுகரையிலுள்ள அக்கரை மகாதேவர் கோயில் கி.பி. 10–ஆம் நூற்றாண்டில் முற்காலப் பாண்டியர் காலத்தில் எடுப்பிக்கப் பட்டதாகும். இக்கோயில் நந்தி முற்காலப் பாண்டியர் கலைப்பாணியில் அழகாக வடிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் திருச்சுற்றுச் சுவரின் வெளியே நிறுவப்பட்டுள்ள ஒரு குத்துக்கல்லில் கி.பி. 15–16 ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இதில் பிராமணர் குடியிருப்பு இருந்த பகுதி 'ஒன்றாம் அகம்' எனக் குறிக்கப்பட்டுள்ளது.

பறக்கை கோயிலுக்கு முன்பாக உள்ள குளத்தின் பெயர் 'செங்குளம்' என கி.பி. 1674 ஆம் நூற்றாண்டு கல்வெட்டு தெரிவிக்கிறது. இதன் கரையிலுள்ள விநாயகர் 'செங்குளக்கரை விநாயகர்' என அழைக்கப்படுகிறார்.

இங்குள்ள சந்திமாடசாமி கோயிலின் தூண் ஒன்றை கி.பி. 1816–இல் சந்தணக் குமார் என்பவர் செய்தளித்ததைக் குறிக்கிறது.

பார்த்திவபுரம்

இவ்வூர் விளவங்கோடு வட்டத்தில் நாகர்கோவிலிலிருந்து 40கி.மீ. தொலை வில், முஞ்சிறைக்கு அருகே அமைந்துள்ளது.

இவ்வூரின் பழமையினை அறிதற்கு முக்கிய சான்றாவணமாக விளங்குவது ஆய் மன்னன் கோக்கருநந்தடக்கனின் கி.பி. 864–ம் ஆண்டைச் சேர்ந்த செப்பேடு ஆகும். இச்செப்பேடு இவ்வூரைப் 'பார்த்திவசேகரபுரம்' எனக் குறிக்கிறது. கோக்கருநந்தடக்கன் இங்கு ஒரு விஷ்ணு கோயிலை கி.பி. 864–ல் எடுப்பித்துச் சாலை ஒன்றையும் நிறுவி னான் என இச்செப்பேடு தெரிவிக்கிறது. இச்சாலை தொண்ணூற்றைந்து சட்டர்களுக் காக நிறுவப்பட்டதைச் செப்பேடு குறிக்கிறது. ஒவ்வொரு வாரமும் அவர்கள் 'பாடம்' செய்யவேண்டிய பாட விவரங்களையும் விரிவாக இச்செப்பேடு தெரிவிக்கின்றது. இச்சாலை இருந்த இடம் தற்போது 'பாடகச்சேரி' என்றழைக்கப்படும் இடமாகலாம்.

மேலும், முஞ்சிறைச் சபையாரிடமிருந்து உழக்குடிவிளை என்ற நிலத்தை வாங்கி அதனை முடால நாட்டிலுள்ள பசுங்குளம் என்ற ஊரோடு இணைத்து இதன் எல்லைகளை வரையறுத்து பார்த்திவசேகரபுரம் ஊரை அமைத்து அதில் விஷ்ணு பட்டாரகர் கோயிலை எழுப்பினான் என இச்செப்பேடு தெரிவிக்கிறது.

இப்பெருமாள் கோயில் கி.பி. 9–ம் நூற்றாண்டில் எழுப்பப்பட்டு பல்வேறு மன்னர்களின் காலங்களில் பல மாற்றங்களைப் பெற்றுள்ளதை இக்கோயிலின் கட்டுமானங்கள் உணர்த்துகின்றன. பெருமாள் கோயிலின் அதிட்டானம் ஆய் மன்னர் காலத்தியது. பிற பகுதிகள் கி.பி. 10–15ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் மாற்றிக் கட்டப்பட்டுள்ளன. இக்கோயில் முன் மண்டபத்தின் வெளிச்சுவர்களில் யோக நரசிம்மர், கஜலட்சுமி, விஷ்ணு போன்ற புடைச் சிற்பங்கள் காணப்படுகின்றன. சுவர்களில் புடைச் சிற்பங்கள் காட்டுவது வேணாட்டார் கலைப்பாணியாகும்.

பெருமாள் கோயிலின் வெளி வளாகத்திலுள்ள அம்பாடி கிருஷ்ணன் கோயில் சோழபாண்டியர் காலத்தில் கி.பி. 11–ம் நூற்றாண்டில் எடுப்பிக்கப்பட்டதாகும். இதற்கு நேரெதிரே உள்ள இறைகண்டேஸ்வரர் கோயில் கி.பி. 12–ம் நூற்றாண்டுக்குப் பின்பு வேணாட்டரசர் காலத்தில் எழுப்பப்பட்டுள்ளது.

பெருமாள் கோயிலின் வெளிவளாகத்தில் தனியாக உள்ள சன்னதியொன்றில் குபேரன், தட்சிணாமூர்த்தி ஆகியோரின் பழமையான கற்சிற்பங்கள் உள்ளன. இச்சிற்பங்கள் கி.பி. 11–ம் நூற்றாண்டுக்கு முற்பட்டவையாகத் தோன்றுகின்றன.

கோயிலின் உட்பிரகாரத்தில் மண்டபத்தின் வலப்பக்கச் சுவரில் கி.பி. 11–ம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. பார்த்திவ சேகரபுரத்துப் பெருமக்கள் குளச்சைக் கோயில் குளங்கரையில் குறைவறக் கூடி பார்த்திவசேகரபுரத்து ஆழ்வார்க்கு ரக்ஷா போகமாகவும், கோட்டை கட்டவும், அகழி வெட்டுவதற்கும் அட்டில் பேராக நிலக் கொடையினைக் காரித்துறை கேரளன் ஆதிச்ச வர்மனாயின இராஜாதிராஜ வள்ளுவ நாடாழ்வானுக்கு வழங்கியதை இக்கல்வெட்டு பதிவு செய்கிறது.

இதே மண்டபச் சுவரின் இடப்புறம் பொறிக்கப்பட்டுள்ள மற்றொரு வட்டெழுத்துக் கல்வெட்டு குன்றத்தூரைச் சேர்ந்த காமன்தடக்கன் என்பவன் பார்த்திவசேகரபுரத்து தேவர்க்கு விருச்சிக விளக்கிற்காக நிலக் கொடை வழங்கியதைப் பதிவு செய்கிறது.

பெருமாள் கோயில் வெளிப் பிரகாரத்தின் தென்புறமுள்ள தனிப் பாறையில் பொறிக்கப்பட்டுள்ள துண்டுக் கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது. கோப்பரகேசரி பன்மராயின வீரசோழப் பெருமானடிகள் என இக்கல்வெட்டுக்குரிய மன்னன் பெயரை குறிக்கிறது. இவன் வீர இராஜேந்திர சோழனாகலாம். இவன் காலத்தில் இவனது அதிகாரியான பல்லவரையன் தருங்கைச் சங்கரன் இரணசிங்கன் என்பவன் இக் கோயிலுக்கு வெள்ளித் திருமேனி ஒன்று செய்தளித்து, நந்தா விளக்கு வைத்ததையும் இக்கல்வெட்டு பதிவு செய்துள்ளது.

இக்கோயில் நுழைவாயிலின் வடபுறம் உள்ள திருச்சுற்றின் அடிப் பகுதியில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு பார்த்திவசேகரபுரத்து பட்டாரகர்க்கு தூமா நாட்டு இடைக் குளத்தூரைச் சேர்ந்த பஞ்சவன் பிரம்மாதி ராஜனாயின குமரன் நாராயணன் என்பவன் இரண்டு நொந்தா விளக்குகள் அமைத்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. மேலும், இதனை எரிப்பதற்குப் படைத் தலைவர்கள் கண்ணன் மாணிக்கன் என்பவனும், பாகஞ்சிவீந்திரன் என்பவனும் ஆளுக்கு ஏழு எருமைகள் வீதம் கொடை அளித்ததை இக்கல்வெட்டு பதிவு செய்கிறது. மேலும், செங்கோடன், இவனது தம்பிமார் மற்றும் மருமக்கள் மடம், மாடம் மற்றும் சுற்று மண்டபம் கட்டுவதற்குக் கொடை கொடுத்ததை யும் இக்கல்வெட்டு பதிவு செய்கிறது.

புத்தன்துறை

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம் நாகர்கோவிலுக்கு நேர் தெற்கே சுமார் 12கி.மீ. தொலைவில் மேலகிருஷ்ணன்புதூர் அருகே கடற்கரையை ஒட்டி அமைந்துள்ளது புத்தன்துறை கிராமம். இங்குள்ள கிறித்துவ ஆலயத்திற்கு அருகே உள்ள கல்லறை வளாகத்தில் கி.பி. 19–ம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டு கல்வெட்டு கள் உள்ளன. இங்கு கணக்குப் பிள்ளையாக இருந்த சேவியர் முத்தையபிள்ளை என்பவர் கி.பி. 1891–ல் மரணமடைந்ததை இக்கல்லறைக் கல்வெட்டு தெரிவிக்கிறது. மேலும், இவர் 'மெட்ரிகுலேசன் பாஸ் பண்ணினவர்' எனவும் கல்வெட்டு குறிக்கிறது. இக்கால கட்டத்தில் மெட்ரிகுலேசன் தேர்வில் வெற்றி பெற்றவர் என்பது உயர் கல்வித் தகுதியாக கருதப்பட்டது.

இங்குள்ள மற்றொரு கல்வெட்டும் கணக்குப்பிள்ளை ஒருவரின் கல்லறைக் கல்வெட்டாகும். பிரான்சிஸ் கு. பர்ணாந்திஸ் என்பவர் இங்குள்ள கத்தோலிக்க கிறித்துவ ஆலயத்தில் 35 ஆண்டுகள் பாதிரியாராக பணிபுரிந்து விட்டு 1894–ல் இயற்கை எய்தியதை தெரிவிக்கிறது. இக்கத்தோலிக்க கிறித்துவ தேவாலயம் கி.பி. 1865–க்கு முன்பே இருந்துள்ளது இக்கல்வெட்டின் மூலம் தெரிய வருகிறது. இவரது மரணத்தை 'பிராண வியோகமாயினார்' என்ற வடமொழிச் சொல்லால் கல்வெட்டு குறிக்கிறது.

கி.பி. 1891–ல் இவ்வூரின் பெயர் பொழிகை நகர் என்றும், இதற்குப் பிறகு மூன்று ஆண்டுகள் கழித்து கி.பி. 1894–ல் இவ்வூரின் பெயர் கேசவன் புத்தன்துறை என்றும் இவ்விரு கல்லறைக் கல்வெட்டுகள் மூலம் தெரிய வருகிறது. தற்போது புத்தன்துறை என்றே வழங்கப்பட்டு வருகிறது. புத்தன்துறைக்கு அடுத்துள்ள ஊர் கேசவன்புத்தன்துறை என வழங்கப் பெறுகிறது.

புலியூர்க்குறிச்சி

இவ்வூர் கல்குளம் வட்டத்தில் நாகர்கோவிலிலிருந்து 14கி.மீ. தொலைவிலும் பத்மனாபபுரத்திற்கு தென் மேற்கே 2 கி.மீ. தொலைவிலும் திருவனந்தபுரம் – நாகர் கோவில் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது.

புலியூர்க்குறிச்சியிலுள்ள உதயகிரிக்கோட்டை தமிழக அரசின் பாதுகாக்கப் பட்ட வரலாற்றுச் சின்னமாகும் (Protected monument). இக்கோட்டை மண்கோட்டையாக கி.பி. 1600–ல் வேணாட்டரசர் ஸ்ரீ வீரரவி ரவிவர்மா (கி.பி. 1595–1607) காலத்தில் கட்டப்பட்டது. இம்மண்கோட்டைச் சுவர் கட்டுவதற்கு மங்கலம் முதல் மணக்குடி வரையிலுள்ள நாஞ்சில் நாட்டின் வடமீதி தென்மீதி நாட்டார் கொடை வழங்கியதை ஸ்ரீவீரரவி ரவிவர்மாவின் நீட்டு (அரசாணை) ஒன்று தெரிவிக்கிறது.

கி.பி. 1741–ல் நடைபெற்ற குளச்சல் போரில் வேணாட்டரசர் மார்த்தாண்ட வர்மாவினால் (கி.பி. 1729–1958) பிணைக் கைதியாகப் பிடித்துவரப்பட்ட டச்சுப் படை வீரர் டிலெனாயின் மேற்பார்வையில் இம்மண்கோட்டைச் சுவர் கற்கோட்டைச் சுவராக கி.பி. 1741–1744–க்கு இடைப்பட்ட காலத்தில் மாற்றிக் கட்டப்பட்டது. உதயகிரிக் கோட்டை வேணாட்டரசின் முக்கிய இராணுவ மையமாக கி.பி. 1744–லிருந்து கி.பி. 1809 வரை இருந்துள்ளது. டிலெனாயி மேற்பார்வையில் திருவிதாங்கூர் படையினருக்கு ஐரோப்பிய முறையிலான போர்ப் பயிற்சியும், ஆயுதங்களும் வழங்கப்பட்டன. இராணுவ தளவாடங்கள் இக்கோட்டையிலேயே தயாரிக்கப்பட்டுச் சேமித்து வைக்கப்பட்டன. கி.பி. 18–19–ம் நூற்றாண்டுகளில் இக்கோட்டை சிறைக்கூடமாகவும் பயன்பட்டுள்ளது. திருவிதாங்கூர் அரசு விரிவாக்கத்தில் உதயகிரிக்கோட்டை முக்கியப் பங்காற்றியுள்ளது.

இக்கோட்டையில் டிலெனாயி வழிபட்ட கிறித்துவ தேவாலய வழிபாட்டுக் கூடத் தில் ஏழு கல்லறைகள் உள்ளன. இக்கல்லறைகளில் ஐந்தில் இலத்தீன் மற்றும் தமிழில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. மற்ற இரண்டு கல்லறைகளில் ஆங்கிலத்தில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டில் டிலெனாயி 'வலிய கப்பித்தான்' (Great captain) என்றும் அவருடைய மகன் யுவான் டிலெனாயி 'செரிய கப்பித்தான்' (Small captain) எனவும் குறிக்கப்பட்டுள்ளனர்.

உதயகிரிக்கோட்டையின் வடக்குச் சுவரையொட்டி வெளிப்பக்கம் சுரங்கம் போன்ற அமைப்புக் காணப்படுகிறது. இதன் நுழைவாயில் கிழக்கு நோக்கிக் காணப் படுகிறது. இது நிலவறையாகவும் இருக்கலாம்.

புலியூர்க்குறிச்சி தெரசர் குளக்கரையை ஒட்டி சதிக்கல் ஒன்றுள்ளது. ஆண் அமர்ந்த கோலத்தில் குறுவாளை வலக்கரத்தில் கீழ்நோக்கிப் பிடித்த நிலையிலும் பெண் கண்ணாடியை வலக்கரத்தில் உயர்த்திப் பிடித்த நிலையிலும் காணப்படுகின்றனர். இச்சிற்பங்கள் கி.பி.16–17ம் நூற்றாண்டை சாந்தவையாகலாம். இச்சிற்பம் தற்போது கன்னியாகுமரி அரசு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

புன்னார்குளம்

இவ்வூர் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் மயிலாடிக்கு அருகே மருந்துவாழ் மலை யிலிருந்து உசரவிளைக்குச் செல்லும் சாலையின் சந்திப்பில் உள்ளது. கி.பி. 18–ம் நூற்றாண்டில் கன்னியாகுமரியிலிருந்து ஆரல்வாய்மொழி வரை கட்டப்பட்ட கோட்டைச் சுவர் இவ்வூர் வழியாகச் செல்கிறது. அதன் எச்சங்களை இன்றும் காணலாம். யானை மற்றும் குதிரைகள் நீர் குடிக்கும் கல்தொட்டி ஒன்றும் இங்குள்ளது.

இவ்வூரிலுள்ள சுமைதாங்கிக் கல்லில் கொல்லம் 998–ம் (கி.பி. 1823) ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. மலையாம் இரண்டாம் பட்டாளத்தில் (நாயர் பிரிகேடு) கும்பினியார் படைப்பிரிவில் பணிபுரிந்த இரணியல் ஊரைச் சேர்ந்த இராமன் பிள்ளையின் நினைவாக இச்சுமைதாங்கிக்கல் நிறுவப்பட்டுள்ளது தெரிய வருகிறது. இவர் இங்கிருந்த கோட்டையின் காவல் பணியில் இருந்தவராகலாம். இவரின் முழு உருவக் கற்சிற்பமொன்றும் இச்சுமைதாங்கிக் கல் அருகே கிடைத் துள்ளது. (தற்போது இச்சிற்பம் கன்னியாகுமரி அரசு அருங்காட்சியத்தில் உள்ளது.) படைவீரன் ஒருவனின் நினைவாக நிறுவப்பட்ட இச்சுமைதாங்கிக் கல் நடுகல்லின் மறு வடிவமாகலாம்.

பூதப்பாண்டி

இவ்வூர் தோவாளை வட்டத்தில் நாகர்கோவிலிருந்து 12கி. மீ தொலை விலும், ஆரல்வாய்மொழிக்கு வடகிழக்கே 9 கி.மீ தொலைவிலும் நாகர்கோவில் – பாலமோர் சாலையில் தாடகை மலையடிவாரத்தில் அமையப் பெற்றுள்ளது.

ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியனால் நிறுவப்பட்ட ஊராக இவ்வூர் கருதப் படுகிறது. இம்மன்னனின் பெயராலேயே இவ்வூரின் பெயர் பூதப்பாண்டி என வழங்கப் பட்டு வருவதாக மரபு வழியாக பேசப்படுகிறது. இம்மன்னன் இயற்றிய நான்கு பாடல்கள் புறநானூற்றிலும், அகநானூற்றிலும் காணப்படுகின்றன. இவ்வூரிலுள்ள பூதலிங்கசாமி சிவன் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கி.பி. 16–17 –ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகளில் இவ்வூரின் பெயர் ' நாஞ்சி நாட்டு பூதப்பாண்டி' என்றும் 'பூதைப்பாண்டி' எனவும் குறிக்கின்றன.

பூதலிங்கசாமி மூலவர் காணப்படும் கருவறை குடைவரையாக உள்ளது. இக் குடைவரைக் கோயிலே முதலில் மூலக் கோயிலாக இருந்திருக்க வேண்டும். கி.பி. 8–9–ஆம் நூற்றாண்டில் முற்காலப் பாண்டியர் காலத்தில் குடையப்பட்டிருக்கலாம். இயற்கை யாக அமைந்த பாறையில் இக்கோயில் குடையப்பட்டுள்ளது.

இக்கோயிலின் அம்மன் சன்னதி உட்பட இக்கோயில் 1478–1691–க்கு இடைப்பட்ட காலத்தில் வேணாட்டரசர்களால் எழுப்பப்பட்டுள்ளதை இக்கோயில் கல்வெட்டுகள் மூலம் அறியலாம். இக்கல்வெட்டுகள் மூலவரை 'நயினார் பூதைப் பாண்டீச்சுரமுடைய நயினார்' என்று குறிக்கின்றன. வேணாட்டரசன் இரவிவர்மரான சிறைவாய் மூத்த தம்பிரான் (கி.பி. 1651–1659) அரண்மனை பூதப்பாண்டியில் இருந்ததை கோயில் கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது. இவ்வூரின் சாலையோரத்தில் நிறுவப்பட்டுள்ள தனித் தூண் கல்வெட்டு ஒன்று உதைய மார்த்தாண்டன் பெருந்தெரு, பூதலராமன் பெருந்தெரு ஆகிய தெருக்கள் அஞ்சினான் புகலிடமாக இருந்துள்ளதைக் குறிக் கிறது. வேணாட் டரசர்களின் பெயரால் இவ்விரு தெருக்களுக்கும் பெயர் சூட்டப் பட்டுள்ளது. ஆதரவற்ற நிலையில் அபயக் குரலெழுப்பிப் பாதுகாப்பு வேண்டுவோர்க்குப் புகலிடம் அளிக்கும் காப்பகங்கள் '**அஞ்சினான் புகலிடம்**' என கல்வெட்டுகள் குறிக் கின்றன. கி.பி. 16 –ஆம் நூற்றாண்டு சின்னமுட்டம் கல்வெட்டொன்று வழிபாட்டுக்கூடமே

மீனவர்களுக்கு அஞ்சினான் புகலிடமாக இருந்ததைத் தெரிவிக்கிறது. கி.பி. 15–16–ஆம் நூற்றாண்டில் வென்று மண் கொண்ட பூதல வீர உதைய மார்த்தாண்ட வர்மன் (கி.பி. 1478) காலத்திலும் வென்று மண் கொண்ட பூதலவீர இராமவர்மன் (கி.பி. 1478) காலத்திலும் பூதப்பாண்டி யிலிருந்த இரு பெரும் தெருக்களில் 'அஞ்சினான் புகலிடங்கள்' அமைக்கப் பட்டிருந்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. கி.பி. 1619–ல் அம்மன் சன்னதியில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு குலசேகரப் பெருமாள் பெருந்தெரு என்ற வேணாட்டரசன் பெயரால் வழங்கப்பட்ட மற்றொரு தெரு பற்றிக் குறிப்பிடுகிறது.

பூதப்பாண்டி சாலையில் நிறுவப்பட்ட கி.பி. 1692 –ஆம் ஆண்டைச் சேர்ந்த தூண் கல்வெட்டொன்று பூதப்பாண்டியில் குடியிருந்த சாலியர் சமூகத்தைச் (நெசவாளர்) சேர்ந்தோரைப் புலம் பெயர்த்து வடசேரியில் சாலியத் தெரு என்ற தெருவைத் தனியாக உருவாக்கிக் குடியமர்த்தி அவர்களுக்கு வழங்கிய சில சலுகைகளைப் பதிவு செய் துள்ளது. பூதலிங்கசாமி கோயில் மூலவர் 'சாலியன் கண்ட திருமேனி' என அழைக்கப் படுகிறார்.

பூதப்பாண்டி ஊருக்கு அருகே அமைந்துள்ள தாடகை மலையின் உச்சியில் இராமாயணத் தாடகை படுத்திருப்பது போல இயற்கையாக காணப்படுவதால் இம்மலை தாடகை மலை என மக்களால் அழைக்கப்பட்டு வருகிறது.

மணவாளக்குறிச்சி

கல்குளம் வட்டத்தில் மணவாளக்குறிச்சி கிராமத்திலுள்ள பெரியகுளக் கரையி லுள்ள எழுத்திட்டான் பாறையின் மீது முதலாம் இராஜராஜ சோழனின் (கி.பி. 985–1012) 27–ஆவது ஆட்சியாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. 20 வரிகளில் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டு தற்போது பல இடங்களில் பொறிந்து போயுள்ளது. கி.பி. 1012–ல் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டு பெரியகுளக்கரையைப் பராமரிப்பதற்காகப் பெரிய குளப்பாசனத்திற்குட்பட்ட தேவதானம், மற்றும் ஆதிக்குடி (பள்ளிச்சந்தம் நீங்கலாக) நிலங்களின் விளைச்சலில் 'இடையன்கரைக் காலால்' அளந்து கொடுத்த நிலங்களிலிருந்து வரும் விளைச்சல் நெல் இக்கரையார்க்கு வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கத் தவறுபவர்களிடமிருந்து ஒவ்வொரு பொன்னுக்கும் ஐந்து கழஞ்சு பொன் தண்டமாக வசூலிக்க வேண்டுமெனவும், இவ்வாறு வசூலிக்கப் படும் தண்டமும் இக்குளக்கரையைப் பராமரிப்பதற்கே செலவிட வேண்டுமெனவும் இக் கல்வெட்டு தெரிவிக்கிறது.

இக்கல்வெட்டுக்கு அருகிலேயே கி.பி. 13–ம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட மற்றொரு தமிழ் கல்வெட்டு காணப்படுகிறது. இக்கல்வெட்டும் மிகவும் பொறிந்து போயுள்ளது. பெரியகுளத்துக் கரையைக் கட்டும் கற்தச்சன் கரை கண்டேஸ்வரத்து தேவரடியான் பெண்டிசானி ஆதிச்சன் என்பவனுக்கு சேரமங்கலம் ஊர்ச் சபையும், கடியபட்டினத்து ஊராரும் சேர்ந்து பிழைப்புக்காக நிலமளித்து அதில் வரும் வருவா யி லிருந்து அவன் வாழ்வுக்கு உத்தரவாதமளித்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

மருங்கூர்

இவ்வூர் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் நாகர்கோவிலிலிருந்து 12கி.மீ. தொலைவில் சுசீந்திரத்திலிருந்து ராஜாவூர் செல்லும் சாலையில் அமைந்துள்ளது.

இங்குள்ள குன்றின் மீது அமைந்துள்ள குமரன்கோவில் பழமையானதாகும். முதலாம் இராஜேந்திர சோழன் (கி.பி. 1012–1044) காலத்தில் கட்டப்பட்ட இக்கோயில் பின்பு வேணாட்டரசர்கள் காலத்தில் முற்றிலுமாக மாற்றிக் கட்டப்பட்டுள்ளது. இராஜேந்திரனின் கல்வெட்டு பொறிந்து போயுள்ளது.

கி.பி. 1608–ல் நாஞ்சிநாட்டு மருங்கூரான சீ பத்மனாபநல்லூரிலிருக்கும் சூரனை வென்ற பெருமாள் ஆதிச்சன் என்பவன் பூதப்பாண்டிச்சுரமுடைய நயினாருக்கு பூசைக்காகக் கொடை வழங்கியதை பூதப்பாண்டி கோயில் கல்வெட்டு தெரிவிக்கிறது. மருங்கூருக்கு மேற்கே அருகே நல்லூர் என்ற ஊர் தற்போது உள்ளது. இதனையே கல்வெட்டு பத்மனாபநல்லூர் எனக் குறிக்கிறது.

நல்லூரிலுள்ள பாழடைந்த மண்டபத்திலுள்ள தூண் கல்வெட்டு கி.பி. 1726–ம் ஆண்டைச் சார்ந்ததாகும். நாஞ்சி நாட்டு நல்லூரிலுள்ள தாணுவிநாயகப் பிள்ளையாருக்கு இவ்வூரில் வாழும் காலகுட்டிதாணுவன் உள்ளிட்டார் நிலம் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது. இக்கல்வெட்டு 'கொல்லன்விளை' என்ற இடத்தைக் குறிக்கிறது. மருங்கூர் முருகன் கோயிலுக்கு அருகிலேயே இவ்விடம் உள்ளது. இங்கு கொல்லன் பட்டறை பெரிய அளவில் நடைபெற்று வந்ததை இப்பகுதியில் ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் இரும்பு கசடுகள் உறுதிப்படுத்துகிறது.

மருங்கூருக்கு தெற்கே சுமார் 1 கி.மீ. தொலைவில் இராமனாதிச்சன்புதூர் என்ற ஊருக்கு அருகே கி.பி. 18–ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோட்டைச் சுவரின் எச்சங்களைக் காணலாம். இது மன்னர் மார்த்தாண்டவர்மா காலத்தில் (கி.பி. 1729–1758) கன்னியாகுமரியிலிருந்து ஆரல்வாய்மொழி வரை கட்டப்பட்ட கோட்டைச் சுவரின் எச்சமாகும். சேர நாட்டிற்கும் பாண்டி நாட்டிற்கும் இடையேயான எல்லையாக இக்கோட்டைச் சுவர் அமைக்கப்பட்டது. இக்கோட்டைக் காவல் பணியிலிருந்தோர் தங்குவதற்கு அருகே மடம் ஒன்றும் கட்டப்பட்டது.

கி.பி. 1699–ல் ப்ரைட் சா என்பவரால் மருங்கூரில் கத்தோலிக்க கிறித்துவ தேவாலயம் ஒன்று கட்டப்பட்டது. இத்தேவாலயம் மருங்கூரிலிருந்து இராமனாதிச்சன் புதூர் செல்லும் வழியில் தற்போது சிதிலமடைந்த நிலையில் காணப்படுகிறது.

மார்த்தாண்டம்

நாகர்கோவிலுக்கு வடமேற்கே சுமார் 30கி.மீ. தொலைவில் குழித்துறைக்குத் தெற்கே 2 கி.மீ தொலைவிலும் இவ்வூர் அமைந்துள்ளது. இதன் பழைய பெயர் தொடுவெட்டி ஆகும். தற்போதும் இப்பெயர் மக்கள் வழக்கில் உள்ளது. இங்கு கிடைத்த தூண்கல்வெட்டு ஒன்று தற்போது பத்மனாபபுரம் காட்சிக் கூடத்தில் வைக்கப்பட்டுள்ளது. கொல்லமாண்டு 819 (கி.பி. 1644)–ல் இக்கல்வெட்டு வெட்டப்பட்டு கோடாலி

அம்பலத்தில் நாட்டப்பட்டதாக இக்கல்வெட்டின் மூலம் தெரிய வருகிறது. வேணாட்டரசர் இரவிவர்மரான சிறவாய் மூத்தவர் தலைக்குளத்தில் எழுந்தருளியிருந்தபோது வெளி யிட்ட ஆணையே இக்கல்வெட்டுச் செய்தியாகும். முக்கிய சமூக வரலாற்றுப் பின்னணி கொண்டதாக இக்கல்வெட்டு விளங்குகிறது.

நாடார்சனம் எழுதி வைத்த தண்டத்தின்படி அக்காலத்தில் மக்களால் தொழப்பட்ட விளக்குன்னத்தைச் சேர்ந்த குலசேகரப்பெருமாள் நாடார் மக்களோடும், ஒடுக்கப்பட்ட சமூகத்தவரோடும் சேர்ந்து வாழ வேண்டும் என மன்னன் ஆணையிட்டுள்ளதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

முஞ்சிறை

முஞ்சிறை விளவங்கோடு வட்டத்தில் குழித்துறையிலிருந்து 7.கி.மீ. தொலை வில் மார்த்தாண்டம் – தேங்காப்பட்டினம் சாலையில் அமையப் பெற்றுள்ளது.

இவ்வூரிலுள்ள திருமலை மகாதேவர் சிவன் கோயிலும், பழைய மடமொன்றும் ஆய்மன்னன் கோக்கருநந்தடக்கனின் செப்பேடும் ஊர் வரலாற்றிற்குச் சான்றாதாரங் களாக அமைகின்றன. ஒரு சிறிய குன்றின் மீது அமையப் பெற்றுள்ள திருமலைக் கோயில் பிற்காலச்சோழர் காலத்தில் கி.பி.11–ம் நூற்றாண்டில் எடுப்பிக்கப்பட்ட தாகும். குமரிமாவட்டத்தில் அரியும், சிவனும் ஒன்று என்ற தத்துவத்தை விளக்கு வதாக மேற்கொள்ளப்படும் பன்னிரு சிவாலய ஓட்டக் கோயில்களில் திருமலைக் கோயிலும் ஒன்றாகும். சிவாலய ஓட்டம் இக்கோயிலிலிருந்துதான் தொடங்குகிறது. கி.பி. 11–ம் நூ.ஆ. கல்வெட்டுகள் இவ்வூரை 'முன்சிறை' என்றும் இறைவனை "திருமலை மேல்பட்டாரர்" எனவும் குறிக்கிறது. இக்கோயிலில் 'நியதி ஊட்டுக்கு' கீழப்பேரூர் வீரகேரள மார்த்தாண்டவர்மன் கொல்லம் 610–ல் (கி.பி.1434) கொடை வழங்கியதை உட்பிரகாரத்தின் கல்லில் பொறிக்கப்பட்ட ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது. இக் கல்வெட்டு ஊர் முன்னொட்டோடு இறைவனை "முஞ்சிறை மாதேவர்' எனக் குறிக்கிறது.

இக்கோயிலின் முன்மண்டபம் கி.பி. 19–ம் நூற்றாண்டில் கட்டப்பட்டுள்ளது. இம்மண்டபத்துத் தூண்களை நிறுவிய கொடையாளர்களின் பெயர்கள் அத்தூண்களில் பொறிக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் 19–ம் நூற்றாண்டு கவ்வெட்டுக்களாகும்.

ஆய் மன்னன் கோக்கருநந்தடக்கனின் முஞ்சிறைச் செப்பேடு (கி.பி.864–65) இம்மன்னன் முஞ்சிறையை அடுத்து பார்த்திவ சேகரபுரம் என்ற ஊரைத் தோற்றுவித்துப் பெருமாள் கோவில் ஒன்று கட்டுவித்ததையும், அங்கு ஒரு காந்தலூர் சாலை போன்ற சாலையை நிறுவியதையும் இச் செப்பேடு தெரிவிக்கிறது.

முட்டம்

இவ்வூர் கல்குளம் வட்டத்தில் நாகர்கோவிலிலிருந்து ராஜாக்கமங்கலம் வழியாக 17 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. குளச்சல் அல்லது மண்டைக்காட்டிலிருந்தும் இவ்வூரைச் சென்றடையலாம். இங்கு கடற்கரையினை ஒட்டிய பகுதியில் கி.மு. 4000

காலத்தினைச் சேர்ந்த நுண்கற்காலக் கருவிகளும், அவை செய்யப் பயன்படுத்தப்பட்ட மூலக்கற்களும் கிடைத்துள்ளன. இக்கருவிகள் செர்ட் மற்றும் குவார்ட்ஸ் மூலக் கற்களால் ஆனவையாகும். முட்டம் துறைமுகமாக இருந்துள்ளது. இங்கு கி.பி. 1875–ல் கலங்கரை விளக்கம் (Light House) ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இது ஆறு பக்கங்களைக் கொண்டு வெள்ளை மற்றும் கருப்பு வண்ணப் பட்டைகள் தீட்டப்பட்ட கோபுரமாகக் காட்சியளித்தது. கி.பி. 1909–ல் இது மீண்டும் சீரமைக்கப்பட்டுள்ளது. இங்கு கடலுக்குள் நீண்டு வரும் 'முதலைப் பாறை' என்றழைக்கப்படும் பாறை கடற்பயணிகளுக்கு மிகவும் பழக்கப்பட்ட ஒன்றாகும். முட்டத்தில் கிடைத்த நுண்கற்காலக் கருவிகள் தற்போது கன்னியாகுமரி அரசு அருங்காட்சியகத்தில் காட்சிப் பொருளாக வைக்கப் பட்டுள்ளன.

மேலாங்குளம்

இவ்வூர் விளவங்கோடு வட்டத்தில் மார்த்தாண்டத்திலிருந்து சுமார் 7 கி.மீ. தொலைவில் குன்னத்தூர் கிராமத்திற்கு அருகே மார்த்தாண்டம் – தேங்காப்பட்டினம் சாலையில் அமைந்துள்ளது.

கார்த்திகைத் திருநாள் ராமவர்மாவிடம் (கி.பி. 1758–1798) பணிபுரிந்தவரும் திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் முதல் திவானாகப் பணியாற்றியவருமான ராஜாகேசவ தாஸ் அவர்களின் வீடு இங்குள்ளது. 'காரவிளாகத்து புத்தன் வீடு' என்ற பெயரில் வழங்கப்படுகிறது. இவ்வீட்டில் இன்றும் ராஜாகேசவதாஸ் வழி வந்த ஆண் வாரிசுகள் வசித்து வருகின்றனர். 'தளவாய்' பதவியே இவர் காலத்திலிருந்து 'திவான்' பதவியாக மாற்றம் பெற்றது. இவர் கி.பி. 1788–1798 வரை திவானாகப் பதவி வகித்தார். இவர் திவானாகப் பதவி வகித்த காலத்திலேயே மேலாங்குளத்திலுள்ள இவ்வீடு கட்டப் பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனியாருடன் இவர் கொண்டிருந்த நல்லுறவின் காரணமாக இவருக்கு 'ராஜா' என்ற பட்டம் வழங்கப்பட்டு அது முதல் 'ராஜா கேசவதாஸ்' என அழைக்கப்பட்டார். இவர் பயன்படுத்திய வாள் மற்றும் கேடயம் தற்போது பத்மனாபபுரம் அரண்மனைக் காட்சிக் கூடத்தில் வைக்கப்பட்டுள்ளது.

வடசேரி

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், நாகர்கோவிலையொட்டி வடசேரி அமைந்துள்ளது. பழைய கோட்டாற்றுக்குட்பட்ட பகுதியாக இருந்துள்ளது. இங்குள்ள கொம்மண்டை அம்மன் கோயில், சோழராஜா கோயில், கிருஷ்ணன் கோயில், செப்பேடுகள், நாயக்கர் கல்வெட்டுகள் புனித இன்னாசியார் குருசடி ஆகியன வடசேரியின் பழைய வரலாற்றுத் தகவல்களை அளிக்கும் சான்றாதாரங்களாக அமைகின்றன.

முதலாம் இராஜராஜனின் கொம்மண்டை அம்மன் கோயிற் கல்வெட்டு இவ்வூரை 'இராஜராஜ வளநாட்டு நாஞ்சி நாட்டுத் திருக்கோட்டாற்று வடசேரி' எனவும் இக்கோயில் மூலவரை 'பிடாரியார் கொம்மண்டை நங்கை' என்றும் குறிக்கிறது. சோழராஜா

கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள ஜடாவர்மன் சுந்தரசோழபாண்டியனின் கல்வெட்டுகள் இவ்வூரை இராஜராஜ பாண்டிநாட்டு உத்தமசோழ வளநாட்டு நாஞ்சில் நாட்டுத் திருக் கோட்டாறான மும்முடிச்சோழ நல்லூர் என்றும் இறைவனை இராஜேந்திர சோழீஸ்வர முடையார் எனவும் கி.பி. 13–14–ம் நூற்றாண்டுகளுக்கிடையில் வேணாட்டரசர்கள் காலத்தில் இவ்வூர் திருக்கோட்டாறான சோழ கேரளபுரம் எனவும் குறிக்கிறது.

கி.பி. 10–12–ம் நூற்றாண்டுகளுக்கிடையில் வடசேரி உள்ளிட்ட கோட்டாற்றுப் பகுதிகளில் சோழரின் ஆதிக்கம் இருந்துள்ளது. முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் சோழரின் நிலைப்படையொன்று இங்கு நிறுத்தப்பட்டிருந்தது. கி.பி. 13–ம் நூற்றாண்டில் வேணாட்டரசர்களின் ஆளுகைக்குட்பட்ட பகுதியாக வடசேரி இருந்துள் ளது கி.பி. 14–ம் நூற்றாண்டில் பிற்காலப் பாண்டியரின் ஆளுகையின்கீழ் சுமார் 13 வருடங்கள் வடசேரி இருந்துள்ளது. பராக்கிரம பாண்டியன் (கி.பி. 1357–1372) தனது 15–வது ஆட்சியாண்டில் சோழராஜா கோயிலைப் புதுக்கியதாக இவனது கோயில் கல்வெட்டொன்று தெரிவிக்கிறது. கி.பி. 16–ம் நூற்றாண்டில் விஜயநகரப் படையெடுப் பின் போது புனித சவேரியார் வடசேரியில் அதனைத் தடுத்துப் பின்வாங்கச் செய்தார் என மக்கள் வழக்கில் இன்றளவும் பேசப்பட்டு வருகிறது. தற்போது இவ்விடத்தில் புனித இன்னாசியார் தேவாலயம் உள்ளது. கி.பி. 15–ம் (கி.பி. 1464) நூற்றாண்டைச் சேர்ந்த வடசேரி கிருஷ்ணன் கோயில் செப்பேடு ஒன்று வடசேரி பிரம்மதேயமாக இருந்துள் ளதைத் தெரிவிக்கிறது. இவ்வூரை நாஞ்சி நாட்டு பிரம்மதேயம் வடசேரியான ஸ்ரீ ஆதித்த வர்மச் சதுர்வேதிமங்கலம் எனக் குறிக்கிறது. திருகபட்டர் என்ற பிராமணர் இக் கோயில் இறைவன் 'ரூபநாராயண விண்ணகர் எம்பெருமான்' பெயரால் ஒரு பிராமண னின் ஊட்டுக்காகக் கொடை வழங்கியதைத் தெரிவிக்கிறது. கி.பி. 18–ம் நூற்றாண்டு வரை வடசேரி பிரம்மதேயமாக இருந்துள்ளதை மற்றொரு கி.பி. 1769–ம் ஆண்டைச் சேர்ந்த இதே கிருஷ்ணன்கோயில் செப்பேடு உறுதிப்படுத்துகிறது.

வடசேரியில் நாயக்கர் காலத்தில் இராணி மங்கம்மாள் கி.பி. 1697–ல் கிணறு ஒன்று வெட்டிக் கொடையாக அளித்ததை வடசேரித் தூண் கல்வெட்டொன்று தெரி விக்கிறது. இது மங்கம்மாள் தர்மக் கிணறு என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. கி.பி. 1708–ம் ஆண்டைச் சேர்ந்த வடசேரி குதிரைப்பந்திவிளை கல்வெட்டொன்று நாஞ்சி நாட்டின் மீது நாயக்கர் படையெடுப்புப் பற்றிக் குறிக்கிறது.

வாள் வச்ச கோஷ்டம்

இக்கிராமம் கல்குளம் வட்டத்தில் நாகர்கோவில் – திருவனந்தபுரம் நெடுஞ் சாலையில் அமைந்துள்ள காட்டாத்துறைக்கு மேற்கே 2 கி.மீ. தொலைவில் உள்ளது.

'வாள் கழுகிச்ச கோட்டம்' என்பதே வாள் வைத்த கோட்டமாக மாறியுள்ளது என்பது இலக்கிய வழக்கு. மன்னர்கள் போரில் வெற்றி கண்ட பின்பு தாங்கள் போரிட்ட வாளை கழுவி வைத்து வணங்குமிடம் 'வாள் கழுகிச்ச கோட்டம்'. வாள் கழுவுதல் சடங்கு பற்றி தொல்காப்பியமும், புறப்பொருள் வெண்பாமாலையும் குறிக்கின்றன. (புறத்தினை – 68, பாடாண் படலம் – 35). பண்டைக்காலத்தில் மன்னர்கள் போரில்

வெற்றி கண்ட பின்பு போரிட்ட வாளை துர்க்கையம்மன் முன்பு வைத்து பூ, சந்தனம், ஊதுபத்தி வைத்தும் வணங்குவர். வணங்கிய பின்பு அவ்வெற்றி வாளை ஊர்வலமாக எடுத்துச் சென்று ஆற்றங்கரையோரம் வைத்துச் சடங்கு செய்வர்.

கல்வெட்டுகள் இவ்வூரின் பெயரை வாள் வைத்த கோட்டமென்றே குறிக்கின்றன. பெருமாள் ராஜாக்கள் தாங்கள் முடிசூடிக் கொள்வதற்கு முன்பாக இக்கோயிலுக்கு வந்து வணங்கி விட்டுச் செல்வதனை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பது மரபு வழிச் செய்தி.

இவ்வூரிலுள்ள கி.பி. 13ஆம் நூற்றாண்டு பகவதி அம்மன் கோயில் மகிஷாசுர மர்த்தனியின் அம்சமாகும். இக்கோயிலை மேல்மருதத்தூரைச் சேர்ந்த அரங்கநாராயணன் என்பவன் கொல்லம் 410 (கி.பி. 1234)–ல் தனது நன்மைக்காகவும், தேசத்து நன்மைக் காகவும், மன்னர் வேணாட்டடிகள் நன்மைக்காகவும் எடுப்பித்ததாக இக்கோயிற் கருவறை யின் தென்பக்கச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு குறிக்கிறது. இக்கல்வெட்டில் வேணாட்டடிகள் எனக் குறிக்கும் திருவிதாங்கூர் மன்னன் வீர ரவிகேரளவர்மத் திருவடி ஆவார். கருவறையை அடுத்துள்ள முக மண்டபத்தினை (ஒற்றைக்கல் மண்டபம்) முல்லைமங்கலத்தைச் சேர்ந்த திருவிக்கிரமன் என்பவன் கொல்லம் 797 (கி.பி. 1622)–ல் எடுப்பித்ததினை இம்மண்டபத்தில் பொறிக்கப்பட்டுள்ள மற்றொரு கல்வெட்டு குறிக் கிறது. கொல்லம் 798 (கி.பி. 1622)–ல் முல்லைமங்கலத்தைச் சேர்ந்த தரணிதரன் தாமோதரன் என்பவன் இக்கோயிலில் திருப்பணிகள் செய்து இறைவனடி சேர்ந்ததை இக்கோயில் முக மண்டபத்தில் பொறிக்கப்பட்டுள்ள மற்றொரு கல்வெட்டு தெரிவிக் கின்றது.

இக்கோயில் முன் மண்டபம் ஒரு சிற்பக் கலைக்கூடமாக விளங்குகிறது. எட்டுத் தூண்கள் இம் மண்டபத்தினைத் தாங்கி நிற்கின்றன. தூண்களில் முழுஉருவ புடைச் சிற்பங்களாக நடராஜர், நடனக் காளி, லக்குமணன், இந்திரஜித், அர்ச்சுனன், கர்ணன் ஆகியோரின் சிற்பங்கள் காணப்படுகின்றன.

இம் மண்டபத்தில் காணப் பெறும் மற்றொரு தூணில் ஒன்றில் எழுத்தாணி யுடன் நிற்கும் முழு உருவப் புடைச் சிற்பம் காணப்படுகிறது. இச் சிற்பத்திற்குக் கீழே "வாரியான் காளி சங்கரன்" என இவரது பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இவர் கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் இக்கோயில் நிர்வாகப் பொறுப்பாளராகவும், கோயில் கணக்க ராகவும் இருந்திருக்கலாம். வலது கையில் எழுத்தாணியுடன் காணப்படுகிறார்.

வாரியூர்

இவ்வூர் அகத்தீஸ்வரம் வட்டத்தில் அஞ்சுகிராமத்திற்குத் தெற்கே அமைந்துள் ளது. இங்கு கிடைத்த இரு தூண் கல்வெட்டுகள் தற்போது பத்மனாபபுரம் அரண்மனை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவ்விரு கல்வெட்டுகளும் முதலாம் குலோத்துங்கன் காலத்தைச் சேர்ந்தவையாகும். இவ்விரு கல்வெட்டுகளில் முதலாம் குலோத்துங்க சோழனின் 41–வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி. 1111) நாஞ்சி நாட்டு

சுந்தரச்சோழ சதுர்வேதிமங்கலத்து சுசீந்திரமுடைய மகாதேவர்க்கு வாரியூரிலுள்ள பராக்கிரம சோழப் பேரளத்தைச் சேர்ந்த குடும்பன் வில்லியம்பலவன் என்பவனும், கேரள சித்திர வல்லியன் என்பவனும் மன்னனின் பெயரால் **குலோத்துங்க சோழ திருநந்தா விளக்கு** ஒன்று வைத்ததையும் இவ்விளக்கெரிக்க ஆளுக்கு இரண்டு உப்பளப் பாத்திகளைக் கொடையாக வழங்கியதையும் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. உப்பளத்தில் பணிபுரியும் அளவர் சமூகத்தவர்க்கு '**சித்திரவல்லி**' என்ற பட்டம் மன்னர் வழங்கியதாகும். இச்சமூகத்தவர் சோழநாட்டிலிருந்து முதலாம் இராஜராஜனின் படையெடுப்புக்குப் பின் பாண்டி நாட்டுப் பகுதியில் கடற்கரையை ஒட்டியுள்ள கிராமங் களில் உப்பளத்தில் பணிபுரிவதற்காகக் குடியேற்றப்பட்டவராவர். இச்சமூகத்தவர் வழிபட்ட அம்மன் கோயிலான 'அளத்தம்மன்' கோயில் தெற்கு தாமரை குளத்தில் உப்பளப் பாத்திகளுக்கு நடுவே அமைந்துள்ளது.

லீபுரம்

இவ்வூர் அகத்தீஸ்வரம் வட்டத்தில் கன்னியாகுமரிக்கு வடக்கே 3 கி.மீ. தொலைவிலும், வட்டக் கோட்டைக்குத் தெற்கே 1 கி.மீ. தொலைவிலும் கடற்கரையை ஒட்டி அமைந்துள்ளது.

இவ்வூர் ஸ்ரீமூலபுரம், கோமாளிவிளை ஆகிய பெயர்களில் அழைக்கப்பட்டு வந்துள்ளது. தற்போது ஆங்கிலேயப் படைத்தளபதி கர்னல் லீ என்பவரின் பெயரால் அழைக்கப்படுகிறது.

இவ்வூரில் கடற்கரையினையொட்டியே பழைய கலங்கரை விளக்கம் ஒன்றுள் ளது. இது 23 அடி உயரத்தில் நீள் சதுர வடிவில் செங்கற்களினால் கட்டப்பட்டு சுண்ணாம்புச் சாந்து கொண்டு வெளிப்பூச்சு பூசப்பட்டுள்ளது. லீபுரத்திற்கு அருகே 1 கி.மீ. தொலைவி லுள்ள சின்னமுட்டம் என்ற இடத்தில் கி.பி. 15–16 –ம் நூற்றாண் டில் துறைமுகம் இருந்துள்ளதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இங்கு வரும் கப்பல்களுக்காக இக் கலங்கரை விளக்கம் லீபுரத்தில் நிறுவப்பட்டுள்ளது.

கி.பி. 1806–ல் கர்னல் லீ (Colonel Lee) கன்னியாகுமரி மற்றும் கடுக்கரை யிலிருந்த கோட்டைகளை அழித்தார். இவர் இவ்வூரில் கலங்கரை விளக்கத்தை நிறுவி யதால் அவர் பெயராலேயே இவ்வூர் அழைக்கப்பட்டு வருகிறது. வணிகர்கள் மற்றும் வழிபோக்கர்கள் தங்குவதற்காக லீபுரத்தில் கி.பி.17–18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரு சாலையோர மடங்கள் உள்ளன.

5. நாணயங்கள்

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1938–ல் கருப்புக்கோட்டையிலும் 1945–ம் ஆண்டு வெள்ளிமலையிலும் அகழாய்வுகள் நடந்துள்ளன. இதில் காசுகள் ஏதும் கிடைத்துள்ள தாக தகவலில்லை. எனவே, அகழாய்வின் அடிப்படையில் நாணயவியல் எழுதுவது சாத்தியமில்லை. சங்க காலத்தில் ஆய் மன்னர்கள் இப்பகுதியில் ஆட்சி புரிந்துள்ளனர். இவர்கள் காசுகள் ஏதும் வெளியிட்டதாக தகவல்கள் ஏதுமில்லை. முதலில் 'ராசி' எனப்படும் தங்க நாணயமே புழக்கத்திலிருந்ததாகக் கூறுவர். ஒருபுறம் சங்கு முத்திரை பொறிக்கப்பட்டிருக்கும் இதன் எடை 58/10 நெல்மணிகள் என சர்.டபிள்யு. எலியட் கண்டறிந்துள்ளார். மிக அண்மைக் காலம் வரை வடக்குத் திருவிதாங்கூர்ப் பகுதியில் நில அளவீட்டுக்கு ராசி அளவு பயன்பாட்டிலிருந்துள்ளது.

இதற்கு அடுத்து புழக்கத்திலிருந்தது 'கலியுகராஜன்' அல்லது 'கலியுகராயன் பணம்' ஆகும். கலியுகம் தொடங்கிய ஆண்டில் ஆட்சியிலிருந்த மன்னன் பெயரால் இது வெளியிடப்பட்டதாகலாம். எலியட்டின் கூற்றுப்படி கலியுகராயன் பணம் கேரளப் பகுதி (குமரி மாவட்டம் இணைந்த) முழுமைக்கும் புழக்கத்திலிருந்துள்ளது.

கி.பி. 8–ம் நூற்றாண்டிலிருந்து 10–ம் நூற்றாண்டு வரை குமரி மாவட்டம் பாண்டி மண்டலமாக இருந்துள்ளது. எனவே, குமரி மாவட்டத்திற்கு வடக்கே பாண்டி நாட்டில் இக்கால கட்டத்தில் புழக்கத்திலிருந்த பாண்டியரின் நாணயங்களே இங்கும் புழக்கத்தி லிருந்திருக்க வேண்டும்.

முற்காலப் பாண்டியர்களில் வரகுண பாண்டியன் (கி.பி.862–880) வெளியிட்ட ஒரே ஒரு தங்கநாணயம் ஒருபுறம் இருகயல்களும், மறுபுறம் 'ஸ்ரீ வரகுணன்' என கிரந்த எழுத்துகள் பொறிக்கப்பட்ட ஒரு நாணயமாகும். இது வட்ட வடிவத்தில் அமைந்த நாணயமாகும்.

முற்காலப் பாண்டியருள் பாண்டியன் நெடுஞ்சடையனின் மகன் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் வெளியிட்ட செப்பு நாணயம் 'அவனிப சேகரன் கோலாகலன்' என்று ஒருபுறம் பொறிக்கப்பட்டு, மறுபுறம் இருகயல்கள் பொறிக்கப்பட்டிருக்கும். இவன் விழிஞ்ஞம் வரை படை எடுத்து சென்றவனாவான். கூன் பாண்டியன் என்ற பாண்டிய மன்னனால் ஒரு செப்புக்காசு வெளியிடப்பட்டுள்ளது. இவன் கி.பி.624–674–ல் ஆட்சிப் புரிந்த நின்ற சீர்நெடுமாற பாண்டியனாவான். இதன் ஒருபுறம் நின்ற நிலையில் மனிதனும், மறுபுறத்தில் அமர்ந்த நிலையில் மனிதனும் "கூன் பாண்டியன்" என்ற எழுத்தும் பொறிக்கப்பட்டுள்ளது.

கி.பி. 13–ம் நூற்றாண்டில் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1206–1244) காலத்தில் செப்புக்காசு வெளியிடப்பட்டது. இக்காசின் ஒருபுறம் 'சு' என்ற எழுத்தும் மறபுறம் இருகயல்களுக்கு நடுவே செண்டும் பொறிக்கப்பட்டுள்ளது. 'சு' என்பது

இம்மன்னனின் பெயரின் முதல் எழுத்தைக் குறிக்கிறது. இவரது கல்வெட்டொன்று சுசீந்திரம் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளது.

கி.பி.10–11–ம் நூற்றாண்டில் இடைக்காலச் சோழர் மற்றும் சோழ பாண்டியர் காலத்தில் குமரி மாவட்டம் பிற்காலச் சோழரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. முதலாம் பராந்தக சோழனே (கி.பி.907–953) சோழருள் முதலில் இங்கு படையெடுத்து வந்தவ னாவான். முதலாம் இராஜராஜசோழனும் (கி.பி.985–1012) முதலாம் இராஜேந்திர சோழனும் (கி.பி.1012–1044) விழிஞம் வரை படையெடுத்துச் சென்று வெற்றி கொண்டோ ராவர். முதலாம் இராஜேந்திர சோழனின் நிலைப்படையொன்று கோட்டாற்றில் நிலை கொண் டிருந்தது. இக்காலத்தில் கி.பி.11–ம் நூ.ஆ. குமரி மாவட்டத்தின் தென் பகுதி யைச் சோழ பாண்டியர் ஆட்சிபுரிந்தனர். இடைக்காலச் சோழர் கல்வெட்டுகள் வடசேரி, சுசீந்திரம், கன்னியாகுமரி, குறத்தியறை, பார்த்திவசேகரபுரம், திருநந்திக்கரை, சோழபுரம் போன்ற இடங்களில் காணப்படுகின்றன.

எனவே, கி.பி. 10–11–ம் நூற்றாண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இடைக்காலச் சோழர் நாணயங்களே புழக்கத்திலிருக்க வாய்ப்புள்ளது. முதலாம் பராந்தக சோழன் கி.பி. 10–ம் நூற்றாண்டின் முதல் காலாண்டு பகுதியில் ஈழக்கழஞ்சு அல்லது ஈழக் கரும்காசு என்றழைக்கப்பட்ட காசுகளை வெளியிட்டுள்ளான். முதலாம் இராஜராஜன் வெளியிட்ட செப்புக் காசுகளின் ஒருபுறம் நின்ற நிலையில் மன்னனும், விஷ்ணு பாதமும் மறுபுறம் 'ராஜராஜன்' என்று நாகரி எழுத்துகளில் பொறிக்கப்பட்டும், அமர்ந்த நிலையில் மன்னனின் உருவமும் பொறிக்கப்பட்டிருக்கும். இவன் "மலைநாடு கொண்ட சோழன்" என்ற எழுத்துப்பொறிப்புக் கொண்ட செப்பு நாணயங்களையும் வெளியிட்டுள்ளான்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கி.பி. 11–நூ.ஆ. சோழபாண்டியர் ஆட்சியின் போதும் இடைக்காலச் சோழர்களின் நாணயங்களே புழக்கத்திலிருந்தன. திருவிதாங்கோடு சுந்தர சோழ பாண்டியனின் கல்வெட்டொன்று ஒரு நந்தா விளக்கெரிக்க 20 களஞ்சு (9 மாட்டு) பொன் வழங்கியதைக் குறிக்கிறது.

கி.பி.12–ம் நூற்றாண்டில் வீரபாண்டியன் செப்புக்காசுகளை வெளியிட்டுள்ளான். இக்காசின் ஒருபுறம் மன்னன் நின்ற நிலையிலும் அவனது இடது கைக்குக் கீழே மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகள் பொறிக்கப்பட்டுள்ளன. மறுபுறத்தில் இரண்டு குத்து விளக்குகளுக்கு இடையில் இரட்டைக் கயல்கள் செங்கோலுடனும் இவற்றுக்கு மேலே 'வீர பாண்டியன்' என்ற எழுத்துப் பொறிப்பும் காணப்படுகின்றன. இதே கால கட்டத்தில் திரமம் என்ற நாணயங்கள் புழக்கத்திலிருந்ததைக் கல்வெட்டுகள் குறிக் கின்றன. மதுரைக்கு அருகேயுள்ள சீவல்லபனின் கல்வெட்டு இத்திரமங்களைக் குறிக்கிறது.

சீவல்லபனின் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அம்பாசமுத்திரம் கல்வெட்டு 20.75 மாடையைக் குறிக்கிறது. இதே மாவட்டத்திலுள்ள இம்மன்னனின் சோழபுரம் கல்வெட்டு ஒவ்வொரு தறிக்கும் 10 பணம் வசூலித்ததைக் குறிக்கிறது. எனவே கி.பி. 12–ம் நூற்றாண்டில் பாண்டிய மன்னன் சீவல்லபன் காலத்தில் திரமம், மாடை, களஞ்சு,

காசு, அச்சு ஆகிய நாணயங்கள் புழக்கத்திலிருந்ததைக் கல்வெட்டுகள் வாயிலாக அறியலாம். இவை குமரி மாவட்டத்திற்கும் பொருந்தும்.

கி.பி.13–ம் நூற்றாண்டில் வடக்கே நெல்லூரிலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரை சடாவர்மன் சுந்தரபாண்டியனின் (கி.பி.1251–1274) ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. கி.பி. 13–ம் நூற்றாண்டின் இறுதியில் மாறவர்மன் குலசேகரபாண்டியனின் (கி.பி.1268–1310) ஆளுகையில் தமிழகம் முழுவதும் இருந்தது. கி.பி.13–ம் நூற்றாண்டில் பிற்காலப் பாண்டியர்காலத்தில் பல நாணயங்கள் வெளியிடப்பட்டன. பொதுவாக இந்நாணயங் களின் ஒருபுறம் பாண்டிய மன்னனின் பெயர்கள் அல்லது பட்டங்களான சுந்தர பாண்டியன், சோணாடு கொண்டான், கோதண்டராமன், குலசேகரன், வீரபாண்டியன், கச்சி வழங்கும் பெருமாள், எல்லாம் தலையானான் என்ற பெயர்களுள் ஏதாவதொன்று பொறிக்கப் பட்டிருக்கும். சில காசுகளில் மறுபுறத்தில் கயல்களுக்குக் கீழே சோழர் மற்றும் சேரரின் சின்னங்களான புலியும், வில் அம்பும் பொறிக்கப்பட்டிருக்கும். இது பாண்டியர் சோழரை யும், சேரரையும் வெற்றி கொண்டதைக் குறிப்பதாகலாம். ஜடாவர்மன் குலசேகர பாண்டியன் இம்மாதிரியான காசுகளை வெளியிட்டுள்ளான். முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் வெளியிட்ட காசுகளின் ஒருபுறம் 'சோணாடு கொண்டான்' என்ற எழுத்துப் பொறிப்பும் மறுபுறம் மன்னன் நின்ற நிலையிலும் பொறிக்கப்பட்டிருக்கும்.

மற்றொரு நாணயத்தின் ஒருபுறம் இரட்டைக் கயல்களும் அதனருகே செண்டும் பிறைச் சந்திரனும் பொறிக்கப்பட்டிருக்கும். மறுபுறத்தில் 'கச்சி வழங்கும் பெருமாள்' என்ற ஜடாவர்மன் சுந்தரபாண்டியனின் பட்டப்பெயரும் அதற்குக் கீழே வெண்சாமரமும் பொறிக்கப்பட்டிருக்கும். இதே மன்னன் வெளியிட்ட சில காசுகளில் இவனது பட்டப் பெயரான 'எல்லாம் தலையானான்' என்ற எழுத்துப் பொறிப்பு இரட்டைக் கயல்களுடன் காணப்பெறும். இதே மன்னன் வெளியிட்ட மற்றொரு காசில் ஒருபுறம் வெண் கொற்றக் குடையின் கீழ் இரு வெண்சாமரங்களின் மத்தியில் இவனது விருதுப்பெயரான கோதண்டராமன் பொறிக்கப்பட்டிருக்கும். மறுபுறத்தில் பிறைச் சந்திரனுக்குக் கீழே இரு கயல்களுக்கு மத்தியில் செண்டு பொறிக்கப்பட்டிருக்கும்.

கி.பி. 14–ம் நூற்றாண்டில் கேரள இரவிவர்மன் குலசேகரன் ஒரு செப்பு நாணயம் வெளியிட்டுள்ளார். இதன் ஒருபுறம் யானையின் உருவமும் மறுபுறம் இரட்டைக் கயல்கள், செண்டின் மீது குலசேகரன் என்ற எழுத்துப் பொறிப்பும் காணப்படுகிறது.

கி.பி. 15–ம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட காசின் ஒருபுறம் வெண்கொற்றக் குடையின் கீழுள்ள வில்லின் மீது இரண்டு விஷ்ணு பாதங்களும், மறுபுறத்தில் கலியுக ராமன் என்ற எழுத்துப் பொறிப்பும் உள்ளது. இது வேணாட்டு அரசன் வெளியிட்ட காசாகும். குமரி மாவட்டத்தில் பறக்கையிலுள்ள மதுசூதனப் பெருமாள் கோயிலின் பிரகாரத் தூண் ஒன்றில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு 'கலியுகராமன் பணம்' எனக் குறிக்கிறது.

கி.பி. 1514–ல் விஜயநகர வேந்தனான கிருஷ்ணதேவராயர் உதயக்கிரிக் கோட்டை யைக் கைப்பற்றி விட்டுத் தனது தலைநகர் திரும்பியவுடன் ஸ்ரீ வெங்கடேஸ்வரருக்கு 30,000 சக்கரம் பொன்னும் ஆபரணங்களும் வழங்கி கனகாபிஷேகம் செய்து கொண்டார். உதயகிரியிலிருந்து பாலகிருஷ்ணனின் அமர்ந்த கோல சிலையொன்றை

யும் வெற்றியின் நினைவாக எடுத்துச் சென்றார். இதன் பிறகு பாலகிருஷ்ணன் தங்கக் காசுகளையும் வெளியிட்டுள்ளார். இதன் ஒருபுறம் அமர்ந்த கோல பாலகிருஷ்ணன் வலக்கரத்தில் புல்லாங்குழலுடனும் மறுபுறத்தில் 'ஸ்ரீ பிரதாப கிருஷ்ணராயன்' என நாகரி எழுத்துகளிலும் பொறிக்கப்பட்ட நாண்யங்களை வெளியிட்டுள்ளார்.

கி.பி. 16–ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வெளியிடப்பட்ட இரண்டு வெங்கல ராசன் காசுகள் திருநெல்வேலிப் பகுதியில் சேகரிக்கப்பட்டுள்ளன. இலங்கையிலுள்ள கண்டிப்பகுதியை ஆண்டுவந்த வலங்கைச் சான்றோர் குலப்பிரிவில் தோன்றிய வீரசோழன் என்பவரின் மகனே வெங்கலராசன் ஆவான். இவன் போர்ச்சுக்கீசியர்களின் ஆதிக்கத்தினால் கண்டியிலிருந்து புலம் பெயர்ந்து கன்னியாகுமரி மாவட்டத்தில் மணக்குடி– காயல் பகுதிகளுக்கருகே சாமிக்காட்டுவிளை என்றவிடத்தில் வெங்கலத்தி னாலான கதவுகள் உள்ள கோட்டை கட்டி வாழ்ந்ததாக இவனைப் பற்றிய கி.பி. 1605–ம் ஆண்டைச் சேர்ந்த வில்லுப்பாட்டு கதைப்பாடல் கூறுகிறது. இவன் வெளியிட்டுள்ள இரண்டு காசுகளில் ஒன்றால் ஒருபுறம் சிவலிங்க உருவமும், மறுபுறத்தில் "வெங்க[ல]" என்ற தமிழ்ப் பொறிப்பும் உள்ளன. மற்றொரு காசின் ஒருபுறம் சக்கர உருவமும் மறுபுறத்தில் "வெங்க[ல]" என்ற எழுத்துகளும் பொறிக்கப்பட்டுள்ளன. இக்காசுகள் வெங்கலராசனால் திருநெல்வேலியிலிருந்து வெளியிடப்பட்டவையாகும். இக்காசுகள் குமரி மாவட்டத்திலும் புழக்கத்தில் இருந்துள்ளன.

கி.பி. 16–ம் நூற்றாண்டில் போர்த்துக்கீசியர்களும் கி.பி.16–17–ம் நூற்றாண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியார்களும், டச்சுக்காரர்களும் கன்னியாகுமரி மாவட்டத்தோடு வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். வணிக ரீதியிலான நாணயப் பரிமாற்றங்கள் இவர்களோடு இருந்துள்ளன. போர்த்துக்கீசியரின் நாணயங்களேதும் இங்கு காணப் பெறவில்லை. கி.பி.17–ம் நூற்றாண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியார்களுக்கும், டச்சுக் காரர்களுக்கும் வணிக ரீதியான போட்டி நிலவி வந்தது. டச்சுக்காரர்கள் குளச்சலில் தங்களின் கோட்டையொன்றையும் அமைத்திருந்தனர். இவர்களின் செப்பு நாணயங்களில் ஒருபுறம் 'V.O.C' (Vereenigde Oost indische compagine) என்ற மூன்று எழுத்துகள் கொண்ட கூட்டெழுத்தும், ஆண்டும் குறிக்கப்பட்டிருக்கும். மறுபுறத்தில் கேடயமும் அதனிருபுறமும் இரு கால்களில் நிற்கும் சிங்கமும் பொறிக்கப்பட்டிருக்கும். V.O.C என்பதற்கு ஐக்கிய கிழக்கு இந்திய கம்பெனி எனப் பொருள்படும். இக்காசுகளுக்கு 'நாகூர் சல்லிகள்' எனப்பெயர். இவை கி.பி.1727–1741–க்கு இடைப்பட்ட காலத்தில் குமரி மாவட்டத்தில் புழக்கத்திலிருந்துள்ளன. கி.பி. 1741–ல் குளச்சலில் நடைபெற்ற போரில் மன்னர் மார்த்தாண்டவர்மாவிடம் டச்சுக்காரர்கள் போரிட்டு தோற்றுச் சரணடைந் தனர்.

டச்சுக்காரர்கள் தங்க 'பகோடா' நாணயங்களையும் வெளியிட்டுள்ளனர். இதன் ஒருபுறம் விஷ்ணுவின் உருவமும், மறுபுறம் 'தேவாஷம் பட்டணம்' என்ற எழுத்துப் பொறிப்பும் உள்ளன.

இதே காலக்கட்டத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் நாணயங்களும் புழக்கத்தி லிருந்தன. நான்காம் ஜார்ஜ் மற்றும் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் தலை பொறிக்கப்பட்டு,

மறுபுறத்தில் கேடயத்தின் இருபுறமும் இருகால்களில் நிற்கும் சிங்கங்களின் உருவமும், 'கிழக்கிந்திய கம்பெனி' என ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டதுமான செப்பு நாணயங்கள் வெளியிடப்பட்டன. இவை ஒரு சக்கரம், அரை சக்கரம் என்ற மதிப்பில் வெளியிடப்பட்டன.

கி.பி.17–18–ம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட பகுதியில் 'சாணான் காசு' என்ற செப்பு நாணயம் வெளியிடப்பட்டுள்ளது. இது 'காவடிக் காசு' என்றும் அழைக்கப் படுகிறது. இக்காசின் ஒருபுறம் ஒருவனின் தோளின் மீது குறுக்காக நீண்டிருக்கும் தடியின் இரு முனைகளிலும் இரண்டு மட்கலங்கள் தொங்குவது பொறிக்கப்பட் டிருக்கும்.

திருவிதாங்கூர் நாணயங்கள் (கன்னியாகுமரி மாவட்டம்)

கன்னியாகுமரி மாவட்டம் 1956–ம் ஆண்டுக்கு முன்பு கேரளத்துடன் இணைந் திருந்த காரணத்தினால் அங்கு நிலவிய நாணவியல் முறையுடன், திருவிதாங்கூர் அரசின் நாணயப் புழக்கத்தை இணைத்துப் பார்க்கும் பார்வை அவசியமானதாகும்.

இதே காலகட்டத்தில் 'அனந்தராயன் பணம்' 'அனந்த வராகன்' என்ற இரு தங்க நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளன. திருவிதாங்கூர் மன்னர்களின் குலக் கடவுளான அனந்தன் (ஸ்ரீபத்மனாசாமி) பெயரால் இந்நாணயங்கள் வெளியிடப்பட் டுள்ளன. இதன் மதிப்பு பிரிட்டிஷ் பணத்திற்கு (British currency) 0–4–7 மற்றும் 3–15–5. இப்பணம் முதலில் வெளியிடப்பட்ட ஆண்டு அறுதியிட்டுக் கூற இயலாது. அனந்தராயன் ஒரு பணம் மற்றும் அரைப் பணம் கார்த்திகைத் திருநாள் இராமவர்மர் (கி.பி.1758–1798) காலத்தில் அதிக அளவில் வெளியிடப்பட்டுள்ளன.

இவை தவிர திருவிதாங்கூர் மன்னர்கள் தங்கள் வாழ்நாளில் ஒருமுறை நடத்தும் துலாபாரம், ஹிரண்ய கர்ப்பம் போன்ற சடங்குகளின் போதும் தங்க நாணயங்கள் வெளியிட்டுள்ளனர். இதில் மன்னரின் எடைக்குச் சமமான தங்கக் கட்டிகள் வழங்கப் பட்டுப் பின்பு அவை பிராமணர்களுக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளன. தங்கக் கட்டிகள் பின்பு பல்வேறு வடிவங்களிலும், எடைகளிலும் நாணயங்களாகப் புழக்கத்தில் விடப் பட்டன. இந்நாணயங்கள் வட்டவடிவத்தில் ஒருபுறம் 'ஸ்ரீ பத்மனாபன்' என்ற மலையாள எழுத்துகளில் பொறிக்கப்பட்ட பெயரும் மறுபுறத்தில் எக்குறியீடும் இல்லாமலும் காணப்பட்டன. இதுவே பிற்காலத்தில் ஒருபுறம் மலர் வளையத்தின் மத்தியில் பெயரும் மறுபுறம் சங்கு முத்திரையும் பொறிக்கப்பட்டுப் புழக்கத்தில் விடப்பட்டன. 'சங்கு' திருவிதாங்கூர் அரசு முத்திரையாகும்.

கி.பி. 1869–ல் நான்கு நாணயங்கள் 78.65, 39.32, 19.66 மற்றும் 9.83 நெல் மணிகள் ஆகிய எடைகளில் தங்க நாணயங்கள் வெளியிடப்பட்டன.

கி.பி.1882–ல் பம்பாயிலுள்ள பிரிட்டிஷ் அக்கசாலையில் ஆங்கிலேயரின் நாணயங் களுக்குச் சமமான ஒரு சவரனில் 1000 காசுகளும், அரை சவரனில் 2000 நாணயங் களும் வெளியிடப்பட்டன.

கி.பி.1877–ல் முதன்முதலாக திருவிதாங்கூர் மாகாணத்தின் அதிகாரப்பூர்வமான நாணயங்களாகத் திருவிதாங்கூர் வராகனும், அரை வராகனும் வெளியிடப்பட்டன. இந்நாணயத்தின் ஒருபுறத்தில் திருவிதாங்கூர் மகாராஜாவின் ராமவர்மர் என்ற பெயர்ச் சுருக்கத்தைக் குறிக்கும் 'R.V' என்ற எழுத்துகளும், 'திருவிதாங்கூர் வராகன்' அல்லது 'அரை வராகன்' என மலையாளம் எழுத்துகளிலும், வெளியிடப்பட்ட ஆண்டு ஆங்கிலம் மற்றும் மலையாளம் எழுத்துகளிலும் பொறிக்கப்பட்டிருக்கும். மறுபுறத்தில் திருவிதாங்கூரின் அரசு முத்திரையான 'சங்கு' பொறிக்கப்பட்டிருக்கும். இவ்விரு நாணயங்களும் 78 4/10 மற்றும் 39 2/10 பக்கோடா எடைகளில் 7.50 பணமாகவும் 3.75 பணமாகவும் வெளியிடப்பட்டன. இவ்விரு நாணயங்களும் நடைமுறைக்குச் சரிவராததால் இடையிலேயே கைவிடப்பட்டன.

தங்கத்தாலான சக்கரம் நாணயங்கள் ஒரு சமயம் அச்சடிக்கப்பட்டதாக வரலாற் றாசிரியர் சங்குண்ணி மேனன் தெரிவிக்கிறார். ஆனால், இதற்கு ஆதாரமாக இவ்வகை நாணயம் ஒன்றுகூட இதுவரை கிடைக்கவில்லை.

வெள்ளிச் சக்கரம் நாணயங்கள் பழங்காலத்திலிருந்தே வெளியிடப்பட்டன. இவை பாண்டிய நாட்டுப் பகுதிகளிலும் புழக்கத்தில் இருந்தன. பிற்காலத்தில் கீழ்க்காணும் வெள்ளிச்சக்கரம் நாணயங்களும் வெளியிடப்பட்டன.

இரண்டு சக்கரம் – 11 6/10
ஒரு சக்கரம் – 5 7/10
சின்னச் சக்கரம் – 2 8/10

பெரும்பாலான இச்சக்கர நாணயங்கள் கி.பி.18–ம் நூற்றாண்டிலிருந்து வெளியிடப் பட்டிருக்கலாம்.

கி.பி. 1809–ல் திவான் உம்மிணித்தம்பி ஆணையின்படி இரண்டு சக்கரம் மற்றும் அரைச் சக்கரம் வெள்ளி நாணயங்கள் வெளியிடப்பட்டன. பின்பு ஏதோ ஒரு காரணத்தினால் அவை உடனடியாக நிறுத்தி வைக்கப்பட்டன. இரண்டு சக்கரத்தின் ஒருபுறம் சங்கும் மறுபுறம் 'சாலமன்' என்ற முத்திரையுடன் 'பத்மனாபன்' என்று மலையாள எழுத்துகளும் பொறிக்கப்பட்டுள்ளன. மற்றொரு சக்கரத்தில் சிவனின் சிகையும் அதற்மேலே சந்திரனும், பன்னிரண்டு ராசிகள் புள்ளிகளாகவும், அதற்கு கீழே காண்டா மிருகத்தின் காதும் பதிவுகளாக காணப்படுகின்றன.

கி.பி. 1860–ல் திருவனந்தபுரத்தில் 4 சக்கரம் காசுகள் வெளியிடப்பட்டன. இவை சென்னையிலிருந்து வரப்பெற்ற முத்திரைப் பதிவுகள் உதவியுடன் வெளியிடப்பட்டன. இவை ஃபணம் (fanam) என்ற பெயரில் அறிமுகப் படுத்தப்பட்டது.

கி.பி.1889–ல் முறையே 7 சக்கரம் மற்றும் 14 சக்கரத்திற்குச் சமமான கால் பணமும், அரைப்பணமும் வெளியிடப்பட்டன. இவை திருவிதாங்கூர் மாகாணத்தின் அதிகாரப் பூர்வமான பணமாக (State Currency) 31–10–1889 அன்று அரசாணையாக அறிவிக்கப்பட்டது. இதன் ஒருபுறத்தில் சங்கு முத்திரையும் காசின்பெயர் மலையாள

எழுத்துகளிலும், மறுபுறத்தில் காசின் பெயருடன் மன்னன் பெயரான இராமவர்மர் – திருவிதாங்கூர் என்று ஆங்கில எழுத்துகளிலும் பொறிக்கப்பட்டிருந்தன.

கி.பி.1900–ல் 2 சக்கரம் வெள்ளிக் காசுகள் திருவிதாங்கூர் மாகாண அதிகாரப் பூர்வ நாணயங்களாக வெளியிடப்பட்டன. காசு (Kasu) என்ற பெயரில் வெளியிடப்பட்ட இந்நாணயங்களே திருவிதாங்கூர் மாகாணத்தின் பழமையான செப்பு நாணயங்களாகும். இதன் மதிப்பு பிரிட்டிஷ் பணத்திற்கு 1/456 ஆகும். இதுவே உலகத்திலேயே சிறிய செப்புக்காசு ஆகும்.

கி.பி.1848–ல் மூன்று வகையான செப்பு நாணயங்கள் வெளியிடப்பட்டன.

திருவிதாங்கூர் நாணயம்

1 காசு -- செப்பு நாணயம்

4 காசு -- 1/4 சக்கரம் – செப்பு நாணயம்

8 காசு -- 1/2 சக்கரம் – செப்பு நாணயம்

12 காசு – 1 சக்கரம் – செப்பு நாணயம்

4 சக்கரம் – 1 பணம்

7 பணம் = ஒரு திருவிதாங்கூர் ரூபாய் (கணக்கில் மட்டும்*) – 28 சக்கரம்

*திருவிதாங்கூர் கொச்சியில் 1 ரூபாய் என்பது கணக்கில் கணக்கிடப்பட்டதே யல்லாமல் அப்படி ஒரு நாணயம் அடிக்கப்படவில்லை.

அதே காலத்தில் பாண்டிப்பகுதியில் (ஆங்கிலேயர் நேரடி ஆட்சியுள்ள மெட்ராஸ் பிரசிடென்சியில் 1 ரூபாய் நாணயம் இருந்தது)

1 பிரிட்டீஷ் ரூபாய் = 28 1/2 சக்கரம்

= திருவிதாங்கூர் 1 ரூபாய் + 8 காசு

6. கோயில்கள்

கன்னியாகுமரி மாவட்டத்தில் முற்காலச் சோழர், முற்காலப் பாண்டியர் ஆய் அரசகுலம், பிற்காலச் சோழர், சோழ பாண்டியர், பிற்காலப் பாண்டியர், வேணாட்டரசர்கள், நாயக்கர் மற்றும் விஜயநகர வேந்தர்கள் காலக் கட்டடக் கலைப்பாணிகளைக் காணும் வகையில் ஏராளமான கோயில்கள் உள்ளன. பெரும்பாலான கோயில்கள் திராவிடக் கலைப்பாணியில் அமைந்தவையாகும்.

குமரி மாவட்டத்தில் பாறையைக் குடைந்து வெட்டப்பட்ட குடைவரைக் கோயில் களைக் குறத்தியறை, சிதரால், திருநந்திக்கரை பூதப்பாண்டி ஆகிய இடங்களில் காண லாம். குறத்தியறை குடைவரைக் கோயில் ஒரே ஒரு அறையினைக் (uniceller) கொண்ட குடைவரைக் கோயிலாகும்.

சிதராலிலுள்ள சமணக் கோயில் மூன்று கருவறைகளை வரிசையாகக் கொண்ட தாக முதலில் குடையப்பட்டது. 16 கால் மண்டபம் கி.பி.15–ம் நூற்றாண்டிலேயே கட்டப்பட்டது. முற்காலச் சோழர் காலத்தில் முதலாம் பராந்தக சோழனால் எடுப்பிக்கப் பட்ட கோயில் குகனாதீசுவரர் கோயிலாகும். முற்காலச் சோழர் கோயில்களைப் போன்று ஒரு கருவறை, அர்த்த மண்டபம் என்ற எளிய அமைப்பில் கட்டப்பட்ட இக்கோயில் பின்பு முதலாம் இராஜராஜன் மற்றும் முதலாம் இராஜேந்திரன் காலத்தில் திருத்திக் கட்டப்பட்டு மகாமண்டபமும், சோபன மண்டபமும் பின்பு எடுக்கப்பட்டுள்ளது. கொடுங்கை யில் உள்ள கர்ண கூடுகளில் சிவனடியார்களின் முகங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கொடுங்கைக்குக் கீழே பூதவரி காட்டுவது பிற்காலச் சோழர் மரபாகும்.

குமரி மாவட்டத்திலேயே புகழ்மிக்கதாகக் கருதப்படும் கோயில் சுசீந்திரம் கோயிலாகும். இங்குள்ள கைலாசநாதர் கோயிலே பழமையானதாகும். முற்காலப் பாண்டிய மன்னன் மாறஞ்சடையன் காலத்தில் கி.பி.8–ம் நூற்றாண்டில் எடுக்கப்பட்ட தாகும். ஒரு பாறையின் மீது இக்கோயில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலுக்கு சோழன் தலை கொண்ட வீரபாண்டியன், முதலாம் இராஜராஜன், ஜடாவர்ம சுந்தர சோழ பாண்டியன், வீர பாண்டியன் ஆகியோர் நிவந்தங்கள் வழங்கியுள்ளனர். திராவிட விமானம் கொண்ட முற்காலப் பாண்டியர் கலைப்பாணியில் கருவறை, அர்த்தமண்டபம் என்ற எளிய அமைப்புகளுடன் கட்டப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சுசீந்திரம் தாணுமாலயன் மூலவரின் பெயர் கல்வெட்டில் கி.பி. 1471–ல் தான் முதன் முதலாகக் குறிக்கப்படுகிறது. இதன் அதிட்டானம் பாதி பத்ம ஜகதி, விருத்த குமுதமாகவும் பாதி முப்பட்டைக் குமுதமாகவும் காணப்படுகிறது. பல்வேறு காலகட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட திருப்பணியைக் காட்டுகிறது. பத்ம ஜகதி, விருத்த குமுதத்துடன் கூடிய அதிட்டானம் முதலாம் பராந்தக சோழன் காலத்தில் கட்டப்பட்டதாகலாம். சோழ பாண்டியர் ஆட்சியின் போது சிதிலமடைந்த பகுதி முப்பட்டைக் குமுதமாக மாற்றிக் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

தாணுமாலயன் வடக்கிடம் என்றும் பெருமாள் தெக்கிடம் என்றும் கூறுவது வழக்கம்.

சுசீந்திரம் கோயிலிலேயே பெரியமண்டபம் செண்பகராமன் மண்டபமாகும். இம் மண்டபத் தூண்களிலுள்ள சிற்பங்கள், விக்னேஸ்வரியின் சிற்பம் மற்றும் இசைத் தூண்கள் மற்றும் இராமன் மறைந்திருந்து வாலியை அம்பு எய்யும் காட்சி போன்றவை குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். இம் மண்டபம் கி.பி.15–16–ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட தாகலாம்.

செண்பகராமன் மண்டபத்தின் எதிரே உள்ள மாக்காளை திருமலை நாயக்கர் காலத்தில் உருவாக்கப்பட்டது. தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலய நந்தியைப் போல பிரமாண்ட தோற்றமுடையது. கிளிஞ்சலைப் பதநீர் விட்டு அரைத்து உருவாக்கப்பட்ட கலவையுடன் செங்கல் வைத்துக் கட்டி இம் மாக்காளை உருவாக்கப்பட்டது.

சுசீந்திரம் கோயில் கோபுரம் கி.பி.1544–ல் விஜயநகரர் காலத்தில் விட்டலரால் கட்டும் பணி தொடங்கப்பட்டது. திருவிதாங்கூர் மன்னர் மூலம்திருநாள் மகாராஜா காலத்தில் கோபுரப்பணி நிறைவுபெற்றது. இக்கோபுரத்தில் திருபாற்கடலில் தேவர்களும், அசுரர்களும் அமிர்தம் கடையும் காட்சி அழகிய சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள் ளன. வேணாட்டு மன்னர் மார்த்தாண்டவர்மா 1410–ல் சபா மண்டபத்தைக் கட்டினார். கோயிலின் வடக்குப் பகுதியிலுள்ள பெரிய தெப்பக் குளத்தையும், கிணற்றையும் சீரமைக்க வேணாட்டரசர் ஸ்ரீ குலசேகரப் பெருமாள் கி.பி.1471–ல் கொடை வழங்கியதைக் கல்வெட்டு தெரிவிக்கிறது.

சுசீந்திரம் கோயில் என்றவுடனே அனுமன் சிலைதான் நினைவு வரும். கூப்பிய கரங்களுடன் பேருருவச் சிலையாகக் காணப்படும் இதன் உயரம் 4.90 மீ (சுமார் 16 அடி). இச்சிலை கி.பி.16–ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகலாம். பூமியினுள் புதையுண்டிருந்த இச்சிலை 1929–ம் ஆண்டே அலங்கார மண்டபத்தின் தென்கோடியில் பிரதிட்டை செய்யப் பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நம்மாழ்வாரால் பாடல் பெற்ற இரு தலங்கள் திருவட்டாறும், திருப்பதிசாரமும் ஆகும். திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாளின் 18 அடி நீள முழு உருவ தரிசனத்தை மூன்று வாசல்கள் வழியேதான் காண இயலும். மூலவரான அனந்தசயனப் பெருமாள் 10008 சாளக்கிராமம் கற்களுடன் கடுசர்க்கரையோகம் என்ற கூட்டுக் கலவையினால் உருவாக்கப்பட்டதாகும். விஷ்ணுவின் திருவுருவங்களை பிரம்மாண்டமாக அமைப்பது, வேணாட்டார் கலை மரபாகும். இதற்கு உதாரணமாக திருவட்டாறு, குறத்தியறை, திப்பிரமலை ஆகிய இடங்களில் காணப்படும் விஷ்ணுவின் சிற்பங்களைக் காணலாம். திருவட்டாறு கோயில் ஓர் அரங்கத்தின் மீது துவிதள அற்புத விமானமாக அமைக்கப்பட்டுள்ளது.

திருவிதாங்கோடு பெருமாள் கோயில் ஆய் மன்னர் காலத்தில் கி.பி.9–10–ம் நூற்றாண்டுகளுக்கிடையில் எடுக்கப்பட்டதாகும். ஒரே வளாகத்தினுள் இதனருகேயே காணப்படும் சிவன்கோயில் பிரகாரத்தைச் சுற்றியுள்ள பாவை விளக்குகளின் அரிய

சிற்பங்கள் தமிழகத்தில் வேறு எங்கும் காணப்படாதவையாகும். ஒரு பாவை விளக்கு சிற்பத்துடன் காதல் வயப்படும் இருவர், கர்பிணியான பாவை விளக்கு, குழந்தையை கையிலேந்தியிருக்கும் பாவை விளக்கு என ஒரு வாழ்க்கைச் சித்திரத்தை படம் பிடித்துக் காட்டுவது போல் இச் சிற்பங்கள் வெளிபிரகாரத்தைச் சுற்றிக் காணப்படு கின்றன.

குமரி மாவட்டம் கி.பி.12–ம் நூற்றாண்டிற்குப் பின்பு வேணாட்டு மன்னர்களின் ஆளுகைக்குட்பட்ட போது இங்குள்ள பல கோயில்கள் கேரளக் கலைப்பாணியில் கட்டப்பட்டுள்ளதைக் காணலாம். வட்ட வடிவ உட்பிரகாரத்தினுள் செவ்வக வடிவிலான கருவறையும் கூரை ஓடுகள் மற்றும் தடிகொண்டு வேயப்பட்ட கூம்பு வடிவ விமானம் கொண்ட கோயில்களைக் காணலாம். இவ்வமைப்புக் கொண்ட கோயில்களை திப்பிர மலை பெருமாள்கோயில், திருநந்திக்கரையிலுள்ள கட்டடக் கோயில், நட்டாலம் சிவன்கோயில் ஆகியவற்றைக் கூறலாம். திருநந்திக்கரை கட்டடக் கோயில் கி.பி.10–ம் நூற்றாண்டில் கேரளக் கலைப் பாணியில் வட்ட வடிவ பிரகாரத்தினுள் செவ்வக வடிவ கருவறையும் கூம்பு வடிவ விமானமும் அமைத்துக் கட்டப்பட்டுள்ளதைக் காணலாம்.

இதேபோல் நாலுகெட்டு அமைப்புள்ள முற்றம், தடி மற்றும் கூரை ஓடுகளாலான கூரைப்பகுதி இவற்றின் முகப்பு பிரமிட் வடிவிலான கூரையுடன் அமைப்பது வேணாட்டார் கலைப்பாணியாகும். இதற்கு உதாரணமாக கி.பி.16–ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இரணியல் அரண்மனை, கி.பி. 18–ம் நூற்றாண்டில் திருத்திக் கட்டப்பட்டுள்ள பத்மனாப புரம் அரண்மனை, தளவாய் வேலுத்தம்பி கொட்டாரம் ஆகியவற்றை உதாரணமாகக் கூறலாம்.

பத்மனாபபுரம் அரண்மனை மரச் சிற்ப நுண்கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது. இங்குள்ள தாய்க் கொட்டாரத்திலுள்ள நுண்ணிய வேலைப்பாடு களுடன் கூடிய மரத்தூண்களையும், விதானத்திலுள்ள பல்வேறு வடிவிலான பூக்கள் சிறந்த கலை நுட்பத்தோடு மரத்தில் செதுக்கப்பட்டுள்ளன. இவ்வரண்மனை நுழை வாயிலின் மேற்கூரைப்பகுதி நுண்ணிய மரச்சிற்ப வேலைப்பாடுகளுடன் பிரமிட் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இதேபோல் கருவூல அறையின் நாழிப்பூட்டும், பழைய தெற்குக் கொட்டாரத்திலுள்ள மணிச்சித்ரத்தாழும் காண்போர் வியக்கும் வண்ணம் உள்ளன. பத்மனாபபுரம் அரண்மனையில் நுழைந்தவுடன் உள்ள முன் மண்டபத்தில் தொங்குகின்ற குதிரை வீரன் உருவத்துடன் கூடிய பித்தளைச் சரவிளக்கு எத்திசையில் திருப்பி வைத்தாலும் அத்திசையில் அப்படியே நிற்கும் வண்ணம் சிறந்த தொழில் நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பத்மனாபபுரம் இராமசுவாமி கோயில் இராமாயணக் காட்சிகளை விளக்கும் அரிய மரச்சிற்பங்களை காணலாம்.

பத்மனாபுரம் நீலகண்டசாமி கோயிலின் மண்டபச் சுவரில் திருமலைநாயக்கரின் முழு உருவ புடைச் சிற்பமும், வேணாட்டரசரின் முழு உருவ புடைப்புச் சிற்பமும் அருகருகே செதுக்கப்பட்டுள்ளன. இவ்விரு சிற்பங்களும் வேணாட்டார் கலைப்பாணியையும், நாயக்கர் கலைப்பாணியையும் வேறுபடுத்திக் காட்டும் வண்ணம் அமைந்துள்ளன.

சிதரால் திருசாரணத்து மலையில் உள்ள தொங்கு பாறையில் அம்பிகா இயக்கி (டுஷ்மாண்டினி, அக்னிலா, தர்மதேவதை என்றும் அழைக்கப்படுகிறாள்) யின் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. அவளுடைய வலது கைப்புறம் அவளது கணவன் சோமசர்மன் சிம்ம வாகனமாக காட்சியளிக்கிறான். கீழே அவளின் இரு குழந்தைகளும், சேடிப் பெண்ணும் காட்டப்பட்டுள்ளனர்.

7. ஓவியங்கள்

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஓவியங்களில் திருநந்திக்கரை குடைவரைக் கோயிலில் காணப்படும் ஓவியங்களே பழமையானதாகும். இவை கி.பி.10–ம் நூற்றாண்டில் முதலாம் இராஜராஜ சோழன் காலத்தில் தீட்டப்பட்டவையாகும். இவ்வோவியங்கள் மூலிகைச் சாறு கொண்ட கலவையினால் தீட்டப்பட்ட சுவரோவியங்களாகும் (Mural paintings). இவ்வோவியங்கள் வெள்ளை வண்ணச் சுவரின் மீது சிவப்பு, பச்சை மற்றும் மஞ்கள் வண்ணங்களில் தீட்டப்பட்டுள்ளன. தென்னிந்தியாவின் பிற பகுதி களில் தீட்டப்பட்டுள்ள ஓவியங்களைப் போன்றே திருநந்திக்கரை ஓவியங்களும் தீட்டப் பட்டுள்ளன. அர்த்த மண்டபத்தின் இடதுபுறமான மேற்குப் பக்கச் சுவரில் கணபதியின் உருவமும், வடக்குப் பக்கச் சுவரில் வீணாதர தட்சிணாமூர்த்தி, துர்க்கையும், கிழக்குப் பக்கச் சுவரில் நடராஜரும் தீட்டப்பட்டுள்ளன. தற்போது இவ்வோவியங்கள் கால ஓட்டத்தின் காரணமாக மிகவும் சிதைந்து காணப்படுகின்றன.

கி.பி.18–ம் நூற்றாண்டில் கேரளக் கலைப்பாணியிலமைந்த ஓவியங்கள் ஒரு முழுமை பெற்ற வளர்ச்சியினை அடைந்துள்ளதாகக் கருதலாம். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக பத்மனாபுரம் அரண்மனை மேல் மாடியிலுள்ள அறையின் சுவர்கள் முழுக்கத் தீட்டப்பட்டுள்ள ஓவியங்களைக் (Mural Paintings) கூறலாம். இவையனைத்தும் கி.பி.18–ம் நூற்றாண்டினைச் சேர்ந்தவையாகும். இவ்வறையின் நுழைவாயிலின் உட்புறம் மேல் நிலையில் சாஸ்தாவின் உருவம் வண்ண ஓவியமாகத் தீட்டப்பட்டுள் ளது. யோக பட்டத்துடன் சாஸ்தா காணப்படுகிறார். இவருக்கு வலப்புறமாக மகிசனின் தலை மீது நிற்கும் துர்க்கையும், இடப்புறத்தில் நாய் வாகனத்துடன் நிற்கும் பைரவரும், இவருக்கருகே கீழே சங்கு சக்கரமேந்தி நின்ற கோலத்தில் பெருமாளும் காணப்படு கின்றனர்.

மற்றொரு ஓவியத் தொகுப்பின் மையத்தில் கணபதி ஓவியமாக தீட்டப்பட்டுள் ளார். கணபதியின் தலை பக்கவாட்டில் திரும்பிய நிலையில் காட்டப்பட்டுள்ளது. பருத்த தொந்தியுடன் கனத்த உருவமாக கணபதி தீட்டப்பட்டுள்ளார். கணபதியைச் சுற்றி வேதியர் புடை சூழ அதற்குக் கீழே செண்டை, நாதஸ்வரம் இசைக்கும் கலைஞர்களும் காட்டப்பட்டுள்ளனர். கணபதிக்கு மேலே மண் கலயத்துடன் அந்தணர் ஒருவரும் மறுபுறத்தில் பழங்களால் தொடுக்கப்பட்ட மாலையைச் சுமந்து வரும் பிராமணரும், பிராமணப் பெண்ணும் மற்றும் நிவேதனப் பொருள்களைச் சுமந்து வருபவரும் அழகிய ஓவியங்களாக தீட்டப்பட்டுள்ளன. கணபதியின் அருகே ஒரு பெண் நாணத்துடன் அமர்ந்துள்ளார். ஆண்கள் பெரும்பாலும் தலைப்பாகையுடனும், மேலாடை இல்லாமலும் காட்சியளிக்கின்றனர்.

மற்றோர் ஓவியத்தில் பாய்ந்து செல்லும் குதிரையின் மீதமர்ந்துள்ள சாஸ்தாவும் அவரைக் கண்டு வணங்கும் அடியவர்களும், அரக்கர்களும் வண்ணமிகு ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளனர். குதிரைக்குக் கீழே அடியவனொருவன் புலியைத் தட்டிக் கொடுக்க,

அவனருகே மேலாடையின்றிக் கேரளக் கலைப்பாணியில் ஒரு பெண்ணும் எழிலார்ந்த ஓவியங்களாக தீட்டப்பட்டுள்ளனர். இவர்களின் இருபுறமும் சேவல், நாய், அணில் மற்றும் ஆந்தை ஆகியன காட்டப்பட்டுள்ளன. புலியைப் பார்த்து பயந்து மரத்தில் ஏறி யிருக்கும் பெண்ணின் உருவமும் அழகிய ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது.

சுசீந்திரம் கோபுரமாடங்களில் இராமாயணக் காட்சிகள் ஓவியங்களாக உள்ளன. இவை கி.பி.19–ம் நூற்றாண்டை சேர்ந்தவையாகும். திருவட்டாற்றில் உண்ணாழியின் வெளிச்சுவரில் ஆன்மீக மற்றும் சமூக கருத்துகளில் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவ்வோவியங்கள் கேரளக் கலைப்பாணியில் அமைந்தவை.

8. கோட்டைகள்

குமரி மாவட்டக் கோட்டைகளில் கி.பி.1600–ல் கட்டப்பட்ட உதயகிரிக்கோட்டையும் பத்மனாபபுரம் கோட்டையும் (மண்சுவர்கள்) பழமையானவையாகும். கி.பி.18–ம் நூற் றாண்டில் கன்னியாகுமரிலிருந்து ஆரல்வாய்மொழி வரை நீண்ட கற்கோட்டைச் சுவர் கட்டப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரியிலிருந்து பரமார்த்தலிங்கபுரம், மகாராஜபுரம், வட்டக்கோட்டை, இராமனாதிச்சன்புதூர் வழியாகச் சென்று இராமனாதிச்சன்புதூர் அருகேயுள்ள குன்றின் மீதேறிச் சென்று ஆரல்வாய்மொழியை இக்கோட்டைச் சுவர் அடைகிறது. இடையிடையே கண்காணிப்பு மேடைகள் உள்ளன. இதே காலகட்டத்தில் பத்மனாபபுரம் உதயகிரிக் கோட்டைகள் மற்றும் மருந்துக் கோட்டை, மய்ய கோட்டை, வட்டக் கோட்டை ஆகிய கோட்டைகள் கட்டப்பட்டதை வாலாற்று ஆதாரங்கள் தெரி விக்கின்றன. கி.பி. 1741–ல் குளச்சல் போருக்குப் பின் வேணாட்டரசன் மார்த்தாண்ட வர்மா (கி.பி.1729–1758) காலத்தில் டச்சுப்படை வீரர் டிலெனாய் மேற்பார்வையில் கல்குளம் (பத்மனாபபுரம்) மற்றும் உதயகிரிக் கோட்டைகளின் மண்கோட்டைச் சுவர்கள் அகற்றப் பட்டுக் கற்கோட்டைச் சுவர்களாக மாற்றிக் கட்டப்பட்டன. இச்செய்தியை வேணாட்டரசர் வீரரவி ரவிவர்மாவின் கி.பி. 1600ம் ஆண்டைச் சேர்ந்த நீட்டு (அரசாணை) ஒன்று தெரிவிக்கிறது.

உதயகிரிக்கோட்டை

1. அமைவிடம்:

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், புலியூர்க்குறிச்சி கிராமத்தில் உதயகிரிக்கோட்டை அமைந்துள்ளது. இது நாகர்கோவிலுக்கு வடமேற்கே 15கி.மீ. தொலைவிலும், பத்மனாபபுரம் அரண்மனைக்கு தென்கிழக்கே ¾ கி.மீ. தொலை விலும் நாகர்கோவில் – திருவனந்தபுரம் சாலையின் வலப்புறமாக அமைந்துள்ளது.

2. பெயர்க் காரணம்:

வேணாட்டரசர்களின் தலைநகரமான பத்மனாபபுரத்திற்குக் கிழக்கே (தென் கிழக்கே) உள்ள ஒரு சிறிய குன்றின் மீது இக்கோட்டை அமைந்துள்ளது. சூரியன் உதய மாகும் திசையில் இக்கோட்டை அமைந்துள்ளதால் உதயகிரிக்கோட்டை எனப் பெயர் பெற்றது எனக் கூறுவர்.

சேர/வேணாட்டரசர் பெயர்கள் பலவற்றில் 'உதய' எனும் பெயர் இடம் பெறுகிறது. (எ–டு: உதய மார்த்தாண்டவர்மா) எனவே, இம்மலைக் கோட்டைக்கு உதயகிரி எனப் பெயர் வந்திருக்கலாம்.

3. மண்கோட்டை:

இக்கோட்டை முதலில் கி.பி.1600–இல் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டது என்பதை அழகியபாண்டிபுரம் பெரியவீட்டு முதலியார் ஓலை ஆவணம் ஒன்றின் மூலம் அறியலாம். இது வேணாட்டரசர் வீரரவி ரவிவர்மா (கி.பி.1595–1607) காலத்தில் கி.பி.1600–இல் பிறப்பித்த நீட்டு (அரசனின் ஆணை) ஆகும். இவ்வாணையின்படி கல்குளம் கோட்டை (பத்மனாபபுரம் கோட்டை), உதயகிரிக்கோட்டை ஆகியன கட்டுவதற்கும், இனி வருங் காலங்களில் எழுப்பப்படும் கோட்டைகளுக்கும், அவற்றைப் பராமரிப்பதற்கும் வழங்கப் பட்ட கொடை இதில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கொடையினை மங்கலம் முதல் மணக்குடி வரையிலுள்ள நாஞ்சில் நாட்டார்கள் அந்நாட்டின் வட, தென் பிரிவுகளி லுள்ள அரசு நிலம் (பெரும்பற்று) மற்றும் கோயில் நிலங்(சங்கேதம்)களின் வருவாயி லிருந்து ஒவ்வொரு அறுவடைக் காலத்திலும் வரும் ஒவ்வொரு போகத்திலும் ஒரு "மா" நிலத்திற்கு ஒரு பணம் வீதம் கொடை வழங்கியதை இத்தமிழ் நீட்டு தெரிவிக் கின்றது.

"உதயகிரி கோட்ட வெயிக்கின்ற வகைக்கும்,
அகழு வெட்டின்ற வகைக்கும்,
கோட்ட மேயின்ற வகைக்கும்,
கம்பு கால் வெட்டின்ற வகைக்கும்,
ஓல கொள்ளின்ற வகைக்கும்"

என்ற வரிகளில் உதயகிரிக்கோட்டை அமைப்பதற்கான செய்தியை மலையாள மொழி நடையில் இந்நீட்டு தெரிவிக்கிறது. இதிலிருந்து மண்ணால் சுவரெழுப்பி அது மழையில் கரைந்து விடாமல் இருப்பதற்காகக் கம்பு கால் ஊன்றிச் சுவருக்கு மேலே ஓலைக்கூரை வேய்ந்ததனை அறியலாம். கல்குளம் கோட்டை (பத்மனாபபுரம் கோட்டை) கி.பி. 1620 இல் கட்டி முடிக்கப்பட்டது. இக்காலத்தினையொட்டியே உதயகிரிக் கோட்டையின் மண்கோட்டைச் சுவர் முதலில் கட்டி முடிக்கப்பட்டிருக்கலாம்.

4. கற்கோட்டை:

மார்த்தாண்ட வர்மா (1729–1758) காலத்தில் அவரால் கி.பி. 1741–ல் குளச்சல் போரில் போர்க் கைதியாகப் பிடிபட்ட டச்சு கடற்படை வீரர் டிலனாயின் தனித்திறமை யினை உணர்ந்து மன்னர் அவரைத் திருவிதாங்கூர்ப் படையிலேயே சேர்த்துக் கொண்டார். அப்போதுதான் உதயகிரியின் மண்கோட்டை கற்கோட்டையாக உருமாற்றம் அடைந்திருக்க வேண்டும். டிலெனாயின் மேற்பார்வையில் உதயகிரிக்கோட்டையின் மண்கோட்டைச் சுவர் அகற்றப்பட்டுக் கல்கட்டுமான கற்சுவராலான கற்கோட்டைச் சுவராக மாற்றப் பட்டது. இக்கோட்டை 260 அடி உயரமுள்ள ஒரு குன்றைச் சுற்றி 84¾ ஏக்கர் பரப்பள வில் 2808.60 மீட்டர் நீளத்தில் அமைந்துள்ளது. இக்கற்கோட்டையின் கோட்டைச் சுவர் 18 அடி உயரத்தில் 3 அடி அகலத்தில் கட்டப்பட்டுள்ளது. இக்கோட்டைச் சுவரின் கற்கள் கடுக்காய், கருப்புக்கட்டி, சுண்ணாம்பு, கத்தாழைச்சாறு என்ற கலவையினாலான சாந்து

கொண்டு இணைக்கப்பட்டுள்ளன. நான்கு மூலைகளிலும் மூலைக்கொத்தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுவரின் உச்சியில் கண்காணிப்பு வளைவுகள் அமைக்கப் பட்டுள்ளன. கோட்டையின் தென்புறத்தில் மூன்று சிறிய வாயில்களும், மேற்புறத்தில் பிரதான நுழைவாயிலும் உள்ளன. கண்காணிப்பு மேடைகள் கீழ்ப்புறத்தில் இரண்டும், மேற்புறத்தில் ஒன்றும், தென், வட புறங்களில் ஒவ்வொன்றுமாக மொத்தம் ஐந்து கண்காணிப்பு மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன. கோட்டைச் சுவரின் உட்பகுதியில் கோட்டைச் சுவரிலிருந்து மூன்று மீட்டர் அகலத்தில் சுற்றிலும் பிள்ளைக் கோட்டைச் சுவர் கட்டப் பட்டது. வடமேற்கு மூலையில் நீராடுவதற்கான படித்துறை ஒன்றும் காணப்படுகிறது. இக்கல்கட்டுமான கற்கோட்டைச் சுவர் கி.பி. 1741–1744–க்கு இடைப்பட்ட காலத்தில் கட்டி முடிக்கப்பட்டது எனலாம்.

5. இராணுவ மையம்:

உதயகிரிக்கோட்டை டிலெனாயின் மேற்பார்வையில் ஒரு இராணுவ மையமாகச் செயல்பட்டது. திருவிதாங்கூர்ப் படையினருக்கு ஐரோப்பீய முறையிலான போர்ப் பயிற்சியும், நவீன ஆயுதங்களும் வழங்கப்பட்டன. ஐரோப்பிய படைப் பிரிவுகளைப் போல் திருவிதாங்கூர்ப் படையமைப்பை டிலெனாய் பலபிரிவுகளாக மாற்றி அமைத்தார். உதயகிரிக்கோட்டை ஆயுதங்கள் மற்றும் இராணுவ தளவாடங்கள் தயாரிக்கும் கூடமாக வும், சேமிப்புக் கிடங்காகவும் இருந்துள்ளது. உதயகிரிக்கோட்டை வளாகத்திலேயே பயணியர் விடுதிக்கு வடக்கே ஒரு வார்ப்படச்சாலை (Iron foundry) இருந்துள்ளது. பயணியர் விடுதிக்கு தென்மேற்கே முகாம் கூடத்தையொட்டியுள்ள இடத்தில் இரும்பு உருக்குகள் ஆங்காங்கே காணப்படுவது இதனை உறுதி செய்கிறது. பீரங்கி குண்டுகள் வெவ்வேறு எடைகளில் தயாரிக்கப்பட்டன. இவை இக்கோட்டை வளாகத்திலேயே கிடைத்துள்ளன. இக்குண்டுகள் அதிகபட்சமாக 8.400 கி.கி. எடையிலும் குறைந்தபட்ச மாக 1.180 கி.கி. எடையிலுமாக பதினான்கு வெவ்வெறு எடைகளில் தயாரிக்கப்பட்டன. உதயகிரிக்கோட்டை ஆயுதங்கள் மற்றும் இராணுவதளவாடங்கள் தயாரிக்கும் கூடமாக வும் சேமிப்புக் கிடங்காகவும் இருந்துள்ளது இதிலிருந்து தெரிய வருகிறது. இங்கிருந்த ஒரு பெரிய பீரங்கியைப் பார்த்து அதிசயித்துப் பின்னாளில் ஆங்கிலேயர் வெல்ஷ் என்பார் கி.பி.1840 இல் தான் எழுதிய "இராணுவ நினைவுகள்" என்ற நூலில் கிழ்க் காணுமாறு குறிப்பிடுகிறார்:

"We had already captured 16 elephants and about 50,000stand of arms with some 100 guns; but the greatest curiosities were a gun and mortar in Oodayagherry and cast in place, by some European artists. They were made of brass, the gun 16ft long and bored as a hundred men assisted by 16 elephants could not move it even for a few yards.

திருவிதாங்கூர் படையெடுப்புகளுக்கு தேவையான ஆயுதங்களும், போர்த் தளவாடங்களும் உதயகிரிக்கோட்டையிலிருந்து வழங்கப்பட்டன. மன்னர் மார்த்தாண்ட வர்மா உதயகிரிக் கோட்டையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சிறந்த பீரங்கிகளையும், பீரங்கி குண்டுகளையும் தனது பிற்காலத்திய படையெடுப்புகளில் பயன்படுத்தினார்.

திருவிதாங்கூர் அரசு விரிவாக்கம் பெறுவதில் உதயகிரிக்கோட்டை முக்கிய பங்காற்றி யுள்ளது. காயங்குளம் முதல் கொச்சி வரையிலும், கிழக்கேயிருந்து வந்த படையெடுப்பு களிலும் இராமய்யன் தளவாயுடன் துணையாக டிலெனாய் சென்று மன்னருக்கு வெற்றி களைப் பெற்றுத் தந்தார். இவ்வெற்றிகளின் காரணமாக திருவிதாங்கூர் படைக்கு டிலெனாய் தலைமை இராணுவ அதிகாரியாக மன்னரால் பணியமர்த்தப்பட்டார். இதனால் மக்களால் "வலிய கப்பித்தான்" (Great captain) என அன்புடன் அழைக்கப்பட்டார். மன்னர் மார்த்தாண்டவர்மா காலத்திற்கு பின்பு திருவிதாங்கூர் மகாராஜாவான "கிழவன் ராஜா" என்று அழைக்கப்பட்ட கார்த்திகைத் திருநாள் இராமவர்மா (கி.பி.1758–1798) காலத்திலும் டிலெனாய் தொடர்ந்து முப்பத்தேழு ஆண்டுகள் பணியாற்றிவிட்டு கி.பி.1777 இல் உயிர் நீத்தார். கிழவன்ராஜா காலத்தில் திவானாகப் பணிபுரிந்த திவான் கேசவப்பிள்ளை மேற்பார்வையில் உதயகிரிக்கோட்டையில் முன்னெப்போதைக் காட்டிலும் விரைவாகவும் அதிக அளவிலும் ஆயுதங்களும், இராணுவத் தளவாடங்களும் தயாரித்துச் சேமித்து வைக்கப்பட்டன.

6. சிறைக்கூடம்:

உதயகிரிக்கோட்டை சிறைக்கூடமாகவும் பயன்பட்டுள்ளது. கி.பி.1799–இல் திவானாகப் பொறுப்பேற்ற ஜெயந்தன் சங்கரன் நம்பூதிரி என்பவன் முறையற்ற நிர்வாகத் தின் காரணமாக மக்களின் வெறுப்பைச் சம்பாதித்து தளவாய் வேலுத்தம்பியின் முயற்சி யால் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டான். இவனுக்குத் துணையாயிருந்தவன் சங்கரன் நாராயணப்பிள்ளை என்பவன். வேலுத்தம்பியால் இவர்கள் இருவரும் உதயகிரிக் கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர். இங்கு பயன்படுத்தப்பட்ட மனித வடிவிலான இரும்பு சிறைக்கூண்டு ஒன்று தற்போது பத்மனாபபுரம் அரண்மனை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

7. ஆங்கிலேயர் படையெடுப்பு:

தளவாய் வேலுத்தம்பி கி.பி.1809 இல் ஆங்கிலேயருக்கு எதிராக போர்க்கொடி பிடித்தார். இதனை அடக்க கர்னல் லீகர் தலைமையிலான ஆங்கிலேயேப் படை கி.பி. 1809, பிப்ரவரி மாதம் ஆரல்வாய்மொழிக்கு அருகே வந்து போரிட்டு வேலுத்தம்பியை பின்வாங்கச் செய்தனர். அடுத்த சில நாள்களில் லீகரின் தலைமையிலான படை மற்றோர் ஆங்கிலேயேப் படைத்தளபதி வெல்ஷ் என்பவரின் உதவியுடன் உதயகிரிக் கோட்டையை பிடித்துத் தங்களின் மேற்பார்வையில் கொண்டு வந்தனர்.

8. கல்லறைகளும், கல்வெட்டுகளும்:

உதயகிரிக்கோட்டையில் டிலெனாய் வழிபட்ட கத்தோலிக்கக் கிறித்துவ தேவா லயத்தின் வழிபாட்டுக்கூடத்தில் மொத்தம் ஏழு கல்லறைகள் உள்ளன. எல்லா கல்லறைகளிலும் மரணத்தைக் குறிக்கும் மண்டையோடும் அதன்கீழ் பெருக்கல் குறியீட்டில் எலும்புத் துண்டுகளும் புடைப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன.

1. **ஜான் டிலெனாய் கல்லறை:** அவன் டிலெனாயின் மகன் ஆவான். இவன் **யூசுப்கானுக்கு** எதிரான **களக்காட்டுப் போரின்** போது காயப்பட்டு கி.பி.1765இல் மரணமானான். இவனது கல்லறையில் இலத்தீன் மற்றும் தமிழ் மொழியில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டு இவனை **"செறிய கப்பித்தான்"** (Small captain) எனக் குறிக்கிறது. "களக்காட்டுச் சண்டையிலே காயப்பட்டுச் சரீரம் வீழ்ந்துபட" என கல்வெட்டு அவரது மரணத்தைக் குறிக்கிறது. கிழவன் ராஜா எனும் **கார்த்திகைத் திருநாள் இராமவர்மா மகாராஜா** (கி.பி.1758–1798) காலத்தில் இக்கல்லறை நிறுவப்பட்டது.

2. **டிலெனாய் கல்லறை:** இவரது கல்லறையின் உச்சியில் கற்சிலுவை நிறுவப் பட்டுள்ளது. அதற்குக் கீழே டச்சு அரசின் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. அதற்குக் கீழே பிறைச்சந்திரன், பீரங்கிக் குண்டு, பீரங்கி, துப்பாக்கி, கத்தி, ஈட்டி, வளை குழலூதி, இரணபேரிகை ஆகிய படைக்கருவிகளும், இசைக் கருவிகளும் கற்பலகையின் மீது புடைப்பாகக் காட்டப்பட்டுள்ளன. மறைந்த மாவீரனுக்கு இராணுவ அணிவகுப்பு மரியாதை செலுத்துவதைப் பிரதிபலிப் பதாக இவை பொறிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டு இவரை "சீ வலிய கப்பித்தான்" (Great Captain) எனக் குறிக்கிறது. திருவிதாங்கூர் மன்னர்களுக்கு இவர் பெற்றுத் தந்த வெற்றிகளை இக்கல்வெட்டு குறிக்கிறது. முப்பத்தேழு ஆண்டு கள் திருவிதாங்கூர்ப் படையில் விசுவாசமாகப் பணிபுரிந்து, முதன்மை இராணுவ அதிகாரியுமாக இருந்து கி.பி. 1777 இல் மரணமானார். இக்கல்லறை தர்மராஜா எனும் ராமவர்மா மகாராஜா (கி.பி.1758–1798) காலத்தில் நிறுவப்பட்டது. காயங்குளம் முதல் கொச்சி வரை நடந்த படையெடுப்புகளில் மகாராஜாவுக்கு வெற்றி பெற்றுத் தந்ததை இவரது கல்வெட்டு குறிக்கிறது.

3. **மரிகாத டிலெனாய் கல்லறை:** இவர் டிலெனாயின் மனைவி ஆவார். இவரது கல்லறையின் உச்சியில் டச்சு அரசுச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. இலத்தீன் மற்றும் தமிழ் மொழிகளில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இவரை "எளியவர்களுடைய தாயார்" எனக் கல்வெட்டு குறிக்கிறது. இவர் 1782இல் மரணமானார். ராமவர்மா மகாராஜா (கிழவன் ராஜா) காலத்தில் இக்கல்லறை நிறுவப்பட்டது.

4. **பீட்டர் புலோரி கல்லறை:** இவர் திருவிதாங்கூர் படையில் டிலெனாயிக்கு அடுத்த நிலையில் இரண்டாம் நிலை இராணுவ அதிகாரியாகப் பணிபுரிந்தவர். இவரது கல்லறையின் உச்சியில் டச்சு அரசுச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளன. இவரது பெயர் தமிழ்க் கல்வெட்டில் "பெதுரு புலோரி" எனக் குறிப்பிடப்பட் டுள்ளது. "இக்கோட்டைக்கு ரண்டாம் பேர் உத்தியோகத்திலே இருந்து" என இவர் டிலெனாய்க்கு அடுத்த நிலையில் பதவி வகித்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. இவர் திருவிதாங்கூர் படையில் 36 ஆண்டுகள் படைத் தளபதியாகப் பணியாற்றித் தனது 55–ஆவது வயதில் கி.பி.1779 இல் மரணமானார். இவரது கல்லறையும் கிழவன் ராஜா காலத்தில் நிறுவப்பட்டது.

5. **மேஜர் பீட்டர் சார்லி கல்லறை:** இவர் டச்சு இராணுவ மேஜர் ஆவார். இவரது கல்லறையில் லத்தீனிலும், தமிழிலும் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளன. திருவிதாங்கூர் அரசுச் சின்னமான சங்கு பொறித்த தலைப்பாகை அணிந்த இராணுவ வீரர்களின் படைப்பிரிவில் (திருவிதாங்கூர்ப் படை) இவர் பணியாற்றி யதாகக் கல்வெட்டு தெரிவிக்கிறது. இவர் தனது 33 வது இளம் வயதில் கி.பி. 1803–இல் காலமானார். இவரது கல்லறை பாலராமவர்மா மகாராஜா (கி.பி. 1798–1810) காலத்தில் நிறுவப்பட்டது.

6. **கேப்டன் ஹியூஸ் என்பானின் குழந்தைகளின் கல்லறை:** இது காப்டன் ஹியூஸ் என்பானின் இரு குழந்தைகளின் ஒரே கல்லறையாகும். இதில் ஆங்கி லத்தில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கேப்டனின் 6 ½ மாதமே ஆன ஆண் குழந்தை 31..07.1812லும் இரண்டாவது மகன் 7 வயதே ஆன ஆண் குழந்தை7.10.1813லும் காலமானதை இக்கல்வெட்டு குறிக்கிறது. இக்கல்லறை இராணி கௌரி லட்சுமிபாயி காலத்தில் நிறுவப்பட்டுள்ளது.

7. **அன்னிரோஸ் கல்லறை:** இது வில்லியம் ரௌஸ்காண்டர் என்ற இராணுவ அதிகாரியின் மனைவி அன்னிரோஸ் என்பாரின் கல்லறையாகும். இதில் ஆங்கிலத்தில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. ஜேன் லியோனார்டு என்ற தன் மகளின் ஆசைப்படி இக்கல்லறை எழுப்பப்பட்டதாக இக்கல்வெட்டு தெரிவிக் கிறது. அன்னிரோஸ் 22.12.1811இல் காலமானார். இராணி கௌரி லட்சுமிபாயி காலத்தில் அக்கல்லறை நிறுவப்பட்டுள்ளது.

இக்கல்லறைகள் டிலெனாய் வழிபட்ட கத்தோலிக்க கிறித்துவ ஆலய வளாகத் திலேயே உள்ளன. இவற்றை மழை மற்றும் வெயிலிலிருந்து பாதுகாக்கும் வண்ணம் கி.பி. 1900 இல் ஸ்ரீ மூலம் திருநாள் மகாராஜா (கி.பி 1885–1905) காலத்தில் கல்லறை களின் மீது நான்கு புறமும் தூண்கள் தாங்கிய நிலையில் கான்க்ரீட் தளக் கூடங்கள் அமைக்கப் பட்டன. இவற்றை உள்ளடக்கிய 0.20.50ஹெக். பரப்பளவைச் சுற்றிலும் இரும்பு வேலி நிறுவப்பட்டுள்ளது.

ஸ்ரீ மூலம் திருநாள் மகாராஜா காலத்திலேயே கி.பி.1900 இல் முகாம் கூடம் ஒன்றும் கோட்டை வளாகத்தின் தென்மேற்குப் பகுதியில் பயணியர் விடுதியை ஒட்டிக் கட்டப்பட்டது தற்போது சிதிலமடைந்து காணப்படுகிறது.

9. பிற கல்லறைகள்:

டிலெனாய் கல்லறை காணப்படும் கிறித்துவ ஆலயத்தின் வெளி வளாகத் தில் தென்மேற்கே கல்லறை ஒன்று உள்ளது. இது ஒரு குதிரையின் கல்லறையாக இருக்கலாம். மேலே கற்களை பரப்பியிருக்கும் வடிவம் இதனை உறுதிப்படுத்துகிறது. குதிரையை பூமியில் புதைந்து மண்ணால் மூடி அதன் மீது கருங்கற்களை பரப்பி வைத்துள்ளனர்.

இதற்கு வலப்புறத்தில் செங்கற்கள் வைத்து சுண்ணம்பு சாந்து கொண்டு பூசப்பட்ட மற்றுமொரு சிறிய கல்லறை உள்ளது. இக்கோட்டையில் பணிபுரிந்த ஒருவரின் கல்லறை யாகலாம்.

இக்கல்லறைக்கு வலப்புறமாக மற்றொரு கல்லறை உள்ளது. இதன் மீதுள்ள கற்பலகையில் மண்டையோடு, எலும்புத் துண்டுகள் பெருக்கல் குறியீட்டில் மட்டுமே உள்ளன. கல்வெட்டு இல்லை. இது தவிர கிறித்துவ ஆலய நுழைவாயிலுக் முன்பாகவும் ஒரு கல்லறை உள்ளது.

10. கத்தோலிக்க கிறித்துவ தேவாலயம்:

டிலெனாய் தம் குடும்பத்தாருடன் வழிப்பட்ட கத்தோலிக்க கிறித்துவ தேவாலயம் தெற்குக் கோட்டைச் சுவரையொட்டி இருக்கிறது. இவ்வாலயம் பலிபீட.ம், வழிபாட்டுக் கூடம் என்ற இரு அறைகளுடன் மேற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் மேற்புறத்தில் பிரதான நுழைவாயில் காணப்படுகிறது. முகப்புச் சுவரில் இருபுறமும் சன்னல்களும் அரைத்தூண்களும் உச்சியில் தேவதையின் மீது கலசமும் அதன் மீது கற்சிலுவையும் அமைத்துக் கட்டப்பட்டது (கற்சிலுவை தற்போது இல்லை). வழிபாட்டுக்கூடத்தின் தென்கீழ் பகுதியிலுள்ள சுவரில் நீள்வட்டவடிவில் மெழுகுவர்த்தி எரியச் சிறிய மாடம் ஒன்றுள்ளது. ஆலயத்தின் வடகீழ் மூலையில் வழிபாட்டுப் பொருள் களை வைப்பதற்கான சிறிய மேடையும் அதனருகே பாதிரியார் பலிபீடத்திற்குள் வரச் சிறிய நுழைவாயிலும் உள்ளன. கூரைப்பகுதி திறந்தவெளியாக உள்ளது. இது முன்பு கேரளக் கலைப்பாணியில் தடி மற்றும் கூரை ஓடுகளைக் கொண்டு அமைக்கப் பட்டிருந்தது. இத்தேவாலயத்தின் வெளி வளாகத்தில் கிடைத்துள்ள கூரை ஓடுகள் அதனை உறுதி செய்கின்றன.

கி.பி.1875–1898 ஆண்டகளுக்கிடையே திருவிதாங்கூர் பொறியியல் பிரிவு அலுவலகத்திற்கும் திருவிதாங்கூர் அரசுக்கும் இடையில் நடைபெற்ற பழைய கடிதத் தொடர்பு உதையகிரிக்கோட்டையில் உள்ள டிலெனாய் வழிபட்ட கிறித்துவ தேவாலயத் தின் நிலை குறித்துச் சுவையான தகவல்களை அளிக்கின்றன.

திருவிதாங்கூர் அரசின் அப்போதைய உதவிப் பொறியாளரான ஜி. ஹார்ஸ்லி என்பவர் முதன்மைப் பொறியாளருக்கு உதயகிரிக்கோட்டை வளாகத்திலுள்ள கிறித்துவ தேவாலயத்திற்கு சன்னல், கதவுகள் மற்றும் கூரை அமைப்பதற்காக ரூ. 1549ல் மதிப்பீடு தயாரித்து 31.5.1875–ல் பரிந்துரை அனுப்பியிருந்துள்ளார். இதன் விவரம்:

4700 ச.அடி கூரை ஓடுகளுடன்	ரூ 25 வீதம்	ரூ 1175
11 சன்னல்கள்	ரூ 15 வீதம்	ரூ 165
2 கதவுகள்	ரூ 20 வீதம்	ரூ 40
2 கதவுகள்	ரூ 15 வீதம்	ரூ 30
1 கதவு	ரூ 50 வீதம்	ரூ 50

கதவு மற்றும் சன்னல் பழுது பார்க்க	ரூ	39
சுவர்கள் பழுது பார்க்க	ரூ	50
ஆக மொத்தம்	ரூ	**1549**

இக்கடிதத்தில் ஹார்ஸ்லி ஏப்ரல் 1873–ல் இக்கிறித்துவ ஆலயத்தைக் களஆய்வு செய்ததையும், அப்போது இவ்வாலயம் புதர் மண்டிக் கிடந்ததையும், சிதிலமடைந் திருந்ததையும் குறிப்பிட்டுள்ளார்.

கடித எண்: 2415 நாள்:7.6.1875–ன்படி திருவிதாங்கூரின் திவானுக்கு அப்போதைய முதன்மைப் பொறியாளர் உதயகிரிக் கோட்டையிலுள்ள பழமையான நினைவுச் சின்னங் களான கல்லறைகளின் சிதிலமடைந்த நிலை குறித்தும் அவைகளை பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் கடிதம் எழுதியிருந்திருக்கிறார். இக்கடிதத்தோடு ஜி.ஹார்ஸ்லியின் கடிதத்தையும் இணைத்து அனுப்பியிருந்தார்.

முதன்மைப் பொறியாளரின் கடித எண்: 2415 நாள்: 7.6.1875–க்கு திருவிதாங்கூர் அரசிடமிருந்து அச்சமயம் நிதி ஒதுக்கீடு வழங்க இயலாத நிலை உள்ளது என 10.6.1875–க்கு அன்று பதில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (ஆயில்யம் திருநாள் மகாராஜா காலத்தில் இது நிகழ்ந்தது)

பிறகு, மீண்டும் முதன்மைப் பொறியாளர் அலுவலகத்திலிருந்து மேற்படி கூரை அமைக்கும் பணிக்காக ரூ 1270/– நிதி ஒதுக்கீடு வழங்கக் கேட்டு 5.4.1898ல் கடிதம் அனுப்பப்பட்டிருந்துள்ளது.

கடைசியாக திருவிதாங்கூர் அரசு 5.4.1898–ல் ரூ 1270/– நிதி ஒதுக்கீடு கூரை அமைக்கும் பணிக்காக வழங்கியுள்ளது. (மூலம் திருநாள் மகாராஜா காலத்தில் இது நிகழ்ந்தது)

11. குளம்:

உதயகிரிக்கோட்டையினுள் நான்கு புறமும் படித்துறைகளுடன் கூடிய குளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குளம் கோட்டையின் வடமேற்கே மேற்குக் கோட்டைச் சுவரையொட்டிக் காணப்படுகிறது. இக்குளம் குதிரைகளைக் குளிப்பாட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

12. சுரங்கம்:

உதயகிரிக்கோட்டையின் வடமேற்கே வடக்குக் கோட்டைச் சுவரின் பிள்ளைக் கோட்டைச் சுவரிலிருந்து தெற்கே சுமார் 5 அடி தூரத்தில் குன்றுக்கு மேற்கே ஆசான் கிணறு–குமாரகோவில் சாலையின் அருகே சுரங்கப் பாதையொன்று செல்கிறது. இதன் நுழைவாயில் கிழக்கு நோக்கிக் காணப்படுகிறது. 80 செ.மீ. நீளத்திலும், 46 செ.மீ. அகலத்திலும் உள்ளது. சுரங்கத்தினுள் கீழ்நோக்கிக் கற்படிகள் காணப்படு கின்றன. இச்சுரங்கப்பாதை அவசர காலத்தில் தப்பித்துச் செல்லப் பயன்பட்டிருக்கலாம்.

தற்போது உதயகிரிக்கோட்டைச் சுவரும், டிலெனாய் சமாதியும் பாதுகாக்கப் பட்ட சின்னமாகத் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையின் பராமரிப்பின்கீழ் உள்ளது.

வட்டக் கோட்டை

அகத்தீஸ்வரம் வட்டத்தில், கன்னியாகுமரியில் கன்னியாகுமரிக்கு வடகிழக்கே 6கி.மீ. தொலைவில் வட்டக்கோட்டை அமையப் பெற்றுள்ளது. இக்கோட்டை கி.பி. 18–ம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகலாம். தற்போதுள்ள கோட்டையின் நுழைவாயிலின் முகப்பில் 'BRV' என பாலராமவர்மா திருவிதாங்கூர் மன்னரைக் குறிக்கும் பெயரும் திருவிதாங்கூர் அரசு சின்னமான 'சங்கு' முத்திரையும் பொறிக்கப்பட்டுள்ளது.

வட்டக்கோட்டை கடற்கரையையொட்டிக் கட்டப்பட்டுள்ளது. இதன் நான்கு புறங்களிலும் நான்கு மூலைக் கொத்தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோட்டை 31/2 ஏக்கர் நிலப்பரப்பினை உள்ளடக்கியதாக கட்டப்பட்டுள்ளது.

கோட்டைச் சுவர்கள் கருங்கற்களால் சுமார் 26 அடி உயரத்தில் 3 அடி அகலத்தில் கட்டப்பட்டுள்ளன. கோட்டை நுழைவாயில் 29 அடி அகலத்திலும், கோட்டையின் நான்கு மூலைகளிலும் 18 அடி அகலத்திலும் கோட்டைச் சுவர் கட்டப்பட்டுள்ளது. கோட்டைச் சுவரின் மேற்பகுதி சீவக்கல்லினால் சுமார் 3 அடி உயரத்திற்கு கட்டப்பட்டுள்ளது. 1905–ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட வட்டக்கோட்டையின் வரைபடம் இதனை ஒரு சதுரக் கோட்டையாகக் காட்டுகிறது.

இக்கோட்டை வளாகத்தின் மையத்தில் ஒரு குளம், கிணறு, பீரங்கி ஏற்றி நிறுத்துவதற்கான கீழிருந்து மேலாகச் செல்லும் சறுக்கலான தளத்துடன் கூடிய மேடை, குதிரை லாய்ம் மற்றும் காவல் புரியும் வீரர்கள் தங்குவதற்காகவும், தளவாடங்கள் வைப்பதற்காகவுமான 4 அறைகள் உள்ளன. இவையனைத்தும் ஒரே மாதிரியான கட்டுமான அமைப்பைக் கொண்டுள்ளன.

தென்கிழக்கு மூலையிலுள்ள அறை 50' x 9.10' அடி என்ற அளவில் கல் மடமாகக் கட்டப்பட்டுள்ளது. கோட்டைச் சுவருடன் இணைத்துக் கட்டப்பட்டுள்ள இவ்வறையினை ஏழு கற்தூண்கள் தாங்கி நிற்கின்றன. விதானம் பலகைக் கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. பலகைக் கல் ஒன்றில் மீன் சின்னம் பொறிக்கப் பட்டுள்ளது. ஏழு பலகைக் கற்களிலும் ⊔ா என்ற குறியீடுகள் மாறி மாறிப் பொறிக்கப் பட்டுள்ளன. சுவர்ப் பகுதியும், கூரைப் பகுதியும் செங்கல் மற்றும் சுதை கொண்டு கட்டப்பட்டுள்ளன.

தென் கிழக்கு மூலையிலுள்ள அறை கோட்டைச் சுவருடன் இணைத்து 50.4' x 9.8' என்ற அளவில் கட்டப்பட்டுள்ளது. ஏழு தூண்கள் இவ்வறையைத் தாங்கி நிற்கின்றன. விதானக் கற்களில் மூக்கு நீண்ட மீன் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. வடகிழக்கு மூலையிலுள்ள அறை 51.8' X 9.3' அடி என்ற அளவில் கட்டப்பட்டுள்ளது. இவ்வறையின் விதானத்திலுள்ள பலகைக் கல் ஒன்றில் ⊔ா என்ற குறியீடும், மற்றொரு பலகைக் கல்லில் சூலமும், 3 பலகைக் கற்களில் மீன் சின்னங்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

வடமேற்கு மூலையிலுள்ள அறை 8.10' X 49.9' அடி என்ற அளவில் கட்டப்பட்டுள்ளது. இவ்வறையின் விதானத்திலுள்ள பலகைக் கல் ஒன்றில் ⊔ா என்ற குறியீடும் மீன் சின்னத்திற்கு முன்பாக சந்திரன் புடைப்பாகவும் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வறை யினை ஆறு தூண்கள் தாங்கி நிற்கின்றன. வட்டக்கோட்டையின் மையத் திலுள்ள குளம் யானைகள் மற்றும் குதிரைகளை குளிப்பாட்டுவதற்காக பயன்படுத்தப் பட்டவையாகும்.

மருந்துக் கோட்டை

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், விலவூர் பேரூராட்சியில், கல்குளம் வருவாய் கிராமத்திலுள்ள சிற்றூர் மருந்துக்கோட்டை ஊராகும். இவ்வூருக்கு மேற்கே யுள்ள குன்றின் மீது சுமார் 800 அடி உயரத்தில் இக்கோட்டை அமைந்துள்ளது.

மருந்துக்கோட்டையின் சுவர் சுமார் 2 ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கியதாகவும் சுமார் 500 அடி நீளத்திலும் செல்கிறது. இக்கோட்டையின் மேற்பகுதி சுமார் 31/2 அடி உயரத்தில் வெட்டுக் கற்களினால் (Cutting stone) கட்டப்பட்டுள்ளது. கோட்டைச் சுவரின் கீழ்ப்பகுதி கிரனைட் கற்களினால் சுமார் 10 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ளது.

இக்கோட்டையின் மையத்தில் செங்குத்தாக பாறைகள் நிற்கின்றன. கோட்டை யின் நான்கு மூலைகளிலும் நான்கு கொத்தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர வடபுறக் கோட்டைச் சுவரின் மத்தியிலும் ஒரு கொத்தளம் அமைக்கப்பட்டுள்ளது. வடக்குக் கொத்தளத்தின் அருகே ஒரு கல் மண்டபம் கட்டப்பட்டுள்ளது. தென்மேற்குக் கொத்தளத்தின் அருகே உட்பகுதியில் கல் கட்டுமானம் கொண்ட சுமார் 5 அடி ஆழத்தில் குழி ஒன்றுள்ளது. மேற்குக்கோட்டைச் சுவரின் வெளியே நீராழி ஒன்றும் உள்ளது.

இது 12 கால் கல் மண்டபம் ஆகும். இம்மண்டபம் 16' 10" x 11' 4" என்ற நீள அகல அளவிலுள்ளது. மேல் தளத்திலிருந்து இதன் சுவர் செங்கல் மற்றும் சுதை கொண்டு கட்டப்பட்டுள்ளது. மண்டபத்தின் உச்சியில் கூரைப் பகுதி வட்ட வடிவில் செங்கல் மற்றும் சுதை கொண்டு கட்டப்பட்டுள்ளது. கிழக்கு நோக்கி அமைந்துள்ள இம்மடத்தின் தூண்கள் தென்புறத்தில் நான்கும், வடபுறத்தில் நான்கும், மையத்தில் இரண்டிரண்டு தூண்களாக நான்கும் ஆக மொத்தம் 12 தூண்கள் இக்கல் மடத்தை தாங்கி நிற்கின்றன. தூணின் உயரம் 7' 6" என்ற அளவில் உள்ளது. தாங்கு தளத்திற்கு மேலே யுள்ள மடத்தின் அதிட்டானக் கல் கட்டுமானம் 3' 4" உயரத்திலுள்ளது. இம்மடத்தின் மேற்புறச் சுவரில் குறுக்குச் சட்டங்கள் ஏதுமில்லாத சாளரம் ஒன்று காணப்படுகிறது. இக் கல் மடத்தின் நுழைவதற்கு வாயில் வடமேற்கு மூலையில் அமைக்கப்பட்டுள்ளது. இக் கல் மடம் மருந்துக்கோட்டையில் காவல் பணியிலிருந்தோரும், வெடிமருந்து தயாரிக்கும் பணி யிலிருந்தோரும் தங்குவதற்காகக் கட்டப்பட்டதாகலாம்.

தென்மேற்கு மூலைக் கொத்தளம் :

நீளம் 16' 6"
அகலம் 13' 5"
உயரம் 3'

வடமேற்கு கொத்தளம் :

நீளம் 13 ½'
அகலம் 13 ½'
உயரம் 3 ½'

தென்கிழக்கு மூலைக் கொத்தளம்

நீளம் 13 ½'
அகலம் 16'
உயரம் 3 ½'

வடகிழக்கு கொத்தளம் :

நீளம் 13 ½'
அகலம் 13 ½'
உயரம் 3 ½'

வடக்கு கொத்தளம்:

நீளம் 13 ½'
அகலம் 13 ½'
உயரம் 3 ½'

இக்கொத்தளங்கள் அனைத்தும் வெட்டுக் கற்களினால் கட்டப்பட்டு வெளிப்புறம் சுதையினால் பூசப்பட்டுள்ளது. கோட்டைச் சுவரின் உச்சியில் துப்பாக்கி ஏந்திய வீரர்கள் துப்பாக்கியை குறிபார்த்து வைத்துக்கொள்ள வசதியாக வரிசையாக வளைவுகள் இடைவெளிவிட்டு வைக்கப்பட்டுள்ளன.

மேற்குக்கோட்டைச் சுவரின் மத்தியில் சிறிய வாசல் (inlet) 3' 8" x 1 ½' என்ற அளவில் நிலைக்கல்லினால் அமைக்கப்பட்டுள்ளது.

மருந்துக்கோட்டையின் நுழைவாயில் நிலைக் கால் 7' x 1" x 4' என்ற அளவில் அமைக்கப்பட்டுள்ளது. நுழைவாயினுள் செல்ல 3 படிக்கட்டுகள் மட்டும் உள்ளன.

கோட்டையின் தென்மேற்கு கொத்தளத்தின் அருகே உட்பகுதி கல் கட்டுமானத்துடன் காணப்படும் சுமார் 5 அடி ஆழத்தில் குழி ஒன்று காணப்படுகிறது. இது வெடிமருந்து பொருட்கள் சேகரித்து வைக்கும் கிடங்காக பயன்பட்டிருக்கலாம்.

கி.பி. 1741–ல் வேணாட்டரசர் மார்த்தாண்டவர்மா தலைமையிலான படையினருக்கும் டச்சுப்படையினருக்கும் குளச்சலில் போர் நடைபெற்றது. இதில் மார்த்தாண்டவர்மா வெற்றி பெற்று 24 டச்சுப்படை வீரர்களை பிணைக் கைதிகளாக பிடித்து வந்தார். அவர்களுள் டச்சு வீரன் டிலனாய் தன் போர்த் திறமையாலும் மதிநுட்பத்தினாலும் மன்னன் மார்த்தாண்டவர்மாவின் தனிக் கவனத்தை ஈர்க்க டிலனாயை தனது திருவிதாங்கூர் படைப் பிரிவிலேயே மன்னர் இணைத்துக் கொண்டார். பின் டிலனாய் மேற்பார்வையில் மன்னாலான பத்மனாபபுரம் கோட்டை, உதயகிரிக்கோட்டையின் சுவர்கள் கற்கோட்டைச் சுவர்களாக மாற்றிக் கட்டப்பட்டன. இவை கி.பி. 1741–1744க்கு இடைப்பட்ட காலத்தில் கட்டி முடிக்கப்பட்டன. ஐரோப்பிய முறையிலான போர்ப் பயிற்சியும், ஆயுதங்களும் வீரர்களுக்கு வழங்கப்பட்டன. இதன் நீட்சியாக வெடிமருந்து தயாரிக்க கட்டப்பட்ட கோட்டையே மருந்துக் கோட்டையாகும். இக்கோட்டை கி.பி.1744க்குப் பின்பு கட்டப்பட்டதாகலாம். இக்கோட்டையில் தயாரிக்கப்பட்ட வெடிமருந்துகள் மார்த்தாண்டவர்மா மேற்கொண்ட போர்களுக்கு பயன்படுத்தப்பட்டதுடன் அதன் மூலம் பெற்ற வெற்றிகளின் வாயிலாக திருவிதாங்கூர் அரசை நிறுவுவதற்கு மூல காரணமாக அமைந்தது எனலாம்.

மன்னர் மார்த்தாண்டவர்மா (கி.பி.1729–1758) காலத்திற்குப் பின்பு கிழவன் ராஜா என்றழைக்கப்பட்ட கார்த்திகைத் திருநாள் இராமவர்மா (கி.பி.1758–1798) காலத்தில் முன்னெப்போதைக்காட்டிலும் அதிகமாக டிலெனாய் மேற்பார்வையில் வெடிமருந்து இக்கோட்டையில் தயாரிக்கப்பட்டது.

கி.பி. 19–ம் நூற்றாண்டின் மத்தியில் ஆங்கிலேயக் கும்பினியாரின் படையெடுப்புக்கு பின்பு மருந்துக்கோட்டை தன் செல்வாக்கினை இழந்தது எனக் கூறலாம்.

மய்யக்கோட்டை

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், பத்மனாபபுரம் நகராட்சியில், கல்குளம் கிராமத்தில் பத்மனாபபுரத்திற்கு வடக்கே 1 கி.மீ. தொலைவிலும், நாகர்கோவில்–குலசேகரம் சாலைக்கு கிழக்கே ½ கி.மீ தொலைவிலும் மருந்துக்கோட்டையிலிருந்து குமாரகோவில் செல்லும் சாலையில் மய்யக்கோட்டை அமைந்துள்ளது.

சுமார் 200 அடி உயரத்திலுள்ள சிறிய குன்றின் மீது மய்யக்கோட்டை கட்டப்பட்டுள்ளது. சுமார் 1½ ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கி சதுரக்கோட்டையாக இது கட்டப்பட்டுள்ளது. இக்கோட்டைச் சுவரின் நீளம் சுமார் 400 அடி ஆகலாம். கோட்டைச் சுவரின் மேல்பகுதி சுமார் 3 அடி உயரத்திற்கு வெட்டுக்கற்களால் கட்டப்பட்டுள்ளது. இதற்குக் கீழே சுமார் 15 அடி உயரத்திற்கு கருங்கற்களால் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. உச்சியில் துப்பாக்கி ஏந்திய வீரர்கள் துப்பாக்கியை வைத்துக் குறி பார்ப்பதற்காக இடைவெளிகள் விட்டு வரிசையாக வளைவுகள் (Arches) அமைக்கப்பட்டுள்ளன.

கிழக்குக் கோட்டைச் சுவரின் இரு மூலைகளிலும் வடகிழக்கு மற்றும் தென் கிழக்கு மூலைகளில் இரு மூலைக்கொத்தளங்கள் சுமார் 25' x 25' என்றளவில் அமைக்கப்பட்டுள்ளன. நுழைவாயில் நிலைக் கல்லினால் 6' x 5' x 1' என்ற அளவில்

அமைக்கப்பட்டுள்ளது. கோட்டையின் மையத்தில் சுமார் 8' மற்றும் 12' உயரத்தில் இரு கரும்பாறைக் கற்கள் குத்திட்டு நிற்கின்றன.

கோட்டையின் மையத்தில் ஒரு குழி சுமார் 3 அடி ஆழத்தில் வெட்டப்பட்டுள் ளது. இக்கோட்டை உருவாவதற்கு கி.பி.1741–ல் நடைபெற்ற குளச்சல் போரும், திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்டவர்மாவைச் சுற்றியிருந்த அரசியல் சூழலும் முக்கிய காரணிகளாகும்.

கி.பி.1744க்குப் பின்பு இக்கோட்டை கட்டப்பட்டதாகலாம். மயானக் கோட்டையே 'மய்யக்கோட்டை' யென மலையாள சொல் வழக்கில் அழைக்கப்பட்டு வருகிறது. இக்கோட்டை எதிரிகளுக்கு தண்டனை கொடுக்குமிடமாகவும், இறந்த வீரர்களை எரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டும் இருந்துள்ளது.

கி.பி. 19–ம் நூற்றாண்டின் மத்தியில் மய்யக்கோட்டை தன் செல்வாக்கினை இழந்தது. ஆங்கிலேயக் கும்பினியர் படையெடுப்புக்குப் பின்பு இக்கோட்டை தனது முக்கியத்துவத்தை இழந்துள்ளது.

தற்போது சிதிலமடைந்து காணப்படும் இக்கோட்டை வளாகம் முழுவதும் சுமார் 3 அடி உயரத்திற்கு சுக்குநாரிப் புல் மண்டிக் காணப்படுகிறது.

பத்மனாபபுரம் கோட்டை (கல்குளம் கோட்டை)

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், தக்கலையிலிருந்து 2 கி.மீ. தொலைவிலும் உதயகிரிக்கோட்டைக்கு வடகிழக்கே 1 கி.மீ. தொலைவில் பத்மனாப புரம் அமைந்துள்ளது.

பத்மனாபபுரத்தின் பழைய பெயர் கல்குளம் ஆகும். மன்னர் மார்த்தாண்டவர்மா கி.பி. 1750ல் நாட்டை பத்மனாபசுவாமிக்கு அர்ப்பணித்து (திருப்படித்தானம்) விட்டு பத்மனாபதாசனாக மாறியபின் வேணாட்டு அரசர்களின் தலைநகரமான கல்குளம் பத்மனாபபுரமாகப் பெயர் மாற்றம் அடைந்தது. பத்மனாபபுரம் அரண்மனையைச் சுற்றிலும் முதலில் மண்கோட்டைச் சுவர் எழுப்பப்பட்டிருந்தது. பின்னர் மார்த்தாண்டவர்மா காலத்தில் (கி.பி. 1729–1758) கற்கோட்டையாயிற்று.

மண்கோட்டைச் சுவர் முதலில் கி.பி.1600–ல் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டது என்பதை அழகியபாண்டிபுரம் பெரியவீட்டு முதலியார் ஓலை ஆவணம் ஒன்றின் மூலம் அறியலாம். இது வேணாட்டரசர் வீரரவி ரவிவர்மா (கி.பி.1595–1609) காலத்தில் கி.பி.1600–ல் பிறப்பித்த நீட்டு (அரசனின் ஆணை) ஆகும். இவ்வாணையின்படி கல்குளம் கோட்டை, உதயகிரிக்கோட்டை ஆகியன கட்டுவதற்கும் இனிவரும் காலங்களில் எழுப்பப்படும் கோட்டைகளுக்கும், அவற்றைப் பராமரிப்பதற்கும் நாஞ்சில் நாட்டாரால் வழங்கப்பட்ட கொடை இதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கொடையினை மங்கலம் முதல் மணக்குடி வரையிலுள்ள நாஞ்சில் நாட்டார்கள் (நாஞ்சில் நாட்டின் வட, தென் மீதியிலுள்ளவர்கள்) அரசு நிலம் (பெரும்பற்று) மற்றும்

கோயில் நிலங்களின் (சங்கேதம்) வருவாயிலிருந்து ஒவ்வொரு அறுவடை காலத்திலும் வரும் ஒவ்வொரு போகத்திலும் ஒருமா நிலத்திற்கு ஒரு பணம் வீதம் கொடை வழங்கி யதை இந்நீட்டு தெரிவிக்கிறது.

1. நாஞ்சி நாட்டில் வடவகை தென்வீதி உள்பட்ட பெரும்பற்று சங்கேதம் மங்கலம் முதல் மணக்குடி வரை.
2. ஒள்ள நாட்டாரும் தேசத்தொள்ளவரும் கூட நின்று கற்குளத்து கோட்டை வெயிக்கின்ற வகைக்
3. கும் உதயகிரிகோட்டை வெயிக்கின்ற வகைக்கும் அகழுவெட்டின்ற வகைக்கும் கோட்டமேயின்ற வகைக்கு
4. கம்புகால் வெட்டின்ற வகைக்கும் ஓல கொள்ளின்ற வகைக்கும் கூட எழுநூற்று எழுபத்தாருமாண்டு
5. கார் முதலெக்கு பூவு ஒன்றுக்கு பெரும்பற்று சங்கேதம் உள்பட மாத்தால் பணம் ஒன்று ஆந்நதிரு தருகையால்
6. இந்நாள் முதெல்க்கு கல்க்குளத்து கோட்டைக்கும் உதயகிரி கோட்டைக்கும் நீக்கி இனி வையிக்கின்(ற)
7. கோட்டைகள்க்கும் கோட்டை வேலைக்கு என்று நாஞ்சிநாட்டு பெரும்பற்று சங்கேதம் உள்பட்ட தேசத்து நி(ந்நு)
8. மாவில் என்கிலும் (இருந்நகுடி) என்கிலும் கொற்று இட்டு என்கிலும் நாட்டாரேயும் அவரிடே ஆளடியாரேயும்
9. கூட கோட்டை வேலைக்கு கரை ஏற்றின்றதில்ல என்றும் இவமேற்படி ஆண்டு கார்த்திகை மாதம்
10. இருபத்து ஒன்றாம் தியதி கர்ப்பித்தமைக்கு இச்செய்தி சொல்லி நாஞ்சி நாட்டில் வடவகை தென்வீதி உள்பட்ட
11. பெரும்பற்று சங்கேதம் உள்பட்ட தெசத்தில் நாட்டார்க்கும் காணியாளர்க்கும் நீட்டு
12. எழுதி விடு என்று திருவுள்ளமாயிந நீட்டு

வரிகள் 2–4 வரை பத்மனாபபுரம் கோட்டை மற்றும் உதயகிரிக்கோட்டைச் சுவர்கள் கட்டுவதற்கான செய்தியை மலையாள மொழிநடையில் இந்நீட்டு தெரிவிக்கிறது. இதிலிருந்து மண்ணால் சுவரெழுப்பி அது மழையில் கரைந்து விடாமல் இருப்பதற் காகக் கம்பு கால் ஊன்றிச் சுவருக்கு மேலே ஓலைக்கூரை வேய்ந்ததனை அறியலாம். பத்மனாபபுரம் மண்கோட்டைச் சுவர் கி.பி.1620–ல் கட்டி முடிக்கப்பட்டது.

இம் மண்கோட்டைச் சுவர் திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்டவர்மா காலத்தில் (கி.பி.1729–1758) கற்கோட்டைச் சுவராக மாற்றிக் கட்டப்பட்டது.

பத்மனாபபுரம் கற்கோட்டைச் சுவர் 186 ½ ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கியதாக சுமார் 3,500 மீட்டர் நீளத்தில் கட்டப்பட்டது. இக்கோட்டைச் சுவரின் கீழ்ப்பகுதி கருங்கற்களினாலும் (granite stone), மேற்பகுதி சீவக் கல்லினாலும் (Laterite stone) கட்டப்பட்டுள்ளன. கோட்டைச் சுவரின் கற்களை இணைக்கும் கலவையாகக் (bridging material) கடுக்காய், கருப்புக்கட்டி, கத்தாழைச் சாறு, சுண்ணாம்பு ஆகிய பொருட் களடங்கிய கூட்டினாலான கலவை பயன்படுத்தப்பட்டுள்ளது. கோட்டைச் சுவரின் தாங்குதளம் ஒரே சீராக இல்லாத காரணத்தினாலும் மேடும், பள்ளமாக இருப்பதினாலும் இக்கோட்டைச் சுவரின் உயரம் ஒரே சீராக இல்லை. அதிகபட்சமாக 24 அடி உயரத்திலும் குறைந்த பட்சமாக 15 அடி உயரத்திலும் இக்கோட்டையின் சுவர் கட்டப்பட்டுள்ளது. கோட்டைச் சுவரின் அகலம் 3 அடி ஆகும். கருங்கற்களாலான சுவர்ப் பகுதி 8 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ளது. இக்கோட்டைச் சுவரின் மேற்பகுதி சராசரியாக 3 அடி உயரத்தில் சீவக்கல்லினால் கட்டப்பட்டுள்ளது. இதன் உச்சியில் வரிசையாக இடைவெளிகள் விட்டு வளைவுகள் (musketeers) அமைக்கப்பட்டுள்ளன. இவ்விடை வெளிகள் வீரர்கள் துப்பாக்கியை வைத்து கண்காணிப்பதற்கு வசதியாக அமைக்கப் பட்டுள்ளன.

பத்மனாபபுரம் கோட்டையின் நான்கு மூலைகளிலும் நான்கு மூலைக் கொத்த ளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நான்கு புறமும் கீழ்புறம் தவிர 3 பிரதான வாயில்களும் உள்ளன. இப்பிரதான வாயில்களைத் தவிர நான்கு புறமும் 4 சிறு வாயில்களும் உள்ளன. கோட்டைச் சுவரின் பாதி உயரத்திற்கு ஆங்காங்கே முட்டுச்சுவர் கொடுக்கப் பட்டுள்ளது.

பத்மனாபபுரம் கோட்டையின் உட்புறம் கோட்டைச்சுவரிலிருந்து சற்று இடைவெளி விட்டு பிள்ளைக் கோட்டைச் சுவர் 3 அடி உயரம் 5 அடி அகலத்தில் கட்டப்பட்டது. பிரதான கோட்டைச் சுவருக்கும் பிள்ளைக் கோட்டைச் சுவருக்குமிடையே உள்ள இடைவெளி 'ஆளோடி' என அழைக்கப்படுகிறது. இவ்விடைவெளியில் வீரர்கள் கோட்டையைச் சுற்றிக் காவல் பணிக்காக வலம் வரவும் தங்கள் உடைமைகளை வைத்துக் கொள்ளவும் பயன்பட்டதாகத் தெரிய வருகிறது. பத்மனாபபுரம் பிரதான கோட்டைச் சுவரின் கீழிருந்து மேலே உட்புறமாகக் கற்படிகள் அமைக்கப்பட்டுள்ளன.

பத்மனாபபுரம் ஊரும், அரண்மனையும் கோட்டை வளாகத்திலேயே உள்ளன. மேலும், பழமையான நீலகண்டசாமி கோயிலும், இராமசாமி கோயிலும் இக்கோட்டை வளாகத்திலேயே உள்ளன. பத்மனாபபுரம் கோட்டைக்கு வடகிழக்கே மருந்துக்கோட்டை யும், தென்கிழக்கே மையக்கோட்டையும் மலைகளின் மீது அமைந் துள்ளன.

வெங்கலராசன் கோட்டை

இலங்கையிலுள்ள கண்டிப் பகுதியை ஆண்டு வந்த வலங்கைச் சான்றோர் குலப்பிரிவில் தோன்றிய வீரசோழனின் மகன் வெங்கலராசன் ஆவான். இவன் போர்த்துக் கீசியர்களின் ஆதிக்கத்தினால் கண்டியிலிருந்து புலம் பெயர்ந்து கன்னியாகுமரி மாவட்டத்தில் மணக்குடி–காயல் பகுதிகளுக்கருகே சாமிக்காட்டுவிளை என்ற விடத்தில்

வெங்கலத்தினாலான கதவுகள்உள்ள கோட்டை கட்டி வாழ்ந்ததாக இவனைப் பற்றிய கி.பி.1605–ம் ஆண்டைச் சேர்ந்த வில்லுப்பாட்டு கதைப்பாடல் கூறுகிறது. இவன் திருநெல் வேலியிலிருந்து இரண்டு காசுகளையும் வெளியிட்டுள்ளான்.

உதச்சிக்கோட்டை

முஞ்சிறைக்கு அருகே உதச்சிக்கோட்டை என்ற இடமுள்ளது. இங்கு கோட்டை யின் எச்சங்களைக் காணலாம். இக்கோட்டை மன்னர் திருமலை நாயக்கரின் தாயாரால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. இங்கிருந்து திருமலைக் கோயில் இறைவனை இவரின் தாயார் வழிபட்டு வந்ததாக மக்கள் வழக்கில் பேசப்படுகிறது. அதற்கான வரலாற்று சான்றுகள் எதுவுமில்லை.

9. சமயங்கள்

சமணம்

கி.பி. 10ம் நூற்றாண்டுக்கு முன்பே சமணம் குமரி மாவட்டத்தில் பரவியிருக்க லாம் என்றாலும் சமணம் தொடர்பான கல்வெட்டுகள் கி.பி.10ம் நூற்றாண்டிலிருந்து நமக்கு கிடைக்கின்றன. சிதரால், நாகராஜாகோயில், குறத்தியறை, குரண்டி, திருநந்திக் கரை ஆகியன சமணத் தலங்களாக இருந்துள்ளன. திருவடி வழிபாடு சமணம் தொடர் பானது. குரண்டி, கோரக்கநாதர்கோயில், திருநந்திக்கரை மலைக்குன்று ஆகிய இடங்களில் திருவடி கொத்தப்பட்டுள்ள கல்லினை இன்றும் நாம் காணலாம்.

முதலாம் பராந்தக சோழனின் 31–வது ஆட்சியாண்டு குறத்தியறைப் பாறைக் கல்வெட்டு குன்றப்பள்ளி என்ற சமணப்பள்ளி அங்கிருந்ததைக் குறிக்கிறது. இப்பள்ளி யைச் சேர்ந்த இப்பி கவிசியன் சாத்தன் சிராவணன் என்பவன் இங்கிருந்த அமர்ந்த கோலப் பெருமாளுக்கு பொன் கொடையாக வழங்கியதை இவ்வட்டெழுத்துக் கல்வெட்டு குறிக்கிறது.

குமரி மாவட்டத்திலிருந்த சமணக் கோயில்களிலேயே சிதராலிலிருந்த திருச் சாரணத்து மலைக்கோயிலே பெரிய கோயிலாகும். இங்கு மகாவீரர், பார்சுவநாதர், நேமிநாதர் இயக்கி அம்பிகா ஆகியோரின் திருமேனிகள் பாறையில் புடைச் சிற்பங்களாகப் பொறிக்கப்பட்டுள்ளன. இதற்குக் கீழே அத்திருமேனிகளைச் செய்தளித்தோரின் பெயர்கள் வட்டெழுத்தில் கல்வெட்டுகளாகப் பொறிக்கப்பட்டுள்ளன. பாறையில் புடைச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளன. பேரயக்குடி அரட்டநேமிபடார மாணாக்கிகள் குணந்தாங்கி குரத்திகள் அரட்டநேமிபடாரர்க்குப் பொன்னும் பொற்பூவும் வைத்த செய்தியை ஒரு வட்டெழுத்துக் கல்வெட்டு தெரிவிக்கிறது. இக் கல்வெட்டு ஆய் மன்னன் விக்கிரமாதித்ய வரகுணன் காலத்தில் வெட்டப்பட்டதாகும். சமண சமயம் தமிழகத்தின் வட பகுதிகள் வழக்கொழிந்த நிலையில் குமரி மாவட்டத்தில் கி.பி.16ம் நூற்றாண்டு வரை சமணம் இருந்ததைக் கல்வெட்டுகள் நமக்கு தெரிவிக்கின்றன. நாகராஜா கோயிலில் பள்ளியுடைய குணவீர பண்டிதன் ஆகிய இரண்டு சமணர்கள் அக்கோயிலுக் குக் கொடை வழங்கியதை கி.பி.16ம் நூற்றாண்டு கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

பௌத்தம்

குமரி மாவட்டத்தில் பௌத்த சமயம் இருந்ததற்கான கல்வெட்டு ஆதாரங்களோ வேறு வலுவான சான்றுகளோ இதுகாறும் கிடைக்கவில்லை. வடக்குக் கேரளப் பகுதி களிலேயே பௌத்தம் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. கடலுக்குள் மூழ்கியிருப் பதாக கருதப்படும் ஸ்ரீமூலவாசம்பௌத்த கோயில் மலபார் பகுதிகளிலேயே இருப்ப தாகக் கருதப்படுகிறது. இருப்பினும் மண்டைக்காடு பகவதி அம்மன் கோயில் தல

புராணத்தில் அங்கு ஒரு புத்த பிக்குணி இருந்ததாக குறிக்கிறது. இக்கோயில் கொடை யின் போது கேரளாவில் இருந்து வரும் பக்தர்கள் அம்மே சரணம் தேவி சரணம் என்ற சரண கோஷத்துடன் வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

கேரளாவில் குன்னத்துார் வட்டத்தில் பள்ளிக்கல் என்ற இடத்தில் புத்த சிற்ப மொன்று கண்டறியப்பட்டுள்ளது. கல்குளம் வட்டத்தில் கோட்டவிளை கிராமத்தில் பழைய பெயர் பள்ளிக்கரை ஆகும். இங்குள்ள பாறையின் மீது பொறிக்கப்பட்டுள்ள கி.பி.16ம் நூற்றாண்டுக் கல்வெட்டு இவ்வூரின் பெயரைப் 'பள்ளிக்கல்' எனக் குறிக்கிறது. 'பள்ளி' என்ற சொல் சமணம், பௌத்தம் இசுலாம், கிறித்துவம். ஆகிய அனைத்துக் கும் பொதுவான சொல்லாகக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. எனவே, கோட்டவிளைக் கல்வெட்டு குறிக்கும் 'பள்ளிக்கல்' பௌத்தம் சார்ந்தது என உறுதியாகக் கூற இயல வில்லை. மேலும், குமரி மாவட்டத்தில் இதுவரை பௌத்த சிற்பங்கள் ஏதும் கண்டறியப் படவில்லை.

இசுலாம்

கி.பி.7ம் நூற்றாண்டில் மாலிக் இபுன் தீனார் தலைமையில் ஒரு இசுலாமியத் தூதுக்குழு குமரி மாவட்டம் வந்ததாக நாகமையாரின் திருவிதாங்கூர் ஸ்டேட் மானுவில் குறிக்கிறது. இசுலாம் தொடர்பாகக் குமரி மாவட்டத்தில் அறியப்படும் பழமையான கல்வெட்டு கி.பி.1496ல் வெட்டப்பட்ட குமரி முட்டம் (சின்ன முட்டம்) கல்வெட்டாகும். போர்த்துகீசிய மாலுமி வாஸ்கோடகாமா இந்தியா வருவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் வெட்டப்பட்டதாகும். இங்குள்ள இசுலாமியப்பள்ளி ஒன்றுக்கு விளக்கெரிக்க தேங்காய் எண்ணெயும், இப்பள்ளியில் பாங்கா ஓதுபவருக்கு பணமும் கொடையாக வழங்கப்பட்ட செய்தியை குறிக்கிறது. கி.பி.15ம் நூற்றாண்டிலேயே தமிழகத்தோடு அரேபியர்கள் வணிகத்தொடர்பு கொண்டிருந்ததை இக்கல்வெட்டு உறுதி செய்கிறது.

கி.பி.16ம் நூற்றாண்டில் சூஃபி ஞானியார் பீரப்பா என்பவர் தக்கலையில் வாழ்ந்துள்ளார். இவரது பெயரால் தக்கலையில் 'ஞானியார் வீதி' என்ற தெருவே உள்ளது. தக்கலையில் இவர் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்தில் (தர்ஹாவில்) ஆண்டுதோறும் இவர் இயற்றிய ஞானப்புகழ்ச்சி ஓதப்படுகிறது. இவர் ஒரு சிறந்த கவிஞர் ஆவார்.

அழகிய மண்டபத்தில் கி.பி.17ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட 'அவுலியா மடம்' என்ற இடம் உள்ளது. இம்மடத்தில் ஒரு இசுலாமியத்துறவி 'வலிமார்' என்றழைக்கப்படுவர் தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது. இம்மடத்திற்கு மேல்ப்பரக்கோட்டு கிராமத்தில் நிலக்கொடை வழங்கப்பட்டுள்ளதைக் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது. கோட்டாற்றி லுள்ள பள்ளிவாசலுக்கு சேராமுதலி செய்குனூர் முதலி ஆகியோர் கல்தூண் செய்தளித்த கி.பி.17ம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. கல்குளம் வட்டத்தில் பரக்கோடு கிராமத்தில் மீரான்கனி மஸ்தான் தர்ஹாவில் ஹிஜ்ரி 1246 (கி.பி.1868)ல் பொறிக்கப் பட்ட கல்வெட்டு அத்தம் முகைதீன் சேரா முதலியார் மகன் மீரான்கனி மஸ்தான் சாயுபு அவர்கள் இயற்கை எய்திதைக் குறிக்கிறது.. அதனை 'ஆதிறகம் புகுதலானார்' என்ற சொல்லால் குறிக்கிறது.

கிறித்துவம்

கி.பி முதலாம் நூற்றாண்டில் புனித தாமஸ் கோவா கடற்கரை வழியாக வந்து வடக்கே சென்றார் என்ற கருத்து நிலவுகிறது, பழமையான சிரியன் கிறித்துவப் பள்ளியொன்று திருவிதாங்கோட்டில் உள்ளது. 7½ பள்ளி என குறிக்கப்படுகிறது. 7 பள்ளிகளைக் கட்டி முடித்த பின்பு இப்பள்ளி முற்றுப்பெறாத நிலையில் புனித தாமஸ் தூத்துக்குடி வழியாக வடக்கே சென்றதால் இது ½ பள்ளி எனக் குறிக்கப்படு கிறது. இதுவே குமரி மாவட்டத்திலுள்ள பழமையான கிறித்துவப்பள்ளியாகும். கி.பி. 1544ல் புனித சவேரியாரின் வருகை கத்தோலிக்க கிறித்துவ சமயப் பரவலுக்கு வித்திட்டது. குறிப்பாகக் கடற்கரையை ஒட்டி வாழ்ந்த மீனவர் சமூக மக்கள் கத்தோ லிக்கக் கிறித்துவத்தைத் தழுவினர். கல்விக் கூடங்களும் மருத்துவமனைகளும் அதிக அளவில் திறக்கப்பட்டன.

கி.பி. 1806ல் ரிங்கல் தெளபே சீர்திருத்தக் கிறித்துவத்தின் முதல் தேவாலயத்தை மைலாடியில் நிறுவினார்.

கி.பி. 18ம் நூற்றாண்டில் திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்டவர்மாவிடம் கணக்கராகப் பணிபுரிந்தவர் நீலகண்டபிள்ளை. உதயகிரிக்கோட்டை கட்டப்பட்ட சமயத்தில் அதன் செலவு கணக்கு வழக்குகளைப் பார்த்து வந்தார். இவர் திருவிதாங் கூர்ப் படைத்தளபதியாக இருந்த டிலெனாயின் போதனைகளால் ஈர்க்கப்பட்டுக் கிறித்து வராக மதம் மாறி தேவசகாயம் பிள்ளை ஆனார். புலியூர்க் குறிச்சியிலும், தேவசகாயம் மலையிலும் இவருக்கு நினைவிடங்கள் உள்ளன.

திருவிதாங்கோடு ஊரில் பெரியநாயகி மாதாகோயில் உள்ளது. இக்கோயிலில் கொல்லம் மிஷனரியில் பணிபுரிந்த பேட்டர் அதெரியானஸ் என்பாரின் கல்லறைக் குறிப்பு கி.பி. 1840ல் வெட்டப்பட்டுள்ளது. அவர் ஸ்பெயின் நாட்டிலுள்ள மேட்ரிட் பட்டணத்திலிருந்து வந்தவர்.

புத்தன்துறையில் கணக்கப்பிள்ளையாகப் பணிபுரிந்தவரின் குமாரர் சேவியர் முத்தையபிள்ளையின் கல்லறைக் குறிப்பு. கி.பி.1891ல் வெட்டப்பட்டுள்ளது. இவர் மெட்ரிகுலேஷன் பாஸ் பண்ணினவர் எனக் கல்வெட்டு குறிக்கிறது.

10. சாலையோர மடங்கள், சுமைதாங்கிகள்

கன்னியாகுமரி மாவட்டத்தில் பழங்காலத்தில் வழிநடைப்பயணிகள் மற்றும் வழிப்போக்கர்கள் தங்கிச் செல்வதற்காகப் பெருவழிப் பாதைகளின் சாலையோரங் களில் கல் மடங்கள் கட்டப்பட்டன. அவற்றின் அருகே தலைச்சுமடுகளை இறக்கி வைப்பதற்காகச் சுமைதாங்கிக் கற்களும் நிறுவப்பட்டன. இம்மடங்கள் கி.பி.16–19–ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் வேணாட்டரசர்கள் மற்றும் திருவிதாங்கூர் மன்னர்கள் காலத்தில் ஏராளம் கட்டப்பட்டுள்ளன. அவ்வாறு தங்கிச் செல்வோருக்கு அம்மடங்களில் தன்மக் கஞ்சி ஊற்றப்பட்டதையும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இது தவிர படை வீரர்கள் தங்குவதற்காகவும், சுங்க வரி வசூலிப்பதற்காகவும் மடங்கள் கட்டப்பட்டதாகத் தெரிய வருகிறது.

பெரும்பாலான இடங்களில் இரு மேடைகள் கொண்ட ஒற்றை மடங்களாகவும், பல இடங்களில் இரு திண்ணைகளுடன் கூடிய முகப்பு மடமும் அதற்குப் பின்னால் விசாலமான அறை கொண்ட உள் மடமும் கட்டப்பட்டுள்ளன. இம் மடத்தைத் தாங்கி நிற்க 4, 8, 12 அல்லது 16 தூண்கள் அதனமைப்புக்குத் தக்கவாறு நிறுவப்பட்டன. நான்கு தூண்கள் (கால்கள்) உள்ள மடத்தை 'நாக்காமடம்' எனக் கல்குளம் வட்டத்தில் கோட்டவிளை கி.பி. 16–ம் நூ.ஆ. பாறைக் கல்வெட்டு குறிக்கிறது. இம்மடங்களின் விதானம் பலகைக் கற்களால் அமைக்கப்பட்டுள்ளன. இம்மடங்களின் சுற்றுச் சுவரும் கூரைப் பகுதியும் செங்கல் மற்றும் சுதை கொண்டு கட்டப்பட்டன.

மடத்தின் நுழைவாயிலிலுள்ள இரு தூண்களுடன் இரு அடியவர்கள் வரவேற்கும் முழு உருவ புடைச் சிற்பங்கள் செதுக்குவது பொதுவான மரபாக உள்ளது.. உட்புறமுள்ள தூண் ஒன்றில் அரசர் அல்லது மடத்தைக் கட்டியவனின் முழு உருவப் புடைச்சிற்பம் செதுக்கப்படுவதுமுண்டு. விதானத்தின் மையத்தில் மலர்ப் பதக்கம் மீன் இலட்சினை முதலியன பொறிக்கப்படக் காண்கிறோம். மடத் தூண்களில் இரவு ஒளிக்காக ஆங்காங்கே தீப்பந்தம் நடுவதற்குத் தோதாகக் குழிகள் அமைக்கப்படுவதுமுண்டு. சில மடங்களில் கல்வெட்டுச் செய்திகளும் கிடைக்கின்றன. மேலே கூறப்பட்டவை இம்மடங்களில் காணப்படும் பொதுவான கட்டட மற்றும் சிற்ப அமைப்பாகும்.

இம்மடங்கள் குமரி மாவட்டம் முழுவதும் பரவலாகக் காணப்படுகிறது. இவை வழிபோக்கர் தங்குமிடமாகவும், இளைப்பாறுமிடமாகவும், அரசர் அதிகாரிகள் ஓய்வு மடங்களாகவும் செயல்பட்டதாக அறிகிறோம்.

விளவங்கோடு வட்டத்தில் நட்டாலம் கிராமத்தில் சிவாலயத்திற்குச் செல்லும் சாலையின் எதிராக பிரிந்து செல்லும் கிளைச் சாலையின் ஓரத்தில் கல்மடம் ஒன்றுள் ளது. கொல்லமாண்டு 840–ல் (கி.பி.1665–ல்) நட்டாலம் தேசத்தைச் சேர்ந்த திரு விக்கிரமன்ரவி என்பவன் இம்மடத்தைக் கட்டி இதில் தன்மம் நடந்து வர தானப் பிறமாணமாக நிலமும், புரையிடங்களும் மற்றும் 18 பணமும் வழங்கியதை இம்மடத்தூண்

ஒன்றின் பலகையில் பொறிக்கப்பட்டுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டு தெரிவிக்கிறது. இக்கல்வெட்டுக்குக் கீழே திருவிக்கிரமன்ரவியின் முழு உருவப் புடைச் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. மடத்தை 'அம்பலம்' என மலையாள சொல் வழக்கில் இக் கல்வெட்டு குறிக்கிறது. இம்மடத்திற்கு எதிராக உள்ள மருதகுளத்தை 'சுதகுளம்' என இக்கல்வெட்டு குறிக்கிறது.

கல்குளம் வட்டத்தில் குளச்சலுக்கு வடக்கே 2 கி.மீ. தொலைவில் குளச்சல்–திக்கணங்கோடு சாலையின் இடப்புறமாக மண்ணில் புதைந்த நிலையில் மடம் ஒன்று காணப்படுகிறது. இது 'மண்முங்கி மடம்' என்று அழைக்கப்பட்டு வருகிறது. இம்மடத்தின் முன்பாக நாட்டப்பட்டுள்ள பாதி மண்ணுக்குள் புதைந்த நிலையில் காணப்படும் தூண்கல்வெட்டு இம்மடம் கொல்லமாண்டு 842 (கி.பி.1666–ல்) கட்டப்பட்டதைக் குறிக்கிறது.

அகத்தீஸ்வரம் நயினாப்புதூரில் மற்றொரு மண்முங்கி மடம் சாலையோரமாக உள்ளது. இதில் தூண் சிற்பங்கள் உள்ளன. இல்வாழ்க்கையிலிருந்து வீடு பேறடையும் நிலையினைக் காட்டும் சிற்பங்கள் உள்ளன.

அகத்தீஸ்வரம் வட்டத்தில் நாகர்கோவிலிலிருந்து 4 கி.மீ. தொலைவிலுள்ள சுங்கான் கடை என்ற ஊரில் நாகர்கோவில்–திருவனந்தபுரம் நெடுஞ்சாலையின் இடதுபுறமாக ஒரு கல்மடம் உள்ளது. இதில் முகப்பு மண்டபம் மற்றும் உள் மண்டபம் என இரண்டு கட்டுமானங்கள் உள்ளன. கொல்லமாண்டு 709–ல் (கி.பி.1534) விலவூர் தேசத்தைச் சேர்ந்த கணக்கு அய்யன்பெருமாள் என்பவன் இம்மடம் கட்டியதைக் கல்வெட்டு குறிக்கிறது.

கல்குளம் வட்டத்தில் திங்கள்சந்தைக்கு அருகே குளச்சலுக்குச் செல்லும் சாலையின் வலப்புறமாகச் செட்டியார்மடம் என்ற ஊரில் கல்மடம் ஒன்றுள்ளது. கொல்லமாண்டு 959 (கி.பி1784)–ல் இரணியல் மேற்குத் தெருவைச் சேர்ந்த செட்டு ஆபத்துக்காத்தான் மூப்பனாரான பணியன் இக்கல் மடம் கட்டித் தன்மம் நடக்க நிலக்கொடை வழங்கியதை இம்மடத்தின் முன்னே நிறுவப்பட்டுள்ள தூண் கல்வெட்டு தெரிவிக்கிறது.

விளவங்கோடு வட்டம்,குழித்துறைக்கு அருகே கழுவன்திட்டையில் தொடர் வண்டிப் பாதை அருகே கி.பி.17–18–ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்ட கல்மடம் ஒன்றுள்ளது. இம்மடத்துத் தூண் ஒன்றில் இதைக் கட்டியவனின் முழு உருவ புடைச் சிற்பமும் அதற்குக் கீழே அவனது பெயர் 'வேங்கடபதி அய்யன்' எனத் தமிழில் கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளது. இது முகப்பு மண்டபமும், உள் மண்டபமும் கொண்ட இரண்டு கட்டுமானங்கள் உள்ள மடமாகும்.

கல்குளம் வட்டத்தில், மணவாளக்குறிச்சி கிராமத்தில் பெரியகுளக்கரை ஏலாவினருகே தலக்குளத்திலிருந்து திருநயினார்குறிச்சிக்குச் செல்லும் பழைய பாதையில் கல்மடம் ஒன்றுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சாலையோர மடங்கள் இருக்குமிடம்

வ.எண்	கூட்டம்	ஊர்	மடம்
1.	அகத்தீஸ்வரம்	நாகர்கோவில்	சாந்தான் செட்டிவிளைமடம்
2.	அகத்தீஸ்வரம்	கோட்டாறு	குருமடம்
3.	அகத்தீஸ்வரம்	சுங்கான்கடை	கல்மடம்
4.	அகத்தீஸ்வரம்	சுங்கான்கடை	கஞ்சிமடம்
5.	அகத்தீஸ்வரம்	இடலாக்குடி	கல்மடம்
6.	அகத்தீஸ்வரம்	ஈத்தங்காடு	கல்மடம்
7.	அகத்தீஸ்வரம்	இலங்காமணிபுரம்	அன்னபூரணிமடம்
8.	அகத்தீஸ்வரம்	கன்னியாகுமரி	ஞானசம்பந்தர் மடம்
9.	அகத்தீஸ்வரம்	மணிக்கட்டிப்பொட்டல்	கல்மடம்
10.	அகத்தீஸ்வரம்	ஆனைப்பாலம்	கல்மடம்
11.	அகத்தீஸ்வரம்	நயினாபுதூர்	கல்மடம்
12.	அகத்தீஸ்வரம்	நல்லூர்	கல்மடம்
13.	அகத்தீஸ்வரம்	நாகர்கோவில்	இந்துக்கல்லூரி மடம்
14.	அகத்தீஸ்வரம்	வெட்டூர்ணிமடம்	வெட்டூர்ணிமடம்
15.	அகத்தீஸ்வரம்	கன்னங்குளம்	கல்மடம்
16.	அகத்தீஸ்வரம்	லீபுரம்	கல்மடம்
17.	கல்குளம்	மகாதானபுரம்	பரிவேட்டை மடம்
18.	கல்குளம்	வேர்க்கிளம்பி	கல்மடம்
19.	கல்குளம்	வெள்ளியாகுளம்	கல்மடம்
20.	கல்குளம்	புலியூர்க்குறிச்சி	செட்டிமடம்
21.	கல்குளம்	செட்டியார்மடம்	செட்டியார்மடம்
22.	கல்குளம்	அழகியமண்டபம்	அவுலியாமடம்
23.	கல்குளம்	திருவிதாங்கோடு	அரசு உயர்நிலை பள்ளி மடம்
24.	கல்குளம்	திருவிதாங்கோடு	புதுத்தெரு மடம்
25.	கல்குளம்	திருவிதாங்கோடு	கலங்கரை விளக்கம் மடம்
26.	கல்குளம்	திருவிதாங்கோடு	அச்சவிநாயகர் மடம்
27.	கல்குளம்	களியங்காடு	மோர் மடம்
28.	கல்குளம்	குமாரகோவில்	கல்மடம்
29.	கல்குளம்	சேரமங்கலம்	கல்மடம்
30.	கல்குளம்	வேம்பனூர்	கல்மடம்

வ.எண்	கூட்டம்	ஊர்	மடம்
31.	தோவாளை	ஆதிச்சன்புதூர்	கல்மடம்
32.	தோவாளை	தாழக்குடி	கல்மடம் (ஒளவையார் அம்மன்கோவில்)
33.	தோவாளை	தோவாளை	சேந்தம் கோமினி மடம்
34.	தோவாளை	இறச்சகுளம்	கல்மடம்
35.	தோவாளை	நாவல்காடு	கல்மடம்
36.	தோவாளை	முப்பந்தல்	கல்மடம்
37.	தோவாளை	தூவச்சி (பெருந்தலைக்காடு)	காஞ்சிரங்கோணம் மடம்

சுமைதாங்கிகள்

வணிகர்கள், வழிநடைப் பயணிகள் மற்றும் வழிப்போக்கர்கள் தங்கள் தலையிலுள்ள சுமடுகளை (சுமைகளை) இறக்கி வைத்துச் சற்று நேரம் இளைப்பாறுவதற்காகப் பெருவழிப் பாதைகளில் ஆங்காங்கே சுமைதாங்கிக் கற்களை நிறுவுவது பழங்காலத்தில் வழக்கமாக இருந்துள்ளது. அவர்கள் தங்கிச் செல்வதற்காக கட்டப்பட்ட கல் மடங்களின் அருகிலும் சுமைதாங்கிக் கற்களை நிறுவுவது பெருவழக்காக இருந்துள்ளது. அச்சுமைதாங்கிக் கற்களை தன்மமாக நிறுவியோரின் பெயரும் அச் சுமைதாங்கிக் கற்களில் கல்வெட்டுகளாக பொறிக்கப்படுவதுண்டு.

பொதுவாக சுமைதாங்கிக் கற்கள் இறந்த கர்ப்பிணி பெண் (அவள் சுமை இறக்காமல்) அகால மரணமடைந்ததின் நினைவாக / ஆத்ம சாந்திக்காக, நிறுவுவது என்றே கூறுவர். ஆனால் குமரி மாவட்டத்தில் அகால மரணமடைந்த ஆண்களுக்கும் நிறுவப்படுவதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

இறந்தோரின் நினைவாக சுமைதாங்கிக் கற்களை மடத்தின் அருகே நிறுவி அதில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டிருப்பதை குமரி மாவட்டத்தில் சில இடங்களில் காணலாம். இம்மாதிரி நிறுவப்படும் சுமை தாங்கிகளை 'ஏமக்கால்' என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. இம்மாதிரி நிறுவப்பட்ட சுமைதாங்கிகளில் சிலவற்றில் கல்வெட்டின் மறுபுறம் வேல் சின்னம் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். கி.பி. 18–20–ம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் குமரி மாவட்டத்தில் இவ்வழக்கு இருந்துள்ளதை கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

தோவாளை வட்டம், இறச்சகுளம் கிராமத்தில் நாகர்கோவில்–பாலமோர் சாலையின் வலப்புறமாக கி.பி.1733–ல் நிறுவப்பட்ட சுமைதாங்கிக் கல் ஒன்று உள்ளது. இதனை புத்தேரி ஊரைச் சேர்ந்த சங்குப்பிள்ளை–ராமலட்சுமி வகையார்

நிறுவியதை இதில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு தெரிவிக்கிறது. இறச்சகுளத்திலுள்ள சாலையோர மடத்திற்கு எதிராக இது நிறுவப்பட்டுள்ளது.

அகத்தீஸ்வரம் வட்டம், கோட்டாறு ஏகாலியர் ஊர் வகை மட வளாகத்தில் நிறுவப்பட்ட இச்சுமைதாங்கிக் கல்வெட்டு கொல்லமாண்டு 990–ல் (கி.பி. 1815) கடைசர் குலத்தைச் சேர்ந்த பூமி பட்டங்கெட்டியின் மகன் பெருமாள் பட்டங்கெட்டியின் நினைவாக நிறுவப்பட்டதைத் தெரிவிக்கிறது. 'குமரன்துணை' என முடியும் இக்கல்வெட்டின் மறுபுறம் வேல் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.

அகத்தீஸ்வரம் வட்டம், புன்னார்குளம் கிராமத்தில் நாகர்கோவில்–கன்னியாகுமரி சாலையோரம் கொல்லமாண்டு 998 (கி.பி.1823)–ல் ஒரு சுமைதாங்கிக்கல் நிறுவப்பட் டுள்ளது. இதில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மலையாம் ரெண்டாம் பட்டாளத்தில் (நாயர் பிரிகேடு) பணியாற்றி இறந்த இரணியல் ஊரைச் சேர்ந்த இராமன்பிள்ளையின் நினைவாக நிறுவப்பட்டதைத் தெரிவிக்கிறது. 'வேலாயுதம் துணை' என முடியும் இக் கல்வெட்டின் மறுபுறம் வேல் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.

அகத்தீஸ்வரம் வட்டம் சுங்கான்கடை என்ற ஊரில் நாகர்கோவில்–திருவனந்தபுரம் சாலையோரம் உள்ள மடத்தின் வலப்புறமாகச் சற்று தள்ளி நிறுவப்பட்ட சுமைதாங்கிக் கல்வெட்டு கல்படி அகரம் பொண்ணு அம்மாள் தர்மமாகச் சுமைதாங்கிக்கல் நிறுவப் பட்டதைத் தெரிவிக்கிறது. இது கி.பி.18–ம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

அகத்தீஸ்வரம் வட்டம், இளையநயினார்குளம் என்ற ஊரில் நாகர்கோவில்–ராஜாவூர் சாலையின் இடதுபுறமாகக் கொல்லமாண்டு 1086 (கி.பி1911)–ல் நிறுவப்பட்ட சுமைதாங்கிக் கல் கல்வெட்டு பெருமாள்பிள்ளை நாடாச்சியின் நினைவாக அவரது மகன் ராமசாமி நாடார் இந்த ஏமக்கால் (சுமைதாங்கி) நிறுவியதைத் தெரிவிக்கிறது.

11. புலவர்கள் பெரியோர்கள்

தமிழுக்கு இலக்கணம் கண்ட தொல்காப்பியர் அகத்தியரின் பன்னிரு மாணவர் களுள் முதன்மையான மூவருள் ஒருவர். மற்ற இருவர் அதங்கோட்டாசானும் பனம்பார னாரும் ஆவர். பனம்பாரனார் தொல்காப்பியத்திற்குச் சிறப்புப்பாயிரம் எழுதியவர். பாயிரத்தில்,

"நிலந்திரு திருவில் பாண்டியன் அவையத்து
அறம்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட்டு ஆசாற்கு அரில்தபத் தெரிந்து. . . . "

என்று கூறுகிறார்.

இதனால் அறங்கூறு நாவலராகவும், நான்கு வேதங்களில் துறைபோகிய வருமான அதங்கோட்டு ஆசான் தலைமையில் தொல்காப்பியம் அரங்கேறியது என அறிகிறோம். இந்த அதங்கோட்டு ஆசான் குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர் எனக் கருதப்படுகிறது. இவரது ஊரான அதங்கோடு விளவங்கோடு வட்டத்தில் உள்ளது. சிறந்த ஆசிரியர்களை "ஆசான்' என்றழைக்கும் மரபும் இங்குண்டு. சோதிடம், மருத்துவம், சிலம்பம், களரி முதலிய கலைகளில் வல்லுநர்களை 'ஆசான்' என இன்றும் கூறி வருகின்றனர். இதுவே கல்வியில் துறைபோகியவருக்கும் வழங்கியிருக்கலாம். இதன் வாயிலாக அதங்கோட்டாசான் பெயர்க் காரணத்தையும், அவர் குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவராக கருத இடமுள்ளதையும் அறியலாம். தொல்காப்பியரும், பனம்பாரனாரும் கூட இம்மாவட்டத்தினர் எனக் கருதுவோரும் உண்டு.

ஔவையார் ஒரு நாஞ்சில் பொருநனைப் பற்றிப் பாடியுள்ளார். (புறம் : 140). நாஞ்சில் நாடு என்பது கல்வெட்டு மற்றும் ஓலை ஆவணங்கள் வழியாக 'மங்கலம் முதல் மணக்குடி' வரையிலான நிலப்பரப்பாக குறிக்கப்படுகிறது. நாஞ்சில் வள்ளுவனைப் பற்றி ஒரு சிறைப் பெரியனார் (புறம் :137). மாங்குடி இளநாகனார் (புறம்: 138,139) பாடியுள்ளனர்.

சுசீந்திரத்திலிருந்து 4 கி.மீ. தொலைவில் மருங்கூர் என்ற ஊர் உள்ளது. மருங்கூர் ஊர்ப் பெயரை முன்னொட்டாகக் கொண்ட சங்கப் புலவர்கள் மூவருள்ளனர். அவர்கள்

1. மருங்கூர்க்கிழார் கண்ணனார் (அகம் : 80), 2. மருங்கூர்ப் பாகைச்சாத்தான் பூதனார் (அகம் : 327), 3. மருங்கூர்ப் பட்டினத்துச் சேந்தன் குமரனார் (நற் : 289) என்பவராவர்.

கி.பி. 18–ம் நூற்றாண்டில் கன்னியாகுமரி அருகேயுள்ள கோவைக்குளத்தில் அரசாண்ட செண்பகராமனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு 'செண்பகராமன் பள்ளு', என்ற நூலை ஒருவர் இயற்றியுள்ளார். இந்நூலாசிரியரின் பெயர் அறியப்பட

வில்லை. ஆனாலும், இதனைப் பதிப்பித்தவர் மரிய காலிங்கராயர் ஆவார். இது கிறித்துவ மதத்தை அடியொற்றி எழுதப்பட்ட ஒரே பள்ளு நூலாகவும் திகழ்கிறது.

ஆய்வுப் பேரறிஞரான கே.என்.சிவராஜ பிள்ளை என்பாரும் ஒரு கவிஞர். அவர் இயற்றிய நூல்கள் மேகமாலை, நாஞ்சில் வெண்பா; வாழ்க்கை நூல், சிறு பாமாலை, புதுஞானக் கட்டளை கம்பராமாயண கௌஸ்துபம் என்பன.

குமரிப் பெரியோர்கள்

அய்யா வைகுண்டர் (கி.பி.1809–1851)

அய்யா வைகுண்டர் கி.பி.1809–ல் பொன்னுநாடார் மற்றும் வெயிலம்மை ஆகியோருக்கு மகனாக சாமித்தோப்பிலுள்ள சாஸ்தாங்கோவில்விளையில் பிறந்தார். இவருக்கு முடிசூடும் பெருமாள் எனப் பெற்றோர்கள் பெயரிட்டனர். ஆனால், முத்துக்குட்டிச் சாமி என்றே அழைக்கப்பட்டார். இவர் ஒடுக்கப்பட்ட சமூக விடுதலைக்காகப் போரிட்டவர். இக்காலத்தில் திருவிதாங்கூர் அரசராயிருந்தவர் சுவாதித் திருநாள் ராமவர்மா (கி.பி.1829–1847) ஆவார். 24 வயதில் ஞானம் பெற்ற அய்யா வைகுண்டரின் சிந்தனைகள் அகிலத்திரட்டு அம்மானை, அருள்நூல் என்ற இரு நூல்களாக வெளிவந்துள்ளன. அய்யா வைகுண்டர் கூறிய கருத்துகளைஅவரது சீடர் அரிகோபாலர் பதிவு செய்துள்ளார். சாதி, சமய பேதமில்லாத ஆண், பெண் வேறுபாடற்ற சமுதாயத்தை நிறுவுவதே இவரது சிந்தனைகளின் வெளிப்பாடாக அமைந்தன. **‘தாழக் கிடப்பாரைத் தற்காப்பதே தர்மம்’** என்பது இவரது தாரக மந்திரமாகும். அய்யா மக்களிடம் சமமாக இருந்து பேசுவதற்காக நிறுவப்பட்ட நிழல் தாங்கல்கள் இன்று பதிகளாக மாறியுள்ளன. அனைத்து சமூகத்தவரும் ஒன்றாக அமர்ந்துண்ணும் துவையல் பந்தியை அறிமுகப்படுத்தினார். சாமித்தோப்பில் இவரது பூதவுடல் இருக்கும் இடத்தில் கட்டப்பட்ட பதியே தலைமைப் பதியாகும்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை (கி.பி.1876–1954)

இவர் மிகச்சிறந்த கல்வெட்டு ஆராய்ச்சியாளரும் கவிஞருமாவார். முதலாம் இராஜராஜனின் மெய்க்கீர்த்தியில் வரும் ‘காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி’ என்ற சாலை பற்றிய இவரது ஆய்வுக் கட்டுரை சிறந்த ஆய்வுக் கட்டுரையாகும். முதலியார் ஓலை ஆவணங்களில் சிலவற்றினைப் பகர்த்தெழுதியுள்ளார். உதயகிரிக்கோட்டை, பத்மனாபபுரம் கோட்டைச் சுவர்கள் ஆகியன முதலில் மண்கோட்டைச் சுவர்களாகக் கட்டப்பட்டதை முதலியார் வீட்டு ஓலை ஆவணங்கள் வாயிலாக முதலில் வெளிக் கொண்டு வந்தவரும் இவரே. குறத்தியறைக் குடைவரைக் கோவில் முதலில் ஒரு சமணக் கோயிலாக இருந்திருக்க வேண்டும் என்ற இவரின் கண்டுபிடிப்பு பின்பு இதே பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு பாறைக் கல்வெட்டின் மூலம் உறுதி செய்யப்பட்டது. இவரது ஆய்வுகள் பொதுவாக தர்க்க ரீதியில் அமைந்தவையாகும். இவரது ‘மலரும் மாலையும்’ என்றக் கவிதைத் தொகுப்பில் தேசியம் குறித்த பதினேழு பாடல்கள் இடம்

பெற்றுள்ளன. தீண்டாமை குறித்த இவரது 'இந்தப் பிறப்பு.....'' என்ற கவிதை சிறந்த கவிதையாகும். கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை ஒரு மிகச் சிறந்த குழந்தைக் கவிஞரும் கூட.

சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் (கி.பி.1874–1950)

கோட்டாறு இளங்கடையில் பிறந்தவர். இவர் குலாம் ஹசறத்து ஞானியார் காசிப் பரம்பரையைச் சார்ந்தவர். பாவலர் அவர்கள் சங்கரநாராயணன் என்பவரிடத்தில் தமிழ் பயின்றார். முதலில் சென்னையிலுள்ள ஒரு பதிப்பகத்தில் பிழை திருத்துபவராகப் பணிபுரிந்தார். இப்பணிக்காகச் சென்றபோதுதான் 1906–ம் ஆண்டில் சோட அவதானி யானார். பின் 1907 மார்ச்சில் சென்னை விக்டோரியா மகாலில் சதாவதானி என்ற பெயர் பெற்றார். இவர் 1909–க்குப் பிறகு கோட்டாற்றில் நிரந்தரமாகத் தங்கியபோது இரண்டு அந்தாதிகள், ஒரு கோவை, மற்றுமொரு மாலை ஆகிய நூல்களை இயற்றி னார். அவையாவன: சம்சுத்தாசின் கோவை, நபிகள் நாயக மான்மிய மஞ்சரி, கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலை, திருக்கோட்டாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி, நீதி வெண்பா முதலியன. இவை தவிர தனிப்பாடல்களும் சீறாப்புராணத்திற்குச் சிறந்த உரையும் எழுதியுள்ளார். சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர். அந்நியத் துணி எதிர்ப்பில் ஈடுபட்டு இவர் ஆற்றிய வீர உரைகளால் மனம் மாறியவர்கள் ஏராளம். இராமலிங்க அடிகள் எழுதிய திருவருட்பா 'அருட்பாவா மருட்பாவா' என்ற பிரச்சனை எழுந்தபோது தனது வாதத் திறமையால் அருட்பா என நிறுவியவர்.

தேவசகாயம் பிள்ளை (கி.பி.1712–1752)

இவரது இயற்பெயர் நீலகண்டபிள்ளை. இவர் விளவங்கோடு வட்டம் நட்டாலம் கிராமத்தை அடுத்துள்ள மருதங்குளம் என்ற கிராமத்தில் வாசுதேவன் நம்பூதிரி என்பவருக்கும் நாயர் சமூகத்தைச் சேர்ந்த தேவகி அம்மா என்பவருக்கும் மகனாகப் பிறந்தார். கி.பி.1740–ல் பத்மனாபபுரத்திலுள்ள நீலகண்டசாமி கோயிலில் முதலில் அதிகாரியாகப் பணிபுரிந்தவர். பிறகு பத்மனாபபுரம் அரண்மனையிலேயே அதிகாரி யாக நியமிக்கப்பட்டார். கி.பி.1741–1744க்கு இடைப்பட்ட காலத்தில் உதயகிரிக் கோட்டை, பத்மனாபபுரம் கோட்டை ஆகியன கற்கோட்டைச் சுவர்களாக கட்டப்பட்ட போது அதன் கணக்கு வழக்குகளைப் பார்க்கும் பொறுப்பு மன்னர் மார்த்தாண்ட வர்மாவால் இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. (கி.பி.1729–1758) இக்காலகட்டத் தில் திருவிதாங்கூர் படையிலிருந்து டச்சுவீரர் டிலெனாயோடு தொடர்பு ஏற்பட்டது. டிலெனாயின் போதனைகளால் கிறித்துவ மதத்திற்கு மாறினார். அப்போது வடக்கன் குளத்திலிருந்த ஜான் புத்தேரியோ என்ற பாதிரியாரால் கி.பி.1745–ல் ஞானஸ்நானம் செய்யப்பட்டார். நீலகண்டபிள்ளை லாசரஸ் தேவசகாயமாக மாறினார். இவருடன் பணிபுரிந்த அதிகாரிகள் இவர் மதம் மாறியதைப் புகாராக தளவாய் இராமையனுக்கு அனுப்பினர். இதன் பிறகு தேவசகாயம்பிள்ளையின் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு கி.பி.1749–ல் சிறையிலடைக்கப்பட்டார். கி.பி.1752–ல் ஆரல்வாய்மொழி

காற்றாடி மலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது உடல் கோட்டாறு புனித சவேரியார் ஆலயத்தில் அடக்கம் செய்யப்பட்டது. தேவசகாயம் பிள்ளையின் பெயரில் காற்றாடி மலையில் ஓர் ஆலயம் எழுப்பப்பட்டுள்ளது. மேலும், புலியூர்க்குறிச்சியிலுள்ள உதயகிரிக்கோட்டையின் அருகே தேவசகாயம்பிள்ளையின் முட்டிடிச்சான்பாறை என்ற நினைவுச் சின்னமும் உள்ளது.

12. சிறப்புச் செய்திகள்

நால்வகை நிலங்கள்:

சங்க இலக்கியங்கள் நான்கு வகை நிலங்களான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகியனவற்றைக் குறிக்கிறது. பெருவாரியான மாவட்டங்களில் மூன்று வகையான நிலங்களைக் காணலாம். ஆனால் குமரி மாவட்டத்தில் இந்நால்வகை நிலங்களும் ஒருங்கே அமையப் பெறக் காணலாம்.

மக்கள் தாயம், மருமக்கள் தாயம் :

கன்னியாகுமரி மாவட்டம் 1.11.1956–க்கு முன்பு கேரள மாநிலத்துடன் இணைந்த ஒரு பகுதியாக இருந்து வந்தது. எனவே, இதன் அரசியல் மற்றும் பண்பாட்டு வரலாறு கேரளப் பின்புலத்தைக் கொண்டதாகவே சில காலம் இருந்து வந்துள்ளது.

கி.பி.12–ம் நூற்றாண்டில் வேணாடு அரசு உருவாக்கத்திற்குப் பின்பு கேரள நிலவுடைமை சமூகத்தில் சொத்து வாரிசுகளை நிர்ணயிக்கும் இரு வகையான தாய முறைகள் தோன்றின.

1. மக்கள் தாயம் (Patrilineal)
2. மருமக்கள் தாயம் (Matrilineal)

மக்கள் தாயமென்பது மகனே தந்தையின் சொத்துகளுக்கு வாரிசுதாரராகக் கருதப் படுவான்.

மருமக்கள் தாயமென்பது ஒருவரின் சகோதரியின் பிள்ளைகளே அதாவது மருமகனே சொத்துக்கு வாரிசுதாரராக கருதப்படுவான். இங்கு தந்தை என்பவன் மக்கட் பேறு அளிப்பவனாக மட்டுமே உள்ளான். மனைவி மற்றும் பிள்ளைகளைப் பராமரிக்கும் பொறுப்பும் அவனுக்கில்லை. அவனது மகன்கள் தாய்மாமனின் சொத்துக்கு வாரிசு தாரர்களாகின்றனர். தாய்மாமன் 'காரணவன்' என அழைக்கப்படுகிறார். இம் மருமக்கள் தாயமுறை எல்லாச் சமூகத்தவரும் பின்பற்றி வந்த ஒரு முறையாக இருந்துள்ளது.

இவ்விரு தாய முறைகளைப் பின்பற்றி வந்த சமூகங்களிடையே இரு வகையான திருமணமுறை நிலவி வந்தன.

1. தாலி கெட்டு அல்லது கெட்டு கல்யாணம்
2. சம்பந்தம் அல்லது புடவமுறி அல்லது புடவ கொட (புடவை கொடை).

நம்பூதிரிகள் மக்கள் தாயத்தார். ஒரு நம்பூதிரி குடும்பத்தில் மூத்த மகன் மட்டுமே திருமணம் செய்து கொள்ள உரிமையுள்ளவன். இது 'தாலி கெட்டுத்' திருமணம். இவன் ஒரு நம்பூதிரிப் பெண்ணையே திருமணம் செய்து கொள்கிறான். இவனோடு

உடன்பிறந்தோர் சத்திரியர், நாயர் போன்ற சமூகங்களைச் சேர்ந்த பெண்களோடு சம்பந்தக் கல்யாணம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

நாயர் சமூகப் பெண்ணிற்கு கெட்டுக் கல்யாணம், சம்பந்தக் கல்யாணம் இரண்டும் நடைபெற வேண்டும். கெட்டுக் கல்யாணம் அவள் பூப்பெய்துவதற்கு முன் நடைபெற வேண்டும். இது வெறும் சம்பிரதாயமாகவே கருதப்பட்டது. சம்பந்தக் கல்யாணம்தான் உண்மையான திருமணம். இது 'புடவை கொட' அல்லது 'புடவ முறி' என்றழைக்கப்படும்.

பிற சமூகத்தைச் சார்ந்த சத்திரியர்கள், கோயில் தம்புரான்கள், ராஜாக்கள் அல்லது தம்புரான்கள், திருமலப்பாடு அல்லது தம்பன்கள் ஆகிய மூன்று பிரிவினர் களும் மருமக்கள் தாயத்தார் ஆவார்.

புலப்பேடி, மண்ணாப்பேடி:

ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தோர் ஒரு வருடத்தில் சில குறிப்பிட்ட மாதங்களில் ஊரெங்கும் சுதந்திரமாக சுற்றித்திரியும் உரிமையுடையோராவர். அச்சமயங் களில் நாயர், நம்பூதிரிகள் முதலிய உயர்சாதிப் பெண்கள் இரவில் வெளியே வந்தால் அவர்களைத் தூக்கிச் சென்று விடுவார்கள் எனக் கூறப்படுகிறது. அப்பெண்களைத் தொட்டாலோ அல்லது குச்சியோ, கல்லோ அவர்களின் மீது எறிந்தாலோ அப்பெண்கள் தீட்டுப்பட்டவர்களாகக் கருதப்படுவர். இதன்பிறகு சமூக விலக்கமும் செய்யப்படுவர்.. இவ்வழக்கத்தை கோட்டயம் கேரளவர்மன் நீக்கி ஆணையிட்டதை இம்மன்னனின் கி.பி.1696–ம் ஆண்டைச் சேர்ந்த திருவிதாங்கோடு கல்வெட்டு தெரிவிக்கிறது. இக்கல்வெட்டு தற்போது பத்மனாபபுரம் அரண்மனை காட்சிக்கூடத்தில் வைக்கப்பட் டுள்ளது.

கி.பி.16–ம் நூ.ஆ.வரை சமணம் :

சமண சமயம் கி.மு. 2–ம் நூற்றாண்டு முதல் தமிழகம் முழுவதும் பரவலாக வழக்கில் இருந்தது. தமிழகத்தில் வட பகுதிகளில் கி.பி.11–12–ம் நூற்றாண்டோடு சமணம் வழக்கொழிந்த நிலையில் குமரிமாவட்டத்தில் மட்டும் இச்சமயம் கி.பி.16–ம் நூற்றாண்டு வரை வழக்கில் இருந்துள்ளதைக் காணலாம். இதற்கு சான்றாதாரங் களாக நாகராஜா கோயில் கல்வெட்டும், கோட்டவிளை பாறைக் கல்வெட்டும் விளங்குகின்றன.

திருவிழாக்கள்

மற்ற மாவட்டங்களில் கொண்டாடப்படும் பொதுவான திருவிழாக்கள் இங்கும் கொண்டாடப்படுவது தவிர குமரிமாவட்டத்தில் மட்டும் கொண்டாடப்படும் சில திருவிழாக்கள் தனித் தன்மையும், முக்கியத்துவமும் பெற்றவையாகும்.

1. சுசீந்திரம் மார்கழி தேரோட்டத் திருவிழா
2. கோட்டாறு சவேரியார் ஆலயத்திருவிழா
3. தக்கலை பீரப்பா ஒலியுல்லா தர்க்கா விழா

4. ஓணம் பண்டிகை
5. மண்டைக்காடு பகவதி அம்மன் திருவிழா
6. சாமித்தோப்பு திருவிழா
7. சிவாலய ஓட்டம்
8. கொல்லங்கோடு/இட்டகவேலி முடிப்புரை அம்மன் தூக்க திருவிழா

ஆகிய திருவிழாக்களைக் குறிப்பிட்டுச் செல்லலாம்.

சுசீந்திரம் கோயிலில் ஒவ்வோர் ஆண்டும் மார்கழி மாதம் நடைபெறும் தேர்த் திருவிழா இம்மாவட்டத்தில் கொண்டாடப்படும் திருவிழாக்களிலேயே பெரிய திருவிழா வாகும்.

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 24–ம் தேதி முதல் டிசம்பர் 3ஆம் தேதி வரை கோட்டாறு சவேரியர் ஆலயத் திருவிழா நிகழும். இக்கோயில் கொடிமரத்தின் பட்டத்தில் சவேரியாரின் உருவம் வரையப்பட்டிருக்கிறது. பத்தாம் நாள் இரவு விழாவிற்கு மகளிரே அதிகமாக வருவர். பகல் விழாவில் இந்து சமயத்தைச் சேர்ந்தோரும் நேர்ச்சை செய்கின்றனர். நேர்ச்சைப் பொருளாக உப்பு, நல்லமிளகு, பூமாலை, பத்தி, பழம், ஓலைப்பட்டை, கயிறு, கருப்புக்கட்டி ஆகியன கொடுக்கப்படும். சவேரியார் ஒடுக்கப்பட்ட சமூகங்களின் சமூக, பொருளாதார விடுதலைக்காக பாடுபட்டவர்.

பீரப்பா கி.பி.16–ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு சூஃபி ஞானியாவார். இவரது நினைவு நாளன்று பீர் முகம்மது ஒளியுல்லா தர்ஹாவில் ஞானப் புகழ்ச்சி ஓதுவர். இவரின் நினைவாக தக்கலையில் ஞானியார் வீதி என்ற ஒரு தெருவே உள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஆவணி மாதம் திருவோண நட்சத்திரத்தில் ஓணம் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இப்பண்டிகையின் போது வாசலில் அத்தப் பூ கோல மிடுவர். இப்பண்டிகையின் போது குடும்பித்தினர் அனைவரும் ஒன்றாக சேர்ந்திருக்க வேண்டும். "திருவோணத்தின்னு இல்லாத்த நாயரானோ தீக்கொள்ளிக்கு" என்பது மலையாள பழமொழி. மா பலிச் சக்கரவர்த்தி பண்டிகை நாளன்று அனைவரின் இல்லத்திற்கும் வருவார் என்பது நம்பிக்கை. குமரி மாவட்டம் கேரளத்திடமிருந்து பிரிந்த பின்பு மீண்டும் தற்போது இப்பண்டிகை விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

மண்டைக்காடு பகவதி அம்மன் திருவிழா, குத்துவட்ட நேர்ச்சையும், பெண் களுக்குரிய பூமாலை நேர்ச்சையும் முக்கியமாகக் கருதப்படுகிறது. கேரளாவிலிருந்து ஏராளமான பெண் பக்தர்கள் அம்மே சரணம்! தேவி சரணம்! என்ற சரண கோசத்துடன் இங்கு வருவர்.

அய்யா வைகுண்டர் கி.பி.18–ம் நூ.ஆ.ல் வாழ்ந்த சமூக சீர்திருத்தவாதி ஆவார். இவரின் வாழ்விடமான சாமித்தோப்பில் உள்ள கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் 10 நாட்கள் விழா நடக்கிறது. இதற்கு தமிழ்நாடு மற்றும் கேரளத்து தென் பகுதிகளிலிருந்து மக்கள் பெருமளவு வருகின்றனர். சாமிதோப்பு தலைமை பதியாகும்.

குமரி மாவட்டத்தில் 12 சிவன் கோயில்களில் சிவாலய ஓட்டம் நடைபெறும். சிவராத்திரியில் சிவ பக்தர்கள் திருமலை தொடங்கி நட்டாலத்தில் நிறைவு பெறும்படி 12 சிவதலங்களை ஓடி ஓடி தரிசிப்பர். ஓடும்போது "கோவிந்தா கோபாலா" என்ற முழக்கத்துடன் ஓடுகிறார்கள். இது அரியும் சிவனும் ஒன்று என்ற தத்துவத்தை விளக்கு வதாகும்.

முடிப்புரைகள்

இட்டகவேலி முடிப்புரை அம்மன் மற்றும் கொல்லங்கோடு துக்கந்திருவிழா ஆகியன தாய்தெய்வ வழிபாட்டுக் கோவில்கள் ஆகும். முடிப்புரைகள் என்பவை கேரள பண்பாட்டின் அடிப்படையில் உள்ள தாய்தெய்வ கோயில்கள் ஆகும். முடிப்புரை களில் பலகையினாலான தலைமீது அணியும் முடியை வைத்து வணங்கப்படுகிறது. கொல்லங்கோடு நடைபெறும் தூக்கந் திருவிழா தனிச் சிறப்புடையது.

நட்சத்திரத்தின் பெயரை முன்னொட்டாக கொண்ட திருவிதாங்கூர் அரசர்கள்:

திருவிதாங்கூர் அரசர்கள் தங்கள் பெயருக்கு முன்னால் நட்சத்திரத்தின் பெயரை முன்னொட்டாக கொண்டிருந்தனர். இவ்வழக்கம் மன்னர் மார்த்தாண்டவர்மா காலத்திலிருந்து (கி.பி.1729–1758) வழக்கத்திற்கு வந்துள்ளது போல் தோன்றுகிறது.

1. அனுஷம் திருநாள் மார்த்தாண்டவர்மா (கி.பி.1729–1758)
2. கார்த்திகைத் திருநாள் இராமவர்மா (கி.பி.1758–1798)
3. சுவாதித் திருநாள் ராமவர்மா (கி.பி.1829–1847)
4. உத்திரம் திருநாள் மார்த்தாண்டவர்மா (கி.பி.1847–1860)
5. ஆயில்யம் திருநாள் ராமவர்மா (கி.பி.1860–1880)
6. விசாகம் திருநாள் ராமவர்மா (கி.பி.1880–1885)
7. மூலம் திருநாள் ராமவர்மா (கி.பி.1885–1924)
8. சித்திரைத் திருநாள் பாலராமவர்மா (கி.பி.1931–1949) (கடைசி திருவிதாங்கூர் மன்னர்)

கொல்லமாண்டு:

தமிழகத்திலுள்ள பழைய கல்வெட்டுகளில் பொதுவாகக் காணப்படும் ஆண்டுகள் கலி, சகம், கொல்லமாண்டு ஆகும். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பெருவாரியான கல்வெட்டுகள் கொல்லமாண்டு இல்லாமல் காண்பது அரிதாகும். கேரளாவிலுள்ள 'கொல்லம்' என்ற இடத்தின் பெயரிலிருந்து கொல்லமாண்டு பெயர் தோன்றியது.

உதைய மார்த்தாண்டன் என்ற வேணாட்டரசன் கொல்லத்தில் கற்றறிந்த சபையோரைக் கூட்டி கலியாண்டு 3926–ல் (கி.பி.825) கொல்லமாண்டை அறிமுகப் படுத்தினான் என வரலாற்றாசிரியர் சங்குண்ணிமேனன் குறிக்கிறார். இதற்கு திருவனந்த புரத்திலுள்ள பத்மனாபசாமி கோயில் ஆவணமொன்றைச் சான்றாதாரமாகக் கூறு கிறார். கொல்லமாண்டு சிங்ஙம் மாதம் 1–ம் தேதி துவங்குவதாக பல்வேறு சோதிட, கணித நிபுணர்களின் ஆய்வுக்குப் பின் அறிவிக்கிறார். பத்மனாபசாமி கோவில் ஆவணம் கி.பி. 1625ம் ஆண்டைச் சேர்ந்த காலத்தால் பிந்திய ஆவணமாகும். இதனைத் தொடர்ந்து கொல்லமாண்டு தொடர்பாக ஆய்வாளர்கள் மத்தியில் வேறுபட்ட கருத்துகள் நிலவி வருகின்றன. கடைசியாக இதில் ஆய்வு மேற்கொண்ட பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் கொல்லமாண்டு சப்தரிஷி ஆண்டின் ஒரு திருந்திய ஆண்டு எனக் கணித் துள்ளார். சப்தரிஷியாண்டு காஷ்மீர், மூல்தான், சௌராட்டிரம் மற்றும் இந்தியாவின் வடக்கு மத்திய பகுதிகளிலும் வழக்கில் இருந்துள்ளன. இது லௌகீக ஆண்டு எனவும் அழைக்கப்பெறும். இது 100 ஆண்டுகளுக்கு ஒரு முறையான சுழற்சியின் அடிப்படை யில் கணக்கிடப்படுகிறது. இதன் தொடக்கம் கி.மு.76. நம்பூதிரி பிராமணர்கள் கொல்லத் திற்கு வரும் பொழுது சப்தரிஷியாண்டின் ஒன்பதாவது சுழற்சி முடிவுற்று பத்தாவது சுழற்சி சித்திரை 1, 825–ல் தொடங்குகிறது. 825லிருந்து கொல்லமாண்டு என பெயரிட்டு அழைக்கப்பட்டு வருகிறது. இளங்குளம் குஞ்சன்பிள்ளை போன்றோர் இதனை ஏற்றுக் கொண்டாலும் இம்முடிவிலும் ஆய்வாளர்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

மாம்பள்ளிச் செப்பேடே கொல்லமாண்டைக் குறிக்கும் முதல் ஆவணமாகும். இச் செப்பேடு கொல்லமாண்டு 149–ல் வெளியிடப்பட்டது. கி.பி.12–ம் நூற்றாண்டிலிருந்தே கல்வெட்டுகளில் கொல்லமாண்டு குறிக்கப்படுகிறது. இவ்வாண்டு 'கொல்லம் துடங்கி' 'கொல்லம் தோன்றி' 'கொல்லமழிந்த' ஆண்டு என கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

கொல்லமாண்டைத் தற்போதைய கிறிஸ்துவ ஆண்டுக்கு மாற்றிக் கணக்கிட கொடுக்கப்பட்ட கொல்லமாண்டோடு 824 அல்லது 825– ஐக் கூட்ட வேண்டும். ஆவணி – மார்கழி 15 வரை உள்ள மாதங்களில் ஏதாவது ஒரு மாதம் குறிப்பிடப்பட்டால் கொல்லமாண்டோடு 825–ஐக் கூட்டவேண்டும். உதாரணமாக கொல்லமாண்டு 920, புரட்டாசி மாதம் என்றால் 920 + 825= கி.பி.1745 எனக் கணக்கிட வேண்டும். இதேபோல் மார்கழி 16–ந்தேதி முதல் –ஆடி மாதம் வரையுள்ள மாதங்களில் ஏதாவது ஒரு மாதம் குறிப்பிடப்பட்டால் கொல்லமாண்டோடு 824– ஐக் கூட்ட வேண்டும். உதாரணமாக கொல்லமாண்டு 647, பங்குனி மாதம் என்றால் 647+824= கி.பி.1471 எனக் கணக்கிட வேண்டும்.

மன்னர் பெயரில் பூசைகள்:

1. உதைய மார்த்தாண்ட சந்தி பூசை :

கி.பி.1536–ம் ஆண்டில் வேணாட்டரசர் இரண்டாம் பூதலவீர மார்த்தாண்ட வர்மாவினால் சுசீந்திரம் கோயிலில் ஏற்படுத்தியது.

2. செண்பகராமன்பூசை :

கி.பி.1586–ல் வேணாட்டரார் பூதலவீர இராமவர்ம சிறவாய் மூத்த திருவடி பத்மனாபசாமி கோயிலில் ஏற்படுத்தியது.

3. வீரமார்த்தாண்டன் சந்தி :

பத்மனாபபுரம் அரண்மனையிலுள்ள தூண் கல்வெட்டு ஒன்று கொல்லமாண்டு 708 (கி.பி.1532)–ல் வென்று மண்கொண்ட பூதலவீர ஸ்ரீஉதைய மார்த்தாண்டன் தன்பெயரால் "வீரமார்த்தாண்டன் சந்தி" என்ற பூசை நடத்தக் குமரி நாச்சியார் கோயிலுக்கு நிலக்கொடை வழங்கியதைக் குறிக்கிறது. இதே மன்னர் நாகராஜா கோயிலில் தன் பெயரால் வீரமார்த்தாண்டன் சந்தி என்ற உச்சி கால பூசையை ஏற்படுத்தி இதற்கு பள்ளிச்சந்தமாக நிலமும் விட்டுக் கொடுத்துள்ளான்.

4. செண்பகராமன் சந்தி :

பறக்கை மதுசூதன பெருமாள்கோயிலில் வேணாட்டரசன் பூதல வீரஸ்ரீ மார்த் தாண்ட வர்மன் கி.பி.1587ல் இவன் பட்டப் பெயரால்"செண்பகராமன் சந்தி" என்ற பூசை ஏற்படுத்தினான்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்வெட்டுகள் உள்ள ஊர்ப் பெயர்கள்

அகத்தீஸ்வரம் வட்டம்

1	அகத்தீஸ்வரம்	18	சோழபுரம்
2	அக்கரை	19	தெங்கம்புதூர்
3	ஆசிராமம்	20	தேவகுளம்
4	இடலாக்குடி	21	தேரூர்
5	ஈத்தாமொழி	22	நல்லூர்
6	கரியமாணிக்கபுரம்	23	நாகர்கோவில்
7	கருப்புக்கோட்டை	24	பஞ்சவன்காடு
8	கன்னியாகுமரி	25	பறக்கை
9	கிருஷ்ணன்கோவில்	26	பரக்கோடு
10	குரண்டி	27	புத்தன்துறை
11	கோச்சைப்பிடாரம்	28	புதுக்கிராமம்
12	கொட்டாரம்	29	புரவசேரி
13	கோட்டாறு	30	புன்னார்குளம்
14	சரலூர்	31	ராஜாக்கமங்கலம்
15	சாமித்தோப்பு	32	வடசேரி
16	சுங்கான்கடை	33	வடிவீஸ்வரம்
17	சுசீந்திரம்	34	வாரியூர்

தோவாளை வட்டம்

1 அந்தபுரம்
2 அருமநல்லூர்
3 அழகியபாண்டிபுரம்
4 அனந்தபுரம்
5 ஆதிச்சன்புதூர்
6 ஆரல்வாய்மொழி
7 ஆழ்வார்கோவில்
8 இறச்சகுளம்
9 ஐயன்கோணம்
10 கடுக்கரை
11 காட்டுப்புதூர்
12 குறத்தியறை
13 தாழக்குடி
14 திருப்பதிசாரம்
15 தூவச்சி (காஞ்சிரங் கோணம்)
16 தெரிசனங்கோப்பு
17 தெள்ளாந்தி
18 தோவாளை
19 ஸ்ரீ பத்மநாப நல்லூர்
20 புத்தேரி
21 பூதப்பாண்டி
22 தென்பாறைக்குன்றம்
23 மணல்திட்டை
24 மேலப்புதுவூர்
25 வீரவநல்லூர்
8 கோட்டவிளை
9 சாரோடு
10 சிவகிரி
11 செட்டியார் மடம்
12 சேரமங்கலம்
13 தக்கலை
14 தலக்குளம்
15 திக்கணங்கோடு
16 திங்கள்சந்தை
17 திருநயினார் குறிச்சி
18 திருநந்திக்கரை
19 திருவட்டாறு
20 திருவிடைக்கோடு
21 திருவிதாங்கோடு
22 திற்பரப்பு
23 தொடுவெட்டி
24 தோட்டியோடு
25 பத்மனாபபுரம்
26 பத்தரை
27 புத்தன்கடை
28 புலியூர்க்குறிச்சி
29 பேயங்குழி
30 முணலிக்கரை
31 முணவாளக் குறிச்சி
32 முட்டக்காடு
33 வாள்வச்சகோட்டம்
34 வீரநாராயணச்சேரி

கல்குளம் வட்டம்

1 அருவிக்கரை
2 ஆளூர்
3 இரணியல்
4 இரவிபுரம்
5 குமாரகோவில்
6 கழுவன்திட்டுவிளை
7 கேரளபுரம்

விளவங்கோடு வட்டம்

1 இராமன்துறை
2 கிள்ளியூர்
3 குழிக்கோடு
4 குழித்துறை
5 சிதறால்
6 நட்டாலம்

7	நெல்வேலி	12	பாகோடு
8	திக்குறிச்சி	13	பார்த்திவபுரம்
9	திருப்பன்னியோடு	14	பாலூர்
10	திப்பிரமலை	15	மருதங்கோடு
11	பள்ளியாடி	16	முஞ்சிறை

கல்வெட்டுகளில் ஊர்ப் பெயர்கள்

தற்போதைய பெயர்		கல்வெட்டில் பெயர்
1. அந்தரபுரம்	–	சுந்தரச் சோழபுரம்
2. அழகியபாண்டிபுரம்	–	அதியனூரான அழகியபாண்டிபுரம்
3. அனந்தபுரம்	–	பனைந்தார் விளாகம்
4. ஆதிச்சன் புதூர்	–	ஆதிச்சம் புதுவூர்
5. ஆரல்வாய்மொழி	–	1. ஆரை 2. ஆரைவாய்மொழி
6. இறைச்சகுளம்	–	எறிச்சிகுளம்
7. காட்டுப்புதூர்	–	செண்பகராசன் புதுவூர்
8. குறத்தியறை	–	முன்னூரி ரவி நியமம்
9. புத்தேரி	–	வடசேரியான புத்தேரி
10. பூதப்பாண்டி	–	பூதைப் பாண்டி
11. அகஸ்தீஸ்வரம்	–	1. குமரித் திருவகத்தீஸ்வரம் 2. அகத்தீச்சுரம் 3. அகத்தீச்சுவரமான உதைய மார்த்தாண்டச் சதுர்வேதி மங்கலம் 4. அகஸ்தீஸ்வரமான உதைய மார்த்தாண்டச் சதுர்வேதி மங்கலம்
12. ஆசிராமம்	–	ஆச்சிராமம்
13. இடலாக்குடி	–	இடராய்க்குடி, இடலாய்குடி
14. கரியமாணிக்கபுரம்	–	இடராய்க்குடியான இராஜநாராயண சதுர்வேதி மங்கலம்
15. கருப்புக்கோட்டை	–	கரும்பழவில்
16. கன்னியாகுமரி	–	1. குமரி மங்கலம் 2. குமரிக் கழிக்குடி 3. கழிக்குடி 4. குமரியான கங்கைகொண்ட சோழபுரம் 5. குமரி

17.	கிருஷ்ணன்கோவில்	–	வடசேரியான ஸ்ரீ மாத்திதல்ய வர்ம்ம சதுர்வேதி மங்கலம்
18.	சுசீந்திரம்	–	1. திருச்சிவீந்திரம் 2. சிவீந்திரம் 3. சுசீந்திரமான சுந்தரச் சோழபாண்டிய சதுர்வேதி மங்கலம் 4. சுசீந்திரமான சுந்தரச் சோழ சதுர்வேதி மங்கலம் 5. ஸுஜுந்திரம் 6. வீரகேரளச் சதுர்வேதி மங்கலம் 7. சுசீந்திரம்
19.	சோழபுரம்	–	திருக்கோட்டாறான மும்முடிச் சோழ நல்லூர்
20.	தேரூர்	–	தேரான அழகிய சோழ நல்லூர்
21.	நாகர்கோவில்	–	1. கோட்டாறான மும்முடிச் சோழபுரம் 2. கோட்டாற்று நாகர்கோவில் 3. நாகர்கோவில்
22.	பறக்கை	–	1. கிழார் மங்கலமான அபிமானமேருச் சதுர்வேதி மங்கலம் 2. கிழார் மங்கலம் 3. வலிகொல்லிக்கிழார் மங்கலம் 4. பறக்கை
23.	புதுக்கிராமம்	–	புக்கிராமமான இராஜ நாராயணச் சதுர்வேதி மங்கலம்
24	புரவச்சேரி	–	புரவரிச் சதுர்வேதி மங்கலம்
25.	வடசேரி	–	கோட்டாற்று வடசேரி
26.	வடிவீஸ்வரம்	–	திருக்கோட்டாறான மும்முடிச் சோழபுரம்
27.	ஆளூர்	–	ஆளூரான விக்கிரமசோழ பாண்டியபுரம்
28.	இரணியல்	–	இரணியசிங்கநல்லூர், இரணசிங்நேச்சுரம்
29.	இரவிபுரம்	–	கல்குளத்து இரவிவன்மபுரம்
30.	குமாரகோவில்	–	வேள்விமலை
31.	கேரளபுரம்	–	1. முத்தளக்குறிச்சி 2. முத்தலைக்குறிச்சி 3. கேரளபுரம்
32.	தலக்குளம்	–	கடியபட்டணம்

33.	திருநயினார்க்குறிச்சி	–	கடிகை பட்டணம்
34.	திருநந்திக்கரை	–	நந்தி மங்கலம்
35.	திருவட்டாறு	–	வாட்டாறு
36.	திருவிடைக்கோடு	–	திருவிடைக்கோட்டு
37.	திருவிதாங்கோடு	–	திருமுதான்□கோட்டு
38.	பத்மனாபபுரம்	–	கற்குளம், கல்குளம்
39.	பன்னிப்பாகம்	–	1. திருப்பன்றப்பாகம் 2. திருப்பனைகுளம்
40.	தெங்கம்புதூர்	–	தென்கொம்பு
41.	புத்தன்துறை	–	1. பொளிகை நகர் 2. கேசவன் புத்தன்துறை
42.	புன்னார்குளம்	–	புன்னாகுளம்
43.	தூவச்சி	–	காஞ்சிராங் காடேறி
44.	தென்பாறைக்குன்றம்	–	வடபாறைக்குன்றம்
45.	கோட்டவிளை	–	பள்ளிக்கல்
46.	திக்கணங்கோடு	–	திருக்கண்ணங்கோடு
47.	பள்ளியாடி	–	நட்டாலத்து பள்ளியாடி
48.	சிதரால்	–	திருச்சாரணம்
49.	திப்பிரமலை	–	திருப்பிறைமலை
50.	பார்த்திபபுரம்	–	பார்த்திவ சேகரபுரம்
51.	நட்டாலம்	–	திருநட்டாலம்
52.	சின்னமுட்டம்	–	குமரி முட்டம்
53.	முட்டம்	–	மும்முடிச் சோழநல்லூர்
54.	சாரோடு	–	சாரகோடு
55.	திங்கள்சந்தை	–	செண்பகராமன் புதுக்கடை
56.	மார்த்தாண்டம்	–	தொடுவெட்டி
57.	குழித்துறை	–	குளுத்துறை
58.	ராமன்துறை	–	வலியராமன் புத்தன்துறை
59.	வெள்ளிச்சந்தை	–	நாலாலுமூட்டுச் சந்தை

கல்வெட்டில்	மலையாள மாதங்கள்
ஆவணி	சிங்ஙம்
புரட்டாசி	கன்னி
ஐப்பசி	துலாம்
கார்த்திகை	விருச்சகம்
மார்கழி	தனு
தை	மகரம்
மாசி	கும்பம்
பங்குனி	மீனம்
சித்திரை	மேஷம்
வைகாசி	இடபம்
ஆனி	மிதுனம்
ஆடி	கற்கடகம்

நாட்டுப்புறவியல்:

தென் தமிழ்நாட்டில் 'வில்லுப்பாட்டு' பழமையான நாட்டார் கலைகளில் ஒன்றாகும். இக்கலை குறிப்பாக திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பரவலாகப் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வரும் கலையாகும். தொல்மாந்தரின் வேட்டைக்கருவியான 'வில்' இங்கு இசைக்கருவியாக மாற்றிப் பயன்படுத்தப்படுகிறது. வில்லுப்பாட்டின்போது உடுக்கு, குடம், தாளக்கட்டை போன்ற பிற இசைக்கருவிகளையும் பயன்படுத்துகின்றனர். ஒரு கதையைப் பாடலாக்கி 'கதைப்பாடல்' வடிவத்தில் வில்லுப்பாட்டில் வழங்கப்படுகிறது. பெரும்பாலும் கோயில் கொடை விழாக்களில் வில்லுப்பாடல் இசைக்கப்படுகிறது.

கி.பி. 14--ம் நூற்றாண்டுக்கு பின்பு இக்கலை அரசு ஆதரவை இழந்த நிலையில் அழியும் தருவாயில் குமரி மாவட்டத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மக்களின் ஆதரவுடன் இன்று வரை இக்கலை போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. செண்பகராமன் புதூரைச் சேர்ந்த திருவனந்தம்பிள்ளை என்பவரால் இயற்றப்பட்ட 'திவான் வெற்றி' என்ற வில்லுப்பாட்டு கி.பி. 1795–க்கு முன்பாகவே அச்சிடப்பட்டது. இது திருவிதாங்கூர் அரசு திவான் ராஜா கேசவதாஸ் கி.பி. 1790–ல் திப்புசூல்தானுக்கு எதிராகப் பெற்ற வெற்றி குறித்துப் பாடப்பட்ட கதைப்பாடலாகும். அகஸ்தீஸ்வரத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகப் பெருமாள் நாடார் என்பவர் பல வில்லுப்பாட்டுக் கதைகளை அச்சிட்டு வெளியிட்டுள்ளார்.

குமரி மாவட்டத்தில் முத்துப் பட்டன் கதை, சுடலைமாடன் கதை, நீலி கதை, தோட்டுக்காரி அம்மன் கதை, சாஸ்தா கதை போன்ற கதைகள் வில்லுப்பாட்டில் கதைப்பாடலாக இசைக்கப்படுகிறது.

குமரி மாவட்டத்தில் நாட்டுப்புறவியல் சார்ந்த பல நடனங்கள் இன்றும் நிகழ்த்தப் பட்டு வருகின்றன. இவை பெரும்பாலும் கோயில் விழாக்களின் போதும் திருவிழாக் காலங்களிலும் நிகழ்த்தப்படுகின்றன. திருவாதிரை காளி நடனம், களியல் ஆட்டம், கதகளி, ஓட்டம், துள்ளல், கரகாட்டம் ஆகியன குறிப்பிடத்தக்கவையாகும். திருவாதிரை காளி ஆட்டம் ஓணம் பண்டிகையின் போது நிகழ்த்தப்படுகிறது. கும்மி ஆட்டத்திற்கு ஒப்பானதாகும். பெண்கள் மட்டுமே பங்கு பெறும் கோலாட்ட நிகழ்வாகும்.

களியலாட்டம் ஆண்கள் மட்டும் பங்கு பெறுவதாகும். நடனக் குழுவில் ஒருவர் பாட மற்றவர்கள் அதனை திருப்பிப் பாடி கையில் கோல்களுடன் ஆடுவார்கள். மத்தியில் விளக்கு எரிந்து கொண்டிருக்கும். நடனம் முடியும் தறுவாயில் கையில் தீப்பந்தங்களுடன் ஆடுவார்கள்.

கதகளி ஆட்டம் கேரள மரபில் வந்ததாகும். கி.பி. 15–16–ஆம் நூற்றாண்டில் பழைய நடனங்களிலிருந்து புதிய வடிவம் பெற்றதாகும். நடனத்தின் மூலமாக கதை சொல்லும் பாணியே கதகளியாகும். கதகளியின் நடன அசைவுகள் சில மாற்றங்களுடன் பரத நாட்டியத்திலிருந்து உள்வாங்கப்பட்டதாகும். இதற்குரிய வசனங்கள் கவிதை நடையிலேயே இயற்றப்படுகிறது. இசைக் கருவிகளின் உதவியுடன் பாகவதர் இதனை உரக்கப்பாடுவார். வசன உச்சரிப்பிலிருந்து நடிப்பும் முகபாவமும் மாறும். நடிகருக்கான ஒப்பனையும் ஆடை அணிகலனும் தனிச் சிறப்பு வாய்ந்தவையாகும். ஒப்பனை செய்யப் பொதுவாக சிவப்பு, மஞ்சள், பச்சை, கருப்பு மற்றும் வெள்ளை நிற பொடிகள் பயன்படுத்தப்படுகின்றன. தலையணி எடை குறைந்த மரத்தால் உருவாக்கப்பட்டுக் கண்ணாடி துண்டுகள், வண்ணக் கற்கள், ஜிகினா ஆகியவற்றால் அலங்கரிக்கப்படு கிறது. எட்டிலிருந்து பத்து மணி வரை கதகளி நடத்தப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை தற்போது திருவட்டாறு, திற்பரப்பு, பொன்மனை, குழித்துறை, நெய்யூர், முஞ்சிறை ஆகிய ஊர்களிலுள்ள கோயில்களில் விழாக் காலங்களில் கதகளி நிகழ்த்தப்படுகிறது.

ஓட்டம்–துள்ளல்

ஓட்டம்–துள்ளல் கதை சொல்லியின் பல வடிவங்களுள் ஒன்றாகும். நகைச்சுவை உணர்வு கலந்த இக்கலை வடிவம் பெரும்பாலும் கோயில் வளாகங்களிலேயே நிகழ்த்தப்படுகிறது. கேரள மரபில் வந்த இக்கலை வடிவம் மலையாள மொழியிலேயே நிகழ்த்தப்படுகிறது. நடனம், பாட்டு மற்றும் நடிப்பு என்ற முப்பரிமாண அம்சங்களைக் கொண்டு நிகழ்த்தப்படுகிறது. கதை சொல்லி இரண்டு இசைக் கலைஞர்களுடன் இதனை நிகழ்த்துவார். இதில் நடிப்பவர் சாதாரண ஆடை அலங்காரங்களான பாவாடை, கையில் ஏதாவதொரு ஆயுதம், மார்பில் சில அலங்காரங்கள், நீண்ட தலைப்பாகை அணிந்து

காட்சியளிப்பார். குமரி மாவட்டத்தில் தற்போது ஓட்டம்–துள்ளல் திருவட்டாறு, திற்பரப்பு, பொன்மனை மற்றும் திருநந்திக்கரை ஆகிய கோயில்களில் நிகழ்த்தப்படுகிறது.

கரகாட்டம்

மேற் கூறப்பட்ட நாட்டார் கலைகளோடு தமிழகமெங்கும் நிகழ்த்தப்படும் தலையில் கரகம் வைத்து ஆடும் கரகாட்டமும் குமரி மாவட்டத்தில் விழாக்காலங்களில் நிகழ்த்தப் படுகிறது.

களரி

களரி என்பது அடிமுறைகளில் ஒரு வடிவம் ஆகும். இது கன்னியாகுமரி மாவட்டத்திலிலுள்ள கிராமங்களிலும், கேரளாவிலும் நிகழ்த்தப்படுகிறது. இது தற்போ தைய குங்ஃபூ, கராத்தே பாணியின் தொன்மையான வடிவத்திலிருந்து தோன்றிய தாகும்.

இது 'வடக்கன் களரி' என்று அழைக்கப்படுகிறது. மற்றொன்று அகஸ்தியரால் தோற்றுவிக்கப்பட்டதாக நம்பப்படும் தெக்கன் களரி. குமரி மாவட்டத்தில் 'தெக்கன் களரி'யே பிரபலமானதாகும். குறிப்பிட்ட முக்கியமான இடங்களில் (vital points) தாக்குவதே இதன் சிறப்பம்சமாகும். ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டாலும் ஆயுதமில் லாமல் தாக்குவதே இதன் தனிச் சிறப்பு. இவ்வடிமுறையில் வாள், கத்தி, சுருள்வாள், மான்கொம்பு, கண்டக்கோடரி, மழு போன்ற ஆயுதங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

தெக்கன்களரியில் சிறந்து விளங்கியோர் சோழர் படையில் சேர்த்துக் கொள்ளப் பட்டதாக கல்வெட்டுச் சான்றுகள் தெரிவிக்கின்றன. இவர்களில் ஒருவராகக் கல்வெட்டு 'ராஜாதித்த தேவர் பெரும்படை நாயக்கர் மலைநாட்டு நந்திக்கரைபுதூர் வெள்ளன் குமரன்' என்பவனை குறிப்பிடுகிறது. திருநந்திக்கரை ஊரைச் சேர்ந்த வெள்ளன் குமரன் என்ற இவ்வீரனின் பெயரால் தற்போது குமரி மாவட்டத்தில் 'வெள்ளன் குமரன்விளை' என்ற ஊர் உள்ளது. வேணாட்டரசர் மார்த்தாண்டவர்மாவும் களரியில் ஒரு சிறந்த வீரராவார். இதன் காரணமாகவே இவர் தன் எதிரிகளிடமிருந்து பலமுறை தப்பியுள்ளார். ஆங்கிலேய படையினருக்கு சவாலாகவிருந்த வேலுத்தம்பி தளவாயும் ஒரு களரி வீரராவார்.

தெக்கன்களரியில் சுவடு, கைப்போர், பூட்டும் பிரிவும், ஆயுதப்பயிற்று, கம்பு வீச்சு சிலம்பம் என்ற ஐந்து அடிமுறைகள் உள்ளன. சீனா மற்றும் ஜப்பானிலுள்ள குங்ஃபூ, கராத்தே கலைகளுக்கும் களரிக்கும் நிறைய பொது ஒற்றுமைகள் உள்ளன.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கிராமங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட களரிப் பள்ளிகள் உள்ளன. களரி பயிற்றுவிக்கும் ஆசிரியரை 'ஆசான்' என அழைக்கின்றனர்.

அடிமை வியாபாரம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் அடிமைச் சமூகம் பற்றிய செய்திகள் அழகிய பாண்டிபுரம் பெரியவீட்டு முதலியாரின் வீட்டில் கிடைத்த ஆவணங்களில் உள்ளன. மிகப்பழைய அடிமை ஆவணம் 1389–ற்குரியது. இதில் குறிப்பிடப்படும் அடிமை, தன் முதலாளியிடம் அனுமதிபெற்ற பிறகே வெளியூர் சென்ற செய்தி உள்ளது. ஒடுக்கப் பட்டவர்கள் மட்டுமன்றி பிராமணர் தவிர்த்த பிற சமூகத்தினரும் அடிமையாக இருந்தது பற்றி ஆவணங்கள் சில கிடைத்துள்ளன. திருமண ஸ்ரீதனப் பொருட்களுடன் அடிமை களையும் கொடுக்கும் வழக்கம் இருந்ததை ஓர் ஆவணம் குறிப்பிடுகிறது. ஸ்ரீதனப் பிரமாணம், ஒற்றிப் பிரமாணம் போன்று அடிமைப் பிரமாணமும் வழக்கத்தில் இருந்தது. அடிமைகளை விலைக்கு விற்கும் போதும், வாங்கும் போதும் பதிவு செய்யும் வழக்கம் இருந்தது.

அடிமைகள் தங்களையே விற்றுக் கொண்டனர் என்பது குறித்த செய்திகள் ஆவணங்களில் உள்ளன. குமரி மாவட்டத்தில் கிடைத்த அடிமை ஆவணங்களில் பெரும்பாலும் விவசாயத் தொழில்களுக்காகவே அடிமைகள் பயன்படுத்தப்பட்ட செய்தி களைக் குறிப்பிடுகின்றன. 1459 ஆம் ஆவணம் ஒன்று

“அடிமை விலைப்பிரமாணம் செய்து கொடுத்த
பரிசாவது அவகால பஞ்சமாய்க் காலும்
கண்கெண்டையும் வீங்கிக் கஞ்சிக்கு
அலக்கையாலே எங்கள்
நாயனும் இட்டு .. . . ..
நாங்களே அடிமை விலைப் பெரமாணம்
செய்து கொடுத்தோம்”

என்று கூறுகிறது. அடிமைகளை விற்கும் முறை, விலைக்கு வாங்குபவரின் நிலை விலை குறித்த செய்திகளும் இந்த ஆவணங்களில் உள்ளன. அடிமைகளை ஊர் மன்றிலில் நிறுத்தி “விலை கொள்வாருளரோ கொள்வாருளரோ” என்று கூற “விலை கொள்வோம் கொள்வோம்” என்று பதில் கூறி வாங்கியதை ஒரு ஆவணம் கூறும்.


கன்னியாகுமரி மாவட்டத்தில் அடிமை ஒழிப்புக்கு வித்திட்டவர்கள் கிறித்தவச் சமயப் பணியாளர்களே. இவர்களின் முயற்சிக்கு பலன் 1853ல் கிடைத்தது. திருவிதாங்கூர் அரசர் உத்திரம் திருநாள் மகாராஜா 1853 அக்டோபர் 15ஆம் நாளில் வெளியிட்ட அறிக்கையின்படி அடிமைகள் விடுதலை செய்யப்பட்டனர்; அடிமைகளை விற்பது, வாங்குவது, பதிவு செய்வது முதலியன சட்டப்படி குற்றம் என அறிக்கை கூறியது. அடிமை முறை நின்ற பிறகு ஒடுக்கப்பட்டவர்களில் பலர் கிறித்தவ மதத்திற்கு மாறினர்.

தோள்சீலைக் கலகம்


திருவிதாங்கூர் அரசர்களின் காலத்தில் (கி.பி.18–19ம் நூ.ஆ) ஒடுக்கப்பட்டச் சமூகப் பெண்கள் தோள்சீலை அணியத் தடை இருந்தது. இதனை எதிர்த்த போராட்டம் 19–ம் நூற்றாண்டில் தீவிரமாக செயல்பட்டது. இந்த போராட்டத்தை லண்டன் மிஷன் சமயப் பணியாளர்கள் தீவிரப்படுத்தினர். 1855–ல் கேரளம் ஆற்றிங்கல்லில் நடந்த போராட்டம் கல்குளம் தாலுகாவில் பரவக் காரணமாயிற்று. இந்த காலகட்டத்தை அடுத்து விக்டோரியா மகாராணியின் அறிக்கை வந்தது. இதை கிறித்துவ பணியாளர்கள் சாதகமாக எடுத்துக்கொண்டு விளக்கம் கொடுத்தனர். இதன் பலன் 1859 ஜூலை 26–ல் கிடைத்தது. திருவிதாங்கூர் அரசரான உத்திரம் திருநாள் மகாராஜா ஒடுக்கப்பட்ட மக்கள் பிற சாதியினரைப் போல் தோள்சீலை அணியலாம் என்று உத்திரவிட்டார் இதோடு கலவரம் முடிந்தது.

கோவில் நுழைவுப் போராட்டம்

அப்போதைய திருவிதாங்கூர் அரசில் ஒடுக்கப்பட்ட சமூகத்தவர் கோவிலுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டிருந்தது. கோவிலைச் சுற்றியுள்ள தெருவுக்குள் இச் சமூகத்தவர் வருவதை தடுப்பதற்காகவே ஆங்காங்கே 'தெரு மறிச்சான்'கள் நிறுத்தப் பட்டிருந்தனர். இதனை எதிர்த்து காங்கிரசார் கோவில் நுழைவு போராட்டத்தை நடத்தினர். வைக்கம் பேராட்டமே குமரி மாவட்டத்தில் இப்போராட்டம் நடைபெற ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தது. இதனைத் தொடர்ந்து நவம்பர் 12, 1936–ம் ஆண்டு இந்து சமயத்தை சேர்ந்த அனைத்து சமூகத்தவரும் கோவிலுக்குள் நுழையலாம் என சித்திரைத் திருநாள் பாலராமவர்மாவால் பிரகடனம் வெளியிடப்பட்டது. இதனை வியந்து பாராட்டிய மகாத்மா காந்தி இது ஒரு "நவீன கால அற்புதம்" என வர்ணித்தார்.



சிதரால் திருச்சாரணம் மலைக்கோயில் (கி.பி.8–ம் நூ.ஆ)




குறத்தியறை குடைவரைக் கோயில்
(கி.பி.8–ம் நூ.ஆ)




குறத்தியறை – வரதராஜாபெருமாள்
(கி.பி.8–9 ம் நூ.ஆ)



திருவடிகள்– திருநந்திக்கரை
(கி.பி.8–ம் நூ.ஆ)




அம்பிகா இயக்கி – சிதரால்
(கி.பி.8–9ம் நூ.ஆ)



குறத்தியறை பாறைக் கல்வெட்டு
(கி.பி.10ம் நூ.ஆ)




குபேரன்
பத்மநாபபுரம் அரண்மனை அருங்காட்சியகம்
(கி.பி.10–ம் நூ.ஆ)



ஆதிகேசவப்பெருமாள்
திருவட்டாறு



திப்பிரமலை பெருமாள்கோயில்
(கி.பி.12–13–ம் நூ.ஆ)




இரணியல் அரண்மனை மரச்சிற்பங்கள்
(கி.பி.17ம் நூ.ஆ)




மூதேவி
பட்டாணியர் குளம்–பத்மநாபபுரம்
(கி.பி.14–15–ம் நூ.ஆ)




அகலிகை ஊற்று - தூண் கல்வெட்டு
ஆரல்வாய்மொழி (கி.பி.1696)




காசுப் பலகை
கன்னியாகுமரி அரசு அருங்காட்சியகம்
(கி.பி.16–ம் நூ.ஆ)




இந்திரன் குடைவரைக் கோயில்
ஒசரவிளை




பத்மனாபபுரம் அரண்மனை, பத்மனாபபுரம்
(கி.பி.16–ம் நூ.ஆ)



சுதைக்கட்டிகள்
வட்டக்கோட்டை
(கி.பி.18–ம் நூ.ஆ)




பீரங்கி குண்டுகள்
உதயகிரிக்கோட்டை
கி.பி.18–ம் நூ.ஆ




மேற்குப் பிரதான வாயில்
உதயகிரிக்கோட்டை
(கி.பி.18–ம் நூ.ஆ)



மருந்துக் கோட்டை (கி.பி.18–ம் நூ.ஆ)



மருந்துக் கோட்டை – வீரர்கள் தங்கும் கல்மடம் (கி.பி.18–ம் நூ.ஆ)




மையக்கோட்டை (கி.பி.18–ம் நூ.ஆ)



மேற்குவாயில் பத்மனாபபுரம் கோட்டை
கி.பி.18–ம் நூ.ஆ




பறை கொட்டுபவர்
திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள்
கோயில் (கி.பி. 18–ம் நூ.ஆ)



மணிச்சித்திரத் தாழ்
பத்மனாபபுரம் அரண்மனை
(கி.பி.18–ம் நூ.ஆ)




அளத்தம்மன் உற்சவர்
யானை மீது வலம் வருதல்




பட்டங்கட்டியார்
சுமைதாங்கிக் கல்
கி.பி.1819



நீலகண்டசாமி கோயில் தெப்பக்குளம்
மலையாளக் கல்வெட்டு
பத்மனாபபுரம்



தேவசகாயம் மவுண்ட்
ஆரல்வாய்மொழி



தளவாய் வேலுத்தம்பி கொட்டாரம்
தலக்குளம்
கி.பி. 19–ம் நூ.ஆ

குமரி மாவட்டத்தைப் பற்றிய நூல்கள்

1. கேரளோல் பத்தி
2. கேரள மகாத்மியம்
3. * Travancore State Manual Vol I-III- V.Nagam Aiya
4. Travancore State Manual Vol I-VI- T.K. Velu Pillai
5. * A History of Travancore – P. Shangoonymenon (from earliest times)
6. * Church History of Travancore – C.M. Augur (1990)
7. * Travancore Archaeological series Vol I-III- T.A. Gopinatha Rao.
8. * Travancore Archaeological series Vol IV- K.V. Subramanya Ayyar
9. * Travancore Archaeological series Vol V-VII- A.S. Ramanatha Ayyar
10. * கன்னியாகுமரி கல்வெட்டுகள் (முதல் தொகுதி) – நடனகாசிநாதன்
11. * கன்னியாகுமரி கல்வெட்டுகள் (இரண்டாம் தொகுதி) –நடனகாசிநாதன்
12. * கன்னியாகுமரி கல்வெட்டுகள் (மூன்றாம் தொகுதி) –நடனகாசிநாதன்
13. * கன்னியாகுமரி கல்வெட்டுகள் (நான்காம் தொகுதி) –நடனகாசிநாதன்
14. * கன்னியாகுமரி கல்வெட்டுகள் (ஐந்தாம் தொகுதி) – நடனகாசிநாதன்
15. குமரி மாவட்டக் கோயில்கள் –டாக்டர் S. பத்மநாபன் (நாகர்கோவில்)
16. * பண்பாட்டுத் தளங்களின் வழியே – செந்தீ நடராசன், நாகர்கோவில்
17. திருவிதாங்கூரில் அப்பலோஸ்தர் ரிங்கிள் தெளபே(1989) – அசாரியா (நாகர்கோவில்)
18. மைதீன் பள்ளி (1981) – அப்துல் ரசாக் (கோட்டாறு)
19. தென்னாட்டுப் போர்க்களங்கள்(1952) –கா.அப்பாத்துரை (சென்னை)
20. லெமூரியா கண்டம் – கா.அப்பாத்துரை (சென்னை)
21. * வேதசாட்சி தேவசகாயம் பிள்ளை– ஆசிர்வாத அடிகளார் (முள்ளங்கினா விளை)
22. பகவான் வைகுண்ட சாமிகள் வரலாறு (1966) – சி. உமைதாணு (நாகர்கோவில்)
23. சிவாலய ஓட்டம் (1988) – கண்ணன் (நாகர்கோவில்)
24. சாட்டு நீட்டோலை(1996)– என்.அமலன் (சாமிதோப்பு)
25. *அய்யா வைகுண்டரின் வாழ்வும், சிந்தனையும் (2000) – கிருஷ்ணநாதன் (நாகர்கோவில்)
26. * குமரி மாவட்ட புலவர்கள் (1987) – குமரேசபிள்ளை(சுசீந்திரம்)
27. * சேரநாடும், செந்தமிழும் (1949) – செ.சதாசிவம் (நாகர்கோவில்)
28. திருவிதாங்கூர் சரித்திரம் (1932) –வி.வி.சர்மா (நாகர்கோவில்)

29. ஆஞூர் சரித்திரம் (1940) – சிதம்பர குற்றாலம் (ஆஞூர்)
30. கன்னியாகுமரி மாவட்டம் (1963) – சோமலெ (சென்னை)
31. மார்தாண்ட வர்மா (1953) –இரா. சோமசுந்தரம் (நெய்யூர்)
32. * The Suchindram Temple (1953)- K.K. Pillai
33. * அகிலத்தில் ஓர் அற்புதக் கோயில் – க.த. தங்கம் (நாகர்கோவில்)
34. * குமரிக் கிறிஸ்தவர்கள் பயணப்பாதை-- கே.ரோ.நற்சீசன் (நாகர்கோவில்)
35. குமரி மாவட்டம் பிறந்த வரலாறு – கு. பச்சைமால் (சாமிதோப்பு)
36. கன்னியாகுமரி மாவட்ட வரலாறு (1991)-- அ.கா. பெருமாள்
37. மானவீரநாடும் ஆற்றங்கரை பள்ளியும் – அலெக்ஸ் முத்தையா (அழகப்பபுரம்)
38. புனித பிரான்சிஸ் சவேரியார் (1999) –ஜே.எஸ். மைக்கேல்
39. திருவடிதேசம் திருப்பாப்பூர் பரம்பரை–கே.பி.வரதராஜன்
    ஸ்ரீமத் அனந்த பத்ம நாடார் வரலாறு (2000) –கே.பி. வரதராஜன்
40. * நாஞ்சில் நாடு – டாக்டர் தே.வேலப்பன் (இரவிப்புதூர்)
41. தென் திருவிதாங்கூர்
    லண்டன் மிஷனரி சரித்திரம் (1806–1956) – எ.ஜான் ஜேக்கப்
42. * Kanya Kumari Dist. Gegetteer (1995) – Gopala Krishnan
43. Rise of Travancore. A study to the life & times of
    Marthandavarma (1976) – A.N. Ebrahim Kunju (Trivandrum)
44. A History of London missionary in Travancore
    (1847-1908) (1976) - A. Jacob John
45. Land of perumds (1863) - Francio (Madras)
46. Decline of Nair Dominance in Society and Politics inTrivancore
    (1847-1908) - Jeffery Rubin, (London)
47. Kerala Under Hyder Ali and Tippu Sultan (1973) – C.K. Kareem (Cochin)
48. Studies in Kerala History (1970) - Elankulam Kunjan Pillai.
49. English Trade in Travancore Historical Society (1977) - K.K. Kushman
50. History of the Catholic Church in
    Kanyakumari Dist (2002) - V. Lawrence (Nagercoil)
51. * நாஞ்சில் நாட்டு முதலியார் ஓலைச்சுவடிகள்
    காட்டும் சமூகம் (1999) – அ.கா. பெருமாள்
52. * சுசீந்திரம் கோவில் (2001) – அ.கா. பெருமாள்
53. * பறக்கை மதுசூதனப் பெருமாள் கோயில் – அ.கா. பெருமாள்
54. * நாஞ்சில் வள்ளுவன், ஔவையார் (1999) – புலவர். கு. பச்சைமால்
55. * தென்குமரியின்கதை (2003) – அ.கா. பெருமாள்
56. குமரி நிலநீட்சி (2002) – சு.கி. ஜெயகரன்

57. அகிலத்திரட்டு அம்மானை – வைகுண்டசாமி
58. அருள் நூல் – வைகுண்டசாமி
59. மாக்கடல் மர்மங்கள் – அலெக்சாண்டர் கோந்ரதோவ்
60. The Dravidian Lineage The Nadars through the Ages- Immanuel
61. * Kerala society papers Vol II – Gegetteers Dept. Govt. of Kerala.
62. * The Arts and Crafts of Travancore – Dr. Stella Nanrisch
    Dr. J.H. Cousins
    R. Vasudeva Poduvol
63. வேணாட்டு அடிகள் மார்த்தாண்டவர்மா – திருவிசைப்பா
64. குமரிக் கண்டம் (அ) கடல்கொண்ட தென்னாடு – கா. அப்பாத்துரை
65. அய்யா வைகுண்டரின் புனித வரலாறு – புலவர் என்.அமலன்
66. Maritime History of south India – முனைவர்.வே.சா.அருள்ராஜ்
67. தென்பாண்டி மண்டல தோமையார் கிருஸ்தவர் – அலெக்ஸ் குரூஸ் முத்தையா
68. வர்மக் கலைக் களஞ்சியம் – S.M. அலெக்சாண்டர் ஆசான்
69. அன்னை மண்டைக்காடு அம்மன்
70. நாடார் குலம் } – S.P. அன்பரசு
71. அதங்கோட்டாசான்
72. குமரி மாவட்ட ஊர்கள் } – வித்வான் அ.அன்பையா
73. நாடார் குலமக்கள் – A.N. ஆணிநாராயணப்பெருமாள் நாடார்
74. வெள்ளைக்காரன் சாமி கதை – முனைவர் A. ஆதித்தன்
75. திருவிதாங்கூர் சரித்திரம் – வித்வான் Y. ஆமோஸ்
76. பழவூர் நீலி
77. மார்த்தாண்டவர்மா } – ஆலங்கோட்டை T. கணபதி
78. குமரி மாவட்ட வரலாறு
79. வர்மமும், வைத்தியமும் } – முனைவர் மு.ஆல்பன்ஸ் நத்தானியேல்
80. குமரி மாவட்ட வரலாறு
81. கெருடப்பத்து–
82. சங்கிலி பூதத்தான் கதை
83. சின்னதம்பி கதை – கு. ஆறுமுகப் பெருமாள் நாடார்
84. சுடலைமாடசாமிக்கதை
85. *தோட்டுக்காரியம்மன் கதை
86. நாலுமந்திரிக்கும்மி
87. பழகைநல்லூர் நீலியம்மன் கதை

88. பூலங்கொண்டாளம்மன் கதை
89. முத்துப்பட்டன்கதை
90. வெங்கலராஜன் காவியம்

} – கு. ஆறுமுகப் பெருமாள் நாடார்

91. கன்னியாகுமரி மாவட்ட நாடக வரலாறு
92. விடுதலைப்போர்

} – இரணியல் கலைத்தோழன்

93. கன்னியாகுமரி மாவட்ட டயரக்டரி – சி.உமைதாணு
94. புனித எஸ்தாக்கியார் சரித்திரம் – D.E. எலியாஸ்
95. சிவாலய ஓட்டம் – இரா.கண்ணன்

96. அகிலத்திரட்டு அம்மானையில் சமுதாயம்
97. குமரிமாவட்ட மக்களின் வாழ்வியல் நம்பிக்கைகள் – ஓர் ஆய்வு

} – கமல செல்வராஜ்

98. பகவான் வைகுண்டசாமிகள் வரலாறு
99. பீர் முகமது அப்பா

} – பொன்.காசி உதியம்

100. செண்பகராமன் பள்ளு – J.M. காளிங்கராயர் (ப.ஆ)
101. அய்யா வைகுண்டரின் வாழ்வும் பணியும் – த.கிருஷ்ணநாதன்
102. மார்த்தாண்டவர்மா – வித்வான் O. கிருஷ்ணபிள்ளை
103. சேர நாட்டில் தமிழ் வட்டெழுத்து – இரா. கிருஷ்ணமூர்த்தி
104. வைகுண்ட சுவாமிகள் வரலாறு – சுவாமி. கிருஷ்ணானந்தஜி
105. வரலாற்றில் வட்டப்பள்ளிமடம் – குமரிச் செல்வன்
106. நாஞ்சில் நதிகள் – குமரிச் செழியன்

107. * குமரி மாவட்டப் புலவர்கள்
108. சதாவதானி செய்குத்தம்பிபாவலர்

} – வித்வான் .சி. குமரேசபிள்ளை

109 றிங்கல் தெளபெ – வேதமாணிக்கம் திருப்பணி – M.குமாரதாஸ்
110 குமரி எல்லை – சி.குழந்தைசாமி
111 தேவியின் ஓவியம் (கவிமணியின் வரலாறு) – கவிஞர்.சி.குற்றாலம்பிள்ளை
112. குலசேகரபுரம் வரலாறு – கவிக்கொண்டல் இரா. கேசவபிள்ளை
113. அதங்கோட்டின் தொன்மைச் சிறப்புகள்– K.கோவிந்தநாதன்
114. நாடார் குலப் பூர்வீக வரலாறு – புலவர்.இரா.சண்முகம்
115. கவிமணி ஆராய்ச்சி – வித்துவான் மு.சண்முகம் பிள்ளை
116. அதங்கோட்டாசான் – டாக்டர் K.சதாசிவன்
117. கைமுக்கு ஓர் ஆய்வு – வித்வான்.செ.சதாசிவம்

118. சேரநாட்டுத் தமிழ் பெருமக்கள் வரலாறு (முதல்பாகம்) – வித்வான்.செ.சதாசிவம்

119. சேரநாட்டுத் தமிழ் பெருமக்கள் வரலாறு (இரண்டாம் பாகம்) } – வித்வான். செ.சதாசிவம்

120. ஒட்டன் கதை
121. தம்பிமார் கதை } – முனைவர் V. சர்வேஸ்வரன்

122. தென்திருவிதாங்கோட்டுத் திருச்சபைச் சரித்திரச் சுருக்கம் (பங்கு 1)
123. தென்திருவிதாங்கோட்டுத் திருச்சபைச் சரித்திரச் சுருக்கம் (பங்கு 2) } – வெ.சாமுவேல் சகாரியா

124. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் என்பங்கு
125. தளவாய் வேலுத்தம்பியும், மார்ஷல் நேசமணியும்
126. குமரி மாவட்டத்தில் நாடார் இனம் அன்றும் இன்றும்
127. குமரி மாவட்ட இணைப்பு போராட்ட வரலாறு } – தியாகி ஆ. சிங்காராயர்

128. புயலின் நடுவே ஒரு பயணம் பாகம் 1
129. புயலின் நடுவே ஒரு பயணம் பாகம் 2 } – எஸ்.சிவன்பிள்ளை

130. Agastiar in Tamil land
131. The chronology of Early Tamils } – கே.எஸ்.சிவராஜபிள்ளை

132. சான்றோர் புராணம்
133. சேரநாடும் சான்றோரும்
134. மார்ஷல் நேசமணியும் சமுதாயத் தொண்டும் - K.P. சுகுமார்
135. வேலுத்தம்பி தளவாய்

136. Dravidian Encyclopaedia Vol.1
137. Dravidian Encyclopaedia Vol.2
138. Dravidian Encyclopaedia Vol.3 } Dr.V.I. Subramaniam

139. வரலாற்றில் மண்டைக்காடு – செண்பகப்பெருமாள்

140 சதாவதானி செய்குதம்பிப்பாவலர் – கே.பி. செய்குதம்பி

141. சித்தர் பீர் முகமது–வாழ்வும் வாக்கும்
142. ஞானப்புகழ்ச்சி – ஓர் ஆய்வு } – தக்கலை எம்.எஸ்.பஷீர்

143. குமரி மாவட்டச் சிற்பி மார்ஷல் A.நேசமணி
144. ஜாக் ஹாரிசன்
145. ஹட்சன் டெய்லர் } த.தங்கப்பா

146. பலவேசஞ் சேர்வைக்காரர் கதை – முனைவர் சு. தங்கத்துரை
147. மண்டைக்காடு திருக்கோயில் – ஞ.பி.தம்பி
148. சுசீந்திரம் தல வரலாறு – K.T. தம்பி
149. அவ்வையார் --அன்று முதல் இன்று வரை – முனைவர்.ஞ. தாயம்மாள் அறவாணன்
150. நாடறிந்த நாடார்கள் – J.J. தாஸ்
151. பார் புகழும் புனித சவேரியார் – P.J. தாஸ்
152. A History of the Christian missions in south India – முனைவர் J. தியர்கராஜன்
153. கோட்டாறு செட்டியார் வரலாறும் வாழ்வியலும் – முனைவர்.T. துரைநீலகண்டன்
154. தம்பிமார் கதை
155. பத்திரகாளியம்மன் கதை (அ) வலங்கைமாலை } – முனைவர்.தி.நடராஜன்
156. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
157. சேரர் திருநாடு } – பண்டித.சு.வே. நடராசன்
158. அனந்தனைப் பாடிய ஆழ்வார்கள் – நாகர்கோவில் கிருஷ்ணன்
159. மாவீரன் வேலுத்தம்பி தளவாய் வாழ்க்கை வரலாறு – ம. பகவதியப்பன்
160. ஆரைவாய்மொழி சரித்திரமும்
மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலும் } – கலைக்களஞ்சியம் ஆர். பத்மநாப பிள்ளை
161. தாழக்குடி தல புராணம் – கலைக்களஞ்சியம் ஆர்.பத்மநாப பிள்ளை
162. குமரி மாவட்டக் கோயில்கள்
163. குமரி மாவட்டக் கோட்டைகள்
164. தென்குமரி தந்த திருவள்ளுவர்
165. நாகராஜர் ஆலயம் } – முனைவர்.எஸ்.பத்மநாபன்
166. கன்னியாகுமரி மாவட்ட ஆதிதிராவிடர்களின் வரலாறு – P. பாபு மனோகரன்
167. பலபத்திர ராமனும் தென்பாரதமும் – P. பாலசுப்பிரமணியம்
168. வைகுண்டசாமிகள் வரலாறு – பால பிரஜாபதி அடிகள்
169. புனித சவேரியார் – பிலோமின் அம்புறோஸ்
170. வேலுதம்பி தளவாய்கதை –புலவர் ஆர்.புகழ்பெற்ற பெருமாள்
171. திருமூலர் குமரிமாவட்டத்தைச் சேர்ந்தவர் – புத்தளம் S. முருகேசன்
172. வெள்ளைக்காரன்சாமி கதை – முனைவர் ஏ.ஏன். பெருமாள்
173. தென்கோடியில் ஒரு புரட்சி – பொன்னீலன்
174. திருத் தமிழரியக்கம் – பி.எஸ். மணி
175. டச்சுப் படையை வென்ற உதைய மார்த்தாண்டன் நாடார் – மார்த்தாண்டன் ரவி

176. நாஞ்சில் நாட்டு வரலாறு – T.C. முத்தையா பிள்ளை
177. இராமன்புதூர் வரலாறு } – J.S. மைக்கேல்
178. குமரி மாவட்டத் தேவாலயங்கள்
179. இரண்டாவது தோள்சீலை கழகத்தில் } – குமரிக் கவிஞர் கே.பி.வரதராசன்
அனந்தன் வழியார்கள் பங்கு
180. குளச்சல் போர் – குமரிக் கவிஞர் கே.பி.வரதராசன்
181. மறைக்கப்பட்ட வரலாற்றுத்தூண்கள் – குமரிக் கவிஞர் கே.பி.வரதராசன்
182. மீட் நினைவாலயம் கொற்றிகோடுசபை வரலாறு – கவிஞர்.கொற்றை.த.வளவன்
183. வலங்கை மாலை – மரு.F.வில்சன்
184. திருவிதாங்கூர் தமிழரியக்க ஆரம்பகால உண்மைகள் – இரா.வேலாயுதப்பெருமாள்
185. சமூக வரலாற்றுப் பின்னணியில் ஒரு தலைநகரம் – J. டால்ஃபின் ராஜா
186. மலைமண்டல நாட்டுப்புறக் கலைகள்– Dr. J. றோஸ்லெட்டானிபாய்
187. குமரி முதல் வார்சா வரை – டாக்டர்.ஜி. ஜான் சாமுவேல்
188. தென் திருவிதாங்கூர் லண்டன் மிஷனறிச் சங்கச் சரித்திரம் } – ஜான்.A. ஜேக்கப் அய்யர்
189. பழைய பனையோலைகள் – T. ஜெயசசிதரன்
190. பண்டைய கேரளம் – C. ஜேசுதாசன்
191. இஸ்லாமும் மத நல்லிணக்கமும் – H.ஹாமீம் முஸ்தபா
192. திருச்சபை வரலாறு (முதற் தொகுதி) – முனைவர் S.S. ஹெக்டர்
193. வர்மக்கலை விளக்கம் – முனைவர் G. ஹென்றி லூயின்
194. * குமரி மாவட்ட எழுத்தாளர்கள் யார் எவர் – எம்.பி.ஸிங்ஜி
195. சான்றோர் குலப்பிரிவுகள்
196. * பண்பாட்டு வேர்களைத் தேடி – முனைவர் ஞா.ஸ்டீபன்
197. கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களின் வாழ்வியல் ஓர் ஆய்வு } – முனைவர் நேசஸாம்.ஸ்டீபன்
198 *கவிமணி வரலாற்று ஆய்வுக்கட்டுரைகள்
199. நாட்டுபுற மகாபாரதக் கதைகள்
200. நீலிக்கதைகள் } – முனைவர் எஸ்.ஸ்ரீகுமார்
201. பொன்னிறத்தாள் கதை
202. Ringletaube the Apostle of south Travancore – S.A.Azariah
203 தமிழக வரலாறும் பண்பாடும் – புதியபார்வை – V.T.செல்லம்
204. முதலியார் ஓலைகள் – P. சிதம்பரம்பிள்ளை
205. Travancore Tamils struggle for identity – Dr. D. Daniel

206. Dewan Nanoo pillay – K.R. Elankath
207. Right hand-Left hand caste – Dr.D. Jeevanayagam
208. *Forest of Kanyakumari Dist.
209. *Wetlands of kanyakumari } - Dr. R.S. Lalmohan
210. History of Catholic Church in Kanyakumari Dist. Dr.V.Lawrence
211. Tamil integration movement in Travancore- Dr.P. Maria John
212. Kalaripayat and varma adi – Moses Tilak
213. Inside Travancore Tamilnadu – Marshal A. Nesamony
214. Agrarian change in NanchilNadu1830-1930- Dr. M.S.S. Pandian
215. A history of NanchilNadu – Dr.K.K.Pillai
216. *Devasahayam Pillai- The martyr – P.Pushpa Raj
217. Kanyakumari District Directory – S. Ramaswamy
218. Colonel Manro's Administration of Travancore (1810-1819) – Mrs.Teresa M.Rajasingh
219. Hisrory of Travancore – Vadiveesvaram Subramonia Iyer
220. Ayya Vaikunthar – The light of the world – A. Vijayashanthi
221. The Diocase of Kottar – Most Rev. Fr.J.M. Villavarayar
222 திராவிடர் வரலாறும் இடப்பெயர்வும் – சி. காப்பித்துரை

மலையாள நூல்கள்

223. கன்னியாகுமரி ஜில்லா மலையாளிகள்
224. கன்னியாகுமரி மாவட்ட பாரத விடுதலைப் போர் வீரர்கள்
225. பொன்மன மங்கலம் சரித்ரம் } – N. கேசவன்தம்பி
226. சுசீந்திரம் ரேககள் – T.N. கோபகுமார்
227. செண்பகராமன் பிள்ளா – Dr.V. சங்கரன்நாயர்
228. திருவிதாங்கூர் ராஜவம்சம் – டாக்டர் V.S. சர்மா
229. *ஸ்ரீ சுவாதி திருநாள் – டாக்டர் V.S. சர்மா
230 கன்னியாகுமரி முதல் கபிலவஸ்து வரை – சுவாமி பரமேஸ்வரனந்த சரசுவதி
231. இட்டகவேலி முடிப்புரை.மகான்மியம் – M.தங்கப்பன் நாயர்
232. தெக்கன் திருவிதாங்கூர் விப்ளவத் தின்றே நாடு
233. வைகுண்ட ஸ்வாமிகள் நாவோத்தான ஸில்ப்பி } - V. தங்கையா
234. இரவிக்குட்டிப்பிள்ளாய் போரு – டாக்டர் திக்குறிஸி கங்காதரன்


235. வரலாற்றில் மண்டைக்காடு – டக்டர் G. திருவிக்ரமன் தம்பி
236. நெய்யூர் – நெய்யூர் K.ராமகிருஷ்ணபிள்ளை
237. திருவிதாங்கூர் சரித்திரம்
238. ராமவர்ம மஹாராஜா சரிதம் } – பாச்சு மூத்தது
239. தெக்கன் திருவிதாங்கூர் சரித்திரம் – மங்காடு கோவிந்த பிள்ளை
240. ஸ்வாதி திருநாள் – புராரேகைகள் – Dr. R. மதுதேவன் நாயர்
241. Selcted Proclamations of the sovereign of Travancore } - Dr. R. மதுதேவன் நாயர்
242. தேவஸகாயம் பிள்ளை சரித்ரம் – வித்வான் A. மாதாவடியான்
243. Raja Ravivarma – E.M.J. வெண்ணியூர்

* 1. Tamil coins – A study (1981) Dr.R. Nagasamy Tamil Nadu. State Dept. of Archacology, Madras.
* 2. The coins of Tinnevelly (1888) Rev.E.Loveuthal.
* 3. தமிழர் காசு இயல் **(1995)** நடன.காசிநாதன்
* 4. The coins of the Vijayanagar Empire (1997) K.Ganesh, Dr. Girija pathy.
* 5. தமிழகத் தொல்லியல் சான்றுகள் **(1994)** அளக்குடி ஆறுமுக சீதாராமன்
* 6. Coins of Southern India, Sir Walter Elliot.
* 7. South Indian Coins, Sir T. Desikachari.

***இக்குறியிட்டவை இந்நூலாக்கத்திற்கு துணை நின்றவை**


நன்றியறிதலுக்குரியோர்

1. திரு. செந்தீ நடராசன், செம்பவளம் ஆய்வுத்தளம், நாகர்கோவில்.
2. முனைவர். அ.கா.பெருமாள், தமிழ்த்துறைப் பேராசிரியர் (ஓய்வு), நாகர்கோவில்.
3. முனைவர் ஸ்ரீகுமார், கண்காணிப்பாளர், பத்மனாபபுரம் அரண்மனை, பத்மனாபபுரம்.
4. செல்வி.எம்.மீனா, கரோநெட் கேட் சென்டர், நாகர்கோவில்.



கன்னியாகுமரி மாவட்டம்
(சுற்றுலா வரைபடம்)
குறிப்பு
கேரளம்
தமிழ்நாடு
திருநெல்வேலி
விளவங்கோடு
குளச்சல்
நாகர்கோவில்
கிள்ளியூர்
அகஸ்தீஸ்வரம்
தோவாளை
திருவட்டார்
கல்குளம்
பத்மநாபபுரம்
இந்திய அரசின் பதிவுபெற்ற பதிப்பகமாகச் செயல்படுவதற்கு
வட்டாட்சியர் அலுவலகம்
காவல் நிலையம்
தீயணைப்பு நிலையம்
மருத்துவமனை
சுற்றுலா மாளிகை
தங்கும் விடுதி
பேருந்து நிலையம்
தொடர்வண்டி நிலையம்
கடற்கரை
அருவி
கோயில்
மசூதி
தேவாலயம்
ஆறு
அணை
சாலை
தொடர்வண்டிப் பாதை
மாவட்ட எல்லை
மாநில எல்லை


பண்டைத் தமிழ் நாடு


சங்க காலத் தமிழ்நாடு



சேரநாட்டு உட்பிரிவுகள்




குமரி மாவட்டப் பெருவழிகள்



1	பெருவழிகள்		8	அணைகள்	
2	சாலைகள்				
3	இரயில் வழி				
4	மாவட்ட எல்லை				
5	ஏரி/கடல்				
6	மலை/காடுகள்				
7	ஊர்கள்				

சேரகொங்கு நாட்டு மலைகளும் ஆறுகளும்




உதயகிரிக்கோட்டை (1906)

திருவிதாங்கூர் ஸ்டேட் மானுவேல்

வி. நாகமையா தொகுதி–1

Vol. I. p. 201



பின்னிணைப்பு

அருஞ்சொற்கள்

அக்கிரம் – சிறந்த உணவு; திருவமுது; முதன்மையான (பிராமண) ஊர்

அகத்து – உள்ளே; அகரம் (பிராமணர் குடியிருப்பு)

அகப்பொதுவாள் – கோயிற் கருவறையை நிர்வகிக்கும் குழு

அங்கதேவதை – பரிவார தேவதை

அசனம் – உணவு

அஞ்சாலி – நிலவரி

அஞ்சு வண்ணம் – அரபு முதலிய வெளிநாட்டார் கொண்ட ஒரு வணிகக் குழு

அட்டிப்பேறு – தான சாஸன மூலம்

அட்டும் – செலுத்தும்

அடி – நேரத்தைக் கணித்தறியும் நிழலின் நீளம்

அடிகள்மார் – கோயிற் பணியாளர்கள்

அடியந்திரங்கள் – திருநாள் முதலிய சிறப்புக் காரியங்கள்

அடுக்களக் கணக்கு – கோயில் மடைப்பள்ளிக் கணக்கு எழுதுபவர்

அடுக்களக் காணி – கோயில் மடைப்பள்ளிக்கு விடப்படும் நிலம்

அடுக்களயற்குக்கூறு – கோயில் மடைப்பள்ளி மேற்பார்வை செய்யும் அலுவலர்

அடுத்தூண் – கூடுதல் செலவு

அடையமிர்து – தாம்பூலம்

அத்தாளத்திருவமிர்து – இரவு படையல்

அதிகார மேலெழுத்து – ஓர் அரசியல் அலுவலர்

அமைக்கப்பட்ட – குடியமர்த்தப்பட்ட

அரக்கல் – நிலவரியைச் செலுத்தும் தவணைகளில் ஒன்று

அரி – அரிசி

அருள்ளிருந்து – வீற்றிருந்து

அரைச கோபம் – அரசனால் வரும் தடை

அலைகல் – கரையை நீர் கரையாதபடி அமைக்குங்கல்

அவிரோதமாக – ஒரு மனதாக

அளக்கக் கடவன் – அளந்து கொடுக்க கடமைப்பட்டவன்

அற்றை – சுட்டப்பட்ட நாள்

அறமருசாதி – அறங்களைக் காக்கும் மரபுப்படி

அறைக்கணக்கு – கோவில் கணக்கு

அஷ்டபோகம்	–	நிலம் தொடர்பான விற்றல், தானம் செய்தல், ஒற்றி வைத்தல்
ஆட்ட	–	நீராட்ட; செலுத்த
ஆட்டைகோள்	–	ஆண்டுக்கொரு முறை
ஆணியம்	–	நாள்படி
ஆதிரசாலை	–	மருத்துவமனை
ஆலிலை வாரம்	–	நில வருவாயின் பங்கீடுகளில்
ஆவணியோணம்	–	ஆவணி மாதம் ஓணம் பண்டிகை நாள்
ஆறாட்டு மண்டபம்	–	ஆற்றில் சுவாமி நீராடும் மண்டபம்
இடங்கைப் பணம்	–	இடங்கை சமூகத்தார் செலுத்த வேண்டிய வரி
இடையீடர்	–	குத்தகைதாரர்
இடையீடு	–	பயிரிடும் குடியுரிமை
இருகூறு பறையுமவன்	–	எதிர்த்தவன்
இலை வாணியப் பாட்டம்	–	வெற்றிலை வணிகர் மீதான வரி
இளங்கூறு	–	இளவரசனின் ஆட்சியுரிமை நிலம்
இறை கரணம்	–	வரி கணக்கு (புத்தகம்)
இறையொற்றி	–	வரி இறுக்கும் நியதியோடு கூடிய அடமானம்
உச்ச அகம்	–	முற்பகல்
உச்சை	–	நடுப்பகல்
உடன் வாரம்	–	மொத்த நில விளைச்சல் (செலவினங்கள் கழிக்காமுன்)
உப்பளம்	–	உப்பு விளை நிலம்
உல்கு	–	சுங்கம்
உழவொற்றி	–	பயிரிடும் உரிமையுள்ள அடமானம்
உள்பாடன்	–	கோவில் பணியாளர்களில் ஒருவன்
உள்வீடு	–	கோட்டையின் நடுப்பகுதி
ஊர்க்காட்சை எண்ணை	–	உற்சவ ஊர்வலம் வருங்கால் தேவைப்படும் எண்ணை
ஊராண்மை	–	நிலக்கிழார் உரிமை
ஊராளர்	–	கோயில் நிலம் நிர்வகிப்பவர் (போற்றி)
ஏணிக்காணம்	–	ஈழவர் மீதான வரி
ஒப்புரவு ஓலை	–	உடன்படிக்கை
ஒலி வண்ணார்ப் பாட்டம்	–	துணி வெளுப்போர் செலுத்தும் வரி
ஓதுவது	–	வேதப்பாடம் ஓதுவது
கச்சவோலை கரணம்	–	உடன்படிக்கை ஆவணம்
கண்வாய்	–	நீர் போகும் மடை

கதலி வாழை	–	சிறு வாழை
கரை	–	நில அடிப்படையில் ஏற்படுத்திய பங்குப்பணம்; அரசாங்கத்தின் மொத்த வருவாய், கிராம உட்பிரிவு
கல்ப்பணி	–	கற்களால் செய்யும் வேலை
கல்ப்பித்தது	–	ஆணையிட்டு
கல்பனம்	–	ஆணை
கல்லம்பலம்	–	கற்கோயில்; கல்மண்டபம்
கல வாணியன்	–	மட்கல வியாபாரி
கலியாண திருமேனி	–	நோயற்ற உடல்
கலியுகம்	–	கி.மு.3102–ல் தொடங்கி வரும் காலம்
கறி	–	மிளகு
காரணவமார்	–	(சேரநாட்டில்) குடும்பத் தலைவனான நிலக்கிழார்
காரணவர்	–	உரிமை உடையவர்
காராழர்	–	உழுது பயிரிடுவோர்
காரியம் பறைய	–	நிர்வாகம் செய்ய
காரியவாராட்சி	–	அரசு அலுவலர் பொருட்டுச் செலுத்தும் ஒரு வரி
காரு விருத்தி	–	கொல்லர் வாழ்க்கைச் செலவுக்கு விட்ட நிலம்
கிரம வாரம்	–	வேத பாடங்களை கிரமமாக ஒதுவது
கிழக்கின் திருவடி	–	கோவில் கிழக்கில் வைக்கப்பட்டுள்ள பெருமாள் உருவம்
கீழ்ச்சாந்தி	–	உதவிப் பூசாரி
குக்கில்	–	குங்கிலியம் என்ற நறுமணப் பொருள்
குடி கிடந்து கொள்ளவும்	–	குடியிருக்கவும்
குடியிலார்	–	பிராமணக் குடிகள்; உழு குடிகள்
குரத்திகள்	–	சமணப் பெண் துறவிகள்
குரிசு	–	கல்சிலுவை
குலாலர் திருக்கைக் கடமை	–	குயவரின் சக்கரம் மீதான வரி
குலால விருத்தி	–	குயவன் வாழ்க்கைச் செலவுக்காக விட்ட நிலம்
குலுக்கை	–	தானியம் சேமித்து வைக்கும் மட்கலம்
கூலக்கடை	–	தானியக்கடை
கையுறை	–	காணிக்கை
கோப்பத வாரம்	–	அரசர்க்குரிய பத்தில் ஒருபாக நில விளைச்சல்
கோயிக்கல்	–	கோயில்
கோயின்மை	–	கோயில் நிர்வாகம்

கோயிலதிகாரிகள் – சூசரநாட்டில் அரசனுக்கு அடுத்து இருந்த அதிகாரிகள்
கோயிற்குறி – கோயில் ஆவணம்
சகன் – சக ஆண்டு
சட்டர் – மாணாக்கர்
சண வலை – சண மீன் பிடிக்கும் வலை, சணலால் செய்த வலை
சத்தி முகம் – உரிய ஆணை
சதா சேவை – எப்போதும் வணங்கி நிற்றல்
சந்ததிப் ப்ரவேசம் – தலைமுறை தலைமுறையாக
சமைச்சு – உண்டாக்கி
சரணத்தார் – ஒருசார் வேதசாகையை ஓதுவோர்
சரணம் – ஓதப்படும் வேதப்பகுதி
சாகை – வேதத்தின் உட்பிரிவு
சாந்தி செய்வான் – கோயில் பூசாரி
சாந்திப்புறம் – பூசைக்காக விட்ட நிலமானியம்
சாந்தி விருத்தி – கோயில் பூசாரிக்கு வாழ்க்கைச் செலவுக்காக கொடுக்கும் நிலம் அல்லது மானியம்
சாமந்த கோபம் – குறுநில மன்னரால் வரும் இடையூறு
சாலை – சேர நாட்டில் பிராமண மாணவர்களுக்கு உணவு, வேதக்கல்வி மற்றும் போர்ப்பயிற்சி கொடுக்கும் கல்வி நிறுவனம்
சான்றான்மாட்டு மேனிப் பொன் – ஈழவர் மீதான ஒரு வரி
சாஸ்தா – ஐயனார்
சீட்டி – நீக்கியுள்ள பாட்டம்; தீட்டு; ஆவணம்
செம்மருதர் – நல்ல உழவர்குடி
செய்கடவோலைக் கரணம் – செய்ய வேண்டிய கடமையைக் குறிக்கும் எழுத்தோலை
செல்லாநின்ற – செல்கின்ற
செறுபயறு – பாசிப்பயறு
சேழம் – குறை
த்வாரஸதன்மார் – வாயில் காவலர்
தங்கேதம் – உடன்படிக்கை
தந்திரி – கேரள கோயில் பூசாரி
தம்பான் – ஒருவகைப் படகு

தமிள்க் கணக்கு – கொல்லம் ஆண்டு
தலவகாரம் – சாமவேதப் பிரிவுகளுள் ஒன்று
தவளச் சங்கு – வெண்சங்கு
தளவாய் – படைத்ததலைவன்
தளியாள்வான் – கோயில் நிர்வாகஞ் செய்பவன்
தளைக்காணம் – ஈழவர் மீதான வரி
தறவாட – (சேரநாட்டில்) தாய்வழிக்கூட்டுக்குடும்பம்
தாணு – சிவன்
தாயதி உடையார் – வாரிசு
திரிகெக் கடமை – குயவன் மண்பாண்டம் செய்யும் சக்கரத்துக்கு இறுக்கும் வரி
திரிஞ்ஞு – பிற்பகலில்
திருத்து – பண்படுத்தப்பட்ட நிலம்
திருவடைக்காயமிர்து – பாக்கு
திருவாழி – திருமாலின் சக்கரம்
தீயமாள்வான் – சேரநாட்டில் ஓர் அரச அலுவலர்
தீவிகை – விளக்கு
துடவர்; துடவல் – விளைநிலப் பொதுப்பெயர்
துரு – வேதம் ஓதும் சந்த வகை
துலாக் கூலி – நிறுக்கும் சரக்குகள் மீதான வரி
தெண்டு – ஒரு நீட்டல் அளவு
நடை – கோயில்
நடை செலவு – கோயிற் செலவு
நிலைப்படை – ஓரிடத்தில் நிலையாக வைக்கப்பட்ட படை
நிவேத்தியம் – கடவுளுக்கு படைக்கும் அமுது
நிறைக்கூலி – நிறுக்கப்படும் சரக்குகளின் மேலுள்ள வரி
நீட்டு – திருமுகவோலை
நீர் கொள்வாய் – நீரைக் கொணரும் வாய்க்கால்
நீர் கொள்ளி – நீர் தங்கும் பள்ளம்
நீர் வீழ் தாழ்வு – தண்ணீர் வடிந்து தங்கும் பள்ளம்
நீரறை – தண்ணீர் வைத்திருக்கும் அறை
பஞ்சக்கம் – ஐவர் கூடிச் செய்த முடிவு
பட்டக்காரர் – கிறித்துவ கோயில் குருமார்கள்
பட்டாரகர் – தெய்வம், முனிவர்

படார அதிகாரிகள்	–	கோயில் அதிகாரிகள்
படிஞ்ஞாயிறு	–	மேற்கு
படைக்கலம்	–	ஆயுதம்
பண்டார வாரியம்	–	கோயில் பண்டாரத்துக்குப் பொறுப்பான குழு
பண்டார உள்ளிருப்பு	–	கருவூலப் பணி செய்பவர்
பண்ணை செய்வான்	–	குத்தகைதாரன்
பணி மக்கள்	–	ஊழியர்கள்
பத்தாயம்	–	தானியக் களஞ்சியம்
பதவாரம்	–	வருவாயில் பத்தில் ஒரு பகுதி
பதி	–	(சேர நாட்டில்) ஊர்த்தலைவர்கள்
பதிப் பதவாரம்	–	ஊர் மன்றத்துக்குச் சேர வேண்டிய பத்தில் ஒரு பங்கு வருவாய்
பந்தீறடி; பந்நீரடி	–	காலம் அளக்கும் பன்னிரண்டு அடி நிழல்
பரடை	–	கோயில் நிர்வாகக் குழு
பலகைத் தலை	–	சேரநாட்டில் கோயிலின் ஒரு பகுதி
பலி	–	பூசைக்குப் படைக்கப்படும் பொருள்; நிவேதனம்
பவிழியம்	–	ஒரு வேதப் பிரிவு
பள்ளி	–	பௌத்த, சமண, கிறித்துவ மற்றும் இசுலாமிய கோயில்களை குறிக்கும் பொது சொல்
பறைகில்	–	சொன்னால்
பாக்குத் தரகு	–	பாக்குக்கான வரி
பாசு வலை	–	மீன் பிடி உரிமை
பாட்டம் ஆள	–	குத்தகைக்கு நிலத்தை உழுது பயிர் செய்ய
பாயதம்	–	பாயசம்
பிடி சூழ்ந்தான்	–	பெண் யானையின் மீது சென்று எல்லையைக் குறித்தான்
பிலப்பேடி	–	புலையர் பார்வைக்கு அஞ்சுதல்
புரையிடம், புரயிடம்	–	வீட்டுத் தோட்டம்
புரவுகள்	–	அரசனால் அளிக்கப்பட்ட இறையிலி நிலங்கள்
புள்ளி பாஞ்ஞ	–	மதிப்பிட்டு பார்த்து
புறக்குடி	–	வெளியூரிலிருந்து வந்து குடியேறும் குடிகள்
புறப் பொதுவாள்	–	கோயிலின் வெளி நிர்வாகங்களைக் கவனிப்பவர்
பூவழி	–	போகம் ஒவ்வொன்றிலும்
பெருமாள்	–	அரசன்
பெரு முதியன்	–	சேரநாட்டில் கோயில் ஊழியர்களுள் ஒருவன்

பெலிகல் – பலிக்கல்

பெறாப் பேறு – அவதூறு

பேராக்கி – பெயர் வைத்து

பேரெருமை – சிறந்த எருமை

பொட்டை – விளை நிலத்தின் பொதுப்பெயர்

பொலிஞ்ஞு – வட்டிபெருகிய

பொளிச்சு – அடித்து ; திருத்தி

பொற்றை – கற்பாறை, சிறுகுன்று (பொத்தை)

போக்கு – சரக்கு வெளியே போதல்

மடி வலை – மீன் பிடிக்கும் வலை வகை

மண்ணாப்பேடி – (மலை நாட்டில்) மண்ணார் பார்வைக்கு அஞ்சுதல்

மதிலகம் – கோட்டை

மதினாயன் – கோட்டைத் தலைவன்

மரிக்கையில் – இறந்து போகும்போது

மற்றொழிஞ்ஞு – மீதமுள்ள

மாடக்கோயில் – உயர்ந்த இடத்தின் மீது கட்டப்பட்ட கோயில்

மிண்டன் – வலியவன்

மிதுன நாயறு – ஆனி மாதம்

மீக்கூள – மிகுதியாக

மீமாயம் – மீமாம்சை என்ற வேதம் சார் நூல்

மீயாட்சி உடையார் – நிலத்தின் மேலுரிமை உடையவர்

மீன்பாட்டம் – மீனவர் மீதான வரி

முக்கால வட்டம் – கோயில்

முட்ட – தடைப்பட

முட்டிரட்டி – எவ்வளவு குறைந்ததோ அதைப்போல இருமடங்காக்கி

முறி – ஒரு நில அளவு; கையெழுத்திட்ட சீட்டு

முறிக்கச்சம் – உடன்படிக்கைச் சீட்டு

மூழிக்களக்கச்சம் – சேரநாட்டில் மூழிக்களம் என்னும் மன்றத்தின் தீர்மானம் / நடைமுறை

மேலோடி – மேல்வாரம்

மேற்பாதி; மேற்பாதி மீதாட்சி – மேல்வாரம்; விளைச்சலில் நிலச்சொந்தக்காரருக்குரிய பங்கு

வரியிலார் – அரசின் வரி நிர்ணயிக்கும் அலுவலர்

வற்கடம் – பஞ்சம்

வாதில்	–	கோட்டை வாயில்
வாதில் மாடம்	–	கேரளத்தில் கோயில் கட்டடத்தில் ஒரு பகுதி
வாரம்	–	வேதத்தை ஓதும் முறை
வாழின்ற	–	ஆள்கின்ற
வித்துப்பாடு	–	குறிப்பிட்ட அளவுள்ள விதை; விதைத்தற்குரிய பரப்புடைய நிலம்
விளை	–	நிலத்தின் பொதுப்பெயர்
வெளிச்செண்ணை	–	தேங்காய் எண்ணெய்
ஸ்வாந்திரியம்	–	உரிமை
ஸபாகாரியம்	–	பிராமண ஊர்ச் சபையின் நடவடிக்கை
ஸுயமாஜ்ஜிதம்	–	சொந்தமாக ஈட்டியது
ஜீர்ண்ணிச்சு	–	பழுதடைந்து
ஜீ ர்ணமாகை	–	பழுது படல்

* * *